பாவேந்தல் பொன்னேடு

பாலமுனை பாறாக் அவர்களின்

இலக்கியப் பொன் விழா சிறப்புமலர்

தமிழ்நெஞ்சம்

உதயம் 1972

tamilnenjam.com

பாவேந்தல் பாலமுனை பாறூக்

இலக்கியப் பொன்விழா சிறப்பு மலர்

பாவேந்தல் பொன்னேடு

PAAVENTHAL PONNEDU
Palamunai Farook Ilakkiya Ponvila Sirappu Malar

Publication :
Palamunai Farook Ilakkiya Ponvila Manram,
14, Dranage Road, Palamunai

January, 2022.

Copyright : Author

Type Setting : Farhath Farook, M. Abdul Rasak

Design & Layout : M. Abdul Rasak

Cover Design : Efect.com

Printed By : City Point Printers,
Akkaraipattu, 076 049 3892

Pages : 288

Price : Rs. 1000.00

ISBN : 978-624-98508-0-4

இலக்கியப் பொன்விழா

சிறப்பு மலர்

பாலமுனை பாறூக் இலக்கியப் பொன்விழா மன்றம்

பாலமுனை

பதிப்புரை

இலக்கியப் பணியில் இறைவனின் ஆசியோடு இடையறாது இயங்கி, ஐம்பதாண்டுகளை நிறைவு செய்வதென்பது சாமானிய மான விடயமல்ல.. கலாபூஷணம் பாலமுனை பாறூக் அவர்கள் ஆர்ப்பாட்டமில்லாத,கனதியான தனது எழுத்துப் பணிமூலம் மக்கள் மத்தியில் மதிப்பினைப் பெற்றிருப்பவர். ஐம்பதாண்டு களுக்கும் மேலாக இலக்கிய உலகில் தொடர்ந்து செயற்படுபவர்.

பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களுக்கு விழா எடுப்பதற்கு நாம் ஒன்றிணைந்திருப்பதும், பொன்விழா வெளியீடாகப் “பாவேந்தல் பொன்னேடு” பிரசவம் பெறுவதும் அக மகிழ்ச்சியினைத் தரும் விடயங்களாகும்.

கவிதை, காவியம், கதை, குறும்பா, கட்டுரையாக்கம், பாடல்கள், கவியரங்க வெளிப்பாடுகள் எனப் பல்வகை ஆளுமைகளுடன் இலக்கிய இருத்தலியலில் தடம் பதித்துள்ள பாலமுனை பாறுக்கின் பணிகள் அனைத்தையும் ஒரு வெட்டுமுகப் பார்வையில் கொண்டு வரும் முயற்சியே இந்நூலாகும்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பல்வகைமைப்பாட்டு எழுத்தாளர் களும் ஒன்றிணைந்து காய்தலுவத்தலுக்கப்பால் இணைந்து இந்நிகழ்வை நடத்துவதானது அவருக்கான அங்கீகாரத்திற்கான மிகப் பெரும் சான்றாகும்.

விழாக்குழுவினர், விழா நாயகனின் குடும்பத்தினர், நூலாக்கத் திற்கான ஆக்கப் பதிவினைத் தந்துதவியோர், விழா சிறப்புற ஒத்துழைத்த இலக்கிய கழகங்கள், விழாத்தினத்தில் மண்டபம் நிரம்பியுள்ள இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் வரவேற்று வாழ்த்தி மகிழ்கிறோம். நூலினுள்ளே புகுந்தால் பாவேந்தலின் பல்வகையாளுமைகளும் மிளிருமாகையால், மேலும் எதுவும் குறிப்பிடாமல் அதற்கு வழி விட்டு விடை பெறுகிறோம்.

பதிப்பாசிரியர்,

பாவேந்தல் பொன்னேடு

பொன்னேட்டின் பக்கங்களில்…

ஆசிகளும் வாழ்த்துகளும்…	8 - 26
ஆய்வுகள், கவிதைகள், கட்டுரைகள், வாழ்த்துகள்…	27 - 236
பாவேந்தல் படைப்புக்கள் : பார்வைச் சுருக்கம்	237 - 244
பாவேந்தல் : அறிமுகமும் – படைப்புலகும்…	245 - 272
நினைவுகளும் நிழல்களும்…	273 - 288

ஆசிகளும் வாழ்த்துகளும்...

பாலமுனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் வாழ்த்து !

இலக்கிய உலகில் ஐம்பது வருடங்களைக் கடந்த அல்-ஹாஜ் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களுக்கு எடுக்கப்படும் பொன்விழாவினை முன்னிட்டு வெளியீடு செய்யப்படவுள்ள சிறப்பு மலருக்கு பாலமுனை ஜும்ஆ பெரிய பள்ளி வாசல் செயலாளர் என்ற வகையில் வாழ்த்துரை வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். அல்-ஹம்துலில்லாஹ்

அல்-ஹாஜ் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள் பாலமுனை ஜும்ஆ பெரிய பள்ளி வாசலின் தலைமைப் பொறுப்பை ஏற்று இக்கிராமத்தை ஒரு குடையின் கீழ் நிருவகித்தவர்களில் ஒருவராவார். இக்கால கட்டத்தில் மிகவும் சிறப்பாக இக்கிராமத்தின் ஒற்றுமைக்காக பாடுபட்டு உழைத்தவராவார். இதே வேளை இவர் இலக்கியப் பயணம் செய்து 50 வருடங்களைத் தாண்டி இக்கிராமத்தின் பெயரை உலகமெங்கும் மணம் பரப்பியுள்ளார். பாலமுனைத் தாயின் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களைப் பாராட்டி, வெளியீடு செய்யப்படுகின்ற சிறப்பு மலர் மற்றும் பொன்விழா மிகவும் சிறப்பாக நடைபெற பாலமுனை ஜும்ஆ பெரிய பள்ளி வாசல் நம்பிக்கையாளர் சபை சார்பாக ஏக வல்ல அல்லாஹ்வை வேண்டுகின்றேன். எமது சமூகத்திற்குத் தூண்டுதலாக அமையக் கூடிய இவ்வாறானவர் களை வாழ்த்தி கௌரவப்படுத்துவது காலத்தின் தேவையாகக் கருதுகின்றேன்.

என்றும் இறை பணியில்,

எஸ்.ரீ. முஹம்மது றஹ்மத்துல்லாஹ்
(பிரதம கதிர் தொழில் நுட்பவியலாளர்)
செயலாளர்,
ஜும்ஆ பெரிய பள்ளி வாசல்,
பாலமுனை.

தானா அல் - புஷைரி ஜும்ஆப் பள்ளிவாசலின் வாழ்த்து !

பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் இலக்கியப் பொன்விழாவை முன்னிட்டு வெளியீடு செய்யப்படவுள்ள சிறப்புமலருக்கு வாழ்த்துரை ஒன்றினைச் சமர்ப்பிப்பதில் அக மகிழ்கிறேன்.

ஐம்பது வருட இலக்கிய வாழ்வில் பாவேந்தல் பாலமுனைபாறுக் அவர்கள், தனது கவிதைகள், கட்டுரைகள் காவியங்கள் மூலமாகத் தமிழிற்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது. தமிழுலகே அதற்குச் சான்று. "தோட்டுப்பாய் மூத்தம்மா" தமிழிலக்கிய உலகில் பெற்றுக்கொண்ட இடம் இவரின் இலக்கியப் புலமைக்குக் கிடைத்தபெரும் பரிசாகும். ஈழத்தில் மாத்திரமன்றி இந்திய துணைக் கண்டத்திலும் இவரின் அருமையை அது வெளிப்படுத்திற்று.

அரச சாகித்திய மண்டலவிருது, கொடகே சாகித்தியவிருது, கிழக்குமாகாண வித்தகர் விருது எனப்பல விருதுகளின் சொந்தக்காரரான கலாபூசணம் பாலமுனைபாறுக் அவர்கள் இலக்கியத் தொண்டுக்கு அப்பால் தன் தந்தை மர்ஹூம் மீராலெவ்வை மரைக்கார் முகம்மதுலெவ்வை அவர்கள் போன்று பாலமுனையூருக்கு ஆற்றியிருக்கும் சேவைகள் பல. பாலமுனைபெரிய ஜூம்ஆப் பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபைத் தலைவராகவிருந்து நீண்டகாலம் இக்கிராமத்தை வழிநடத்தியவர் இவர். மாத்திரமல்லாமல் பாலமுனைக் கிராமத்தின் கிராமோதைய மண்டலத் தலைவராகவிருந்து பதினேழுவருடங்கள் இவ்வூரின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்தவர். இவ்வூரின் அபிவிருத்தியென்றால் அங்கு கண்டிப்பாகப் பேசப்படவேண்டியவர் பாலமுனைபாறூக் அவர்கள். உதுமாபுரம் தாறுள் ஹஸனாத் வித்தியாலயமும் அவரது சிந்தனையின் உதயமே.

ஊரின் பெயரை தன்பெயரில் ஏற்றித் தொண்டுபல புரியும் இவரால் ஊரும் உலகும் உவகையுறுவதை எண்ணிப் பெருமிதமடைகிறேன். வாழ்க! உம்பணி.

அன்புடன்,

ச.லாஹிர் *(அதிபர்)*

தலைவர்,

நம்பிக்கையாளர் சபை, தானா அல் - புஷைரி ஜும்ஆப்பள்ளிவாசல்,

பாலமுனை.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரின் ஆசிச் செய்தி

இலங்கையின் இலக்கியத்துறையை எடுத்து நோக்கும் போது கிழக்கில் ஒளி விளக்குகளாய் மிளிரும் கவிஞர்கள் வரிசையில் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களுக்கென்று என்றென்றும் நிலைபெற்ற ஒரு நித்திய இடம் உண்டு. இலக்கியத்துறையில் கால் பதித்து ஐம்பது ஆண்டு காலம் என்னும் மைல் கல்லை எட்டித்தொட்ட சிலரில் பாலமுனை பாறுக் அவர்களும் இடம்பிடித்திருப்பது எம் மண்ணுக்கு கிடைத்த மகோன்னத சிறப்பாகும்.

ஒரு வங்கி முகாமையாளர் என்ற பதவியை வகித்துக்கொண்டு இலக்கியப் பணி செய்வதென்பது அரிதிலும் அரிதான விடயம். நான் பாடசாலைக்காலத்தில் பள்ளி மாணவனாக இருக்கும்போதே இவரது “பதம்” (1987) என்ற கவிதைத்தொகுப்பை வாசிக்க கிடைத்தது “பதம்” என் றால் “சொல்” என்றொரு பொருள் இருந் த போதும் “ஒரு பானைச்சோற்றுக்கு ஒரு சோறு பதம்” என்பது போல இவரை எடை போட இந்தவொரு கவிதை தொகுப்பே என்னைப் பொறுத்தவரை போதுமானதாக இருந்தது. மத விழுமியங்களும் சமூக நடைமுறைகளுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகளை அழகாக வெளிக்காட்டும் ஒரு தொகுப்பாக இதனை பார்க்கலாம். மொழி அழகினை பார்க்கிலும் பொருட் செறிவில் அதிக கவனம் செலுத்தப்பட்ட இவரின் பதம் முதலான முதல்தொகுதி கவிதைத் தொகுப்புக்கள் இன்னும் பல காலம் உயிரோட்டமாய் உலாவரும் என்பதில் ஐயமில்லை.

“ அரசனொருவன் மாளிகைக்குள்
அமைந்தே உள்ள அரியணையாய்
அல்லாஹ் என்னை ஆக்காதே
ஆசையில்லை எனக்கதன்மேல்
வழிப் போக்கர்கள் அமருகிற
நிழல் தருமரமாய் என்னை நீ
உருவாக்கி விட்டால் அது போதும்
உவகை பெறுவேன் அதனாலே” (பதம்)

சுனாமிக்கு பின்னர் 2010 இலே இவருடைய “கொந்தளிப்பு” எனும் குறுங்காவியம் பாலமுனை, ஒலுவில் வாழ் மக்களின் சுனாமிக்கு பின்னரான கொந்தளிப்பான வாழ்க்கை பற்றிப் பேசும் ஒரு நெடுங்கவிதையாக இருந்தாலும் பொதுவாக கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களின் வாழ்வியலின் சில விசேட அம்சங்களை படம் பிடித்துக்காட்டும் ஒரு முயற்சியாக இதனைப் பார்க்க முடியும்.

அது மட்டுமல்லாது “தோட்டுப்பாய் மூத்தம்மா” (2011) என்ற குறுங்காவியமும் கவிஞர் பாலமுனை பாறுக்கை ஒரு நாவலாசிரிய ராகவும் நோக்கச்செய்யும் படைப்பு எனலாம்.

மேலும் இதற்கு கிடைத்த அரச சாகித்திய விருது அவரின் திறமைக்கு ஒரு சான்றாகின்றது. “எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு” எனும் படைப்பு இவரின் மற்றுமொரு குறுங்காவியமாகும். ஐந்து தசாப்தம் கடந்து முனைப்போடு செயற்படும் பாவேந்தல் பாலமுனை பாறுக் அவர்களின் இலக்கியப்பயணம் இனிதாய் தொடரவும் இவரின் வாழ்வு வளம்பெற்று, இன்புற்று சமூகப் பணிகளும் இடையறாமல் நடைபெற இறையருளுடன் இனிதே சிறக்க வாழ்த்துவதில் அளவில்லா ஆனந்தம் அடைகிறேன்.

எம்.ஏ.சி.அகமது ஷாபிர்,

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
அட்டாளைச்சேனை.

மேல் நீதிமன்ற நீதவானின் ஆசிச் செய்தி

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பம் செய்து அவனின் தூதர் முகம்மது நபி ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்கள் மீது சலவாத்துக் கூறியவனாக இம்மடலைத் தொடங்குகின்றேன்.

உலக வரைபடத்தின் முத்தான இலங்கைத்தீவின் இஸ்லாமிய இலக்கியத் தமிழ் பொங்கும் தென்கிழக்கின் அட்டாளைச்சேனைப் பிரதே கவித்துவ ஊராம் பாலமுனை ஈன்றெடுத்த பார்போற்றும் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களது இலக்கியப் பொன் விழாவில் இவற்றை இயம்புவதில் இன்பமடைகின்றேன் அல்ஹம்துல்லில்லாஹ்!

ஐந்து தசாப்தங்களாக தனது இலக்கியப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கும் இவர் தனது ஒவ்வொரு படைப்பிலும் நிதர்சனத்தை வெளிக்காட்டி சமூகவியல்சார் அடிப்படைத் தத்துவங்களை தத்ரூபமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

தினபதி பத்திரிகையில் துவங்கிய கவிதைப் பயணம் பலவாறு 'பதம்" பார்க்கப்பட்டு, தொகுப்பாகி, சந்தனப் பொய்கையாக வெளிவந்து சமூக அவலங்களை யதார்த்தமாக வெளிக்கொணர்ந்தது மட்டுமன்றி நமது வழக்காற்றுச் சொற்களை உபயோகிக்கும் முறைகளையும் வித்தியாசப்படுத்தினார்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய முறைமைக்குள் அறபுத் தமிழ் இன்றியமையாதது; அவற்றையும், இயக்கப் பிரிவினைகளால் தமிழ்பேசும் மக்கள் படும் துன்பங்களையும் இயற்கை அழிவினால் பாதிப்புற்று எம் பகுதி மக்கள் பட்ட துயரங்களையும் சித்திரித்த சிற்பங்களாகவே "கொந்தளிப்பு" மற்றும் "தோட்டுப்பாய் மூத்தம்மா" என்பன காணப்பட்டதுடன் அவை பல விருதுகளுக்கும் வித்தாகியது.

இலக்கியவாதிகளிடத்தில் இயல்பாகக் காணப்படும் கர்வமும் திமிரும் இவரிடத்தில் இல்லாமல் இருப்பதும் வேலைப்பழு நிறைந்த வங்கித்தொழிலில் இருந்து கொண்டு இலக்கியப் பயணத்தை தொடர்ந்திருப்பதும் இவர் சார்ந்த சிறப்புக்களில் விசேடமான தாகும்.

எக்காரியமாகினும் இறைவனிடத்தில் ஏற்கப்படுவதற்கு பிரார்த் தனைதான் அவசியமானது என்பதை “எஞ்சியிருந்த பிரார்த்தனை யோடு” என்ற படைப்பு எடுத்துக்காட்டுவதுடன் சமூகம் சார் அவலங்களை முற்றுப் பெறவைக்கும் முயற்சியாகவும் அது பார்க்கப்பட வேண்டியதாகும்.

தற்போது பொன்விழாக்காணும் இவர் தொழிலில் ஓய்வுநிலை பெற்றாலும் மன நிம்மதி தரும் இலக்கியப் படைப்புக்களுடன் சங்கமமாகி பல படைப்புக்களை உருவாக்கி எதிர்கால சந்ததிகள் சுவைக்கும் ஊற்றுக்களை உருவாக்கும் ஔடதமாகத் திகழவேண்டும் என வல்லோனைப் பிரார்த்தித்து வாய்ப்புக்கு நன்றி கூறுகின்றேன்.

கௌரவ என்.எம்.எம்.அப்துல்லாஹ்
மேல் நீதி மன்ற நீதிபதி.

முதலமைச்சரின் முன்னாள் செயலாளரின் ஆசிச் செய்தி

பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் இலக்கிய வாழ்வின் பொன்விழா மலருக்கு இவ்வாசிச் செய்தியை வழங்குவதில் அக மகிழ்கிறேன்.

கவிஞர் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் இலக்கிய வாழ்வின் ஐந்து தசாப்த நிறைவை நினைவு கூர்ந்து பொன்விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்யும் விழாக் குழுவினரின் முயற்சி உண்மையில் மெச்சத்தக்க ஒன்றாகும்.

இலக்கிய உலகில் தடம் பதிக்கும் எவரும், எவ்வித எதிர்பார்ப்புக்களும் இன்றி காய்தல், உவத்தல்களுக்கு அப்பால் தாங்கள் வாழ்கின்ற சூழல், சமூகம் என்பவற்றோடு தங்களது இலக்கிய பணியைத் தொடங்கி, தேசிய மற்றும் சர்வதேச மட்டங்கள் வரை உயர்ந்து நிற்கின்ற வரலாறுகளை நாம் பார்க்கின்றோம்.

அந்த வகையில் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள், தன்னைச் சூழந்திருந்த வட்டத்தில் தொடங்கி தேசிய மற்றும் சர்வதேசம் என இலக்கியப்பணி செய்து பல பாராட்டுக்களையும் பட்டங்களையும் பெற்றவர் என்பது குறிப்பிட்டாக வேண்டிய ஒன்றாகும்.

அதிலும் விசேடமாக முழுநேர சிரேஷ்ட வங்கி முகாமையாளராக பணியாற்றிக்கொண்டே கிடைத்த சிறு இடைவேளைகளைச் சிறப்பாக பயன்படுத்தி இலக்கிய உலகுக்கு பாரிய பங்களிப்புக்களை வழங்கியவர் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள் என்றால் மிகையில்லை.

தென்கிழக்கின் சிறப்புக்கள் மிக்க கிராமங்களில் ஒன்றான பாலமுனை, மூத்த உலமாக்கள், கவிஞர்கள் மற்றும் கலைஞர்களைக் கொண்ட கிராமமாகும். ஒரு காலத்தில் மேடை நாடகங்கள்,

கவியரங்கங்கள் என்பவற்றுக்கு பெயர் பெற்ற பூமியாகவும் பாலமுனைக் கிராமம் திகழ்ந்தது. இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் இவ்வாறானவற்றுக்கெல்லாம் பாவேந்தல் பாறூக் அவர்கள் வழிகாட்டியாகவும், நெறியாளராகவும் இருந்து செய்த பங்களிப்புக்கள் ஏராளம் என்பது அறியக் கிடைக்கின்ற விடயங்களாகும்.

தனது இலக்கிய பணிகளுக்காக கலாபூசணம், கவிப்புனல், கவித்தாரகை, கவிஞர் திலகம் மற்றும் சாமஸ்ரீ போன்ற பட்டங்களையம், வாழ்த்துக்களையும் பெற்ற பொன்விழாக் கவிஞர் அவர்கள் “தோட்டுப்பாய் மூத்தம்மா”, “எஞ்சிய பிரார்த்தனைகள்”, “கொந்தளிப்பு” உட்பட பல குறுங்காவியங்கள் மற்றும் அவரது இலக்கியப் படைப்புக்களுக்கு தேசிய ரீதியில் கௌரவம் பெற்று பல பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்றுக்கொண்டமையானது அன்னாரது கவித்துவ புலமையின் அடையாளங்களாகும். ஈழத்து இலக்கியத் துறையின் ஜாம்பவான் களின் ஆசிகள், பாராட்டுக்கள், அரவணைப்புக்களுடன் நமது பொன்விழா நாயகன் சாதித்தவைகள் ஏராளரம் என்றே குறிப்பிடலாம்.

பொன்விழாக்காணும் அன்புக்கும், மதிப்புக்கும் உரிய கவிஞர் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள், இன்னும் தனது சமூகப் பணிகளுடன், இலக்கியப் பணிகளிலும் தொடர்ந்து சாதிப்பதற்கு இறையருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

யூ.எல்.ஏ.அஸீஸ்
முன்னாள் செயலாளர்
முதலமைச்சு,
கிழக்கு மாகாணம்.

சம்மாந்துறை பிரதேச செயலாளரின் ஆசிச் செய்தி

ஊரோடு தனது பெயரையும் இணைத்து, காலத்தினைப் படம் பிடித்துக் காட்டும் இலக்கிய உலகில் உயிரோட்டமாக ஐம்பதாண்டுகள் தாண்டியும் தனது பணியை காத்திரமாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்ற கவிஞர் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் கலைப் பயணத்தை ஆதரித்து எனது கருத்துக்களால் மகிழ்வோடு மனந்திறக்கின்றேன்.

என்றென்றும் எனது மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய பாலமுனை பாறூக் அவர்கள் எவ்விடத்திலும் ஒன்றுகூடும் இலக்கியக் கலைத் தோட்டங்களில் பூத்துக் குலுங்கும் மலர்களுள் தனக்கென தனித்துவமான அடையாளத்தினைக் காட்டி தான் பிறந்த பிரதேசத்திற்கும் தனக்கும் பெருமைசேர்க்கும் 'குறுங்காவியப் பெருமகன்' பாலமுனை பாறூக்கின் இலக்கியப் பிரவேசத்தின் ஐம்பதாண்டுகளை நிறைவுறுத்தும் பொன்விழா நினைவுமலருக்கு ஆசியுரைப்பதில் அகமகிழ்வுறுகிறேன்.

தென்கிழக்கின் பாலமுனைக் கிராமம் இக்கட்டான துயரம் நிறைந்த காலப்பகுதியிலும் கலையுலகை வழிநடாத்தக்கூடிய வல்லமை பொருந்திய ஆளுமைகள் பலரை ஈன்றெடுத்த பூமியாகும். இவ்வாறான பெருமைக்குரிய மண்வாசத்துடன் வலம்வரும் நமதுகவிஞர் பாறூக் அவர்கள், வாசகர்கள் முதற்கொண்டு பேராசான்கள் பலரதும் பாராட்டையும் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொண்ட ஒரு மூத்தகலைஞராவார். அந்தவகையில் பேராசிரியர்களான செ.யோகராசா, எம்.ஏ.நுஃமான் போன்றோர்கள் இவரது நவீன கலைப் படைப்புகளை மகாகவி பாரதியாரின் படைப்புகளுடன் ஒப்பிட்டு யதார்த்த உலகின் முன்னுதாரணப் படைப்புகளாக சான்று பகிர்கின்றனர்.

எளிய நடையில் மரபும் நவீனமும் கலந்து யாவரையும் எளிதாய் புரியவைத்து ரசிக்கத்தூண்டும் தனது கலைப் பயணத்தின் தொடர்ச்சியாய் புதியவர்களும் புத்தாக்கம்படைக்க வழிகாட்டி

தட்டிக்கொடுத்துப் பயணிக்கும் பாவேந்தல் பாலமுனைபாறுக் அவர்களது 'கொந்தளிப்பு' என்கின்ற நவீன குறுங்காவியம் ஏழ்மையுடன்கூடிய வாழ்வியலில் எதிர்கொள்ளும் ஏக்கங்கள், வறுமையின் துயரங்கள், நெருக்கடிகள் என எல்லாக் கோணங்களிலும் தனக்கே உரித்தான யுக்திகளைக் கையாண்டு, ஆர்ப்பாட்டமின்றி இலக்கிய நயம் செய்திருந்தமை சிலாகித்துப் பேசப்பட்டதொன்றாகும். அது வாசகர்களுக்கு நல்லதொரு நாவல் சுவைத்த அனுபவத்தைத் தந்துநின்றது எனலாம்.

நமது கவிஞர் மக்களோடு வாழ்ந்து கொண்டிருப்பவர். பாவேந்தலின் கவித்துவமிக்க பேச்சாற்றல், மொழிநடை, கேட்போரை கூர்மையாக்கச் செய்யும் ஈர்ப்புமிக்கவை. இவருக்கு 2009 இல் கலாபூஷணம் விருதுவழங்கப்பட்டு கௌரவம் சேர்க்கப்பட்டது. சாமஸ்ரீ, சிறாஜுல் புனூன், கவிப்புனல், கவித்தாரகை, கவிஞர்திலகம் போன்ற பட்டங்களையும் விருதுகளையும் தனதாக்கிக் கொண்டவர். 2002 இல் இலங்கையில் இடம்பெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய நிகழ்வில் சிரேஷ்ட கவிஞர்களுக்கான விருது இவருக்கு கிடைக்கப் பெற்றது. மலேசியா, இந்தியா, ஆகிய நாடுகளில் இடம்பெற்ற இலக்கியமாநாடுகளில் பங்கேற்று தமது கவித்துவத் தினை பறைசாற்றி சர்வதேச புகழுக்கும் உரித்துடையவராகத் திகழ்கின்றார்.

சிறந்த சமூக சேவையாளராகிய பாவேந்தல் பாறுக் அவர்கள், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் அம்பாறை மாவட்டத் தலைவராகவும், அகில இலங்கைY.M.M.Aயின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளராகவும், பாலமுனை கிராமோதய சபையின் தலைவராகவும், பாலமுனை ஜும்ஆபள்ளிவாயல் தலைவராகவும், பாலமுனை பூஞ்சோலை எழுத்தாளர் மன்றம், தென்கிழக்கு கலாசாரபேரவை என்பவற்றின் செயலாளராகவும், நான் செயலாளராக இருந்து பணியாற்றிய ஆசுகவி அன்புடீன் இலக்கியப் பொன்விழா மன்றத்தின் நிதியாளராகவும் திறம்பட சேவையாற்றி பல்வேறு சமூகத் தொண்டாற்றிய பெருமைக்குரியவரும் ஆவார். தான் மாத்திரமன்றி தனது பிள்ளைகளையும் சமூகப் பணியில் அர்ப்பணிப்போடும் செயலூக்கத்தோடும் பணியாற்றக்கூடியவர்களாக வளர்த்தெடுத்துள்ளார் என்பதுகூட சவாலுக்குரிய இக் காலகட்டத்தில் போற்றத்தக்க பணியொன்றாகும்.

பாலமுனைக் கிராமம் விவசாயம் மற்றும் மீன்பிடித்துறைகளை முற்றுமுழுதான வாழ்வாதார வளமாக நம்பியிருந்த நிலையிலிருந்து மாறி, மிகக் குறுகியகாலப்பகுதிக்குள் வியாபாரம் மற்றும் சுயதொழிற்றுறை மேம்பாட்டினூடாக ஒருகட்டமைப்பு ரீதியான மாற்றத்தை எற்படுத்தியுள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இது அவ்வூரின் தலைமைத்துவக் கட்டுப்பாட்டையும் சிறந்த வழிகாட்டுதல்களையும் காண்பிப்பதுடன் ஏனைய அயற் கிராமங் களுக்கும் முன்னுதாரணமாக விளங்குகின்றது. இவ்வாறான மாற்றங்களுக்கு காரணமாக பலர்அமைந்திருந்தாலும் பாறூக் போன்றவர்களின் வகிபாகம் அதிகமென எண்ணுகின்றேன்.

இலங்கை வங்கியில் பல பதவிகளை வகித்த நமது பொன் விழாநாயகன் பாலமுனை பாறூக் அவர்களது சேவைக்காலத்தின் ஒருபகுதியோடு எனக்கும் நெருங்கியதொடர்புண்டு. அவர் திறமையான வங்கியாளர் என்பது போன்று நான் ஒருநேர்மையான வாடிக்கையாளரின் மகனாக இருந்து பயங்கரவாதம் நிலவிய காலப்பகுதியில் வங்கி நடவடிக்கைகள் தொடர்பாக பெற்றுக்கொண்ட அனுபவம் விரிவாக விபரித்துக் கூறவேண்டியதொன்றாகும். பாதுகாப்புக் கருதி பணத்தோடு பணியாளர்களையும் ஒன்று சேர்த்து உள்ளேவைத்துப் பூட்டிவிட்டு ஜன்னல் கம்பிகளுக்குள்ளால் பணப் பரிமாற்றம் செய்த அந்தக் காலப்பகுயில் ‘இவர்கள் பகல்நேர சிறைக் கைதிகளா?’ என்று பரிதாபமாகப்பார்க்கப்பட்ட எனது சிறுபராய அனுபவமும் நினைவுகளும் அலாதியானவை.

இவ்வாறாக பாறூக் அவர்கள் தனது ஐம்பதாண்டு இலக்கிய வாழ்விலும் சமூகவாழ்விலும் சாதித்தவைகள் அதிகம் அதிகம். ‘இலக்கியம் படைப்போன் சரித்திரம் படைப்பவன்’ என்ற கூற்றுக் கமைவாக அவர் இறைவனின் துணையுடன் மேலும் பல ஆண்டுகள் ஆரோக்கியமாக வாழ்ந்து இலக்கியத் துறைக்காக தன்னை அர்ப் பணித்து வெற்றிபெற வேண்டுமென உளப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

தேசபந்து **எஸ்.எல். முகம்மது ஹனீபா**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
சம்மாந்துறை.

பாலமுனை மண்ணின் மகுடம்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

எனது சாச்சா கவி அரசர் பாலமுனை பாறூக் அவர்களின் இலக்கிய செயற்பாட்டின் ஐம்பது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படவிருக்கின்ற பொன்விழா நிகழ்வுக்கும், சிறப்பு மலர் வெளியீட்டுக்கும் எனது வாழ்த்துரையை பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கவியுலகம் கவிதையை மரபுக் கவி என்றும் புதுக்கவி என்றும் இரண்டாக பிரித்து வைத்துள்ளது. இவ்விரு வகைகளுக் குள்ளும் இக்கவியரசரின் கவிதைகள் நீச்சலடிப்பது இவரது கவிப்புலமையின் அழகுகளுள் ஒன்றாகும்.

கவிதைகளை இஸ்லாம் வெறுக்கின்றது என சிலர் கருதுவதுண்டு விடயம் அவ்வாறல்ல. ஹஸ்ஸான் இப்னு தாபித் என்பவர் ஒரு நபித்தோழர் கவிப்புலமை அருளப்பெற்றவர். எதிரிகளின் ஆயுதங்கள் எமக்கு எதிராக அமைவது போல் உனது கவிதைகளைக்கொண்டு அவர்களை தாக்கிவிடு எனும் கருத்துப்புலப்பட நபியவர்கள் அத்தோழருக்கு கூறினார்கள் என்பதும், இமாம் ஷாபி (ரஹ்) அவர்கள் ஹதீஸ் துறையில், சட்டத்துறையில், ஆழமிக்க அறிவுபெற்றிருந்தது போன்று கவி இலக்கியத்திலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார்கள் என்பதும், இஸ்லாமிய விழுமியங்களும் தத்துவங்களும் நிறைந்த ஏடு ஒன்று இன்னும் அவர்களின் பெயரில் இருப்பது என்பதும் நல்ல கவிதைகளை இஸ்லாம் விரும்புகின்றது என்பதற்கு பலமான ஆதாரமாகும்.

கவியரசர் பாலமுனை பாறூக் அவர்களின் கவிதைக் காலத்தை மூன்றாக பிரித்துப்பார்க்க விரும்புகின்றேன். ஒன்று அவரது கவிதையின் இளமைப்பருவம் இரண்டு நடு நிலைப்பருவம், மூன்று ஐம்பதுக்கு பின்னுள்ள பருவம்.

இவற்றுள் முதற்பகுதியைவிட நடுப்பகுதி சமூகத்தின் நிலைகளை தோலுரித்துக் காட்டக்கூடியதாக அமைந்துள்ளது. என்பது பாரட்டத்தக்கதாதும். இதற்கு உதாரணமாக தோட்டுப் பாய் மூத்தம்மா எனும் குறுங்காவியத்தை கோடிட்டுக்காட்ட முடியும்.

எனினும் எஞ்சிய பகுதி முழுக்க முழுக்க நபிமார்களின் சரித்திரங்கள், இஸ்லாமிய விழுமியங்கள் பற்றிய கவிதைகளாக மலர வேண்டுமென அவாவுறுகின்றேன்.

இப்பாவேந்தலுக்கு மேல் ஒரு பட்டம் இருக்குமானால் அதற்கும் அவர் தகுதியானவர் என வாழ்த்துகின்றேன். நீண்ட ஆயுளுடன் உள, தேகாரோக்கியம் பெற்று வாழ வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

அஷ்ஷெய்க் ஐ.எல்.எம். ஹாசிம் சூரி

ஜெஸ்கா

பாலமுனை.

பார்போற்றும் கவிஞர் பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் பாலமுனை பாறூக் அவர்கள் இலக்கிய உலகில் 50 ஆண்டுகள் தடம் பதித்ததை பாராட்டு முகமாக வெளியிடப் படும் பொன்மலருக்கு எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன் .

எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே. கவிஞர் பாலமுனை பாறுக் என்றால் இலக்கிய உலகில் அறியாதவர்கள் எவரும் இல்லை குறிப்பாக பாரதத்தின் தமிழ்நாடு உட்பட மற்றும் பல சர்வதேச நாடுகளில் கூட கவிஞர் பாலமுனை பாறுக் அவர்களின் இலக்கிய ஆட்சியை அறிந்து வைத்திருக்கிறார்கள் என்றால் மிகையில்லை.

கவிஞர் பாலமுனை பாறூக் அவர்களின் குறுங்காவியங்கள் இந்திய தமிழ்நாடு பல்கலைக்கழகத்தில் தமிழ்க்கற்கைத்துறையில் M.Phil பட்டத்திற்காக ஆய்வு செய்யப் பட்டிருக்கின்றது என்பது நமது மண்ணுக்கும் நமது நாட்டுக்கும் கிடைத்த பெரும் கௌரவமாகும் .

கவிஞர் பாலமுனை பாறூக் அவர்கள் 1970 ஆம் ஆண்டுகளில் நாடக ஆசிரியராகவும், நாடகங்களில் பாத்திரமேற்று நடிப்பவராகவும் மேடை அறிவிப்பாளராகவும் அறிமுகமானவர். தற்போது, மரபுக்கவிதைகள் புனையும் மரபுக்கவிஞராக, புதுக்கவிதை ஆக்கும் புதுமைக்கவிஞராக அதன்பின் அக்கவிதைகளில் புரட்சி ஏற்படுத்தும் குறும்பாக்கள் மற்றும் வெண்பாக்களையும் புனையும் புலவராக, கவிச்சக்கரவர்த்தியாக, இலக்கிய உலகில் நவீன காவியங்களையும் படைத்து பல சாதனைகளின் சொந்தக்காரராக இருக்கிறார் என்பது எங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது .

கவிஞர் பாலமுனை பாறூக் அவர்களின் கவிதைத் தொகுப்புக் களில் பதம், தோட்டுப்பாய் மூத்தம்மா போன்றவைகள் என்றும் மறக்க முடியாத எழுத்துப் பொக்கிஷங்களாகும் . அவர் எமது தேசத்து இலக்கிய உலகின் பலவிருதுகளின் சொந்தக்காரர் ஆவார்.

தேசிய மீலாத் விழாக்கள், தேசிய இலக்கிய விழாக்கள் மற்றும் இந்து இஸ்லாமிய பெருநாள் கொண்டாட்டங்களில் தனது இலக்கியத் திறமையினாலும் எழுத்துப் புலமையினாலும் பெருமை சேர்த்துள்ளார்.

கவிஞர் பாலமுனை பாறுக் அவர்கள் இலக்கிய உலகில் உயரந்து நின்ற போதும் நமது மண்ணுக்கும் மக்களுக்கும் பொதுச் சேவை செய்வதில் என்றும் பின்நிற்பதில்லை எப்பொழுதும் தனது மண்ணையும் மக்களையும் நேசிப்பவராக காணப்பட்டார்.

பாலமுனை பிரதேசத்தின் கிராமோதய சபை தலைவராக, லிபியாவின் மக்கள் காங்கிரஸ் அமைப்பின் பொறுப்பாளராக, YMMA கிளையின் தலைவராக, அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் கிளை பொறுப்பாளராக இருந்துள்ளார்.

குறிப்பாக பாலமுனை ஜும்ஆப்பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் தலைவராக நீண்டநாள் கடமையாற்றினார். அத்துடன் அட்டாளைச்சேனை பிரதேச மத்திய சபையின் உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார் .

கவிஞர் பாலமுனை பாறூக் அவர்கள் இலங்கை வங்கியில் இலிகிதராக இணைந்து இறுதியில் வங்கி முகாமையாளராக பதவி உயர்வு பெற்றார் .

தனது தொழில் ஆரம்பம் முதல் இறுதிவரை தன்னால் முடிந்த சேவைகளையும் மக்களுக்கு செய்துள்ளார் . உண்மையில் கவிஞர் பாலமுனை பாறூக்கென்ற ஆளுமை நமது மண்ணுக்கும் எமது தேசத்திற்கும் இலக்கிய பணியையும் பொதுப்பணியையும் புரிந்து அழியாத தடையத்தை பதித்த இலக்கிய பெரும் நதி என்பது பாலமுனையின் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் - அவர் ஈருலகிலும் ஈடேற்றம் பெற ஏக வல்ல இறைவனை இருகரம் ஏந்திப் பிரார்த்திக்கின்றேன்.

எஸ்.எம்.எம். ஹனிபா, BA, PGDE, PGDEM, Dip in Eng.SLPS

பிரதி தவிசாளர்,

பிரதேச சபை,

அட்டாளைச்சேனை.

பொன்விழாக் காணும்
ஈழத்து இலக்கியப் பொக்கிஷம்

ஈழத்தின் தென்கிழக்குக் கோடியில் பாலமுனைக் கிராமத்தில் பிறந்து, ஈழத்து இலக்கியப் பரப்பில் தவிர்க்க முடியாத ஆளுமைகளுள் ஒருவராக வாழ்ந்துவரும் ஈழத்து இலக்கியப் பொக்கிஷம் கலாபூஷணம் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் பொன்விழா மலருக்கு வாழ்த்து தெரிவிக்க எனக்குக் கிடைத்த வாய்ப்பு மிகப்பெரும் பேறாகும்.

இலக்கியத்துறையில் கால் பதித்த காலப்பகுதியில் பெருமுனைப் போடு ஆக்கங்களை வெளிக்கொணரும் அதிகமான எழுத் தாளர்கள் குறிப்பிட்டதொரு காலப்பகுதியின் பின்னர் ஆக்கங்களை வெளிக்கொணர்வதில் வேகம் குறைந்து விடுவதே பொதுவான அவதானிப்பு. இவ்வவதானிப்புக்கு மாற்றமாக இலக்கியப் பரப்பில் நிலைத்திருந்து தொடராக பெறுமதியான படைப்புகளினை வழங்கும் மிகச் சொற்பமானவர்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒருவர் பாலமுனை பாறூக் அவர்கள் என்பது எனது அவதானம்.

காலத்தால் அழியாத பல கலைப்படைப்புக்களை நமக்குத் தந்தவர் பாலமுனை பாறூக்.

அருங்காட்சியகங்கள், நூதனசாலைகள் என்பவை அரும்பொருட் களை, அருகிவிட்ட வழக்காறுகளின் வரலாற்றுச் சான்றுகளாக அடுத்துவரும் சந்ததிகளுக்கும் எடுத்துரைக்கும் வகையில் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருபவை என்பது நாமெல் லோரும் அறிந்ததே.

தென்கிழக்கில் வாழ்ந்த முஸ்லீம்களின் வாழ்க்கைக் கோலங்கள் வாழ்வாதார நடவடிக்கைகள் உள்ளிட்ட வழக்காறுகளை, அக்காலத்தில் வழக்கில் இருந்து இன்று அருகிப்போய்விட்ட அரும்சொற்களையெல்லாம் அடுத்தடுத்து வரும் சந்ததியினரும் அறிந்து கொள்ளும் வகையில் அறிமுகம் செய்து, பாதுகாக்கும் பாலமுனை பாறூக் அவர்களின் 'கொந்தளிப்பு' மற்றும்

'தோட்டுப்பாய் மூத்தம்மா' ஆகிய குறுங்காவியங்களும் தென்கிழக்கிலங்கை முஸ்லீம்களால் கொண்டாடப்பட வேண்டிய அருங்காட்சியகங்களே என்றால் அது மிகைக்கூற்றல்ல.

குறுங்காவியங்கள், குறும்பாக்கள் என்பவை பற்றி விவாதிக்கப் படுகையில் 'பாலமுனை பாறூக்' எனும் நாமத்தை விலக்கி வைத்துவிட்டு அவை நடைபெற முடியாதென்பதே இன்றைய தமிழ் இலக்கிய உலகின் நிதர்சனமாகும் என்பதே எனது அனுமானமாகும். சமகாலத்தின் சமூக, அரசியல், இலக்கிய பரப்புகளில் காணப்படும் முரண்பாட்டு விடயங்களை ரசிக்கத்தக்க வகையில் குறும்பு, கேலி, கிண்டல், எள்ளல், துள்ளல், நகைச்சுவை ததும்பும் வகையில் விமர்சனம் செய்யும் கவிஞரின் ஆக்கங்கள் அலாதியானவை.

அச்சுக்கு செல்லுமுன்பே அவரது ஆக்கங்களை அனுபவிக்கும் வாய்ப்பு அவர் எனது தாய்மாமன் என்ற வகையில் அதிகமாக எனக்கு வாய்த்திருக்கிறது. அந்த வகையில் அவரது முதல் வாசகனாக நான் இருந்திருக்கிறேன் என்பதே ஒரு பேறுதான்.

'பாலமுனை' எனும் தான் பிறந்த மண்ணை இலக்கிய உலகு தாண்டியும் அறிமுகப்படுத்துவதில் பெரும் பங்காற்றியவர் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள்.

ஐம்பது ஆண்டுகள் எழுத்துப் பணியில் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்துவரும் அன்னாரின் பொன்விழா சிறப்புறவும், அவரது ஆயள் நீடித்து இன்னும் பல்லாயிரம் இலக்கியப் படைப்புகளை படைத்திடவும், இறைபொருத்தத்துடன ஈருலக வெற்றி பெற்றிடவும் மனதார வாழ்த்துகிறேன்.

நன்றி.

சட்டத்தரணி.

முகம்மது அமீர் அன்ஸில் (L.L.B)

முன்னாள் தவிசாளர்,

பிரதேச சபை,

அட்டாளைச்சேனை.

பாவேந்தல் பாலமுனை பாறூக்கின் பாத்திறன் !

கிராமிய மண்வளச் சொற்கள் கொண்டு பாப்புனைவதில் பாலமுனை பாறூக் தேர்ச்சியும் திறமையும் உடையவராக இருக்கின்றார். அவர் இயற்றியுள்ள பெரும்பாலான கவிதைகளின் பாடுபொருட்கள் கிராமியப் பண்பு கொண்டவைகளாக அமைந்திருப்பது கண்டு நான் உவகை கொள்வதுண்டு. இவர் எழுதிய காவியமான தோட்டுப்பாய் மூத்தம்மா, சீசன் பாவா என்ற கவிதைகளை நான் ஆங்கிலமொழிமாற்றம் செய்ய விரும்பினேன் அப்பொழுது நான் ஆஸ்திரேலியாவில் இருந்தேன் எனது வீட்டு ஜன்னலை திறந்தவுடன் என் கண்ணெதிரே எனது மூத்தம்மா வந்தது போல் தோன்றியது. காரணம் நானும் சாய்ந்தமருதில் பிறந்து வளர்ந்தவன் இத்தகைய பாத்திரங்களை நேர்முகமாகக் கண்டவன்

அவரது கவிதைகள் பலவற்றை நான் ஆங்கில மொழியில் மொழிமாற்றம் செய்யும் போது சிரமப்படுவது கிடையாது. இலகு தமிழில் பழகு தமிழில் புனையப்பட்ட கவிதைகளின் கருப் பொருளும் அவ்வாறே இலகுவானதாக அமைந்து விடுவதுண்டு. இந்த அவசரயுகத்தில் வாசகனின் வாசிப்பின் மூலம் உள்வாங்கப்படும் எந்தப்படைப்பும் வாசகனின் கவனஈர்ப்பை பெறும்வண்ணம் அமைந்து விடுமாயின் அப்படைப்பு வெற்றிபெறச் செய்துவிடும். அந்தவகையில் பாவேந்தலின் தனிக்கவிதைகளாகட்டும் குறுங்காவியங் களாகட்டும் ஏனைய எழுத்துக்களாகட்டும் சிறப்பினைப் பெறுவது அவர் கையாளும் சொற்களை வைத்து என்பது எனது கணிப்பாகும். சமகாலத்தில் கிழக்கிலங்கையின் தமிழ் இலக்கிய ஆளுமைகளுள் பாலமுனை பாறூக் அவர்களுக்கு ஒருசிறப்பான தனியிடம் உண்டு.

அவருக்காக எடுக்கப்படும் இப்பொன்விழா சிறப்புப்பெற வாழ்த்தி ஆசிக்கின்றேன்.

அல்ஹாஜ். எம். எச். ஏ. சமட்

முன்னாள் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி அதிபர்

விசேட ஆலோசகர் - புனர்வாழ்வு புரனமைப்பு

கிழக்கு மாகாண அமைச்சு

ஆய்வுகள்

கவிதைகள்

கட்டுரைகள்

வாழ்த்துகள் . . .

பாலமுனைபாறூக்:
கவிதைகளும் காவியங்களும்

- 1 -

பேராசிரியர். எம். ஏ. நுஃமான்

கல்முனைப் பிரதேசத்தின் முன்னணிக் கவிஞர்களுள் பாலமுனை பாறூக்கும் ஒருவர். கல்முனைக்குத் தெற்கே அமைந்துள்ள பாலமுனைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தன் கிராமத்தின் பெயரைத் தன் பெயருக்கு அடையாகக் கொண்டதன் மூலம் தன் கிராமத்துக்கும் ஓர் இலக்கிய இருப்பை வழங்கியவர்.

பாலமுனை பாறூக் 1970களின் தொடக்கத்தில் கவிதைத்துறையில் காலடி வைத்தவர். இலங்கை இலக்கிய உலகில் முற்போக்குச் சிந்தனை முனைப்பாக இருந்த காலகட்டம் அது. பாலமுனை பாறூக்கும் அச்சிந்தனையால் ஈர்க்கப்பட்டவர் என்பதில் ஐயம் இல்லை. இஸ்லாமியப் பற்றும், சமூக உணர்வும் மிக்க ஓர் இடதுசாரியாக நாம் இவரை அடையாளங்காணலாம். பதம் (1987), சந்தனப்பொய்கை (2009) ஆகிய இவரது முதல் இருகவிதைத் தொகுதிகளும் இதற்குச்சான்று.

அன்னை ராபியா பஸ்ரியின் பிரார்த்தனையிலிருந்து இவர் மொழி பெயர்த்துத் தந்த பின்வரும் பாடல்வரிகள் அவரது மதப்பற்றையும் மன உணர்வையும் நன்கு வெளிப்படுத்துகின்றன.

ஏழைக் குருடன் கரங்களிலே
இருக்கும் கையின் தடியாக
என்னை ஆக்கிவிடு போதும்
இதற்கு மேலே என்னைநீ
வீர இளைஞன் கரங்களிலே

மின்னும் வீரவாளாக
ஆக்கிவிடவுந் தேவையில்லை
அல்லாஹ் எனக்கு அதுபோதும்
அரசனெருவன் மாளிகைக்குள்
அமைந்தே உள்ள அரியணையாய்
அல்லாஹ் என்னை ஆக்காதே
ஆசையில்லை எனக்கதன்மேல்
வழிப்போக்கர்கள் அமருகிற
நிழல் தரு மரமாய் என்னை நீ
உருவாக்கிவிட்டால் அது போதும்
உவகை பெறுவேன் அதனாலே (பதம்)

மத விழுமியங்களுக்கும் சமூக நடைமுறைகளுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் இவருடைய பதம் தொகுப்பிலுள்ள பலகவிதைகளில் வெளிப்படுகின்றன. குறிப்பாக வறுமைப்பட்ட பெண்களின் சமூகநிலை இவரது பலகவிதைகளில் பேசப்படுகின்றது. பாலையில் ஓர் நீர்ச்சுனை, மச்சானுக்கு ஓர்மடல், பெண்ணே மறந்துவிடு, கண்ணீரைத் துடைத்துவிடு, பாதை மாறிய பாவை, களைகள் அகற்ற முதலிய கவிதைகள் இத்தகையன. இவருடைய சந்தனப் பொய்கையில் உள்ள கவிதைகள் பெரிதும் மத ஆன்மீகம் சார்ந்தவை.

கவிதையின் மொழி அழகை விட அதன் பொருள் வலிமையால் பேசப்படக் கூடிய கவிதைகளே இவரது முதல் இரு தொகுதிகளிலும் பெருமளவு காணப்படுகின்றன. சுமார் முப்பது ஆண்டுகளில் இவர் எழுதிய கவிதைகளுள் குறைந்த எண்ணிக்கையிலான கவிதைகளே இவ்விரு தொகுதிகளிலும் இடம் பெற்றிருக்கின்றன என்று எண்ணுகின்றேன். 2010வரை இவர் எழுதிய கவிதைகளை முழுமையாக நோக்கும் பொழுதே இவருடைய தனிக்கவிதைகள் பற்றிய ஒரு சரியான மதிப்பீட்டை நாம் செய்ய முடியும். ஆயினும், ஒருபானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம் என்பதுபோல் இவருடைய முதல் தொகுதியில் இவர் திரட்டித் தந்த 33 கவிதைகளையும்அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது, மருதூர்க்கொத்தன் தன் முன்னுரையில் இவரைப்பற்றி உயர்வு நவிற்சியாகச் சொன்ன வார்த்தைகளைப் புறக்கணித்துவிட்டுப் பார்த்தாலும், பாலமுனை பாறூக் புறக்கணிக்கப்பட முடியாத ஒருகவிஞர் என்பதை யாரும் மறுக்க முடியாது.

- 2 -

2010 ல் பாலமுனை பாறூக்கின் கவித்துவ ஆளுமையில் திடீரென ஒருவிகசிப்பை நாம் காண்கின்றோம். இவ்வாண்டில்தான் அவருடைய கொந்தளிப்பு என்ற

குறுங்காவியம் வெளிவந்தது. தென்கிழக்கின், குறிப்பாகப் பாலமுனை, ஒலுவில் வாழ் முஸ்லிம் மக்களின் கொந்தளிப்பான வாழ்க்கையைப்பேசுகின்ற ஒருநெடுங்கவிதை அது. சுனாமிப் பேரழிவில் தன் மனைவி மக்களை இழந்து தனித்துப்போன ஆதம்காக்கா என்ற தனிமனிதனின் விருத்தாந்தத்தை விவரிப்பதன் ஊடாக கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கையின் சில அம்சங்களைப் படம்பிடிக்கும் முயற்சி அது.

சனசந்தடி மிகுந்த கடற்கரையில் ஒரு மாலைநேரத்துக் காட்சியுடன் ஆரம்பிக்கிறது காவியம். ஆதம்காக்கா தனியே ஓரமாய் ஒதுங்கி நின்ற ஒற்றைத் தென்னையின் கீழேவந்து அமர்ந்து கொள்கிறார். அவரின் நினைவோட்டமாகக் கவிதை விரிகிறது. ஆழிப்பேரலை அனர்த்தம் அவரின் நினைவில் எழுகிறது. அதில் அள்ளுண்டு போன தன் மனைவி, மக்களின் நினைவு அவரைத் துயரத்தில் ஆழ்த்துகின்றது. அதையொட்டி அவரது 33வருட மணவாழ்வு, சுனாமிக்கு ஒருவாரம் முன்னால் மூத்த மகளுக்குத் திருமணம் பேசியது, அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் இளையமகள் குமராகி சடங்கு செய்தது எல்லாம் அவரது நினைவில் வந்துமோதுகின்றன. பின்னர், சுனாமி நிவாரணத்தில் நிகழ்ந்த மோசடிகளை, பாதிக்கப்பட்டவர்கள் புறக்கணிக்கப்பட்டு வசதியானவர்கள் நிவாரணம் பெற்றதை, நினைத்துப் பார்க்கிறார். ஒலுவில் துறைமுக வேலைகள் தொடங்கியதும் அவரது பாரம்பரியமான மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டதை நினைத்துப் பார்க்கிறார். அதையொட்டி மீன்பிடித்தொழில் நடைமுறைகள் அவர்மனத்திரையில் ஓடுகின்றன. மீன்பிடித் தொழிலையும் இழந்து, துறைமுக நிர்மாணத்தில் வேலை வாய்ப்புகளையும் இழந்து நிற்கும் அவரது பரிதாபநிலை, தன்பிரதேசத்தில் வெளியிலிருந்து வந்த பெரும்பான்மையினரின் மேலாதிக்க அச்சுறுத்தல் என்பவற்றால் அவரது மனச்சுமை அதிகரிக்கிறது.

மீன்பிடித்தொழிலை இழந்த பின்னர் போடியாரின் வயலில் வேளாண்மைச் செய்கையாளராக (வெளியான்) மாறியதன் வாழ்க்கை பற்றிபின்னர் அவர் நினைத்துப் பார்க்கிறார். தன்வாப்பாவுடன் சிறுவயதில் வயலுக்குப் போன நினைவுகள் அவர் மனத்திரையில் எழுகின்றன. வேளாண்மைச் செய்கையில் இயந்திரம் நுழைவதற்கு முந்திய விவசாய நடைமுறைகளை விஸ்தாரமாக நினைத்துப் பார்க்கிறார். இப்போதுஎல்லாம் போய்விட்டநிலை.

இலயித்து, அவர்மனம் சுவைத்து
வாழ்ந்திட்ட வாழ்க்கை
விலகியதாய், விட்டுவிட்டு
நழுவியதாய் உணர்ந்தார்?
கலங்கிவிட்டார்... மனசினிலே

கவலை வர நொந்தார்
இயந்திரமாய்ப் போனதிந்த
வாழ்க்கை என வெந்தார்
இருண்டே இருந்தது
இடி இடித்தது
ஒப்பாரிவைத்தே அழுதது வானம்!
ஓடிச்சென்றே
ஒதுங்கினார் காக்கா
தகட்டுக்கூரைத் தாழ்வாரத்தே

என்று முடிகிறது கொந்தளிப்பு குறுங்காவியம். 14 சிறு அத்தியாயங்களில் நினைவோட்டமாகச் சொல்லப்படும் இக்காவியம் பாலமுனை பாறூக்கின் கவித்துவ முதிர்ச்சியைக் காட்டுகின்றது என்பதில் ஐயம் இல்லை. புனை கதையின் விபரிப்பு முறையைப் பயன்படுத்தியிருப்பது அவரது காவியத்துக்கு வலுவூட்டுகின்றது எனலாம்.

- 3 -

இதைத்தொடர்ந்து 2011ல் தோட்டுப்பாய் மூத்தம்மா குறுங்காவியம் வெளிவருகிறது. இது கொந்தளிப்பின் வடிவத்தில் இருந்தாலும் அதிலிருந்து பெரிதும் வேறுபட்டது. கொந்தளிப்பில் ஒருகதைஇல்லை. ஆதம்காக்கா மட்டுமே அதில் வரும் பாத்திரம். ஏனையவர்களுக்கு முகமும் இல்லை, குரலும் இல்லை. ஆதம்காக்காவின் நினைவுகளின் ஊடாகச் சம்பவங்களைக் கவிஞர் விபரித்துச் செல்கிறார்.

தோட்டுப்பாய் மூத்தம்மாவில் ஒரு கதை உண்டு. சொந்த ஊரைவிட்டு இளம் வயதில் அயலூருக்குத் தன் கணவனோடு வந்து, ஊரார் வழங்கிய ஒரு சிறு நிலத்தில் குடிசை அமைத்து அவனுடன் ஊர்மெச்ச வாழ்ந்து, கணவன் இறந்த பின்னரும் தானே உழைத்துத் தன்குடிசையில் தனித்து வறுமையில் வாழ்ந்து எழுபது வயதில் மரணித்துப்போன செய்னம்புவின் கதையைச் சொல்கிறது இக்காவியம். இந்தச் செய்னம்புதான் தோட்டுப்பாய் மூத்தம்மா.

'மூத்தம்மா மௌத்தாகி மூன்றாம்நாள் மூத்தம்மா வசித்திருந்த குடிசைக்குக் கொண்டாட்டம்','கார்களிலும் சொகுசான பஸ்களிலும் எங்கிருந்தோ எவரெவரோ உறவுமுறை கூறி ஓடோடி' வந்தார்கள். 'கத்தம் கொடுத்து கடன்கழிக்க வேண்டுமென உற்சாகத்தோடவர்கள் உருண்டுபுரண்டார்கள்! கோழி புரியாணி குடிசையிலே மணம்வீசி வேலிகளைத் தாண்டி விரைந்து பரவிற்று' அப்போதுதான் இந்தக் கேள்வி எழுகிறது.

“ஆர் இந்த மூத்தம்மா?”

இந்தக் கட்டத்தில் நீலாவணனின் ‘உறவு’ கவிதையில் வரும் மரணித்துப் போன மானாகப்போடிப் பெரியப்பாவை நினைவுறுத்துகிறாள் தோட்டுப்பாய் மூத்தம்மா. ஆனால், உறவு கவிதையில் நீலாவணனின் நோக்கம் போலி உறவைக் கேலி செய்வதுதான். தோட்டுப்பாய் மூத்தம்மா அதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.

செய்னம்பு பெரிய குடும்பத்துப்பெண். பரம்பரைப் போடியாரான பெரியம்பிப்போடியின் ஒரே மகள். அவள் பிறப்பை நாற்பது நாள்வரை அந்தக் குடும்பம் கொண்டாடியது. பள்ளிப்படிப்பு இல்லாவிட்டாலும் மார்க்கக் கல்விஊட்டி ‘அதபாய்’ வளர்க்கப்பட்டவள் அவள். பன்னிரண்டு வயதில் அவள் பருவமடைந்ததும் சொந்தமாமியே வந்து சம்பந்தம் கலக்கிறாள். உரியமுறையில் திருமணம்பேசி சொந்த மச்சானுக்கே மணம்முடித்து வைக்கப்படுகிறாள். கணவனின் குடும்பமும் போடிகுடும்பம். பெரியம்பிப் போடியின் சகோதரியின் கணவன் இளையம்பிப்போடி. அவருடையமகன் அகமன். திமிரும் முன்கோபமும் உடைய சுடுதண்ணி என விபரிக்கப்படுகிறான். செய்னம்பு அவனுடன் ஐந்து ஆண்டுகள் குடும்பம் நடத்துகிறாள். காவியத்தில் அவளுடைய குடும்ப வாழ்க்கை பற்றிய விபரணங்கள் எவையும் இல்லை. எனினும் அது திருப்தியற்ற மணவாழ்க்கை என்று கதைசொல்லியான கவிஞரால் கூறுப்படுகிறது. ‘ஒட்ட முடியாத உறவு.’ தகப்பன்மாரும் மரைக்கார்மாரும் சமரசம் செய்ய முயன்றும் முடியவில்லை. செய்னம்பு பிடிவாதமாக நின்று மணவிலக்குப் பெறுகிறாள்.

செய்னம்புவின் தனிமை வாழ்க்கை தகப்பனைத் துன்புறுத்துகின்றது. மகளுக்கு மறுமணம் செய்துவைக்க அவர் முடிவெடுக்கிறார். மறுமண முடிவெடுத்ததும் அவருக்குத்தன் வண்டிக்கார இசுமாயில்தான் நினைவுக்குவருகிறான். அவன் “பார்வைக்கு நல்ல அழகன், நேர்மையுடன், தொழில் தேர்ச்சியுடன் செய்துவரும் பேர்பெற்ற நல்ல உழைப்பாளி.” வண்டி இழுப்பதுடன் பெரியம்பிப் போடியின் குடும்ப அலுவல்களையும் பார்ப்பவன். செய்னம்பு சிறுமியாக இருந்த காலத்தில் அவளை ஓதப்பள்ளிக்கு வண்டியில் கூட்டிப் போய்க் கூட்டிவந்தவன். அவள் கிண்ணம் பழம்கேட்டு அடம்பிடிக்க மரமேறி கிண்ணம்பழம் ஆய்ந்து கொடுத்திருக்கிறான். அவள் குமரான பின்னரும் அவள் போகும் இடத்துக்குக் கூட்டு வண்டியில் கூட்டிப் போய்க் கூட்டிவந்திருக்கிறான். போடியாரின் நம்பிக்கைக்குரியவன். தகப்பன் மறுமணம் பற்றிய பேச்செடுத்தபோது முதலில் செய்னம்பு மறுக்கிறாள். “குணத்தினை விடுத்து, பரம்பரை குடும்பம் பார்த்து முடிக்கும் மறுமணம் எதற்கு என்றவள் நினைத்தாள்” ஆனால், இசுமாயில்தான் மாப்பிள்ளை என்று அவர் சொன்னதும் இணங்குகிறாள். “நேர்மையும்

உழைப்பும் நேர்த்தியும் தொழுகையும் இளமையும் அழகும் ஒழுக்கமும் நிறைந்த உருவமொன்றவளின் கண்களில் தெரிய சம்மதம் சொன்னாள்."

பின்னர் இசுமாயிலின் சம்மதம் கேட்க விரைகிறார் தகப்பன். மகளின் பரிதாபக் கதையைச் சொல்லி சொத்துகள் காணி தருவதாகச் சொல்லி மகளுக்கு மறு வாழ்வளிக்கும்படி வேண்டுகிறார். அவனோ சொத்துகளை நிராகரித்து இஸ்லாமிய முறைப்படி மஹர் கொடுத்து செய்னம்புவை மணமுடிக்கச் சம்மதிக்கிறான். கவிஞர் நமக்கு அதிக விபரம் தராவிடினும் இசுமாயிலுக்கும் செய்னம்புக்கும் இடையில் வெளிப்படுத்தப்படாத ஒரு ஊமைக்காதல் அவர்களின் நெஞ்சங்களில் உறைந்திருந்தது என்பதை நாம் எளிதாக யூகிக்கலாம்.

ஆனால் "போடியார் மகளுக்குக் கூலிக்காரனா" எனக் குடும்பம் எதிர்க்கிறது. அதனால் "இணங்கிக் கொண்ட இரண்டு மனங்கள் ஊரைவிட்டே போக நினைத்தன." உள்ள சொத்தெலாம் பள்ளிக்குக்கொடுத்து வக்பு செய்த பின் பள்ளிக்கூடம் அமைத்துப் பிள்ளைகள் ஓதவும் படிக்கவும் உதவும் படியாய்க் கோரிக்கை வைத்து ஊரைவிட்டே போய் பத்துமைல் தொலைதூரப் பயணத்தில் வரும் இந்தச் சிற்றூரை வந்தடைந்து வாழ்ந்தார்கள். புறப்பட்டு இங்கிருந்தே போயிற்று மையத்து.

இதுவரை மையத்து வீட்டிலிருந்து பின்னோக்குப் பார்வையில் கதை சொல்லி வந்த கவிஞர், மீண்டும் வாசகரை அந்தக் குடிசைக்குக் கொண்டு செல்கிறார். மூன்றாம் நாள் மையத்து வீட்டுக்குவந்தவர்கள் அவளுடைய சொந்த ஊரார்தான். அவள் வக்புசெய்த சொத்துகளால் பயனடைந்து, பட்டங்கள் பெற்றவரும் பதவிகளில் உயர்ந்தவரும் வந்திருந்தார்கள். அவளுக்காய் கிரியைகளும் பிரார்த்தனையும் புரிந்தார்கள். அவர்களின் வழிகாட்டுதலில் அந்த ஊரிலும் "செய்னம்பு நாச்சியார் கல்விச் சகாயநிதி" என்ற பெயரில் ஒரு நம்பிக்கை நிதியத்தையும் தாபித்தார்கள்.

விண்ணில் படர் இருளும்
விலகிற்று!
விண்மீன்கள் புடைசூழ
நிலவுமகள் உலாவந்தாள்!
குளிர்நிலவின்
ஒளிமழையில்
நனைந்திற்றே ஊரெல்லாம்!
நிலவுக்குள் ஒளிமுகமாய்
நிறைந்தாளோ செய்னம்பூ?

என்று காவியத்தை முடித்து வைக்கிறார் கவிஞர்.

நான் இதுவரை இங்குவிபரித்த கதை காவியத்தின் எலும்புக்கூடுதான். அளவில் சிறிய 18 அத்தியாயங்களில் தன் கவிதை நடையில் இந்த எலும்புக் கூட்டுக்கு உருவமும் உயிரும் கொடுத்திருக்கிறார் கவிஞர். ஒரே இருப்பில் வாசித்து முடிக்கக்கூடிய சிறிய படைப்புத்தான். எனினும், அதன் ஊடாக ஒருமுக்கால் நுற்றாண்டு கால முஸ்லிம் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளை, சமூக அசைவியக்கத்தை மையக்கதையின் ஓரங்களில் இழையோட விட்டிருக்கிறார்.

இக்கதை நிகழும் காலம் பற்றிய வெளிப்படையான குறிப்புகள் எவையும் இதில் இல்லை. எனினும் செய்னம்பு எழுபது ஆண்டுகளுக்கு முன்பற்றூரில் பிறந்தாள் என்று சொல்லப்படுகின்றது. அவள் இறந்தது சமகாலத்தில் என்றால் அவள் பிறந்தது 1950 களில் என்று கொள்ள வேண்டும். ஆனால், அவள் சிறுமியாக இருந்த காலத்தில் மிசனரிப் பள்ளிக்கூடங்களைத் தவிர முஸ்லிம் கிராமங்களில் வேறுபள்ளிகளே இல்லை. மாட்டு வண்டிதான் பிரதான வாகனம். இதில் விபரிக்கப்படும் சாமர்த்திய, திருமணச் சடங்கு சம்பிரதாயங்கள் இன்று பெரிதும் வழக்கில் இல்லாதவை. அவ்வகையில் இந்தக்கதை 1930 களில் தொடங்குவதாகக் கொள்ளலாம். அன்றிலிருந்து கல்வி முன்னேற்றம், பட்டம் பதவிகள் பெற்ற ஒரு மத்தியதர வர்க்கத்தின் உருவாக்கம், மையத்து அடக்கம் செய்யும் போது தல்கீன் ஓதுவது கூடுமா கூடாதா என்பன போன்ற மத முரண்பாடுகள் என்பன காணப்படும் சமகால முஸ்லிம் சமுதாயம் உருவாகிய வரையிலான வரலாற்றினை இக்காவியம் மெல்லிதாகத் தொட்டுச் செல்வதைக் காணமுடிகிறது. அவ்வகையில் ஒருயதார்த்த நாவலுக்குரிய பொருளை இக்காவியம் தன்கவிப்பொருளாகக் கொண்டுள்ளது என ஒருவர் கூறமுடியும்.

யதார்த்த நாவலுக்குப் பழக்கப்பட்ட வாசகன் இக்காவியம் பற்றிப் பல்வேறு வினாக்களை எழுப்புவான்:

அகமனுக்கும் செய்னம்புக்கும் இடையிலிருந்த உண்மையான முரண்பாடு என்ன? ஏன் செய்னம்பு விவாக விலக்கில் தீவிரமாக இருந்தாள்? அதை நியாயப் படுத்துவதற்கான வலுவான காரணிகள் எவை?

பெரியம்பிப் போடிக்கிருந்த செல்வத்துக்கும் செல்வாக்குக்கும் அவருக்குத் தகுதியான குடும்பத்தில் இருந்து தன் மகளுக்கு இரண்டாவது மாப்பிள்ளை தேடியிருக்கலாமே. அப்படி இருந்தும் ஏன் அவர் வண்டிக்கார இசுமாயிலிடம் போய் தன்மகளுக்கு மறுவாழ்வு தரும்படி இரந்து நிற்கவேண்டும்?

செய்னம்பு - இசுமாயில் திருமணம் ஊரில் செல்வமும் செல்வாக்கும் உள்ள அவளுடைய தகப்பன் பேசிச்செய்த திருமணம்தானே. அப்படியிருந்தும்

சுற்றத்தவர் விரும்பவில்லை என்பதற்காக கள்ளக் காதலர்கள் போல் அவர்கள் ஏன் ஊரைவிட்டுச் சென்று அஞ்ஞாதவாசம் செய்யவேண்டும்?

இசுமாயில் சீதனமாக சொத்துகள், காணி எதுவும் வேண்டாம் என்றவன். செய்னம்பு தகப்பனின் சொத்தில் உரிமை உடையவள் எனினும், தகப்பன் எழுதிக் கொடுக்காதவரை அவள் சொத்துடையவள் அல்ல. இந்நிலையில் அவர்கள் சொத்துகளையெல்லாம் பள்ளிவாயலுக்கு வக்பு செய்தது எப்படி? தகப்பன் முழுவதையும் எழுதிக் கொடுத்தாரா? அப்படியானால் பின்னர் தாய், தகப்பனுக்கு என்ன நடந்தது?

இசுமாயிலும் செய்னம்புவும் சொந்தக் கிராமத்திலிருந்து பத்துமைல் தூரத்தில்தான் வாழ்ந்தார்கள். செய்னம்பு சுமார் ஐம்பது ஆண்டுகள் அங்கு வாழ்ந்திருக்கிறாள். அதுகாலவரை அவளுக்கும் அவளது குடும்பத்தினருக்கும் எவ்வித தொடர்பும் இருக்கவில்லையா? அவளுடைய வக்புசெய்த சொத்துகளினால் பயன்பெற்று பட்டமும் பதவிகளும் பெற்றவர்கள் அவள் மரணிக்கும்வரை அவளைப்பற்றி அறியாமல் இருந்தார்களா? அவளது மௌத்துக்குப் பின்னர் திடீரென அவள்பற்றி அவர்களுக்கு ஞானம் கிடைத்தது எவ்வாறு?

இது ஒரு யதார்த்த நாவலாக இருந்தால் வாசகர் மனதில் இத்தகைய கேள்விகள் எழுதல் இயல்பே. ஆனால், இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்வதாயிருந்தால் பாலமுனை பாறூக் இந்தக்காவியத்துக்குப் பதிலாக ஒருநாவலைத்தான் எழுதியிருப்பார்.

ஒரு யதார்த்த நாவலில் நாம் எதிர்பார்ப்பதை எல்லாம் யதார்த்த வாழ்வைப் பிரதிபலிக்கும் ஒரு காவியத்தில் நாம் எதிர்பார்க்க முடியாது. நாவலின் தளம் வேறு, காவியத்தின் தளம்வேறு. அதனால்தான் இந்தக்காவியத்தைப் பற்றி எழுதிய யாருக்கும் இத்தகைய கேள்விகள் எழவில்லை என்று நினைக்கின்றேன். ஒரு யதார்த்த நாவல் யதார்த்த வாழ்வின் நுட்ப விபரங்களையும் ஊடுருவிச் செல்லும் இயல்புடையது. அது விபரிக்கும் சம்பவங்களுக்கிடையே ஒரு தர்க்க ஒழுங்கைப் பேணும் கடப்பாடு அதற்கு உண்டு. உண்மைக்குக் கிட்டியதாக, நம்பும் படியான ஒரு பிரமையை வாசகனுக்குள் ஏற்படுத்துவதே அதன் அழகியல் எனலாம்.

அத்தகைய தர்க்க ஒழுங்குக்குக் கட்டுப்பட வேண்டிய கடப்பாடு காவியத்துக்கு இல்லை. அதனுடைய அழகியல் வேறு. அது யதார்த்தத்தைக் கற்பனையாகவும் கற்பனையை யதார்த்தமாகவும் மாற்றக்கூடியது. யதார்த்தவாதத்தை விட இலட்சியவாதம் அதில் மேலோங்கி இருக்கும். தர்க்கரீதியான நுட்ப

விபரங்களில் அது அதிகம் மினக்கெடுவதில்லை. கற்பனையான புனைவுலகம் அதற்கு மிகவும் உவப்பானது.

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதிவரை காவியம் பெரிதும் கற்பனை உலகு சார்ந்ததாகவே இருந்தது. யதார்த்த உலகுக்குரிய இலக்கியவடிவமாக நாவல் வளர்ச்சி பெற்றது. யதார்த்த வாழ்வையும் காவியத்தையும் இணைக்கும் முயற்சி இருபதாம் நூற்றாண்டுக்கு உரியதுதான். தமிழில் அதில் வெற்றி பெற்றவர்கள் மிகச்சிலரே. மஹாகவியை அதில் முக்கியமானவராக நான்சொல்வேன். அவருடைய சடங்கு, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், கண்மணியாள் காதை என்பன அவ்வகையில் தமிழில் முன்னுதாரணம் இல்லாத படைப்புகள். இப்பொழுது பாலமுனைபாறூக் அந்த ரசவாதத்தைச் செய்துபார்க்க முயன்றிருக்கிறார். கொந்தளிப்பு, தோட்டுப்பாய் மூத்தம்மா ஆகிய இரண்டிலும் அவர் பெருமளவு வெற்றி பெற்றிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

- 4 -

இப்போது அவருடைய மூன்றாவது குறுங்காவியம் எஞ்சியிருந்த பிரார்த்தனை யோடு வெளிவருகின்றது. வடிவால் முன்னைய இரு காவியங்களையும் ஒத்தது எனினும் பொருளால் அவற்றிலிருந்து இது பெரிதும் வேறுபட்டது. கடந்த முப்பது ஆண்டுகளில் இலங்கையில் நிலவிய இனமுரண்பாடு, யுத்தம் என்பவற்றுக்கு மத்தியில் கிழக்கில் முஸ்லிம் - தமிழ் இனஉறவில் ஏற்பட்ட விரிசலையும், தனிமனித அவலங்களையும் பொருளாகக் கொண்டது இக்காவியம். குறிப்பாக இந்திய அமைதிப்படை இங்கிருந்த காலத்தில் (1987 - 1989) நிலவிய சூழலை இது மையமாகக் கொண்டது.

இக்காவியத்தின் பிரதான பாத்திரத்துக்குப் பெயர் இல்லை. அவன், இவன் என்ற படர்க்கைப் பெயராலேயே அவன் குறிப்பிடப்படுகிறான். பாதிக்கப்பட்ட பொதுமகனைச்சுட்டுவதற்காக படர்க்கைப் பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

நாலாபக்கமும்
கடலாய்ச்
சூழ்ந்துள இலங்கைத் தீவில்
இவன் ஒரு பொதுமகன்
எப்பிழை செய்தான்
எதனைக் கேட்டான்
கிழக்கில் பிறந்தான்
இது பிழையாவதா?

என்ற கேள்வி எழுகின்றது. எனினும், அவன் ஒரு முஸ்லிம் பொதுமகன் என்ற இன அடையாளம் வெளிப்படையாகவே உள்ளது. தமிழ், முஸ்லிம் கிராமங்களின் எல்லைப் புறத்தில் வாழ்ந்தவன் அவன். இரு கிராமங்களையும் ஒரு வீதிதான் பிரித்தது. இரு இனத்தவரும் அக்கம்பக்கமாய் அன்னி யோன்னியத்துடன் வாழ்ந்தவர்கள்.

வண்டிக்கார முஸ்லிம்கள்

தமிழர்
ஒன்றாய்ச் சேர்ந்து
ஒற்றுமையாகவே
காட்டினிற் சென்று
கம்புகள் வெட்டி
கோயிலைப் பள்ளியைக்
கட்டிக் கொண்ட
ஒருவருக்கொருவர்
உதவி வாழ்ந்த..
பள்ளிவாசலில் கந்தூரி ஆக்க
கொள்ளி தறித்துக்
கொடுத்து மகிழ்ந்த ..
கோயில் வைபவக் கலைவிழா நிகழ்ச்சியில்
பேதம் இன்றி
முஸ்லிம் கலைஞரும்
கூடிக்கலந்து
குதூகலித்திருந்த..

அந்தக்காலம் போயிற்று. “கண்பட்டுப் பெய்த்திடாதம்பி, என்னமாய் இருந்தம் ஒரு தாய் வகுத்துப் புள்ளைகள்போல...” என்ற அந்தக்காலம் கனவாய்ப் போயிற்று. இப்போது எல்லை வீதி யுத்தகளமாயிற்று. அது

முழங்கும் அதிரும்
குண்டுமாரி பொழிவது கேட்கும்
வாகனம் உடைந்து
மல்லாந்து படுக்கும்
வீதி இரண்டாய்
வெடித்துக் கிடக்கும்..
வாகனத் தொடரணி
புழுதி கிளப்பும்..

அழுகை ஒப்பாரி
ஊரெலாம் கேட்கும்

இந்தச்சூழலில் அவன் குடும்பத்துடன் இடம்பெயர்ந்து உள்ளூரில் தன் உறவினர் வீட்டில் அகதியாகத் தங்கியிருக்கிறான். ஒருநாள் அவன் தன் சொந்த வீட்டைப் பார்க்க வருகிறான். வந்தவன் அமைதிப் படையின் சுற்றிவளைப்பில் அகப்பட்டுக் கொள்கிறான். அதிலிருந்து தான்காவியம் தொடங்குகின்றது.

“ஆசிரியர்கள், மாணவர் தினமும் கூலித்தொழிலே செய்து வாயை வயிற்றைக் கட்டிக்கொள்வோர் வைத்தியர், இனங்களுக்கிடையில் உறவுப்பாலம் அமைக்க விரும்பி சமாதான சங்கம் அமைத்தோர் என்றுபலரும் இன, பால் வயது வேறுபாடின்றி அமைதி காக்க என்று வந்த அந்த நாட்டுப்படையினராலே அள்ளப் பட்டனர்.”

சொந்த நாட்டில்
சொந்த ஊரில்
சொந்தவீட்டைப் பார்க்கவந்தவன்
அந்தநாட்டுப் படையினராலே
அள்ளப்பட்டான்
உறுமிக் கொண்டும்
உதைத்துக் கொண்டும்
விரைந்தது வாகனம்!

யுத்தகாலத்தில் வடகிழக்கு மக்களின் பொது அனுபவமாக இது இருந்தது. அமைதிப்படையோ, அரசபடையோ சுற்றிவளைப்பில் பாதிக்கப்பட்டவர்கள் பொதுமக்கள்தான்.

அடுத்துவரும் 12 அத்தியாயங்களிலும் கைது செய்ப்பட்டு விடுவிக்கப்பட்ட வனின் மனஉணர்வுகளும் அனுபங்களும் சித்திரிக்கப்படுகின்றன. அதன் ஊடாக யுத்தத்தில் இருசமூகங்களும் தனி மனிதர்களும் பட்ட இன்னல்களை வெளிக்கொண்டுவர முயல்கிறார் கவிஞர்.

சுற்றிவளைப்பில் அமைதிப்படையால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டவன் தான் தங்கியிருந்த உறவினர் வீட்டுக்கு வருகிறான். அங்கு ஒருவரும் இல்லை. மனைவி குழந்தைகளும் இல்லை. சுற்றாடலில் அச்சம் கவிந்திருக்கிறது. எல்லோரும் அவனைக் கண்டு ஒதுங்குகிறார்கள். விசாரித்ததில் அவன் கைது செய்யப்பட்ட பின் ஆயுதக் குழுவினர் அடிக்கடி அவனைத் தேடிவந்து தொல்லை கொடுத்ததாகவும், “அவனால் ஏதும் தகவல் கசிந்து

அவர்களில் யாரும் பிடிக்கப்பட்டால் தொலைப்போம் என்று எச்சரித்ததைச் சொல்லக் கேட்டான்."

அச்சப்பட்ட கோழியும்
குஞ்சும்
ஊரைவிட்டே உறவினரோடு
ஒளித்துப் போன பரிதாபத்தை
கூறக்கேட்டுக்
குமுறி அழுதான்

இனிஎன்ன? எஞ்சியிருந்தது பிரார்த்தனை மட்டும்தான். எல்லை வீதியில் சொந்த வீட்டுக்கு வருகிறான். வீடு சிதிலமடைந்து குப்பை மேட்டுக்குள் அமிழ்ந்திருக்கிறது. பசிக்களைப்போடு விறாந்தையில் அமர்கிறான். பக்கத்து வீட்டுப் பார்வதி அக்கா அவனைக் கண்டு பரிவோடு அரவணைக்கிறாள். உணவு கொடுத்து, பணமும் கொடுத்து இங்கிருந்தால் அவனுக்கு ஆபத்து என்று அவசரமாக அவனை அனுப்பி வைக்கிறாள். அவன் இலக்கின்றி நடந்து நகருக்கு வருகிறான். பஸ் நிலையத்தில் பஸ்கள் இல்லை. கடைகள் மூடிக்கிடக்கின்றன. "உறைந்து போய் இருந்தது ஊர்" திகில் படர்ந்த சூழலில் 'அச்சப்பட்ட உடம்பு வியர்க்க' ஓடுகிறான். சனம் குழுமியிருந்த ஒரு இடத்துக்கு வருகிறான். அங்குதான் அவனுக்கு நிலைமையின் அர்த்தம் புரிகிறது. ஆட்கடத்தல் நிகழ்ந்திருக்கிறது. 'அந்தப் பக்கம் நேற்று கோழிவாங்கச் சென்ற காக்கா ஊரை வந்து சேரவில்லை. இந்தப் பக்கம் மேசன் வேலையாய் வந்த இருவர் பணயக்கைதியாய்ப் பிடிபட்டிருக்கிறார்.'

அப்பாவிகளும் தொழிலாளர்களும்
அடிக்கடி இப்படி
அமுங்கிப் போவதை
அகதியாவதை
எண்ணிப் பார்த்து
மனசு துவண்டது
தன்னைப் பற்றியும்
எண்ணம் எழுந்தது
என்ன பிழைநான்
செய்திருக்கின்றேன்
இனத்தின் பெயரால்
எவர்க்குத் துன்பம்
இழைத்திருக்கின்றேன்!
முடுக்கி விட்டவர்

தடுக்கிவிழாமல்
இருக்கும்இடத்தில் இருந்து கொள்ள
பாதிப்படைகிற மக்களை நினைக்க
வேதனைப்பட்டு
மேனிசுட்டது

கடத்தல் விரைவில் ஒரு முடிவுக்கு வருகிறது. கடத்தப்பட்ட கோழிக்காக்கா குஞ்சு முகம்மது தமிழர் பகுதியில் பிரபலமானவர், நல்லுறவு கொண்டிருப்பவர். ஊர்மக்களே ஒன்று திரண்டு அவரை விடுவிக்கின்றனர். பதிலாக பிடித்து வைக்கப்பட்ட மேசன் மாசிலாமணியும் விடுவிக்கப்படுகிறான். அவன் முஸ்லிம்கள் மத்தியிலேயே தொழில் செய்து வாழ்பவன். இனக்குரோதம் துளியும் இல்லாதவன். இவனுடன் ஒன்றாகப் படித்தவன்.

ஊர் வழமைக்குத் திரும்புகின்றது. கடைகள் திறக்கப்படுகின்றன. தன் குடும்பம் பற்றிய மனச்சுமையுடன் இவன் பஸ் நிலையத்துக்கு வருகிறான். தன் உறவினரைச் சந்திக்கிறான். அவனது மனைவி பிள்ளைகள் பயத்தில் ஊரூராகத் திரிந்து கடைசியில் ஓணேகமையில் ஒரு தூரத்து உறவினர் வீட்டில் இருப்பதாக அறிகிறான். ‘அகதிவாழ்வே ஊர்ஜிதமானதாய் எண்ணி எண்ணி ஏங்கி அழுதான்... ஊரைவிட்டு ஓடிச்சென்று கோழி குஞ்சொடு கூடி இருப்பதா? தேடும் குழுவைத் தேடிச்சென்று உண்மை நிலையை விளக்கி வைப்பதா? .. ஊரைவிட்டு ஓடிச்சென்ற கோழியைக் குஞ்சைக் கூட்டிவருவதா?” விடைதெரியாத இந்தக் கேள்விகளோடு அல்லாடுகின்றது அவன் மனம்.

எஞ்சி இருப்பது
பிரார்த்தனை மட்டுமே!
இருகரம் ஏந்தினான்
புரிந்துணர்வோடு
வாழ்வதற்கான
சரிசமமான
சமாதானம் நாடியே!

என்று முடிகிறதுகாவியம். யுத்தகால அனுபவத்தை, அது ஏற்படுத்திய மன உழைச்சலை ஒரு கழைக்கூத்தாடியின் நிதானத்துடன் காவியமாக்குவதில் பாறூக் வெற்றி கண்டிருக்கிறார் என்பதில் ஐயம் இல்லை. சரிசமமான சமாதானம் என்பது இன்னமும் நமக்கு ஒரு கனவே எனினும் அந்தக் கனவை நனவாக்குவதற் கான ஒரு சமூக உளவியல் தேவையை இக்காவியம் வலியுறுத்துகின்றது எனலாம். அவ்வகையில் கவிஞரின் முன்னைய இருகாவியங்களையும்விட இதன் சமூக அரசியல் முக்கியத்துவம் அதிகமாகும்.

மூன்று காவியங்களின் அமைப்பும் உத்திமுறையும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானது. பெரும்பாலும் அகவல் யாப்புவடிவத்தையே கவிஞர் கையாண்டிருக்கிறார். ஒரு அகவல் அடியை இரண்டு வரிகளாக உடைத்திருக் கிறார். புதுக்கவிதைக்குப் பயிற்றப்பட்ட வாசகர் எளிதாக இதற்குள் உள்நுழையலாம்.

இம்மூன்று காவியங்களையும் படிக்கும்போது கவிஞர் பாலமுனை பாறூக்கினுள் ஒரு நாவலாசிரியனும் ஒளிந்திருக்கிறான் என்று தெரிகின்றது. காவிய வடிவத்தை அவர் தேர்ந்திருக்காவிட்டால் சிலவேளை அவர் நல்ல நாவல்களை எழுதியிருக்கக்கூடும். சமகாலச் சமூக அரசியல் அனுபவத்தைக் கையாள்வதற்கு காவியத்தைவிட நாவலே வலுவான ஊடகம் என்று நான் நினைக்கின்றேன். ஆயினும், இரண்டினுடைய வெற்றியும் தோல்வியும் படைப்பாளியின் தனித்திறனில் தங்கியுள்ளது. சிலவேளை பாறூக் இவற்றை நாவலாக எழுதித் தோல்வி அடைந்திருக்கலாம். காவியமாக்கியதில் அவர் பெருமளவு வெற்றி பெற்றிருக்கிறார் என்பதே என்கருத்து.

அவருக்கு என் பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

■

பாலமுனை பாறூக் குறும்பாக்கள்...

கவிஞன்

கவிஞரின் மனைவி :-

கவிஞருக்கு நான் வாழ்க்கைப்பட்டு
கண்டதுண்டா உடுதுணியாய்ப் பட்டு
'புவிபோற்றும் கவிஞரெனப்
போய்ப் போய்த்தான் வருகின்றீர்
போர்த்தலையா பொன்னாடைப் பட்டு!'

கவிஞர் :-

அழைப்பிருந்தால் போய் வருவேன் கண்ணே
அகத்திருப்தி அதுபோதும் பெண்ணே!
ஆள்பார்த்து முகம்பார்த்து
ஆளுக்காள் விழாவெடுத்து
அளிக்கின்ற பரிசெல்லாம் பின்னே!
ஆரிடத்தும் விழா, பரிசு கேளான்
அடிபணிந்து எவரிடத்தும் வீழான்
ஆருயிரே! உன்கணவர்
ஆரென்று அறிவாயோ?
பேர் 'கவிஞன்' தலைநிமிர்வான் தாழான்!

எழில் ஓவியம் !

கவிஞர் மு . சடாட்சரன்

புதுமைக் கவிஞர் பாலமுனை பாறூக்கை
படித்தவர் முழு மனதோடு போற்றுவார் !
குறுகிய பரப்புக்குள் கூடிய விடயங்கள் !
நல்ல வாழ்வியல் நயத்துடன் படைத்துள்ளார் !
எல்லாருக்கும் ஏற்றது இக்காவியம் !

வாழவைக்கும் ஆசையில் நமக்கு
மீளப் பறக்கும் நங்கணங்கள் தந்துள்ளார்
மேன்மைக் குரிய குறுங் காவியம் இது !

குறுங்காவியக் கொள்கைகள் கொண்டு
பெரிய விடயங்கள் பேசுதல் சிறப்பு
விடிவு வருமிங்கே வீடுகள் தோறும்
இடம்பெறும் நமது இலக்கிய மேடையில் !

புதிய பறவையாய் புறப்பட்ட கவிஞரின்
விதம் விதமான காவியங்கள் வெற்றியே !

பொன்விழாக் காணும் புதுமைக் கவி வாழ்க !
பூரிப்போடு கலைத்துவங்கள் தருக !
நாளும் பொழுதும் நயம்தரும் காவியம்
வாழும் தமிழை வளர்க்கும் எழில் ஓவியம் !

■

1.0

ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் அறுபதுகளளவில் முற்போக்குக் கவிதைச் செல்நெறி முகிழ்க்க ஆரம்பித்தது, எழுபதுகளிலும் தொடர்ந்தது. இந்த எழுபது காலகட்டத்தில் இடதுசாரிச் சிந்தனையால் ஆகர்ஷிக்கப்பட்டு இத்தகைய கவிதை எழுதியோருள் ஒரு சாரார் குறிப்பாக முஸ்லிம் கவிஞர்கள் இஸ்லாமிய மதப்பற்றுடையவர்களாகவும் விளங்கினர். கீழைத்தேய நாடுகளிலே இது தவிர்க்கவியலாத தொன்று என்ற புரிதலின்மையும், இத்தகைய கவிஞர்களின் தொகுப்புகள் வெளிவரத் தாமதமானமையும், வெளிவந்தவை கூட கிடைப்பதற் கரிதாகவிருந்தமையும் காரணமாக ஈழத்துக் கவிதை வரலாற்றில் இடம்பெறத்தவறிய கவிஞர்கள் சிலருள் முக்கியமானவர் பாலமுனை பாறூக்! இவ்விதத்தில் அறியப்படாத ஆரம்ப காலகட்ட (1970-1990) கவிதைகளில் இவரின் முக்கியத்துவம் பற்றியே இங்கு கவனிக்கப்படுகின்றது.

இவரது முற்போக்கு நோக்குடைய கவிதைகளுள் கணிசமானவை சமகால ஈழத்து முற்போக்கு சஞ்சிகைகளான குமரன், தேசாபிமானி, அக்னி, களம், புதுயுகம், புதுக்குரல் முதலானவற்றிலும் தமிழ்நாட்டு செம்மலர், திருப்பம், ஏன் முதலானவற்றிலும் பன்முகப் பரிமாணங்களுடன் வெளிப்பட்டுள்ளன.

பேராசிரியர் செ. யோகராசா

ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் பாலமுனை பாறூக்கின் சில தடங்கள்

1.1.1 கொள்கைப்பிரகடனம்

நாங்கள் புதிய பறவைகள்?

“.............
நாங்கள்
இந்தயுகத்தின் ஏற்றத் தாழ்வுகள்
இந்தயுகத்தின் இழிச லொழுக்குகள்
என்பவை கண்டு சினந்தவராதலால்
இந்தப்புவியில் இவற்றையொழிக்க
நடந்தும் ஓடியும்
இன்னும் சொன்னால்
பறந்தே நாங்கள் செயற்படப் போகிறோம்.”

1.1.2 சமூகப் பிரச்சினைகள்

1.1.2.1 தீர்வு:

அறுவைச் சிகிச்சை

”கறுப்புக் கொடிகளும்
உண்ணாவிரதமும்
பொருத்தமானதா
புதுயுகம் சமைக்க
பருத்த உடம்புகள்
பார்த்து ரசிக்க
கறுப்புக் கொடிகளை
உயர்த்திப் பிடித்து
பசியால் நாமா வாடவும் வேண்டும்?
பிரசவம் ஒன்று நிகழ்வதில் தடையெனில்
அறுவைச் சிகிச்சையே அதற்கு வைத்தியம்”

1.1.3 சமூக எழுச்சி

”விழலுக்கு நீரிறைத்து மாய மாட்டோம்
வேதனைகள் தீர்க்காது ஓயமாட்டோம்
விழித்துவிட்டோம், இனியும்நாம்
வழிதவறி வீழ மாட்டோம்

புரியாத புதிரெல்லாம் புரிந்ததாலே
புறப்பட்டோம், ஆகையினால்
சரித்திரத்தை மாற்றிவிடத் தயங்கமாட்டோம்
உலக்கையராய் எமை மதித்து
உதைத்த காலம்
ஓடோடிப் போக
இளங்காலைச் சூரியனாய் எழுந்தே விட்டோம்
இனி இருள்கள் இறந்துவிடும்
வெற்றி காண்போம்
.................."

1.1.4 பெண்கள் எழுச்சி

"வெள்ளாமை வட்டைக்குள் வியர்வை
இறைத் திறைத்தே
பொல்லாத போடிக்காய் புழுவாய்த்
துடித் துழைத்தோம்!
உன் அப்பா அவரோடு
உன்னுடைய தாய் நானும்
இன்பம் வருமென்று இணைந்து உழைத்தேனே!
என்னபயன், என்னபயன் ஏதுமிலை எங்களுக்கு
சும்மா இருந்தெவரோ சுகம்காண
நாம் தேய்ந்தோம்!
உண்ண உணவில்லை, ஓம் உனக்குப் பாலில்லை
என்ன பயன்...? இஃதெல்லாம்
எங்கள்விதி யென்றிருந்தோம் !
இந்தவிதி மாற்றிடவும்
இப்போது புதியவிதி
ஒன்று இருப்பதனை உணர்ந்தோம்
சிரி மகளே !
....................."

ஈழத்து முற்போக்குக் கவிஞர்கள் எவரும் மேற்கூறியவாறு போராட்டத்தில் பெண்களை அழைப்பதாகப் பாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கிழக்கில் நுஃமான், சண்முகம் சிவலிங்கம், தோழர் இஸ்மாயில் ஆகிய தனித்துவமான முற்போக்குக் கவிஞர் வரிசையில் பாலமுனை பாறூக்குக்கும் முக்கிய இடமுண்டு.

1.2 பெண்களின் நிலை

சமகாலக் கவிஞர்களுள் பெண்கள் நிலைபற்றி அதிகளவு சிந்தித்தவராகவும் பாலமுனை பாறூக் வெளிப்படுகின்றார். ஈழத்துக் கவிதைகளில் பெண்கள் என்ற தலைப்பிலே (2002) நான் ஆய்வு மேற்கொண்ட போது தி.த. சரவணமுத்துப் பிள்ளை தொடக்கம் வ.ஐ.ச ஜெயபாலன் வரையிலான கவிஞர்களை ஆய்வுக்குட்படுத்தியபோது நுஃமானின் கவிதைகளில் மட்டுமே "பெண்கள்" பற்றிய சித்திரிப்பு, யதார்த்தப் பார்வையோடு வெளிப்பட்டிருந்தமை கண்டேன். இப்போது பாலமுனை பாறூக்கும் அப்பட்டியலில் இணைந்து கொள்கின்றார்!

1.2.1 சீதனப்பிரச்சினை

"..................
தந்தையிடம் நான்சென்று, தந்தையே "நீங்கள் சொன்னபடி சீதனத்தை
கொடுத்திடுக, இன்றேல் என்கணவர் என்னோடு இனிவாழமாட்டார்"
என்றுரைத்தேன் வாப்பாவோ இதயம் மிக நொந்தார்

தந்தையவர் என்னிடத்தில் தங்கைகளைக் காட்டி
என்செய்வேன் என்மகளே
என்செய்வே" னென்றார்
"உன்தங்கை ஐவருக்கும் உடுதுணியும் வாங்க
ஒன்றுமில்லை என்னிடத்தில்" என்று சொல்லி அழுதார்
இந்த நிலை இருக்கயிலே எப்படிப்போய் மச்சான்
இன்னுமின்னும் தந்தையிடம் இதுபற்றிக் கேட்பேன்?
என்னாலே இனிக்கேட்க இயலாது மச்சான்
பொன், பொருளோ கிடையாது பிரியமெனில் வருக"

1.2.2 வறுமை நிலை :

"..................
தந்தை தினமும் இருமி, இருமித்
திண்ணையில் படுத்த படுக்கையி லுள்ளார்
தங்கைகள் ஐந்தும் உடுக்க நல்ல
தாவணி கேட்டுத் தினமழு கின்றார்
உன்றன் தாயோ அடுப்பில் பூனை
உறங்கும் நிலையை எண்ணி மாய்கிறாள்

இந்த நிலையில் எதை நீ செய்வாய்
எடுத்தாய் முடிவு ஏற்றதே செல்க!”

1.2.3. ஆண்களால் ஏமாற்றப்படல்

“.....................
பாத்தும்மாக் கண்ணே! பக்கத்துக் குடிசையிலே
பூத்த இளமலரே! புதுப்பொலிவை இழந்தாயா?
நேற்றுநீ கிணற்றில்
விழுந்திறக்க முனைந்தாயே
காற்றோடு உன்மானம்
கலந்ததெனச் சென்றாயா?
உன்னை முடிப்பேன் என்றுறுதி தந்தவனோ
இன்னோர் இளமலரை
இசைந்தேற்றுக் கொண்டானா?
கண்ணே! காசவனின் கண்களினை மூடியதா?
என்னகொடுமையிது?
ஏமாற்றப்பட்டவள் நீ!”

1.2.4 மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லுதல்

“................
அந்த ஊரில் இருந்துவந்து, இங்கே
அலைக் கழிந்து திரிவதுமேன் சொல்லேன்?
களைபிடுங்கி நீ சேர்த்த காசு
கரைந்தே தான் போயிற்றா? ஐயோ,
வெளிநாடு செல்ல வென உன்னை
அழைத்துவந்த ஏஜன்டும் எங்கே!”

மேலே தரப்பட்ட கவிதை மத்தியகிழக்கு நாடுகாண் பயணத்தின் ஆரம்ப கட்ட பிரச்சினையை,-ஏஜென்சிகளால் ஏமாற்றப்படுவதைப் பற்றி விபரிக்கிறது.

1.3 காதல்

புரிந்துணர்வுக்காதல்

வித்தியாசமானதொரு காதல் உறவின் வெளிப்பாடாக அமையும் கவிதையின் (காதலிக்கு ஒரு கடிதம்) ஒருபகுதி பின்வருமாறு :

"....................
சொன்னபடி நீசெய்தாய்
சுணங்கியும் தானிருந்தாய்
என்னை அடைவதற்காய்
இருவருடம் காத்திருந்தாய்
என்னால் இயலவில்லை
தங்கைகளைக் கரைசேர்க்க
நல்ல வரன்தேடி
நாயாக நான் அலைந்தும்
விலைவாசி உயர்வேபோல்
மலையாகி, சீதனமும்
உயரத்தில் இருப்பதனால்
ஒன்றும் முடியவில்லை
என்னை அடைவதற்காய்
இருவருடம் காத்திருந்த
அன்பே உனக்கெனது
ஆசிர்வாதங்கள்..."

ஏனையோர் போல் ஏமாற்றிச் செல்லாமல் பொருளாதாரச் சிக்கல் காரணமாக, தனது காதலியைத் திருமணம் செய்யாமல், அவளது திருமணத்திற்கு வாழ்த்துத் தெரிவிக்கிறான் இக்காதலன். வித்தியாசமான யதார்த்த நிலைப்பட்ட காதலைப்பாடிய நுஃமான் போன்ற மிகச் சிலருள் பாலமுனை பாறூக்கும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது!

2.1. மத்தியதர வர்க்கம்

படைப்பாளிகளுள் கணிசமானோர் ஆங்கில அரசு உருவாக்கிய மத்தியதர வர்க்கத்தினராகவிருப்பினும் அவ்வர்க்கத்தினரின் தொழில்சார் - குடும்பம்சார் - பிரச்சினைகளை பற்றிச் சிந்திப்பது அரிது. மாறாக, பாலமுனை பாறூக்கின் கவிதைகளில் இவ்விடயமும் வெளிப்பட்டிருக்கிறது! இவர்களது வாழ்க்கையின் நடைமுறைச் சிக்கல்கள் இவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக, காரியாலயத்திற்கு நேரத்திற்கு செல்லமுடியாத நிலை, "சிவப்புக் கோட்டு" பிரச்சினைகள், எவ்வித முன்னேற்றமுமின்றி எழுதுவினைஞனாக நீண்ட காலமிருப்பது முதலான பிரச்சினைகள் சார்ந்த கவிதைகள் பதம் தொகுப்பிலே காணப்படுகின்றன (எ-டு : காரிகையே நீயே சொல், சிவப்புக் கோடு, இன்னும் நீ இலிகிதரா?)

2.1.1 வங்கித் தொழில் அனுபவம் :

எழுத்தாளராகவிருக்கின்ற வங்கி அலுவலர் எவரும் தமது அனுபவங்களை வெளிப்படுத்துவதில்லை, மாறானது இக்கவிஞர் நிலை என்பதற்குப் பெண்ணே நீ மறந்துவிடு! என்ற கவிதை சான்று பகர்கின்றது.
எ-டு

"………………….,…..
இன்னும் கடனை ஏன் தீர்க்கவில்லை"யென
உன்னிடத்தில் கேட்டேன் நான்,
ஓ.. ஏன் அழுதாயோ?
எல்லோரிடத்தும் இயம்புதலைப் போலேதான்
சொல்லிவைத்தேன் உன்னிடமும்
சோகமேன் கொண்டாய் நீ?

தீராப் பிரச்சினைகள் சொல்லியழுது நின்றாய்
உன்னைநான் நோவிக்க ஒருபோதும்
எண்ணவில்லை
என்றன் கடமையிது,
இதனால் உனைக் கேட்டேன்
என்னைநீ தவறாக ஏதும் நினைத்திருந்தால்

பெண்ணே மறந்துவிடு!
பிழைசெய்யவில்லை நான்!!"

3. மதப்பற்று

இஸ்லாமிய மதப் பற்றுச் சார்பான கவிதைகளும் பன்முகப் பார்வையோடு வெளிப்படுகின்றன.
(I) மாநபி பெருமை (II) நோன்பின் சிறப்பு (III) ரமலான் பிறை முதலானவை சார்ந்த கவிதைகள் பதம் தொகுதியில் இடம்பெற்றுள்ளமை இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கது!

4. மதப்பற்றும் முற்போக்கும்

இஸ்லாமிய மதப்பற்றும் முற்போக்கும் இணைந்துள்ள கவிதைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகவுள்ளது "மரணம்". இதன் ஒருபகுதி பின்வருமாறு அமைகிறது.

"....................
எத்தனையோ மையத்தை
குளிப்பாட்டிக் கபனிட்டு
மையத்துக்கென்றே
மார்க்கத்தில் சொன்ன
அத்தனையும் செய்த
அவர் இன்று மையத்தா?
அல்லாஹ் பெரியவனே,
அனைத்தும் அவன்கையில்!
யாரை எவ்விடத்தில்
என்றவனைக் கேட்பவர் யார்?

மரணத்தை நினையாதோர்
மாநிலத்தில் பலருண்டு
முஅத்தினார் மௌத்தானார்!
இந்த உலகிற்கு இவர்
எதையும் சேர்க்கவில்லை
இதனாலே
போடியார் வீட்டு மௌத்திற்கு
வந்ததுபோல்
ஆள்கூடி வரவில்லை
அநேகம்பேர் இருக்கவில்லை
இறைவன் பெரியவன் நீ!
எல்லாம் அறிந்தவன் நீ!
எந்த உலகிற்கு
இவர் சேர்த்து வைத்தாரோ
அந்த உலகில்
அவரை நீ வாழவைப்பாய்
உன்றன் கிருபைக்கே
உளமுருகி நிற்கின்றோம்!

5. போர்க்கால அவலங்கள்

எண்பதுகள் தொடக்கம் முனைப்புறத் தொடங்கிய இப்பொருண் மரபின் வெளிப்பாடுகளும் இவரது கவிதைகளில் தலைநீட்டுகின்றன. அன்றாட வாழ்க்கை போர்க் காலச் சூழலில் எதிர்கொண்ட சிக்கல்கள் கவிதைகளில் இடம்பிடித்துள்ளன.

“.................
வேலைக்கென்று நான்
வெளிக்கிடப் போகிறேன்
போருக் கென்று
புறப் படல் போலது!
அடையாள அட்டை
அதனையும் கொண்டுவா,
தடைகள் பற்பல
தாண்டிட வேண்டுமே!

செல்லும் வழியில்
அதிரடி, எதிரடி
எதிரெதிர் கொள்ளுமோ?
அதிலெதில் பட்டுநாம்
இறையடிசெல்வதோ?
கொண்டுவா இப்படி
கோப்பியை குடிக்கிறேன்
சென்று முடிக்குமோ
செல்கிற வாகனம்?

சாதனை புரிந்த
வீரனாய் நானும்
காரியாலயம்
போய் அடைவேனோ?”

“சிவப்புக்கோடு” என்ற கவிதையின் ஒருபகுதியே மேலே தரப்பட்டுள்ளது. இவ்வாறான போக்குடைய அதாவது போர்க்காலம் அன்றாடவாழ்க்கையை எவ்வாறெல்லாம் பாதித்தது என்பதான நோக்கில் எழுதப்பட்ட கவிதைகள் கிழக்கிலே குறைவாக வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

6. *இனி இதுவரை கூறப்பட்டவாறமைந்த பொருள் மரபுசார்ந்த கவிதைகளின் வெளிப்பாட்டு முறைபற்றியும் சில கூறவேண்டும்*
அவையாவன :

6.1 *ஈழத்தில் புதுக்கவிதை, தமிழக “எழுத்து” ஊடாக அறுபதுகளில் ஆரம்பித்தாலும் “வானம்பாடி” ஊடாகவே ஈழத்துக் கவிஞர்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இத்தகைய வானம்பாடிக் கவிஞர்களே*

முற்போக்கு நோக்குடைய புதுக்கவிதைகளை முதன்முதல் எழுத ஆரம்பித்தாலும் இத்தகைய கவிஞர்கள் பலரின் கவிதைகளில் குறைபாடுகள் சில - உதாரணமாக, கோஷங்கள், மலினமான சொற்பிரயோகங்கள், அந்நியமான படிமங்கள், குறியீடுகள், அநாவசியமான வடமொழிப்பிரயோகங்கள், மனோரதியப்பாங்கு, முதலியன வெளிப்பட்டிருந்தன. ஈழத்துக் கவிஞர்களிடம் இவ்வழிச் செல்வாக்குகள் வெளிப்பட்ட சூழலில் வ.ஐ.ச ஜெயபாலன், சு.வில்வரத்தினம், சிவசேகரம் முதலான சிலரே தரமான கவிதைகளை எழுதுகின்றனர் இவ்வரிசையில் இப்போது பாலமுனை பாறூக்கும் இணைந்து கொள்கின்றார்

6.2 படர்க்கை நிலையை இயன்றளவு தவிர்த்து, தன்மை இடத்திலும் பாத்திரங்களின் கூற்றாகவும் யதார்த்தமான சம்பவங்கள், குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள் முதலானவற்றை அடித்தளமாகக் கொண்டும் இவரெழுதியமை காரணமாக ஏனைய பெரும்பாலான கவிஞர்களது கவிதைகளில் காணப்பட்ட சில குறைபாடுகள் இவரது கவிதைகளில் பெருமளவு காணப்படாமையும் கவனத்திற்குரியது.

7. தொகுத்துக் கூறுவதாயின் பாலமுனை பாறூக்கின் ஆரம்ப காலகட்ட கவிதைப்போக்குகளாக இதுவரைகூறப்பட்ட பல்வேறு விடயங்களும் சமகாலக் கவிஞர்கள் பலரது கவிதைப் போக்குகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டனவாகவிருப்பது புலப்படுகிறது. இவ்விதத்தில் அறுபதுகளின் பிற்பட்ட காலந்தொடக்கம் எண்பதுகளின் முடிவுவரையான காலகட்ட ஈழத்துக் கவிதை வரலாற்றில் இவரது கவிதைகளினூடாக இவருக்குரிய இடம் மறுக்கப்பட முடியாததாகின்றது. பதம் என்ற ஒரு தொகுப்பை மட்டும் வைத்து இதுபற்றி கூறமுடியுமா என்று வாசகர்கள் கேட்கக்கூடும். அதற்கு இருவிடைகள் உள்ளன.

(I) பதம் என்ற தொகுப்பின் தலைப்புப்பற்றி ஆழமாகச் சிந்தித்துப்பார்த்தல்
(II) பின்னர் வெளிவருகின்ற நவீன காவியங்கள், குறும்பாக்கள், ஹைக்கூக்கள் ஆகியவற்றிலும் மேற்குறிப்பிட்ட சிறப்புக்கள் வேவ்வேறு நோக்கிலும், போக்கிலும் வெளிப்படுவதை அவதானித்தல்.

ஆயினும் இவரது பிற்காலக் கவிதைப் பயணம் தடம் மாறாதிருந்திருப்பின் மேற்கூறிய விதங்களில் முக்கியமான கவிஞராகத் திகழ்ந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.(எனினும் இவரது புதிய தடங்களும் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் இன்னுமொரு முக்கிய பங்களிப்பினைக் காட்டுகின்றதென்பதைக் கூறாமலிருக்க முடியாது)

8. இறுதியாக இன்னொன்று- பாலமுனை பாறூக் கவிதைத்துறையில்

ஈடுபட்டதற்கப்பால் தொகுப்பாளராக (மற்றவர் அன்புமுகையதீன்) தொகுத்த எழுவான் கதிர்கள் (1986) என்ற -எம்.எச்.எம் அஷ்ரஃப் தொடக்கம் சித்தி ஜெரீனா கரீம் - வரையில் இருபத்தினாலு கவிஞர்களது கவிதைகள் கொண்ட தொகுப்பின் வரவும் கவனத்திற்குரியது. இத்தொகுப்பிலுள்ள இளங்கவிஞர்கள் சிலர் இத்தொகுப்பின் ஊக்கத்தினால் தொடர்ந்து எழுதிவந்தமையும் வேறு சிலர் இத்தொகுப்புடன் மட்டும் தம்மை ஈழத்து நவீன கவிதை வரலாற்றில் நிலை நிறுத்திக் கொண்டமையும் மனங்கொள்ளப்படவேண்டியன. கவிதைத் தேர்வில் அன்புமுகையதீனுக்கு மட்டுமன்றி பாலமுனை பாறூக்கிற்கும் சமமான இடமுண்டு என்று கூறுவதில் தவறில்லை என்றே கருதுகின்றேன்! ■

பாலமுனை பாறூக் குறும்பாக்கள்...

சொற்பொழிவு

உரையாளன் வரத்தெளிப்பு பன்னீர்
உரைநடுவில் அவர்கேட்டார் தண்ணீர்
உரையாலே நனைகிறது
ஒலிவாங்கி அழுகிறது
கரை கடந்த வெற்றிலைவாய்ச் செந்நீர் !

ராஜா

ஊருக்குள் பண்ணிடுவான் தாஜா
உதட்டளவில் சிரிப்பதிலும் ராஜா
காரியங்கள் முடிப்பான்
கால்களையும் பிடிப்பான்
பேர் பெறவாம் தூக்குகிறான் கூஜா !

வேஷம்

முகநூலில் நட்பினுயர் வாசம்
முழுவாழ்வில் எங்கேஅப் பாசம்?
உறவுக்கு வேட்டு
ஊருக்கு ‘லோட்’டு
அகவிருள்கள், போடுதிங்கே வேஷம் !

பார்போற்றக் கவிபடைக்கும் பாலமுனை பாறூக்

தமிழறிஞர் கவிமாமணி
அல் அஸூமத்

பாறூக் கெனப்பிறந்து பாவுக்காய் வாழ்வுதனைப்
பாருக் களித்திருக்கும் பாவல்லான். - ஆராயின்
பால முனைகடந்து பாவின் முதிர்புலத்தே
கால்கொண்ட தமிழம்மைக் கால்வழியன். - நூலிலைகள்
வான்பரப்பி நிற்பதன்ன வார்நிலத்தும் ஊடுருவி
வேரிறக்கிப் பாமரக்கா வேய்குபவன். - மாண்புறுத்தும்
பொன்விழவு பாவேந்தின் பூர்வம் கதைக்கட்டும்!
இன்னுமோர் ஐம்பதாண்டை ஈயட்டும்! - கண்ணியத்தின்
நூற்றாண்டும் இவ்வுலகு நோக்கட்டும் என்றிறைபால்
ஆற்றுகிறேன் வேண்டுகைநெஞ் சால்.

■

பல்துறை வித்தகர் பாலமுனை பாறூக்



பேராசிரியர் முனைவர்

மு. இ. அஹமது மரைக்காயர்

(இந்தியா)

ஈழத்துத் தமிழ் கவிஞர்களுள் குறிப்பிட்டுக் சுட்டத்தக்க படைப்பாக்கத் திறனாளராகப் பாலமுனை பாறூக் திகழ்கிறார். கவிதைக் கலையில் அரிய முயற்சியும் அனுபவ முதிர்ச்சியும் ஒருங்கமைந்த பாலமுனை பாறூக், திறனாய்வாளர்களால் தற்போது அதிகம் பேசப்படக்கூடிய படைப்பாளராகவும் விளங்குகிறார்.

2002 - இல் கொழும்பில் பெருஞ் சிறப்பாக நடைபெற்ற உலக இஸ்லாமிய இலக்கிய மாநாட்டின் போதுதான் அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. சிறிது நேரமே நிகழ்ந்த அவருடனான உரையாடல் அவரைச் சிறந்த சிந்தனையாளராக அடையாளம் காட்டியது. அன்று முகிழ்ந்த இலக்கிய நட்பு இறையருளால் இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

மரபில் வல்லவரான பாவேந்தல் பாலமுனை பாறூக்கின் "பதம்", "சந்தனப் பொய்கை" ஆகிய முதலிரு நூல்களில் மார்க்கம் போற்றும் மானுடம் போற்றும் கவிதைகளையும் பார்க்கலாம். யாப்பு குறையாமல் யாக்கப்பட்ட அக்கவிதைகள் கருத்துச் செறிவும், உணர்ச்சிப் பொதிவும், வடிவ நேர்த்தியும் இணைந்து பொலியும் தன்மையன. படித்துப் படித்து இன்புறத்தக்க தகைமையன.

2004 திசம்பரில் ஏராளமான உயிர்களையும் வாழ்வாதாரமான உடைமைகளையும் வாரிச் சுருட்டிய ஆழிப்பேரலையின் அளவில்லா அவலப் பேரழிவும் அதில் பாதிக்கப்பட்டோருக்கு நேர்ந்த சீரழிவும் காலச் சுழற்சியில்

பலருக்கு மறந்து விட்டது. ஆனால் கவிப்புனல் பாலமுனை பாறூக்கிற்கு கடல் கொந்தளிப்பால் எழுந்த மனக்கொந்தளிப்பு அடங்கவில்லை. “கொந்தளிப்பு” என்ற தலைப்பிலேயே நூலாக்கித் தமது உள்ளக் குமுறல்களை அதில் கொட்டினார்.

புதிய குறுங்காப்பியமாகப் பிறப்பெடுத்த அந்த நூலுக்குக் கிடைத்த வரவேற்பால் அதே தன்மையில் “தோட்டுப்பாய் மூத்தம்மா”, “எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு”, “மீளப் பறக்கும் நங்கணங்கள்” ஆகிய புதிய குறுங்காப்பியங்களையும் படைத்துத் தந்தார் கவிஞர் திலகம்.

பொருந்தாத திருமணத்தால் ஒரு பெண்ணுக்கு ஏற்படும் பிரச்சினைகள், மீட்சிக்கு உரிய சரியான முடிவாக மணவிலக்கு, துணிவாக மேற்கொள்ளப் பெறும் மறுமணம், துணைவனின் மறைவிற்குப் பிந்தைய தனிமை வாழ்க்கை என விரிந்து நிறைவுறும் “தோட்டுப்பாய் மூத்தம்மா” கிழக்கிலங்கை முஸ்லிம்களின் சமுதாயச் சிக்கல்களை வெளிப்படுத்துவதுடன் அப்பகுதியின் அரிய பண்பாட்டுப் பதிவாகவும் அமைந்துள்ளது.

இருப்பே கேள்விக்குறியாக்கப்பட்ட அப்பாவி மக்களின் போர்க்கால அச்சத்திலுறைந்த அவலத்தை உணர்த்தும் குறுங்காவியமாக “எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு” எழுந்தது. கதைத் தலைவனாகிய “அவன்” குரலாக மட்டுமல்லாது அரசுப் படையாலும், புலிப்படையாலும், அமைதிப் படையாலும் அலைக்கழிக்கப்பட்ட ஒவ்வொரு குடிமகனின் குரலாகவும் கேட்கிறது : “என்னபிழை நான் செய்திருக்கிறேன்?” முஸ்லிம், இந்து சமுதாயங்களுக்கு இடையே நிலவிய இணக்கமான உடன்பிறப்பு உறவுநிலை, பேரால் எதிர்மாறாகப் பகை நிலைக்குத் திரும்பிவிட்ட கொடுமை இந்தக் குறுங்காப்பியத்தில் உணர்த்தப்பட்டுள்ளது.

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வரலாற்றையும், வாழ்வியல் பண்பாட்டையும், அவர்களுக்கிடையே நிலவிய உட்குழப்பங்களையும், கல்வி பொருளாதாரப் பின்னடை வினையும், அரசியல் நெருக்கடிகளையும், அதிகார வரம்பு மீறல்களையும் மிக நுட்பமாகப் பதிவு செய்துள்ள கிழக்கு மாகாண வித்தகரின் மூன்று குறுங்காப்பியங்களையும் குறித்த ஆய்வினை நிகழ்த்தும் பொறுப்பினை என் மாணவர் திரு சேகரிடம் ஒப்படைத்தேன். அவரும் தமது ஆய்வியல் நிறைஞர் பட்டப் பேற்றிற்காக ஆய்வேட்டைச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளித்து உயர் தகுதியில் தேர்ச்சி பெற்றார் என்பதை ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறேன்.

எள்ளல் துள்ளும் அங்கதச் சிறு கவிதைகளைத் தொகுத்துக் குறும்பாக்கள் என்னும் நூலாகவும் தந்துள்ளார். கலாபூஷணம் பாலமுனை பாறூக். நகைச்சுவையை நடிப்பில் கொண்டு வந்து விடலாம். எழுத்தில் கொண்டு வருவது மிகக் கடினம். ஆனால் பாலமுனை பாறூக் இதில் எளிதாக வென்றுவிட்டார். நகைச்சுவைத் துணுக்கு மூலமும் தம் எழுத்துப் பயணத்தைத் தொடங்கிய பாலமுனை பாறூக் பாட்டிலும் நகைச்சுவையைக் கூட்டி வெற்றி பெற்றிருப்பது இயல்புதானோ! ஒவ்வொரு குறும்பாவுக்கும் பொருத்தமான படம் வரைந்து நகைச்சுவை உணர்வை வாசகரிடம் ஊட்டியிருக்கின்ற பாங்கு பாராட்டும் வகையில் அந்நூலில் அமைந்திருக்கும். அந்த நூலில் ஒரு சிறந்த ஆய்வுரையையும் எழுதியுள்ளார் கவிஞர். குறும்பா வடிவ வரலாற்றை ஆங்கில லிமரைக்குவிலிருந்து தொடங்குபவர் தமிழின் காவடிச்சிந்து, நொண்டிச் சிந்து, ஒயிற் கும்மி, பாவேந்தரின் பாடல் எனப் பல்வேறு எடுத்துக்காட்டுக்களைத் தந்து, தான் அந்த வடிவத்தில் செய்துள்ள முயற்சியினை விளக்கியுள்ளார். இதிலிருந்து கவிஞர் பாலமுனை பாறூக் படைப்பில் மட்டுல்லாது படிப்பிலும் வல்லவர் என்பதையும் தான் ஒரு புதிய முயற்சியை மேற்கொள்வதற்கு முன்னர் அதற்கு முன்னோடியாக அமைந்தவற்றையும் ஆராய்ந்து தெளிவு பெறுபவர் என்பதையும் அறிய முடிகிறது.

தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்த படைப்பாளர் சிலர் முகநூலில் இணைந்த பிறகு விளம்பர மோகத்தில் தங்கள் படங்களையும் பயனற்ற தகவல்களையும் (சில வேளைகளில் ஏற்கனவே பகிர்ந்தவற்றை "இரண்டு ஆண்டுகளுக்கு முன் இதே நாளில்" என்ற தலைப்பில் மறுபதிவு செய்பவர்களும் உண்டு) பகிர்வதிலேயே காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கருமமே கண்ணானோர் முகநூல் வருவதற்கு முன்னர் என்ன செய்து கொண்டிருந்தார்களோ அதேயே முகநூலிலும் தொடர்ந்து கொண்டிருக் கிறார்கள். அத்தகையோரில் ஒருவராகிய கவிஞர் பாலமுனை பாறூக்கின் தொடர் கவிதைச் செயற்பாட்டில் விளைந்ததுதான் "வலைக்குள் மலர்ந்த வனப்பு" விளிம்பு நிலை மக்களுக்கான விடிவைத் தேடும் கவிதைகளும் சமூகப் பொறுப்பற்றோரைச் சாடும் கவிதைகளும் இந்நூலில் நிறைந்துள்ளன. இதில் இடம் பெற்றுள்ள "இளமையில் கல்" என்னும் கவிதை, அதற்கு வரையப்பட்டிருக்கும் படம் ஆகிய இரண்டும் என் இதயத்தைப் பிழிந்து விட்டன.

ஓர் எழுத்தாளன் சமூகத்தை அழுத்துகின்ற கொடுமைகளிலிருந்து அந்தச் சமுதாயம் விடுபடுவதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கும் படைப்புக்களைத்

தரும்போதுதான் சமுதாயக் கவிஞன் என்னும் தகுதிக்கு உரியவன் ஆகிறான். அந்தத் தகுதியை சிராஜுல் புனூஸ் பெற்றுவிட்டார் என்று உறுதியாகக் கூறலாம்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய கழகம் காயல்பட்டனத்தில் நடத்திய இலக்கிய மாநாட்டில் நடந்த கவியரங்கில் பாலமுனை பாறூக் படித்த கருத்தாழமிக்க கவிதை பலரின் பாராட்டைப் பெற்றதை இப்போதும் எண்ணி மகிழ்கிறேன்.

சமூகத்தின் மீதான முதிர்ந்த புரிந்துணர்வுடன் இளைஞர்க்குரிய புத்துணர்வுடன் எழுதிக் கொண்டிருக்கும் பாவேந்தல் பாலமுனை பாறூக் இன்னும் பல்லாண்டுக் காலம் பிணி இல்லாப் பெருவாழ்வு வாழ்ந்து பாப்புனை பணியினைத் தொய்வின்றித் தொடர்ந்திட எல்லாம் வல்ல இறையருள் வேண்டுகிறேன்.

நிறைநலத்துடன் அவர் நீடு வாழ்க! ■

பாலமுனை பாறூக் துளிப்பாக்கள்...

பயமுறுத்தியது பகடி
போக மறுத்துச் சாகத் துணிந்தாள்
பல்கலை மாணவி

உயர் படிப்பில்
பகடியின் புதிய சொல்லாடல்
பாலியல் சேட்டை

புலமைப் பரீட்சை நூல்கள்
தலையில் வலிந்து சுமக்கிறது
சின்னஞ் சிறுசுகள்

தமிழ்த்தின விழா
உரைகளில் முதிர்ச்சியாகி
ஒதுங்கினாள் தமிழ்த்தாய்

பாதைகள் தோறும்
எமனின் அட்டகாசம்
போதையில் சாரதி

பாவல்லான் பாறூக்

காப்பியக்கோ
ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

*பெயரினில் ஊரைத் தாங்கிப் பாவலம் வருகின் றோனாய்
அயராதே கவிதைக் காவை அலங்காரம் செய்யும் வல்லான்
நயம்படத் தமிழைக் கற்று நயம்படக் கவிதை யாத்து
உயர்த்தலம் நிற்போன் நம்பி ஓங்குக புகழால் வாழி!*

*குறும்பாவில் பல்விகற்பம் காட்டுவான் யாப்பு மாறா
நறும்பாக்கள் சீராய்ச் செப்பி நல்விருந் தளிக்குந் தீரன்
கரும்பென இலக்கணத்தைக் கற்றவன் கவிஞ ருள்ளே
செருக்கிலான் இளையோ ருக்குந் துணைவனாய் வாழ்வோன் வாழி!*

*வெண்பாவை விருத்தப் பாவை விரல்நுனித் தடத்தில் வைத்து
மன்புவி போற்று மாப்போல் வடிப்பவன் கவிதைச் சித்தன்
என்தாதை நினைவு கொண்டும் ஏற்றதாம் கவிதைத் தேர்வில்
தன்பாவால் முதல்வ னாகத் தேர்வுற்றோன் வாழி! வாழி!*

*காவியம் படைப்போ ரற்ற காலத்தில் என்போல் தானும்
காவியம் படைக்கும் ஆற்றல் கொண்டுமே படைத்த ளிப்போன்
பாவரங் கனைத்தும் பாறூக் பாக்களால் பெருமை கொள்ளும்
சேவகம் செய்யுஞ் சொற்கள் செந்தமிழ்க் கவிஞன் வாழி!*

*பலபல பரிசில் பெற்றோன் பாராளு புலத்தி ருந்தும்
நலம்பெற விருது வென்றோன் நற்றமிழ் ஆழி புக்கி
பலபடத் தேடல் செய்வோன் பலருக்கும் ஏணி யானோன்
நிலம்புகழ்ந் தேற்ற நம்பி நீடுநாள் வாழி! வாழி!*

■

பாலமுனை பாறூக்கின் கவிதைகளும் மூன்று காவியங்களும்

பேராசிரியர் எம்.எஸ்.எம் அனஸ்

பாலமுனைப் பாறூக்கின் அண்மைக் காலக் காவியங்களைத் தனித்தனியே படித்திருந்த போதும் மூன்று காவியங் களையும் ஒரே தொகுப்பாகப் பார்க்கக் கிடைப்பது ஒருங்கிணைந்த இலக்கிய அனுபவமாகும். சில இடைவெளிகள் காணப்பட்டாலும் பாலமுனை பாறூக் இலக்கிய உணர்வுகளில், இலக்கியச் செயற்பாடுகளில் தொடர்ந்து வாழ்பவர்.

சமூகத்தையும் மக்கள் வாழ்வையும் பதிவுகளாக்குகின்ற கவிதைகள் காவியங் கள் காலாவதியாகி விட்டனவா என்ற கேள்விக்கு அவரது மூன்று காவியங்களும் நம் கண் முன் பதிலாக விரிகின்றன. கலையின் சமூக வெளிப்பாடு அல்லது இலக்கியத்தின் சமூகக் கடப்பாடு என்ற பாதையில் பாலமுனை பாறூக்கின் கவிதைகள் பயணிக்கின்றன. மக்களின் வாழ்க்கையில் அல்லது சமூக ஏற்றத்தாழ்வு களில் இருந்து கவிதைகளுக்கான உந்து சக்திகளை அவர் பெற்றுக் கொள்கிறார். சமூகக் கடப்பாடு, பண்பாட்டை மீளத் தேடுதல் இன்று அவரது கவிதைகளின் கருப் பொருள்களாக இருந்தாலும் சமூக மாற்றம், முற்போக்கு சமவுடைமைச் சிந்தனைகளுடன் தான் அவரது கவிதை உலகப் பிரவேசம் நிகழ்கிறது.

முற்போக்கு யுகம்

1960கள் தமிழ் கவிதைப் பரப்பில் முற்போக்கு சம உடைமைச் சித்தாந்தங் கள் அதிகம் ஆக்கிரமித்திருந்த காலப் பகுதி. இக்காலப்பகுதியில் சம உடமை சார்ந்த கருத்துக்களைப் பேசிய முஸ்லிம் கலைஞர்கள் இலக்கியவாதிகள் பற்றி ஒரு

பெயர்ப் பட்டியல் நம்மிடம் உண்டு. பண்ணாமத்துக்கவிராயர் (பாறூக்), கலைவாதி, கலீல், எம்.எச்.எம். ஷம்ஸ், எம்.பி நிஸ்வான் எனப் பத்துக்கும் அதிகமானவர்கள் இப்புதிய பயணத்தில் பங்கேற்றிருந்தனர். இவர்களில் அநேகர் 'இன்ஸான்' பத்திரிகையோடு தொடர்புள்ளவர்கள். பாலமுனை பாறூக் இன்ஸான் பண்ணையை சேர்ந்தவரல்ல, அவர் அதற்கு அடுத்த தலைமுறைக் கவிஞர்.

1960 கள் ஒரு மறுமலர்ச்சி யுகம். இன்ஸான் பத்திரிகையின் தாக்கம் கவிதைக் கருத்துக்களிலும், சிறுகதைப் படைப்புக்களிலும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இன்ஸான் பண்ணையில் வளர்ந்தவர்கள் என்று அந்த யுக எழுத்தாளர்கள் பெருமையுடன் தம்மைக் கூறிக் கொண்டார்கள். நவீன இலக்கியச் செல் நெறியில் சமூக மாற்றத்திற்கான கருத்துக்களும் உணர்வுகளும் இலக்கிய அழகுடன் அரவணைக்கப்பட்ட காலம் அது. இன்ஸான் பத்திரிகையின் பின்புலத்தையும் உட்படுத்தி அந்த யுகத்தைப் 'புதிய அலைக் காலம்' என்று வர்ணிக்கலாம்.

2016ல் வெளிவந்த பண்ணாமத்துக் கவிராயர் பாறூக்கின் 'காரவன் கீதங்கள்' (இக்பால் கவிதைகள் மொழி பெயர்ப்பு) நூலுக்கு எழுதிய முன்னுரையில் '1968 அளவில் உருவான முஸ்லிம் இலக்கியபுதிய அலை எழுச்சியோடு பண்ணாமத்துக் கவிராயரின் இலக்கியப் பயணம் ஆரம்பிக்கின்றது' என்று எழுதியிருந்தேன். அப்போது அவர் இஸ்லான் பத்திரிகையின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். இன்ஸான் பத்திரிகையின் ஆசிரியர் ஏ.ஏ.லத்தீப்.

'இன்ஸான் காலம்' முஸ்லிம் இலக்கிய மரபில் தவிர்க்க முடியாத இலக்கியக் காலப் பிரிவு. வாய்ப்புக் கேடாக இன்ஸான் பத்திரிகையின் வீழ்ச்சியோடு (1968 -1970) அந்த யுகம் முடிவை நோக்கிப் பயணித்தது. அதைப் பேச நாதி இல்லாத நிலை இன்றும் நீடித்துச் செல்கிறது.

'இன்ஸான்' இலக்கியக் குழுவினர் முஸ்லிம் கவிதை மரபில் சமூதாய உணர்வுக்கும் சமூக மாற்றச் சிந்தனைகளுக்கும் தம்மை அர்ப்பணித்து இலக்கியம் செய்தனர். இன்ஸான் வீழ்ந்தாலும் இன்ஸான் பாதை மூடப்படவில்லை. பிந்திய அல்லது அடுத்த தலைமுறைக் கவிஞரிடத்திலும் இன்ஸான் பாதிப்பு, வெளிப்படையான சமூதாய நோக்கிற்கு வழி வகுத்தது.

இதற்கு அடுத்துவந்த பிரிவை, பாலமுனை பாறூக் பிரதிநிதித்துவம் செய்த அணியினர் எனக் குறிப்பிடலாம். சமுதாய நோக்கும் முற்போக்கு இலட்சியமுள்ள கவிதைகளைப் பாறூக் படைத்தார். அன்புடீன், அஷ்ரஃப் சிஹாப்தீன், திக்குவல்லைக் கமால், அன்பு ஜவஹர்ஷா, கவிஞர் ஜவாத் மரைக்கார் போன்ற பலரை இதில் உள்ளடக்கலாம். இன்ஸான் இலக்கிய வாதிகளின் உலகப் பார்வை பெரிதும்

சமத்துவ முற்போக்குச் சிந்தனைகளின் தாக்கத்திற்கு உட்பட்டது. சமய வைதீக கருத்துக்களை அவர்கள் தாண்டிச் சென்றனர். சமூக மாற்றக் கருத்துக்கள் சமவுடமைக் கொள்கைகள் இஸ்லாத்தில் இருப்பதை அவர்கள் சுட்டிக் காட்டினர். கவிதைகளிலும் எழுத்துக்களிலும் அவற்றை இவர்கள் வெளிப்படுத் தினர்.

மத சார்பற்ற மனிதாபிமான உணர்வு களை இக் கவிஞர்கள் தங்கு தடை யின்றி வெளியிட்டனர். அந்த வீச்சும் எழுச்சியும் அடுத்த தலைமுறையின ரிடம் அதிக செல்வாக்கைப் பெற வில்லை.

1960களில் இருந்து 1980கள் வரை அன்றைய புதுத்தலைமுறை எழுத்தாளர் களின் சிந்தனைகள் இடது சாரித் துவம், முற்போக்கு, மானிட நேசம் சார்ந்ததாக இருந்துள்ளது. 1980களின் பின்னர் இந்த உலகப் பொதுச் சித்தாந் தங்கள் தணிவடைந்து சென்றதோடு இஸ்லாமிய ஆன்மீக வழியில் சமூக சிந்தனைகள் பேசப்படுகின்றன. சிலர் ஆன்மீகத்தையும் கலைப்பாங்கை மட்டும் தெரிவு செய்து கொண்டனர். பாறூக்கின் கவிதைகளிலும் இதன் செல்வாக்கைக் காணலாம். இந்தக் கால கட்டங்கள் அனைத்தோடும் அவருக்குத் தொடர்பிருந்தது.

காலக்கட்டங்கள் மாறினாலும் பாறூக் இலட்சியமாக்கிக் கொண்ட முற்போக்கு மற்றும் சமத்துவக் கொள்கைகள் முற்றாக செயலிழந்து விடவில்லை. மானுடநேயம் என்ற பொதுப் பொருளில் அவை அவருள் கவிதைக்கான உந்துதலாக அமைந் திருப்பதையும் எம்மால் உணர முடிகிறது.

பேராசிரியர். செ.யோகராசாவின் ஒரு கருத்தை இங்கு நினைவு கூரலாம். 'நவீன கவிதை வளர்ச்சியில் அறுபது களளவில் முற்போக்குக் கவிதை செல் நெறி முகிழ்க்க ஆரம்பித்தது. எழுபது களிலும் தொடர்ந்தது. இந்த எழுபது கால கட்டத்தில் இடது சாரிச் சிந்தனையால் ஆகர்ஷிக்கப்பட்டு இத்தகைய கவிதை எழுதியோரில் ஒரு சாரார் முஸ்லிம் கவிஞர்கள். ஈழத்துக் கவிதை வரலாற்றில் இடம் பெறத் தவறிய கவிஞர் சிலருள் பாலமுனை பாறூக் முக்கியமானவர்'

பாலமுனை பாறூக்கின் முற்போக்குப் பார்வையினை அடையாளப்படுத் தும் காலப் பிரிவு 1970 - 1990 என்று குறிப்பிடலாம். குமரன், தேசாபிமானி, அக்னி, களம், புதுயுகம், திருப்பம், தமிழ் நாட்டின் செம்மலர் போன்ற இடது சாரிச்சஞ்சிகைகளில் அவரது இக்காலப் பிரிவுக் கவிதைகள் பல வெளிவந்துள்ளன.

அன்புடீனின் 'நெருப்பு வாசல்' சிறுகதைத் தொகுதிக்கு எம். அப்துல் றஸாக் எழுதியுள்ள வெளியீட்டு உரையில் கூறியிருப்பது போல '60, 70களில் கூர்மை கொண்டிருந்த பேசு பொருட்கள் அன்புடீனின் கைகளிலும் கதைகளாகி இருக்கின்றன.' என்ற இதே கூற்று பாலமுனை பாறூக்கின் தொடக்க காலக் கவிதைகளுக்கும்

பொருத்தமானதெனக் கூறிவிடலாம். மேலாண்மைக்கும் அதிகாரத்திற்கும் சுரண்டலுக்கும் எதிராக இவர்கள் கலகம் செய்தனர். ஏழைகளுக்கான எதிர்காலத்தை அவர்கள் கனவு கண்டனர்.

விழித்துவிட்டோம் இனியும் நாம்
வழி தவறி வீழ மாட்டோம்
புரியாத புதிரெல்லாம் புரிந்ததாலே
புறப் பட்டோம் ஆகையினால்
சரித்திரத்தை மாற்றிவிடத் தயங்க
மாட்டோம்.

என்ற வரிகளிலும்

முஅத்தினார் மௌத்தானார்.
இந்த உலகிற்கு இவர் எதையும்
சேர்க்கவில்லை
இதனாலேயே போடியார் வீட்டு
மௌத்திற்கு வந்தது போல்
ஆள் கூடி வரவில்லை
அநேகம் பேர் இருக்கவில்லை.

என்ற வரிகளிலும் சமூதாய ஏற்றத் தாழ்வைச் சாடும் உறுதியான பார்வையை நாம் பார்க்கிறோம். 'பதம்' என்ற அவரது கவிதைத் தொகுதி பேசும் பிரதான பொருள் இந்த இலட்சியங் களுக்கு உட்பட்டவைதான். பதம் தொகுதியில் உள்ள கவிதைகள் பற்றி பேராசிரியர் நுஃமான் : 'மதவிழுமியங் களுக்கும் சமூக நடைமுறைகளுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் அவருடைய பதம் தொகுப்பில் உள்ள பல கவிதைகளில் வெளிப்படுகின்றன. குறிப்பாக வறுமைப்பட்ட பெண்களின் சமூக நிலை இவரது பல கவிதைகளில் பேசப்படுகிறது' எனக் குறிப்பிடு கிறார். ஆனால் முப்பது வருடங்களின் பின்னர் பாறூக்கின் கவிதை மாற்ற மடைகிறது. பழைய சமதர்மப் பாதையில் பயணிக்கும் வாய்ப்புக்கள் மறைந்தது ஒரு காரணமாக இருந் தாலும் சமூக, சமய மாற்றங்கள் பல நிகழ்ந்து விட்டன. தனிக் கவிதை களிலிருந்து காவியம் என்ற வடிவத் துடன் அவரது இரண்டாவது பிரவேசம் நிகழ்கிறது. பழைய உணர்வுகள் தடைப் பட்டுவிட்டன என்பது இதன் பொருளல்ல.

கொந்தளிப்பு

2010ன் பின்னர் அடுத்தடுத்து மூன்று காவியங்களை பாறூக் வெளியிட்டார். ' கொந்தளிப்பு' குறுங்காவியத்துடன் அவரது புதிய கவிதைப் பயணம் ஆரம்பமாகிறது. தோட்டுப்பாய் மூத்தம்மா, எஞ்சியிருந்த பிரார்த் தனைகள் அடுத்து வெளிவருகின்றன. பண்பாட்டையும் மரபுகளையும் நினைவூட்டிய படி மனதைத் தாக்கும் கிழக்குப் பிராந்திய முஸ்லிம் பிரச் சினைகள் சிலவற்றை இக்காவியங்கள் மூன்றும் பேசுகின்றன.

நடந்த சம்பவங்களைத் திரட்டித் தரும் சம்பவங் களின் தொகுப்பல்ல இக் காவியங்கள். போராட்டம் நிறைந்த மனித வாழ்வில் மனதை நெருடும் அத்தியாயங்களைப் பாறூக் காவியங ்களாக்கி உள்ளார். 'மழைக் காவியங்கள்' 'புயல்க் காவியங்கள்'

என்ற முந்தை மரபை மனிதக் காவியமாக பாறூக் மாற்றுகிறார்.

முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகளும் நம்பிக்கை களும் பழக்கவழக்கங்களும் மோதல் களும் சமூகத்தின் மீது சுமத்தப்படும் அரசியல் சவால்களும் இக் காவியங் களின் முக்கிய பேசு பொருள்களாகி உள்ளன. இரண்டாம் கட்டக் கவிதை களில் நமது மனதை ஆழமாகத் தொடுவது கிழக்கின் மண்வாசனை தான். மண்ணின் வேர்களில் இருந்து மரபுகளாகத் துளிர்த்து இன்று அழிவை நோக்கித் தள்ளப்படும் பல பண்பாட்டுக் கூறுகளை இக்காவியங் கள் நினைவுபடுத்துகின்றன. பண்பாட் டுப் பதட்டம் இதில் நிகழ்ந்திருப் பதையும் பாறூக் இக்காவியங்களில் சுட்டிக் காட்டுகிறார். கொந்தளிப்புக் காவியம் அபூர்வமான களத்தில் நடக்கும் சம்பவங்கள். ஆனால் நாம் நன்கறிந்த கதை. சுனாமிப் பேரலையை மையப்படுத்திய கதைக் களத்திலிருந்து இக்காவியம் ஆரம்பமாகிறது.

காவியத்திற்குள் ஒரு குறு நாவலைக் கூற முயற்சிப்பது போன்ற ஒரு இலக்கிய உத்தி கொந்தளிப்பில் தெரிகிறது. நீண்ட காலம் எழுதிப் பெற்ற பயிற்சி இக் காவியத்தை அழகுபடுத்துகிறது. ஒரு நாவலாசிரி யனுக்குரிய கதை வடிவத்தை பாறூக் காவியமாகக் கையாண்டிருப்பதாக பேராசிரியர் நுஃமான் கூறுகிறார்.

பாறூக் தரும் காட்சி விம்பம் ஒன்று இவ்வாறு அமைகிறது. 'சன சந்தடி மிகுந்த கடற்கரையில் ஒரு மாலை நேரத்துக் காட்சியுடன் ஆரம்பமா கிறது காவியம். ஆதம் காக்கா தனியே ஓரமாய் ஒதுங்கி நின்ற ஒற்றைத் தென்னையின் கீழே வந்து அமர்ந்து கொண்டார். அவரின் நினைவோட் டங்களாக கவிதை விரிகிறது. ஆழிப் பேரலை அனர்த்தம் அவரது நினை வில் எழுகிறது' அதில் அள்ளுண்டு போன மனைவி மக்களின் நினைவு அவரைத் துயரத்தில் ஆழ்த்துகிறது. (எம்.ஏ.நுஃமான்).

ஆழிக் கடலெனும்
அழகுப் பெண்ணாள்
நீலச் சேலை அணிந்தே இருந்தாள்
வெள்ளைக் கரையோடு
வண்ணச் சேலை

என்று கடலின் அழகைக் கூறும் வரிகளுடன்தான் கொந்தளிப்புக் காவியம் ஆரம்பிக்கிறது.

கடற்கரை அழகுதான். கடலருகே வெண் மணற்பரப்பில் அமர்ந்திருந்து மாலைப் பொழுதில் பேசிக்கழிப் பதும் அழகுதான். கிழக்குக் கிராமங் களில் கடற்கரை அருகில் ஒன்று கூடிக் காணும்காட்சி அவர்களின்வாழ்கையின் ஒரு அங்கம் போன்றது. எத்தனை பேர், எவ்வளவு கூட்டம். ஆதம் காக்கா கடற்கரையில் அமர்ந்து பார்க்கும் போது சன சந்தடி. சுனாமிப் பேரலையுடன் இன்றைய அமைதிக் கடலை ஆதங்காக்கா ஒப்பிட்டுப் பார்க்கிறார்.

அழகை ரசிக்கவா
அமைதியைப் பெறவா

ஆடவர் பெண்டிர்
அருகருகிருந்து
கொஞ்சவா குலவவா
எத்தனை பேர்கள்
எத்தனை பேர்கள்

ஆழிப் பேரலையின் அழிவு ஆதங் காக்காவின் மனதைத் தாக்கியது. வானம் வரை உயர்ந்து ஊரை அழித்த கடலா இது? ஆழிப் பேரலை ஏன் நிகழ்ந்தது? அழுகுக்கள்தான் ஆபத்ததி கமோ பிழைகள் நடந்ததோ பேரலை பொங்க மானிடர் செய்த பாவங்க ளால் தான் பேரலை பொங்கி கிராமங் களை விழுங்கியதாக உலவிய கதைகள் கொஞ்சமா? மிம்பர்களிலும் இந்த முழக்கம் கேட்டது. கொந்தளிப் பென்று கொடூரம் புரிந்த அந்தக் கடல்தான் இந்தக் கடலா எண்ணிப் பார்த்தார். இதயம் வலித்தது.

சுனாமியில் அள்ளுண்டு போன மனைவி பிள்ளைகள் என்ற ஆறாத் துயரத்துள் அமிழ்ந்தார் ஆதங்காக்கா. கிழக்கிலங்கையின் முஸ்லிம்களையும் எல்லா மக்களையும் பாதித்த நிலவரங் களை எண்ணிப் பார்க்கிறார். ஆதங் காக்கா என்ற ஒற்றைப் பாத்திரத்தின் நினைவுகளாய்க் காவியம் நகர்கிறது.

கதைக்கட்டமைப்புக்கள் இந்தக் காவியங்கள் மூன்றையும் கவனிப்புக் குரியவை ஆக்கியுள்ளன. அவை நாமறிந்த, நமக்கு நெருக்கமான கதைகள். பாறுக் நினைவுக்கெட்டாத காலத்திற்கு எம்மை அழைத்துச் செல்லவில்லை. அக்கதைகள் இப்போது தான் நடந்து முடிந்துள்ளன.

கிழக்கு மக்களின் வாழ்க்கையைப் புரட்டிப்போட்ட ஆழிப்பேரலையின் ஆட்டம் இங்கு பதிவாகிறது. ஆயிரக் கணக்கான உயிர்களையும் ஆயிரக் கணக்கான வீடுகளையும் கடல் விழுங்கிய பெருங்கதை, ஒரு ஒற்றை மனிதனின் இழப்பிலும் வேதனையிலும் இருந்து காவியம் பேசப்படுகிறது.

சுனாமி அனர்த்தங்களிலிருந்து வாழ்க் கையை சீரமைக்க மக்கள் போராட வேண்டியிருந்தது. ஆதங்காக்கா கவலைகளை மட்டும் பேசவில்லை. கிராமங்களை மீளக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் பாதிக்கப்பட்ட மக்கள் புறந்தள்ளப்பட்டனர். யார் யாரோ எல்லாப் பயன்களையும் அள்ளிச் சென்றனர். கொடிய அக்காட்சிகள் ஆதங் காக்காவின் நினைவுக்கு வருகின்றன.

நெத்தலிக்கென்று போட்ட இரையை
சுறாக்கள் வந்து
சுருட்டிக் கொண்டதாய்
கட்டிடமிருந்தோர்
தொழில் இழக்காதோர்
கடலே எதுவெனக் காணாதவர்கள்
பெற்றெடுத்தார்கள்
பெருந்தொகையாகவே
கடலின் பக்கம் வந்தறியாதோர்
படகை இழந்ததாய்
பத்திரம் வைத்தார்

வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன ஆனால் அவை மக்களுக்கு பகிர்ந்தளிக் கப்படவில்லை என்ன கொடுமை இது? துக்கம் தொண்டையை அடைத் தது. ஆதங்காக்கா துயருற்றார்.

எட்டாக் கனியையவை
என்று நினைக்க
துக்கம் தொண்டையைக் கட்டிக்
கொண்டது.

காலம் சற்று நகர வயல் வேலைக்கு மெஷின்கள் வந்து சேர்கின்றன. வாழ்வை இயந்திரமாக்கிய இயந்திரம் என்று பறூக்கின் காவியம் கூறுகிறது. வயல் வேலைக்குத் திரளும் மக்கள் கூட்டம் இன்று தேவையற்றதாகி விட்டது. ஆதம் காக்கா முன்னேற்றத் தின் எதிரி அல்ல. ஆனால் வயலை நம்பி வாழ்ந்தவர்களை, ஏழைகளை அவர் எண்ணிப் பார்க்கிறார்.

வயலோடும் நெல் மணிகளோடும் ஒன்றிக் கிடந்த வாழ்வும் மண்சார்ந்த மரபுகளும் காணாமல் போன காட்சி கண்டு ஆதங்காக்கா அதிர்ந்து போனார். இயந்திர வாழ்க்கை ஆரம்ப மாக, மரபுகள் மாயமாக மறைந்தன. ஆயிரக்கணக்கான ஏழை மக்களை ஒன்றிணைத்த வயற் காட்டு மரபுகள் சடங்குகள் மறைவதைக் காட்டும் அடையாளங்களை அவலத்துடன் பார்க்கிறார் ஆதங்காக்கா.

அரிசி வெட்டு மெஷினே வந்து
அரித்துக் கொன்றது
வெளியான் மார்களை
கடப் பொலி இல்லை
தலப் பொலி இல்லை
கதிர்கள் பொறுக்கும்
பெண்டுகள் இல்லை.
தாக்கத்தி இல்லை
ஏக்கத்தினாலானோம்.

கிராமங்களின் சரித்திரங்கள் சாய்வது போன்ற ஒரு உணர்வு, தவியாய்த் தவித்தார் ஆதாங்காக்கா.

மண்ணையும்
மக்களைச் சூழ்ந்த மரபுகளையும்
நேசித்தவர் ஆதம்காக்கா
பரணின் மேலே உயரக் கம்பின்
கணவா லாம்பின்
வெளிச்சம் தெரியும்
கொடியேற்றப் பள்ளியின்
மினாரா போல

ஆதங்காக்கா எண்ணிப் பார்க்க அனேக விடயங்கள் இருந்தன. திரும்பி வராப் பொற்காலத்தை இவர் மனதில் நெய்து பார்த்தார். மெஷின்களின் யுகத்தில் மனிதப் பெறுமானங்கள் நிலைப்பதில்லை. ஆதங்காக்காவின் உள் மனம் குமுறுகிறது.

இலயித்து அவர் மனம் கசிந்து
வாழ்ந்திட்ட வாழ்க்கை
விலகியதாய் விட்டு விட்டு
நழுவிதாய் உணர்ந்தார்.

மனித இருப்பினை நிலைகுலையச் செய்யும் புறநிகழ்வுகளும் அகக் குமுறல் களும் ஒன்றிணையும் நனவுச் சித்திரங்கள் ஆதங்காக்காவை வரைந்து பார்க் கின்றன.

....

'இயந்திரமாய் போனதிந்த வாழ்க்கை என வெந்தார்'

ஒரு நாவலின் தொனி அந்தக் காவியத்துக்குள் இருந்தது. மெஷின் களின் வருகையாலும் பல்வேறு சமூக

தாக்கங் களாலும் மண் வாசனை மிக்க மரபுகள் சிதைந்தழியும் காட்சியைக் கூறும் ஒரு சமூகவியல் பார்வையை பாறூக் இதில் அழகாக வெளிப்படுத் துகிறார்.

தோட்டுப்பாய் மூத்தம்மா

தோட்டுப்பாய் மூத்தம்மா பாலமுனை பாறூக்கின் இரண்டாவது காவியம். கிராமியக் கதைப் போக்கை விரித்து ரைக்கும் காவியம். அவர் வாழும் மண்ணின் மற்றொரு முதுசம் தோட்டுப் பாய் மூத்தம்மா. ஆதங்காக்காவும் தோட்டுப்பாய் மூத்தம்மாவும் கிழக்கு மண்ணின் பண்பாடு பேசும் பாத்திரங் கள். எழுபது வயதில் மரணித்த உயர் குடிப் பெண்தான் மூத்தம்மா. அவளது இயற்பெயர் செய்னம்பு. செய்னம்புவிற்கு நடந்த பொருந்தாத் திருமணம், மண முறிவை எதிர் நோக்கும் மூத்தம்மா, மறுமண வாழ்வில் மூத்தம்மா, மூத்தம்மாவின் மரணம் என்று மூத்தம்மாவைச் சுற்றி விரிகிறது காவியம். காவியம் முழுக் கப் பதிவுபெற்றிருக்கும் பண்பாட்டுத் தடங்கள்தான் காவியத்தைத் தூக்கி நிறுத்தும் தூண்களாக காட்சி தருகின்றன.

பண்டைய மரபொன்றின் கவிதைப் பதிவு இவ்வாறுள்ளது :

சுன்னத்தை முடித்து
தலை மழித்து நீராட்டி
அரை மூடி சலங்கை யென
அணிகலன்கள் தான் இட்டார்.
சாணைக் கூறையிட
சம்பந்தம் வந்திருந்தாள்
மாமா நூல் போடவென
மகிழ்வோடு காத்திருந்து
உம்மாவின் கடைசித் தம்பி
ஒருமுடிச்சைப் போட்டு வைத்தார்.

பண்பாட்டைக் கதையாக்கி, கட்டுரை யாக்கிப் பார்ப்பது ஒரு வகை முயற்சி. காவியமாய்க் காண்பது ஒரு புது அனுபவம்.

ஒவ்வொரு காவியங்களிலும் அவர் உருவாக்கி உள்ள கதை மாந்தர்கள், காட்சிப் படிமங்கள், கற்பனைகள், இலகு நடைக் கவிதைகள் காவியங் களின் அழகை மெருகூட்டுகின்றன. வரலாற்றுச் சம்பவங்களை ஆவண மாக்கும் பணி அல்ல இது. வாழ்வின் உண்மைகளையும் அதிர்ச்சிகளையும் அழகையும் தூரிகையால் சித்திரிக்கும் நிகழ்ச்சி. திருத்தமான வரிகளும் தேர்ந் தெடுத்த சொற்களும் பண்பாட்டை முன்னிறுத்தும் மரபுகளின் சங்கமம் காவியங்களை நெஞ்சுக்கருகே கொண்டு வந்து விடுகின்றன. தடையற்ற வாசிப்பு சாத் தியமாகிறது.

சாத்வீகமும் பண்பாட்டுப் பார்வையும் பாறூக்கின் அணுகு முறைகள். அவரது இரண்டாம் கட்ட காவிய கால மனநிலையாக இதனைக் குறிப்பிடலாம். எனினும் அழுத்தமாக சொல்ல வேண்டியதிலிருந்து அவர் தப்பிச் சென்று விடுகிறார் என்பது இதன் அர்த்தம் அல்ல. ஒரு உதார ணத்தை மட்டும் இங்கு பார்ப்போம்.

அஞ்சு வண்ணம் தெருவில் தோப்பில் மீரான் கூறுவதற்கு ஒப்பான காட்சி இது. தோப்பில் மீரான் நாவலில் கூறுகிறார். பாறூக் கவிதையில் தருகிறார்.

காலம் மாறி இருந்தது. புதிய இயக்கக் கருத்துக்கள் மக்கள் மன்றத்திற்கு வந்து விட்டன. தேங்காய்ப் பட்டி னத்தில் நடந்தது பாலமுனையிலும் நடந்தது. மெஷின் ஊருக்குள் ஊடுரு வும் முன்னரே கபுரடிகளிலும் பள்ளி வராந்தைகளிலும் சச்சரவுகள் ஆரம் பித்து விட்டன. கருத்தொற்றுமை சீர் குலைந்ததை கவிஞர்கள் பேசாமல் வேறு யார் பேசுவது?

தோட்டுப் பாய் மூத்தம்மாவில் வரும் ஒரு காட்சி இது. தோட்டுப்பாய் மூத்தம்மா இறந்து விட்டாள்,

அடக்கும் கருமங்கள் தொடங்கின.
வெள்ளப் புடவை சுருமா
பன்னீர் அத்தரென
எல்லாமே ஒவ்வொன்றாய்
சேர்த்தெடுத்தார் ஊரார்கள்
புறப்பட்டு மையத்து
போயிற்று சன் தூக்கில்

தோட்டுப்பாய் மூத்தம்மா புதை குழிக்குள். ஆனால், கருத்துப் பேதங்கள் தலைக்கேறின. மண் மூடி மேடமைத்து மிசான் கட்டைகளைக் குத்திய பின் ஓதென்றார் ஒருவர்

'தல்கீனை ஓதுவதே தகும்' என்றார்' தல்கீனா சீவனற்ற கட்டைக்கா? துவாவை ஓதுங்கள் மக்கள் நற்பயன் பெற்றிடுவர்.' மற்றொரு குரல்.
பிரிந்தார்கள் ஜமா அத்தார்.
தல்கீனைச் சிலர் ஓத
குத்துபாவைச் சிலர் ஓத
பிரிந்தே கலைந்தார்கள்

முன்னொரு நாள் ஜமா அத்தார் பிரிந்தே வாழ்ந்த கதையின் ஒரு சம்பவக் கூறு இதில் படிந்துள்ளது.

இது கற்பனையல்ல. இவை என்ன? இவை ஏன் நடக்கின்றன? கவிஞனாக கண் கலங்குகிறார் பாறூக்.

வெட்கித்து மையத்தில்
குத்தி இருந்த கொத்துகளும்
இது கண்டு கூனிற்று குறுகிற்று
வானம் இருண்டு முழங்கிற்று
பின் அழுதிற்று மழையாய்.

எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு

கடந்த முப்பது ஆண்டுப் போரில் கிழக்கில் நடந்த தமிழ் - முஸ்லிம் உறவையும் விரிசல்களையும் ஒரு சமாதான நோக்கிலிருந்து அணுகும் மற்றொரு காவியம் "எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு" இலங்கையின் இன முரண்பாட்டுச் சூழலில் கிழக்கின் தமிழ்- முஸ்லிம் உறவுகளில் ஏற்பட்ட நெருக்கடிகளையும் வன்முறைகளை யும் இக்காவியம் கூறுகிறது.

முஸ்லிம் - தமிழ் உறவில் ஏன் இந்த விரிசல் ஒரே பிராந்தியம், ஒரே

மொழி, உணர்வுப்பரிமாற்றங்கள் எல்லாம் இருந்தும் மோதல்கள் எப்படிச் சாத்தியமாகின. அவ்வப் போது சச்சரவுகள் சிறு மோதல்கள் நடந்திருந்தாலும், இவை ஏன் பூதாகாரமாக்கப்பட்டன. ஒற்றுமைக் கான கதவுகள் ஏன் திறக்கப்பட வில்லை. ஒரே மொழி என்ற பாலத்தை மக்கள் ஏன் பயன்படுத்தவில்லை. எத்தனை கேள்விகள்.

இவை குறித்து ஒரு உரையாடல் தொடரலாம் அல்லவா? பாறுக்கின் எஞ்சியிருந்தபிரார்த்தனையோடு அத்தகைய புரிந்துணர்வுக்கான ஒரு அழைப்பாகவும் இக்காவியம் விளங்கு கின்றது.

யார் பேரிலும் அவர் பழியைப் போடவில்லை. அவர்களா இவர்களா என்றில்லை. பரஸ்பரம் பல சம்பவங் கள் நடந்தேறி உள்ளன. ஆனால் நிலையான சமாதானத்தை நோக்கிய அடுத்த நகர்வு என்ன? பாறுக் இக்காவியத்தில் அப்படியொரு கேள்வியைத்தான் எழுப்புகிறார்.

பிரித்து வைத்தவர் யார் யார்
பிரிந்து நின்றவர் யார் யார்
மோத விட்டவர் யார் யார்
மோதிக் கொண்டவர் யார் யார்
துளைகள் இட்டன
கேள்வி வண்டுகள்
அருவி வெட்டின
கண்கள்!

ஒன்றிணைந்தும் புரிதல் உணர்வோடும் ஒரு பிராந்திய மக்கள் என்ற ஒருமைப் பாட்டைக் கட்டியெழுப்பிய எத்தனை சம்பவங்கள் இன்று எம்மைப் பார்த்து சிரிக்கின்றன. அவை முந்தைய வாழ்வொழுக்கமாக இருந்தாலும் கவிஞர் உள்ளத்தில் அவை பசுமை யான உணர்வுகள். அடுத்த தலைமுறைக் கும் இவ்வுறவை கொண்டு செல்ல அவர் விரும்புகிறார்.

அது இந்திய அமைதிப்படைக் காலம். போரின் அவலம் எல்லாத் திசைக ளிலும். “மனசை அடைத்த வெப்பு சாரமும் வயிற்றில் மூண்ட அக்கினிப் பசியுமாய்” தனது வீடு நோக்கி வருகிறான் ஒரு முஸ்லிம் இளைஞன். வீட்டில் யாருமில்லை. தனித்து நின்ற அவனைப் பார்க்கிறாள் அடுத்த வீட்டு பார்வதி அக்கா. மோதல்கள் சச்சரவுகள் எதுவும் அவள் மனதில் இல்லை. பயத்தில் நடுங்கி நின்றவனுக்கு தண்ணீர் கொடுக்கிறாள் பாதுகாத்து உதவுகிறாள். அப்போது அவளது மனதில் தோன்றிய காட்சிகள் இவை.

வண்டிக்கார முஸ்லிம்கள்
தமிழர் ஒன்றாய்ச் சேர்ந்து
ஒற்றுமையாகவே
காட்டினிற் சென்று
கம்புகள் வெட்டி
கோயிலைப் பள்ளியைக்
கட்டிக் கொண்டதும்
பள்ளிவாசலில் கந்தூரி ஆக்க
கொள்ளித் தறித்துக்
கொடுத்து மகிழ்ந்ததும்.

பார்வதி அக்காவின் பழைய நினைவு கள் உறவுப் பாலமாய் காவியத்தை அழகு படுத்துகிறது.

■

செந்தமிழாய் பூத்திட்ட செங்காந்தள் பாக்காரன்

பைந்தமிழ்ப்பாமணி
கவின்முருகு
(இந்தியா)

அருந்தமிழின் சொல்லெடுத்து நற்கவிகள்
பலவியற்றி தமிழுக்குச் சிறப்பாய்
அரும்பணியை யாற்றிவரும் பெருங்கவியார்
நானுவக்கும் தமிழ்மகனார் நீவீர்!
திருத்தமிழை முரசமேற்றி அழகுபார்க்கும்
நற்கவிஞர் பாலமுனை ஊரார்
திளைக்கின்றேன் பேரன்பின் பொழிவாலே
என்மனத்தில் குடிகொண்டீர் நீவீர்!
முருகுதமிழ் வாயலர்ந்தால் கவிபிறக்கும்,
மன்றத்தில் தமிழ்வீசும் நாளும்!
முழுமதியின் குளிர்பொழிவாய் மனமெல்லாம்
நனைந்திடுமே உம்தமிழா லென்றும்!
பெருமக்கள் வாழ்த்திடவும், பெரும்புலவோர்
ஏத்திடவும் பல்லாண்டு வாழ்க!
பெருங்கவியாம் உமையென்றும் வாழ்த்திடுவேன்
என்பாவில் புகழ்மாலை யாத்து!

எந்நாளும் நலமுடனும் வளமுடனும்
பேருடனும் புகழுடனும் வாழ்க!
எழில்தமிழில் தினம்பாடி பேரின்பத்
தமிழ்த்தொண்டில் சிறப்புற்று வாழ்க!
சந்தங்கள் கொஞ்சுதமிழ் குறும்பாக்கள்,
காப்பியங்கள், காவியங்கள் யாத்து
சரித்திரத்தில் நிலைபெற்று வாழ்க!
சாதனைகள் பலகண்டு வாழ்க!
சந்ததமும் தமிழ்ப்பணியே பெரிதென்றும்
மூச்சென்றும் செய்துயர்ந்து வாழ்க!
சந்ததிகள் உமைபடித்துப் போற்றிடவும்
நெறியறிந்து நடந்திடவும் வித்தாய்
செந்தமிழாய்ப் பூத்திட்ட செங்காந்தள்
பாக்காரன் கவிபுனையும் மன்னன்
காந்தமாக மனங்கவரும் மாமனிதர்
குணவான்நீர் பல்லாண்டு வாழ்க!

■

ஈழத்துக் கவிதை உலகில் பாலமுனை பாறூக்கின் ஆரோக்கியமான இலக்கியப் பயணம்!

பேராசிரியர்
றமீஸ் அப்துல்லாஹ்

நான் பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் இருந்தே எனக்கு இலக்கியத்தில் ஈடுபாடு இருந்தது. அப்போதிருந்தே நான் அறிந்த கவிஞர்களில் ஒருவர் பாலமுனை பாறூக். அவ்வப்போது பத்திரிகைகளில் அவரது கவிதைகளை கண்ட நான் 'எழுவான் கதிர்கள்' என்ற தொகுதியினூடே அவரை அதிகம் அறிந்து கொண்டேன். அந்தத் தொகுதி அவரை பின்வருமாறு அறிமுகப்படுத்தியது:

> **"பாலமுனை பாறூக்: 1968ஆம் ஆண்டு கவிதைச் சோலைக்குள் பிரவேசித்து எழுபதுகளில் பிரகாசிக்கத் தொடங்கினார். மனிதாபிமானப் படைப்பாளியான இவர் காத்திரமான கவிதைகளை எழுதி வருகிறார். கவியரங்குகளிலும் தனது முத்திரையைப் பதித்து இருக்கிறார். சமூக சேவை செய்வதிலும் இன்பம் காண்கிறார். இலங்கை வங்கியில் இலிகிதராகப் பணி புரிகிறார்"**
> (எழுவான் கதிர்கள் (1986) இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்)

அந்தத் தொகுதியில் வந்த அவரது கவிதைகளில் ஒன்று என்னை அதிகம் கவர்ந்தது.

"என்னை நீங்கள் எழுத விடாது
எனது கைகளை கட்டி விடுங்கள்
எரிகிற பிரச்சினை எதனைப் பற்றியும்
எழுத என்னை அனுமதியாதீர்
எனது சமூகம் எனது இனம்
எனது மக்களின் எழுச்சி என்று
ஏதும் எழுது அனுமதி யாதீர்

என்னை நீங்கள் தாலாட்டுங்கள்
எல்லாம் மறந்து
உறங்கிப் போகிறேன்!
எனது கைகளை அவிழ்க்கும் போது
வேதனை மிக்க மக்களை விட்டு
காதலை மட்டும் பாடிக்களிக்கிறேன்
என்னை நீங்கள் பாராட்டுவீர்கள்
எனக்கோர் பரிசு பதக்கம் தருவீர்
என்னை நீங்கள் உலகக் கவிஞராய்
அங்கீகரிப்பீர்
ஏனெனில் -
மனச் சாட்சியினைக் கொன்றே விட்டு
மக்களை யெல்லாம் மறந்தே விட்டு
கற்பனைக் கோட்டையுள்
சுற்றியே வந்து
பாடும் போதுஉம் பாராட்டு நிசமே
எப்போதும் நீர்,
தற்போதுள்ள எல்லைக் கோட்டை
தாண்ட விடாது
பார்த்துக் கொள்வீர்?
நீங்கள்
சு...தந்திர வாதிகளன்றோ?"

நாசூக்காக மக்களையும் அவர்களது பிரச்சினைகளையும் பாட வேண்டும் என்ற கருத்தை இந்தக் கவிதையில் முன்வைக்க வருகிறார் பாறூக். இதனைப் பார்க்கிறபோது அந்தக் காலத்தில் ஈழத்து நவீன கவிதை முன்னோடிகளுள் ஒருவரான மஹாகவி முன்வைத்த கருத்துக்களே ஞாபகத் துக்கு வந்தது.

"இன்னவைதாம் கவி எழுத
ஏற்றபொருள் என்று பிறர்
சொன்னவற்றை, நீர் திருப்பிச்
சொல்லாதீர், சோலை, கடல்
மின்னல், முகில், தென்றலினை
மறவுங்கள் மீந்திருக்கும்
இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு
என்பவற்றைப் பாடுங்கள்"

என்றும்,

"இன்றைய காலத் திருக்கும் மனிதர்கள்
இன்றைய காலத் தியங்கும் நோக்குகள்
இன்றைய காலத்திழுப்புகள் எதிர்ப்புகள்
இன்றைய காலத் திக்கட்டுக்கள்"

என்றும் மஹாகவி சமகால மனிதனைப் பாட கோஷம் எழுப்பினார். அந்தப் பாணியிலே மக்களுக்காக கவிதை பாட வந்தவர்களில் தென்கிழக்குப் பிரதேசத்தில் முக்கியமானவர்களில் ஒருவராக பாலமுனை பாறூக் திகழ்ந் தார். அந்தக் காலத்தில் இடதுசாரிக் கருத்துக்களுடைய கவர்ச்சியும் இந்தப் பிரதேசத்துக் கவிஞர்களுக்கு இருந்தது. மார்க்ஸிஸ சிந்தனைகளால் கவரப்பட்டாலும் மார்க்கத்தின் பற்றுதல் இக்கவிஞர்களை விட்டும் தூரமாகவில்லை.

இவ்வாறு பாலமுனை பாறூக்கின் இலக்கியப் பயணம் நீடித்தது. அந்தக் காலத்தில் ஊர்களில் கவியரங்கம் நடத்துவது ஒரு பெஷனாக இருந்தது. இலக்கியக்காரர்களின் சுவாரஷ்யம் மிக்க பொழுதுபோக்காக கவியரங்கம் இருந்தது. பெரும்பாலும் பாறூக் கவியரங்குக் கவிதைகளில் தனது இருப்பை அதிகம் தக்கவைத்துக் கொண்டார். இன்றும் கவியரங் கங்கள் பெரும்பாலும் குறைந்து விட்டாலும் இலக்கிய மேடைகளில் பாப்புனைந்து கவியரங்கப் பாணியில் மகிழ்விக்கிற பெஷன் பாறூக்கிடம் இல்லாமலில்லை.

இன்று இளைய தலைமுறையின ராலும் அறியப்பட்ட பிரபலமான கவிஞனாக பாலமுனை பாறூக் மாறியிருக்கிறார். அந்த இலக்கிய நீராடலுக்கு வயது ஐம்பது. கிட்டத் தட்ட நான் பிறந்த காலத்திற்கு அவர் இலக்கியம் செய்திருக்கிறார். அந்த அனுபவத்திற்கு எனது முதல் மரியாதை உண்டு. அதற்கு முன்னால் மிகுந்த பக்குவத்தோடு அவரைப் பற்றிய சில குறிப்புக்களை பதிவு செய்து கொள்ள விரும்புகின்றேன்.

அந்தக் காலத்துக் கவிஞனுக்கு சமூகத்தில் அதிக மதிப்பிருந்தது. கவிஞன் சமூகத்தில் விழிப்புணர்வினை உருவாக்குகின்ற கருவியாக இருந்தான். அக்காலத்துக் கவிஞன் கொள்கைகளோடு எழுதினான். அவனுக்குள் முற்போக்குணர்வு இருந்தது. அந்த முற்போக்குணர்வின் அடையாளங்களாகவே பாறூக்கின் ஆரம்பகாலக் கவிதைகள் இருந்தன. அந்தக் கவிதைகள் மூலமாக அந்தக் காலத்து எழுத்தாளர்களால் பாலமுனை பாறூக் அதிகம் பேசப்பட்டார். பாறூக்கின் இலக்கியப் பயணம் கவிதைகளாலே சூழ்ந்திருந்தது. அதன் வழியாக 'பதம்"(1987), 'சந்தனப் பொய்கை' (2009) ஆகிய கவிதைத் தொகுதிகள் வெளிவந்தன. பிற்காலத்தில் குறுங்காவியம் என்றும் குறும்பாக்கள் என்றும் வலைப்பூக்கள் என்றும் அவர் எழுதத் தொடங்கினார். அவருடைய இறுதியாக வந்த குறுங்காவியம் 'நங்கனப் பறவைகள்'. எப்படியிருந்தாலும் கவிதை மொழியால் அவர் அதிகம் சாதித்திருக்கிறார்.

இன்று இலக்கிய உலகம் எல்லாவற்றையும் போல போட்டியும் பொறாமையும் மிக்கதாக மாறிவிட்டது. பிரபலத்திற்காக ஆலாய்ப் பறக்கிற உலகமாய் மாறிவிட்டது. ஒரு தடவையிலேயே மகா கவிஞர்கள் பலர் உருவாகி விட்டார்கள். ஒரு பிரதியின் மூலமே தங்களை உன்னதமான கவிஞர்கள் என தம்மைத் தாமே பிரகடனப் படுத்திக் கொள்கிறார்கள். பிரமுகர்கள் கவிதை எழுதுகிறார்கள் என்பதற்காக அவற்றின் தரம் பாராது ஆட்களின் தகுதிக்காக அவற்றினை போற்றி வருகின்ற காலமாகி விட்டது. இந்தச் சகதிக்குள் பாலமுனை பாறூக்கின் ஐம்பது ஆண்டு கால இலக்கியப் பயணம் ஆரோக்கியமானது என்று சொல்வதில் தவறிருக்க மாட்டாது என்று எண்ணுகிறேன்.

மஹாகவியிடம் மக்களுக்காகக் கவி பாட வேண்டும் என்று கற்றுக் கொண்ட பாறூக் மஹாகவி, நீலாவணன் முதலானவர்கள் பாடிய குறுங்காவியத்தை கைப்பிடித்துக் கொண்டார். இவ்வகையில் மூன்று குறுங்காவியங்களை அவர் எழுதியுள்ளார். சுனாமிப் பேரவலத்தின் பின்னணியில் எழுந்த 'கொந்தளிப்பு' தென்கிழக்குப் பிரதேச மக்களின் சமூக அரசியல் பண்பாட்டு உணர்வுகளை பிரதிபலிக்கிறது. இது 2010 ஆம் ஆண்டு வெளிவந்தது. அதே போல 2011 இல் அதிகப் பிரபல்யம் பெற்ற 'தோட்டுப்பாய மூத்தம்மா' என்ற குறுங்காவியத்தை அவர் எழுதினார். இக்குறுங்காவியம் அரச சாகித்ய விருதினையும் பெற்றுக் கொண்டது. அதே போன்று 2012

இல் 'எஞ்சியிருந்த பிரார்த்தனை' என்ற குறுங்காவியத்தை தருகிறார். இது இப்பிரதேச மக்களின் ஒன்றித்த வாழ்க்கையை - அரசியலை கோடிட்டுக் காட்டுகிறது. இப்படி மூன்று காவியங் களைத் தந்த அவர் நவீன காவியங் களைப் பாடுவதற்கு நமக்குள் தகுதியா னவர் என்பதை பிரகடனப்படுத்திக் கொண்டார்.

இதற்கப்பால் 2013ஆம் ஆண்டில் 'பாலமுனை பாறூக் குறும்பாக்கள்' என்ற தொகுதி வெளிவந்தது. இதுவும் மஹாகவியின் வழியாக வந்ததென்றே சொல்ல வேண்டும். சமூகத்தின் அவலங்களை கேலியும் கிண்டலுமாக மஹாகவி பாடியது போல பாறூக்கும் நயமாகப் பாடியுள்ளார். இப்பாடல் களின் ஊடாக பல படிப்பினைகளை யும் அவர் தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதியாக பாலமுனை பாறூக்கின் 'மீளப் பறக்கும் நங்கனங்கள்' என்ற காவியம் 2020இல் வெளிவந்தது. இது நவீன காவிய வரிசையில் பொருள் ரீதியாக வேறுபட்டதாகும். இந்தப் புதிய முயற்சி பலரைக் கவர்ந்தது மாத்திரமன்றி முதியோர் பலருக்கு ஆறுதலாகவும் அமைந்தது. முதிய தம்பதிகளை எப்படிப் பிள்ளைகள் கையாள வேண்டும் என்பதற்கு ஒரு வழிவகையாகவும் இருந்தது. இந்த முதியவர்கள் பிரச்சினை தமிழர் சமூகத்திலும் இலக்கியங்களிலும் அதிகம் பேசப்பட்டது. ஆனால் முஸ்லிம் சமூகத்தில் இத்தகைய பிரச்சினைகள் அதிகம் இருந்தும் அவை பேசப்படுவதில்லை. அதுமாத்திர மன்றி முஸ்லிம் சமூகத்தின் வாழ்விய லில் காணப்படுகின்ற அக ரீதியான பிரச்சினைகளும் இக்காவியத்தில் விமர்சிக்கப்பட்டுள்ளன. இங்கு கவிஞர் பாடுகின்ற அரசியல் நடத்தை யும் மிக முக்கியமானது. இவ்வாறு முஸ்லிம் சமூகத்தில் காணப்படுகின்ற மூத்தோர் பற்றிய பிரச்சினைகளை பதிவு செய்ததில் பாறூக் முதன்மை யானவர்.

எப்படி இருந்தாலும் இலக்கியத்தின் அரசி எனப் போற்றப்படும் கவிதை மொழியை பல வழிகளில் இவ்வளவு நீண்ட காலத்திற்கு பயன்படுத்திய வகையில் பாறூக்கிற்கு ஒரு முக்கிய இடம் உண்டு. அவர் கவிதைகளில் சொற்கள் தடம் மாறாது ஆற்றொழுக் காகச் செல்வது போல் அவரது இலக்கியப் பயணமும் ஆரோக்கிய மும் காத்திரம் நிறைந்ததாக அமைந்த தும் குறிப்பிடத்தக்கது. சமகால இலக்கியப் பிரக்ஞைக்குள் பாறூக் என்ற கவிஞன் இன்னும் காலூன்றி இருப்பது நம் எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. ஐம்பது வருட கால ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பரப்பில் பாலமுனை பாறூக் என்ற கவிஞனின் முன்னுதாரணமும் கடந்து வந்த தடங்களும் புறந்தள்ளக் கூடியதல்ல.

■

நாவேந்தன் பாறூக்கை நற்றமிழால் வாழ்த்துகிறேன் !

கவிமணி கௌரிதாசன்
கிண்ணியா.

"நாவேந்தன்" எந்த னுயிர்
நண்பன் ! நற்றமிழான்
பாவேந்தன் பால முனைப்
பாறூக்கின் பொன் விழா !

"ஆச்சரியம் தரும் வகையில்
அசத்தி விடும்" விதமாய்
பாச்சொரியும் நண்ப னிவன்
பாராட்டுக் குரிய வனே !

கிழக்கிலொரு கீற் றெனவே
கிரணங்கள் பரப்பு கின்ற
அழகுதமிழ்க் கவிஞனிவன்
"அடக்கத்தின் மறு பதிப்பு !"

"மரபோடு புதுக் கவி"யும்
மற்றவர்கள் விமர்ச னங்கள்
தருவிதமாய் இல்லா மல்
தகுதியிவன் பெற்றுள்ளான் !

"குறும்பா" எனும் வடிவின்
குரிசிலிவன் பாட லெலாம்,
நறும்பா ! கேலி யுடன்
நகைச்சுவையின் விதை தூவும் !

தரும்பா அத்த னையும்
தமிழ்வல்லார் எல் லோரும்,
கரும்பா எனக் கேட்கும்
கற்கண்டுக் கவிதை களே !

வாடையென வந்தெ மையே
வருடிவிடும் யாப்ப ணிகள்
சோடை போகா விதமாய்
சூட்சுமத்தைப் பயின் றுள்ளான் !

பெண், காதல், பிரிவு பற்றிப்
பேசுகின்றோர் மத்தியிலே
கண்ணியம் சேர் இவனெழுத்தின்
கச்சிதத்தை மெச்சு கிறேன் !

தொடரான வாசனை யால்
துணிவான எழுத்து களால்,
படரப் புகழ் விருதும்
பாராட்டும் பெற்றுள் ளான் !

இசைசேரப் பாட்டெ ழுதும்
இனியவனின் படைப் புக்கள்
நிசமாகத் தடம் பதிக்கும்
நீண்டநாள் வாழ்க, கவி !

இஸ்லாமிய மக்களின் பண்பாட்டுக் கோலங்கள்

அம்பிகை நந்தகுமரன்
தமிழ்த்துறை,
யாழ் பல்கலைக்கழகம்

வை. எம். அஷ்ரஃப்
கமு/அல்-அஷ்ரக் தே.பா
நிந்தவூர்

ஆய்வுச் சுருக்கம்

உலகின் பல்வேறு மொழிகளில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட சமுதாயச் சூழ் நிலையில் பாரிய காவியங்கள் தோன்றியுள்ளதை உலக இலக்கிய வரலாறுகள் காட்டுகின்றன. தமிழ் இலக்கிய மரபிலும் காவிய வடிவம் முக்கியமான ஒன்றாகவுள்ளது. சோழர் காலத்தைத் தமிழின் 'காவிய காலம்' என இலக்கிய வரலாற்றாசிரியர்கள் அழைப்பர். நிலப்பிரபுத்துவத்தின் உச்ச நிலையில் தோன்றிய காவியம் அச்சமுதாய அமைப்பின் நலிவோடு மறைந்துபோன இலக்கிய வடிவமாக மாறியது. பழைய காவிய வடிவத்திலிருந்து பெரிதும் வேறுபட்டதாக இருபதாம் நூற்றாண்டுக்கே உரிய புதிய காவிய வடிவமொன்று தோன்றி வளர்ச்சியடைகின்றது. நவீன காவிய மரபு பாரதியுடனேயே ஆரம்பிக்கின்றது எனலாம். இவரைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் நவீன காவிய மரபின் வளர்ச்சியைக் காணலாம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பெரும்பாலான கவிஞர்களின் நவீன காவியங்கள் கற்பனை உலகு சார்ந்தவையாகவே அமைகின்றன. ஈழத்துக் கவிஞர்களின் நவீன காவியப் படைப்புக்கள், நவீன வாழ்க்கை பற்றிய உணர்வினைத் தமது அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் உருவத்திலும், உள்ளடக்கத்திலும் புதிய தன்மைகளைப் பெற்றுள்ளன. சமூகப் பிரச்சினைகளே அவற்றின் பொருளாக உள்ளன. ஈழத்தைப் பொறுத்தவரை ஈழக் கவிஞர்கள் பலர் நவீன காவியத்தைச் சமூகப் பிரச்சினைகளைப் பதிவுசெய்வதற்கான வடிவமாகக்

கையாண்டுள்ளனர். இந் த வரிசையிலே பாலமுனை பாறூக்கின் 'தோட்டுப்பாய் மூத்தம்மா' சமூகப் பிரச்சினை ஒன்றை முன்வைக்கும் நவீன காவிய வடிவமாக உருவாகியுள்ளது. பொருத்தமற்ற திருமண முயற்சியினால் குடும்பப் பெண்ணுக்கு ஏற்படும் மனப் போராட்டங்கள், விவாகரத்து, மகிழ்ச்சியான மறுமணவாழ்வு, கணவனின் மறைவு அநாதரவான நிலையில் வாழ்ந் து இறத்தல் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்நவீன காவியம் அமைகின்றது. எனினும் இந்த நவீன காவியம் சமூகப் பிரச்சினைகளை மட்டும் பேசாமல் முஸ்லீம் மக்களின் பண்பாட்டுக் கோலங்களைப் பதிவுசெய்வதாகவும் காணப்படுகின்கிறது. அந்த வகையில் இஸ்லாமிய மக்களின் பண்பாட்டுக் கோலங்கள் என்ற தலைப்பில் இந்த ஆய்வுக் கட்டுரை அமைகிறது. குறித்த காலப்பகுதியில் இலங்கை முஸ்லீம்களின் மத்தியில் வழக்கிலிருந்த பண்பாட்டுக் கோலங்களை இந்த நவீன காவியம் ஆவணப்படுத்தியுள்ளது. எனினும் இதில் கூறப்பட்ட சில சடங்குகள் இக்காலத்தில் வழக்கத்தில் இல்லை என்றே கூறலாம். எனவே இந்நவீன காவியத்தின் வழி இஸ்லாமிய மக்களின் பண்பாட்டுக் கோலங்களை இனங்காண்பதோடு இன்று வழக்கிழந்துபோன சடங்குகளின் காரணங்களையும் தேடுவதை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இஸ்லாமிய மக்களின் பிறப்பு முதல் இறப்புவரையான சடங்குகளே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இந்த ஆய்வில் விவரண ஆய்வு, பகுப்பாய்வு என இருவகையான ஆய்வுநெறிகள் பின்பற்றப்படுகின்றன. இந்த ஆய்வின் மூலம் இஸ்லாமியப் பண்பாட் டுக் கோலங்கள் பற்றிய தெளிவினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அறிமுகம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் இஸ்லாமியரின் பங்கும் பணியும் விதந்து போற்றத்தக்கன. தமிழை வளர்த்து வளம்படுத்தியவர்கள் மட்டுமல்லாது குறிப்பிட்ட காலகட்டத்தில் தமிழை அழிவினின் றும் தடுத்துக் காத்தவர்களும் இஸ்லாமியர்கள். இஸ்லாமியர்கள் தமிழைத் தாய்மொழியாக ஏற்றுக் கொண்ட பின்னர் தமிழில் இஸ்லாமிய இலக்கியங்கள் பலவற்றைச் செய்யவேண்டுமென ஆர்வம் கொண்டனர். இஸ்லாமியப் புலவர்கள் தமிழ் இலக்கண மரபினை ஏற்றுக்கொண்டு காப்பியம், சிற்றிலக்கியம் முதலான இலக்கிய வடிவங்களை ஆக்கினார். தமிழிலக்கணப் பிரபந்தங்கள் மட்டுமன் றி இஸ்லாமியருக்குரியதான படைப்போர், நாமா, கிஸ்லா, மஸலா முதலான புதிய சிற்றிலக்கியங்களையும் தமிழுக்கு அறிமுகம் செய்தனர்.

மரபான இலக்கிய வடிவங்களுக்கு மட்டுமன்றி நவீன இலக்கியத்திற்கும் இஸ்லாமியர் பணிபுரிந்துள்ளனர். இஸ்லாமிய மக்களின் வாழ்வியல்

கோலங்களையும் சமூகப் பிரச்சினைகளையும் மையமாகக் கொண்டு நவீன இலக்கிய வடிவங்கள் பல தோன்றியுள்ளன. அந்த வகையிலே இலங்கையைச் சேர்ந்த எழுத்தாளர் பாலமுனை பாறூக் குறிப்பிடத்தக்கவர். நவீன இலக்கியங்களின் வரிசையிலே கவிதைகளையும், நவீன காவியங்களையும், குறும்பாக்களையும் தந்தவராக இவர் அமைகின்றார். அவரது ஆக்கங்களைப் பின் வருமாறு பட்டியற்படுத்திக் காட்டலாம்.

1. பதம் (கவிதைத் தொகுப்பு) - 1987
2. சந்தனப் பொய்கை (கவிதைத் தொகுப்பு) - 2009
3. கொந்தளிப்பு (நவீன காவியம்) - 2010
4. தோட்டுப்பாய் மூத்தம்மா (நவீன காவியம்) - 2011
5. எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு (நவீன காவியம்) - 2012
6. பாலமுனை பாறூக்கின் குறும்பாக்கள் (குறும்பா) - 2012

இவர் தனது படைப்புகளின் மூலம் சமூக மாற்றத்தை விழைபவராக உள்ளதை அறியமுடிகிறது. இவரது தமிழறிவும், இலக்கண இலக்கியப் புலமையும் இவரின் படைப்புக்கள் மூலம் வெளிப்பட்டு நிற்கின்றது. இவரது நவீன காவியங்கள் முஸ்லீம் மக்களின் சமூகப் பிரச் சினைகள், அரசியல் நெருக்கடிகள், பண்பாட்டு மாற்றங்கள் ஆகிய பலவற்றையும் அழகான ஓவியங்களாகப் பதிவு செய்துள்ளன.

இந்த வகையில் பாலமுனை பாறூக்கின் தோட்டுப்பாய் மூத்தம்மா சமூகப் பிரச்சினை ஒன்றை முன்வைக்கும் நவீன காவிய வடிவமாக உருவாகியுள்ளது. பொருத்தமற்ற திருமண முயற்சியினால் முஸ்லீம் குடும்பப் பெண்ணுக்கு ஏற்பட்ட மனப்போராட்டங்கள், விவாகரத்து, மகிழ்ச் சியான மறுமணவாழ்வு, கணவனின் மறைவு, அநாதரவான நிலையில் வாழ்ந்து இறத்தல் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்நவீன காவியம் அமைகின்றது. எனினும் இந் நவீன காவியம் சமூகப் பிரச்சினைகளை மட்டும் பேசாமல் முஸ்லீம் மக்களின் பண்பாட்டுக் கோலங்களையும் பதிவு செய்வதாகவும் காணப்படுகின்றது.

இஸ்லாமிய மக்களின் பண்பாட்டுக் கோலங்களைத் தோட்டுப்பாய் மூத்தம்மா எனும் நவீன காவியத்தின் வழியான தேடலாக இந்த ஆய்வுக் கட்டுரை வடிவமைக்கப்பட்டுள் ளது. குறித்த காலப்பகுதியில் கிழக்கிலங்கையைச் சேர்ந்த முஸ்லீம் மக்களின் மத்தியிலிருந்த பண்பாட்டுக் கோலங்களை இந் நவீன காவியம் ஆவணப்படுத்தியுள்ளது. சிறப்பாக முஸ்லீம் மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையான வாழ்வியற் சடங்குகள் இந் நவீன காவியத்தில் பதிவுபெற்றுள்ளன. எனினும் இதில் கூறப்பட்ட வாழ்வியற் சடங்குகள் பல இன்றைய காலத்தில் வழக்கத்தில் இல்லை என்றே கூறலாம். இதற்கான

காரணங்களையும் தெளிவுபெறும் நோக்கில் இந்த ஆய்வுக் கட்டுரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பண்பாடு

பண்பாடு என்ற சொல் பண்படுத்தல் என்ற சொல்லிலிருந்து உருவானது. அதாவது பண்பு படுத்தப்பட்ட அல்லது பண்பட்ட அல்லது திருத்தத்திற் குள்ளாகிய ஒரு சமூகத்தின் வழக்கங்களைக் குறிக்கும். ஆங்கிலத்தில் கல்சர் (Culture) என்ற சொல்லுக்கு இணையான பொருளில் இச்சொல் தமிழில் பயன்படுத் தப்படுகிறது. பண்பாடு என்ற சொல் பரந்த பொருளுடன் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாகவே காணப்படுகின்றது. மனித செயற்பாட்டுக் கோலங்களையும் அத்தகைய செயற்பாட்டு முறைகளுக்குச் சிறப்புத் தன்மைகளையும் முக்கியத்துவத் தையும் கொடுக்கும் குறியீட்டு அமைப்புகளையும் குறிக்கின் றது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பண்பாடு பற்றிக் குறிப்பிடுகையில் :

> *“பண்பாடு என்பது உண்மையில் மானுடவியல், சமூகவியல் நிலைப் பட்ட ஒரு வாழ்வியற் களம். அன்றாட வாழ்க்கை உறவுமுறைகள், விவாகம், பிள்ளை வளர்ப்பு, மரணம்,உணவுவகை, ஆடை ஆபரணங் கள், வைபோகம், சடங்கு இவற்றினூடாகத் தோன்றுகின்ற ஒரு மனநிலை”*

என்று குறிக்கின்றார். பண்பாடு பற்றி பல அறிஞர்கள் பல்வேறு விளக்கங்களை வழங்கிச் செழுமைப்படுத்தியுள்ளனர். இவை எல்லாம் ஏதோ ஒரு வகையில் பெருமளவு ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. பழந்தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டைக் குறிப்பதற்கு பண்பு, சால்பு என்னும் சொற்களைக் கையாண்டுள்ளனர்.

> *“பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்” (கலி. 133)*
> *“பண்புடையார் பட்டுண்டு உலகம் ” (குறள். 996)*
> *“சிறப்புடைச் செங்கண் புகைய வோர்*
> *தோல் கொண்டு மறைக்கும் சால்புடையோனே” (புறம். 311)*
> *“கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை*
> *சொல்லா நலத்தது சால்பு” (குறள். 994)*

உலகில் பரந்துபட்டு வாழும் மனித இனங்கள் தமக்கே உரியதான பண்பாடுகளைக் கொண்டு வாழ்கின்றனர். உலகமயமாதல் சூழ்நிலையில் ஒற்றைப் பண்பாடு நிலவுவது என்பது கேள்விக்குரியது. இன் று உலகப் பண்பாடு என்பது பல்லினப் பண்பாடுகளின் கூட்டுத் தொகுதியாகும். உலகில் பரந்துபட்டு

வாழும் இஸ்லாமியருக்கும் தனித்துவமான சில பண்பாடுகள் உள்ளன. இலங்கையைப் பொறுத்தவரையில் கிழக்கிலங்கை வாழ் முஸ்லீம்கள் தமக்கே உரிய பண்பாடுகளைக் கொண்டு விளங்குகின்றனர்.

அந்த வகையில் பாலமுனை பாறூக்கின் தோட்டுப்பாய் மூத்தம்மா என்னும் நவீன காவியம் பல ஆண்டு காலங்களாக உருவாகிவந்த முஸ்லீம் பண்பாட் டு வாழ்வியலை அதில் பெண் பெற்றிருந்த பங்கை அவளது வாழ்வியலைப் பதிவுசெய்யும் நோக்கில் எழுந்துள்ளது. இந்நவீன காவியத்தில் பதிவுசெய்யப் பட்ட பண்பாட்டுக் கோலங்கள் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு உரியன. இன் று அவற்றுள் பெரும்பான்மையான சடங்கு முறைகள் கிழக்கிலங்கைவாழ் முஸ்லீம்களால் கைக்கொள்ளப்படுவதில்லை என்பது குறிப்பிடவேண்டிய தொன் றாகும்.

மரபான காவியக் கட்டமைப்பு

காவியங்கள் பல மொழிகளில் தோன்றியுள்ளன. தமிழிலக்கியத்தில் முழுமையான காப்பியங்கள் என்று தகுதிபெற்றனவாகக் கருதப்படுவன தண்டியலங்காரத்தில் குறிப்பிடப்படும் காப்பிய இலக்கணங்களைக் கொண்டே தோன்றியுள்ளன. தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணத்தைப் பின வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

1. வாழ்த்து, வணக்கம், வருபொருள் உணர்த்தல் என்பனவற்றுள் ஒன்றினைக் கொண்டு ஆரம்பித்தல்.
2. மக்கள் பின்பற்றக் கூடியதாக அறம், பொருள், இன்பம், வீடு என நூற்பயன அமைதல்.
3. இயற்கை வருணனை இடம்பெறுதல்
4. தன்னிகரில்லாத் தலைவன்
5. அத்தகைய தலைவனுடைய குடிமரபு, பிறப்பு, இளமை, திருமணம், பூம்பொழில், நுகர்தல், புனல் விளையாடல், காதல், ஊடல், மகப்பேறு, முடிசூட்டல், ஆட்சி, அரசியல் தொடர்பு, போர், வெற்றி முதலியவை பற்றிய வருணனை.
6. சருக்கம், இலம்பகம், பரிச்சேதம், படலம் என ஒன் றினால் பகுக்கப் பட்டிருத்தல்.
7. பல்சுவை மெய்ப்பாடுகளும் மிளிர்வதாக அமைதல்.

மேற்குறித்த காவிய இலக்கணங்களை உள்வாங்கியும் இஸ்லாமிய சமய நெறியினை அனுசரித்தும் இஸ்லாமியக் காப்பியங்கள் பல தோன் றின.

நவீன காவியம்

நிலப் பிரபுத்துவமும் அரசும் உச்ச நிலையிலிருந்த சோழர் காலத்தில்தான் தமிழ் மொழியில் பெருங் காப்பியங்கள் தோன்றியுள்ளன. சோழர்காலத்தைக் 'காவிய காலம்' எனச் சிறப்பித்துக் கூறுமளவுக்கு அதிக காப்பியங்கள் தோன்றிய காலமாக சோழர்காலம் அமைகின்றது. நிலப் பிரபுத்துவத்தின் உச்சநிலையில் தோன்றிய காவியம் அச்சமுதாய அமைப்பின் நலிவோடு மறைந்துபோன இலக்கிய வடிவமாக மாறியது.

எனினும் காலமாறுதல்களினால் முன்பிருந்த இலக்கிய வடிவங்கள் வழக்கிழப்பதும் சில இலக்கிய வடிவங்கள் மாற்றமடைவதும் இயல்பானது. காவியத்தைப் பெறுத்தவரையில் பழையா காவிய வடிவத்திலிருந்து வேறுபட்டதாக இருபதாம் நூற்றாண்டுக்கே உரிய புதிய காவிய வடிவமொன்று தோன்றி வளர்ச்சியடைகின்றது. 'நவீன இலக்கியத்தின் தந்தை' என அழைக்கப்படும் பாரதியுடனேயே நவீன காவிய மரபு ஆரம்பிக்கின்றது எனலாம். பாரதியின் பாஞ்சாலி சபதம், குயிற்பாட்டு ஆகிய இரண்டும் நவீன காவியத்தின் ஆரம்பமுயற்சி எனலாம். இவரைத் தொடர்ந்து பாரதிதாசன், தேசிகவிநாயகம் பிள்ளை, சுத்தானந்த பாரதியார், கண்ணதாசன் போன்ற பலர் அநேக நவீன காவியத்தைப் படைத்துள்ளனர்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பெரும்பாலான கவிஞர்களின் நவீன காவியங்கள் கற்பனை உலகு சார்ந்தவையாகவே அமைகின்றன. கற்பனை உலகு சார்ந்த செய்திகளையே காவியம் பாடலாம் என்ற மரபான சிந்தனைப்போக்கே நீண்டகாலம் நவீன கவிஞர்கள் மத்தியிலும் நிலவிவந்துள்ளது. காலமாறுதல் களினால் நவீன கவிஞர்களின் சிந்தனைப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களினால் நவீன காவியத்தின் கருப்பொருளினையும் மாற்றி அமைத்தன.

ஈழத்துக் கவிஞர்களின் நவீன காவியப்படைப்புக்கள் நவீன வாழ்க்கை பற்றிய உணர்வினைத் தமது கருப்பொருளாகக் கொண்டிருப்பதுடன் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் புதிய தன்மைகளைப் பெற்றுள்ளன. சமூகப் பிரச்சினைகளே அவற்றின் பொருளாக உள்ளன. ஈழத்தைப் பொறுத்தவரையில் ஈழக்கவிஞர்கள் பலர் நவீன காவியத்தை சமூகப் பிரச்சினைகளைப் பதிவு செய்வதற்கான வடிவமாகக் கையாண்டுள்ளனர். இவ்வகையில் மஹாகவி, முருகையன், நீலாவணன், எஸ். பொன்னுத்துரை, மு. பொன்னம்பலம், வ. ஐ. ச. ஜெயபாலன் போன்ற பலர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் வரிசையில் பாலமுனை பாறூக் தோட்டுப்பாய் மூத்தம்மா என்னும் நவீன காவியத்தைப் படைத்துள்ளார். பொருத்தமற்ற திருமண முயற்சியினால் முஸ்லீம் பெண்ணான செய்னம்புவுக்கு ஏற்படும் மனப் போராட்டங்களும் விவாகரத்தும், மறுமண வாழ்வும், அவளது மரணமும் இந்நவீன காவியத்தின் உள்ளடக்கமாகின்றது.

தோட்டுப்பாய் மூத்தம்மாவின் இஸ்லாமியப் பண்பாட்டுக் கோலங்கள்.

பாலமுனை பாறூக்கின் நோக்கம் குடும்பப் பிரச் சினைகளில் ஒன்றைப்பற்றிப் பேசுவது மட்டுமன்றி முஸ்லீம் மக்களது பண்பாட்டுக் கோலங்களையும் பதிவுசெய்தல் என்பது முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நவீன காவியத்தின் வழியாகப் பெறப்படும் கிழக்கிலங்கைவாழ் முஸ்லீம்களின் பண்பாட்டுக் கோலத்தினை மேல்வருமாறு பட்டியற்படுத்திக் காட்டலாம்.

பெரியபிள்ளைச் சடங்கு 43 - 46

- ✔ பெரியபிள்ளையானதும் அக்கம்பக்கம் உள்ளவர்களுக்குத் தெரிவித்தல்.
- ✔ பிட்டோடு நல்லெண்ணெய் விட்டுப் பிசைந் து கொடுத்தல்.
- ✔ நாட்டுக்கோழி முட்டையை உடைத்து குடிக்கக் கொடுத்தல்.
- ✔ பிட்டில் நல்லெண்ணெய் விட்டு முதுகு, இடுப்புப் பகுதிகளில் ஒத்தனம் இடுதல் (ஒத்தடம்)
- ✔ சம்பந்தக்காரர்கள் சாணக் கூறையை வழங்கி பெண்ணை உறுதிப்படுத்துதல்.
- ✔ மஞ்சள் அரைத்து உடலெல்லாம் பூசுதல்.
- ✔ கவிபடித்தல்.

திருமணச் சடங்கு 52 - 56, 62 - 71

- ✔ கலியாணத்திற்காக வீட்டுவளவினுள் இருக்கும் தென்னைமரத்திலிருந்து தேங்காய் பறித்து, எண்ணெய் ஊற்றுதல்.
- ✔ பணியாரம், வளையல், பாகிலிட்டசோகி எனப் பலகாரங்கள் கொண்டு செல்லல் (மாப்பிள்ளை வீட்டிற்கு)
- ✔ காணி, நகைகள் (ஆபரணம்) தருவாக பேசுதல்.
- ✔ சம்பந்தம் கலந்த பின்னர் மகிழ்ச்சியின் அடையாளமாகக் குரவை இடுதல், ஆராத்தி எடுத்தல் போன்ற நிகழ்வுகள்.
- ✔ பிறைபார்த்து, திருமணநாள் குறித்தல்.
- ✔ வெள்ளைப் புடவை விரிப்புவிரித்து மாப்பிள்ளையை அழைத்துவரல்.
- ✔ மாப்பிள்ளை சபைக்குச் ஸலாம் சொல்லல்.
- ✔ அடையாளம் போடுதல் (பெண்ணின் தகப்பனார் பரிசுப்பொருள் கொடுத்தல்)
- ✔ மாப்பிள்ளைகேட்டு மணம் பேசும் நிகழ்ச்சியில் துஆ செய்தல் (பிரார்த்தனை)
- ✔ மாப்பிள்ளையைத் இறுகப்பிடித்து, அணைத்து முஸாபகா செய்தல் (கைலாகுசெய்தல்)
- ✔ திருமணவிருந்து கொடுத்தல்.
- ✔ மாப்பிள்ளைவீட்டார் பெண்ணுக்கு மருதோன்றி கொண்டுசெல்லல்.
- ✔ பெண்வீட்டார் மாப்பிள்ளைக்கு மாற்று மருதோன்றி கொண்டுசெல்லல்.

- மருதோன்றி கொண்டுவருவதற்கு அடையாளமாகக் குரவை இடுதல், வந்தவர்களை அழைத்து மதிப்பளித்து பதிலுக்கு குரவையிடுதல்.
- காழி, மரைக்காமார், லெப்பையென எல்லோரும் வந்து காவின் பதிதல் (திருமணத்தைப் பதிவுசெய்தல்)
- மணமகன் மஹர் கொடுத்தல் (பெண்ணுக்காக மணமகன் கொடுக்கும் கொடை)
- வொலி சொல்லல் (பெண்ணின் பொறுப்புதாரர் பெண்ணை மாப்பிள்ளைக்குப் பாரப்படுத்தி உறுதிமொழி அளித்தல்)
- திருமண ஒப்பந்தம் நடைபெறல்.
- பொல்லடி, வாள் வீச்சு என்பவற்றுடன் மாப்பிள்ளை அழைத்து வரப்படல்.
- பைத் என்னும் பாடலைப்பாடி மாப்பிள்ளையை அழைத்துவரல்.
- மாப்பிள்ளைக்கு குடைபிடித்தல்.
- விருத்தம் பாடுதல் (பெண் வீட்டுமுற்றத்தில்)
- மாப்பிள்ளைக்கு கால் கழுவுதல்.
- பெண்ணை, தகப்பனார் பெண்ணின் முன்நெற்றி முடியினைப் பிடித்துப் பொறுப்புக் கொடுத்தல்.

இறப்புச் சடங்கு 21 - 28

- பள்ளிவாசலுக்குச் செய்தி சொல்லுதல்
- கப்று (அடக்குவதற்கான புதைகுழி) வெட்டுதல்
- மஞ்சு கூட்டுதல் (மையத்தை வைத்து மூடுவதற்காகப் பலகையால் செய்யப்படும் பெட்டி)
- சந்தூக்கில் வைத்து (மையத்தை தூக்கிச் செல்லும் பாடை) கொண்டு செல்லுதல்.
- கடல் நீரால் மையத்தைக் குளிப்பாட்டுதல்.
- பெண் மையத்தை பெண்கள் மாத்திரமே குளிப்பாட்டுதல்.
- வெள்ளைப் புடவையில் மையத்தைச் சுற்றுதல்.
- மையத்தின் கண்களுக்கு சுறுமா (கண்ணிமைக்கு இடும் மை) இடுதல்.
- பன் னீர் தெளித்தல்.
- அத்தர் (வாசனைத் திரவியம்) தெளித்தல்
- மையத்தைப் பின் தொடர்ந்து செல்லுதல்.
- மையத்தைப் பின் தொடர்கையில் கலிமா (இஸ்லாமிய உறுதிமொழி) ஐக் கூறிச் செல்லல்.
- கப்புறுக்குள் வைத்து அடக்கம் செய்தல். (அடக்குவதற்கான புதைகுழி)
- மண்ணால் மூடி அடக்கியபின், அம் மணல் மேட்டின் மீது மீஸான் கட்டை நாட்டுதல்.

- ✔ தல்கீன் (மரணமடைந்தபின்னர் மையவாடியில் வந்திருப்போருக்கு செய்யப்படும் உபதேசம்)
- ✔ கத்தம் (மரணித்தவர்களுக்கு குர் ஆனை ஓதிவிருந்துக் கொடுத்தல்) கொடுத்தல்.
- ✔ இத்தா இருத்தல் (மரணித்தவருக்காய் மனைவி அனுபவிக்கும் துக்கம் நிறைந்த நாட்கள்)

பிறப்புச் சடங்கு 31 - 34

- ✔ பிள்ளை கிடைத்தமைக்காக பள்ளிவாசலுக்கு நிய்யத் (பாற்சோறு) சமைத்துக் கொடுக்கின்றமை.
- ✔ ஏழைகளுக்கு உணவளிகின்றமை.
- ✔ ரொட்டிசுட்டு, ஆலிமைக் (இஸ்லாமிய அறிஞர்) கொண்டு பாத்திஹா ஓதுதல்)
- ✔ அவுலியாக்களின் (இறைநேசகர்கள்) கபுறடிக்கு (அடக்கஸ்தலத்திற்கு) ரொட்டிகள் கொண்டுசென்று தலைமாட்டில் வைத்து றாத்தீபு (பிராத்தனை) செய்தல்.
- ✔ எண்ணெய் வைத்து, விளக்கேற்றி, அவ்வெண்ணெய்யினைக் கண்களில் பயபக்தியுடன் ஒற்றி, பிள்ளைக்கும் அதனை அப்பி பிரார்த்தனை செய்தல்
- ✔ காக்கைகளுக்கு ரொட்டித் துண்டுகளைப் போடுதல்.
- ✔ பெண்பிள்ளைகளுக்கு சுன்னத் (பெண் விருத்தசேதனம்) செய்தல்.
- ✔ தலைமயிரை மழித்து நீராட்டல்.
- ✔ அரைமுடி, சலங்கை போன்ற ஆபரணங்கள் அணிவித் தல்.
- ✔ பிறந்தபிள்ளைக்குச் சாணையைக் கூறையாகக் கொடுத்துச் சம்பந்தம் கலத்தல்.
- ✔ பிள்ளையின் தாய்மாமன் மாமநூல் போடுதல் (காவல் நூல்)
- ✔ காதுகுத்துக் கலியாணம் (காதுகுத்துச் சடங்கு) செய்தல்.
- ✔ காதுகுத்துக் கலியாணத்தில் பெண்கள் குரவை இடுதல்.
- ✔ காதுகுத்துச் சடங்கில் பாவாக்கள் (இஸ்லாமியபாடகர்கள்) பாடல்கள் பாடுதல்.
- ✔ ஆரத்தி எடுத்தல்.
- ✔ கண்திருஷ்டி கழித்தல்.

நிறைவாக

தோட்டுப்பாய் மூத்தம்மா என்னும் நவீன காவியம் செய்னம்புவை முதல்நிலைப் பாத்திரமாகக் கொண்ட கதையம்சத்தோடு கிழக்கிலங்கை முஸ்லீம்களின் பேச்சுமொழி, பழமை, பழக்க வழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள்

என்பவற்றைப் பதிவுசெய்யும் படைப்பாகவும் அமைந்திருக்கின்றது. கிழக்கிலங்கைவாழ் முஸ்லீம் மக்களிடையே குறித்த காலப்பகுதியில் வழக்கிலிருந்த வாழ்வியற் சடங்குகளான பிறப்புச் சடங்கு, இறப்புச் சடங்கு, திருமணச் சடங்கு, மரணச் சடங்கு என்பவை பற்றி விரிவாகப் பேசப்பட்டுள்ளன. எனினும் இந்நவீன காவியத்தில் பதிவுபெற்ற பல சடங்குகள் இன்றைய காலத்தில் முற்றாக வழக்கொழிந்து போனவையாகக் காணப்படுகின்றன. நடைமுறையில் உள்ளவற்றையும், வழக்கொழிந்து போனவற்றையும் மேல்வருமாறு பட்டியற்படுத்திக் காட்டலாம்.

நடைமுறையில் உள்ளவை

பெரியபிள்ளைச் சடங்கு 43 - 46

- ✔ பெரியபிள்ளையானதும் அக்கம்பக்கம் உள்ளவர்களுக்குத் தெரிவித்தல்.

திருமணச் சடங்கு 52 -56, 62 - 71

- ✔ காணி, நகைகள் (ஆபரணம்) தருவாக பேசுதல்.
- ✔ பிறைபார்த்து, திருமணநாள் குறித்தல்.
- ✔ மாப்பிள்ளை சபைக்குச் ஸலாம் சொல்லல்.
- ✔ அடையாளம் போடுதல் (பெண்ணின் தகப்பனார் பரிசுப்பொருள் கொடுத்தல்)
- ✔ மாப்பிள்ளை கேட்டு மணம் பேசும் நிகழ்ச் சியில் துஆ செய்தல் (பிரார்த்தனை)
- ✔ மாப்பிள்ளையைத் இறுகப்பிடித்து, அணைத்து முஸாபகா செய்தல் (கைலாகு செய்தல்)
- ✔ திருமணவிருந் து கொடுத்தல்.
- ✔ மாப்பிள்ளைவீட்டார் பெண்ணுக்கு மருதோன்றி கொண்டு செல்லல்.
- ✔ காழி, மரைக்காமார், லெப்பையென எல்லோரும் வந்து காவின் பதிதல் (திருமணத்தைப் பதிவுசெய்தல்)
- ✔ மணமகன் மஹர் கொடுத்தல் (பெண்ணுக்காக மணமகன் கொடுக்கும் கொடை)
- ✔ வொலிசொல்லல் (பெண்ணின் பொறுப்புதாரர் பெண்ணை மாப்பிள்ளைக்கு பாரப்படுத்தி உறுதிமொழி அளித்தல்)
- ✔ திருமண ஒப்பந்தம் நடைபெறல்.
- ✔ பெண்ணை, தகப்பனார் பெண்ணின் முன்நெற்றி முடியினைப் பிடித்து பொறுப்புக்கொடுத்தல்.

இறப்புச் சடங்கு 21 - 28

- *பள்ளிவாசலுக்குச் செய்தி செல்லுதல்*
- *கப்று (அடக்குவதற்கான புதைகுழி) வெட்டுதல்*
- *மஞ்சு கூட்டுதல் (மையத்தை வைத்து மூடுவதற்காகப் பலகையால் செய்யப்படும் பெட்டி)*
- *சந்தூக்கில் வைத்து (மையத்தை தூக்கிச் செல்லும் பாடை) கொண்டு செல்லுதல்.*
- *கடல் நீரால் மையத்தைக் குளிப்பாட்டுதல்.*
- *பெண் மையத்தைப் பெண்கள் மாத்திரமே குளிப்பாட்டுதல்.*
- *வெள்ளைப் புடவையில் மையத்தைச் சுற்றுதல்.*
- *மையத்தின் கண்களுக்குச் சுறுமா (கண்ணிமைக்கு இடும் மை) இடுதல்.*
- *பன்னீர் தெளித்தல்.*
- *அத்தர் (வாசனைத் திரவியம்) தெளித்தல்*
- *மையத்தைப் பின்தொடர்ந்து செல்லுதல்.*
- *கப்புறுக்குள் வைத்து அடக்கம் செய்தல். (அடக்குவதற்கான புதைகுழி)*
- *மண்ணால் மூடி அடக்கியபின், அம் மணல் மேட்டின் மீது மீஸான் கட்டை நாட்டுதல்.*
- *இத்தா இருத்தல் (மரணித்தவருக்காய் மணைவி அனுபவிக்கும் துக்கம் நிறைந்த நாட்கள்)*

பிறப்புச் சடங்கு 31 - 34

- *தலைமயிரை மழித்து நீராட்டல்.*

வழக்கிழந்து போனவை

பெரியபிள்ளைச் சடங்கு 43 -46

- *பிட்டோடு நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து கொடுத்தல்.*
- *நாட்டுக்கோழி முட்டையை உடைத்துக் குடிக்கக் கொடுத்தல்.*
- *பிட்டில் நல்லெண்ணெய் விட்டு முதுகு, இடுப்புப் பகுதிகளில் ஒத்தனம் இடுதல் (ஒத்தடம்)*
- *சம்பந்தக்காரர்கள் சாணக் கூறையை வழங்கிப் பெண்ணை உறுதிப்படுத்துதல்.*
- *மஞ்சள் அரைத்து உடலெல்லாம் பூசுதல்.*
- *கவி படித்தல்.*

திருமணச் சடங்கு 52 - 56, 62 - 71

- *கலியாணத்திற்காக வீட்டுவளவினுள் இருக்கும் தென்னை மரத்திலிருந்து தேங்காய் பறித்து, எண்ணெய் ஊற்றுதல்.*
- *பணியாரம், வளையல், பாகிலிட்டசோகி எனப் பலகாரங்கள் கொண்டு செல்லல் (மாப்பிள்ளை வீட்டிற்கு)*
- *சம்பந்தம் கலந்தபின்னர் மகிழ்ச்சியின் அடையாளமாகக் குரவை இடுதல், ஆராத்தி எடுத்தல் போன்ற நிகழ்வுகள்.*
- *வெள்ளைப் புடவை விரிப்புவிரித்து மாப்பிள்ளையை அழைத்துவரல்.*
- *பெண்வீட்டார் மாப்பிள்ளைக்கு மாற்று மருதோன்றி கொண்டு செல்லல்.*
- *மருதோன்றி கொண்டு வருவதற்கு அடையாளமாகக் குரவை இடுதல், வந்தவர்களை அழைத்து மதிப்பளித்து பதிலுக்கு குரவையிடுதல்.*
- *பொல்லடி, வாள் வீச்சு என்பவற்றுடன் மாப்பிள்ளை அழைத்துவரப்படல்.*
- *பைத் என்னும் பாடலைப்பாடி மாப்பிள்ளையை அழைத்துவரல்.*
- *மாப்பிள்ளைக்கு குடைபிடித்தல்.*
- *விருத்தம் பாடுதல் (பெண் வீட்டுமுற்றத்தில்)*
- *மாப்பிள்ளைக்கு கால் கழுவுதல்.*

இறப்புச் சடங்கு 21 - 28

- *மையத்ததைப் பின்தொடர்கையில் கலிமா (இஸ்லாமிய உறுதிமொழி) ஐக் கூறிச் செல்லல்.*
- *தல்கீன் (மரணமடைந்த பின்னர் மையவாடியில் வந்திருப்போருக்குச் செய்யப்படும் உபதேசம்)*
- *கத்தம் (மரணித்தவர்களுக்கு குர் ஆனை ஓதிவிருந்துக் கொடுத்தல்) கொடுத்தல்.*

பிறப்புச் சடங்கு 31 - 34

- *பிள்ளை கிடைத்தமைக்காகப் பள்ளிவாசலுக்கு நிய்யத் (பாற்சோறு) சமைத்துக் கொடுக்கின்றமை.*
- *ஏழைகளுக்கு உணவளிகின்றமை.*
- *றொட்டிசுட்டு, ஆலிமைக் (இஸ்லாமிய அறிஞர்) கொண்டு பாத்திஹா ஓதுதல்)*
- *அவுலியாக்களின் (இறைநேசகர்கள்) கபுறடிக்கு (அடக்கஸ்தலத்திற்கு) றொட்டிகள் கொண்டுசென்று தலைமாட்டில் வைத்து றாத்தீபு (பிரார்த்தனை) செய்தல்.*

- எண்ணெய் வைத்து, விளக்கேற்றி, அவ்வெண்ணெய்யினைக் கண்களில் பயபக்தியுடன் ஒற்றி, பிள்ளைக்கும் அதனை அப்பி பிரார்த்தனை செய்தல்
- காக்கைகளுக்கு ரொட்டித் துண்டுகளைப் போடுதல்.
- பெண்பிள்ளைகளுக்குச் சுன்னத் (பெண் விருத்தசேதனம்) செய்தல்.
- அரைமுடி, சலங்கை போன்ற ஆபரணங்கள் அணிவித் தல்.
- பிறந்தபிள்ளைக்குச் சாணையைக் கூறையாகக் கொடுத்து சம்பந்தம் கலத்தல்.
- பிள்ளையின் தாய்மாமன் மாமநூல் போடுதல் (காவல் நூல்)
- காதுகுத்துக் கலியாணம் (காதுகுத்துச் சடங்கு) செய்தல்.
- காதுகுத்துக் கலியாணத்தில் பெண்கள் குரவை இடுதல்.
- காதுகுத்துச் சடங்கில் பாவாக்கள் (இஸ்லாமியபாடகர்கள்) பாடல்கள் பாடுதல்.
- ஆரத்தி எடுத்தல்.
- கண்திருஷ்டி கழித்தல்.

ஆரம்பகாலத்தில் அரேபியாவிலிருந்து இலங்கை, இந்தியா முதலான நாடுகளில் முஸ்லீம்களின் பரவல் ஏற்பட்டது. இதனால் முஸ்லீம்கள் வேற்றுப் பண்பாட்டுச் சூழலில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டதும், இஸ்லாமியப் பண்பாட் டிலிருந்த சடங்கு முறைகளில் பிற பண்பாட்டுச் சடங்கு முறைகளின் கலப்பு ஏற்பட்டது. இதனால் இந்த நடைமுறைகளையே இஸ்லாமியப் பண்பாட்டு வழிமுறைகளென பரம்பரையாகப் பின் பற்றப்பட்டு வந்ததையும் காணலாம். இதில் துரதிஷ்டம் என்னவெனில் இஸ்லாமியப் பண்பாட்டு நடைமுறைகள் எவை?, பிற பண்பாட்டு நடைமுறைகள் எவை எனப் பிரித்து நோக்கமுடியாத ஒரு நிலை இருந்தது. இந்த வழிமுறைகள் பின்பற்றப்பட்டு வந்த போது, இலங்கையைப் பொறுத்தவரையில் மதம் சார்ந்த போதனைகளை வழங்குவதற்காக இஸ்லாமிய உயர் கல்வி கலாபீடங்கள், மத்ரஸாக்கள் உருவாகின. அவற்றில் பெருந்திரளானவர்கள் இணைந்து அல்குர்ஆன், அல்ஹதீஸ் முதலானவற்றிலுள்ள தெளிவுகளைப் பெற்று வெளியேறினர்.

இவ்வாறு வெளியேறியவர்கள் முஸ்லிம்கள் மத்தியில் நடைமுறையிலுள்ள பண்பாட்டு ரீதியான அனாச்சாரங்களைத் தவிர்த்து இஸ்லாம் எளிமையான மார்க்கம். அது எளிமையே போற்றுகிறது என இஸ்லாம் கூறிய விதத்தில் பண்பாட்டு நடைமுறைகளை செய்யத் தொடங்கியதும் இஸ்லாமிய சமூகத்திற்கு அதைப் பின்பற்றுவது இலகுவாக இருந்ததனால், முன்பு இஸ்லாமிய நடைமுறையில் சடங்குகளில் கலந்திருந்த பெருமளவான சடங்கு முறைகள் இப்போது இல்லாமல் போயிருப்பதைக் காணலாம்.

குறித்த காலப்பகுதியில் கிழக்கிலங்கைவாழ் முஸ்லீம் மக்களின் மத்தியிலிருந்த

பண்பாட்டுக் கோலங்களை பதிவுசெய்ய வேண்டும் என்ற நோக்கத்தைக் கவிஞர் செய்னம்புவின் கதையினூடாக நிறைவேற்றியுள்ளார். இஸ்லாமிய மக்கள் மத்தியில் ஏற்பட்ட சமயம் பற்றிய விழிப்புணர்வும் தெளிவும் இன்று இந்நவீன காவியத்தில் கூறப்பட்ட பண்பாட்டுக் கோலங்கள் பல வழக்கொழிந்தமைக்கான காரணங்கள் எனலாம்.

பயன் படுத்திய நூல்கள் :

1. *கலித்தொகை, (1984), நச்சினார்க்கினியம், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு*
2. *நுஃமான் , எம், ஏ., (2000), நவீன காவியங்கள் மஹாகவியின் ஆறு காவியங்கள், தேசிய கலை இலக்கியப் பேரவை.*
3. *திருக்குறள், (1983), பரிமேலழகர் உரை, பூம்புகார் பிரசுரம், சென்னை.*
4. *பாறூக், (2011), தோட்டுப்பாய் மூத்தம்மா, பர்ஹாத் வெளியீடு, சாய்ந்தமருது.*
5. *புறநானூறு, (1935), உ. வே. சாமிநாதையர் பதிப்பு, லா. ஜர்னல் அச்சுக்கூடம், சென்னை.*
6. *முகம்மது உவைஸ், (1996), இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு, தொகுதி I, II, மதுரைக்காமராஜர் பல்கலைக்கழகம்.*

பாலமுனை பாறூக் குறும்பாக்கள்...

பெருங்குடி

தவழ்கிறது மதலையவன் மடியில்
தவழ்கின்றான் கணவனுமே குடியில்
மதலையது பாலின்றி
மடியிலிருந் தழுகிறதே
குடி குடியைக் கெடுத்திடுமோ
முடிவில் !

பாவேந்தல் வாழ்க!

பாவலர் சாந்திமுகைதீன்

பாவுக்குவேந்தன் அவன் பாவேந்தன்
பாலமுனைபாறூக்கோ நாவேந்தன்

ஊருக்குள் நடப்பதையும்
உணர்வுகளில் தெளிவதையும்
பாவுக்குள் ளாக்கிடுவான் பாவேந்தன்
பாலமுனைபாறூக்கோ நாவேந்தன்

யாருக்குமஞ்சாது
அங்கதமாய் நம்மவரின்
பாவுக்குள் சேதிசொல்வான் பாவேந்தன்
பாலமுனை பாறூக்கோ நாவேந்தன்

குறும்பா முதற் கவிதை
அரும்பாவகை தெரிந்த
பெரும்பா வலன் அவனே
பாலமுனைபாறூக்கோ நாவேந்தன்!

பார்வையிலு மோர்கவிதை
பண்ணிசைக்கு மின்னிசையில்
தீந்தமிழை ஆய்ந்தவனே பாவேந்தன்
பாலமுனை பாறூக்கோ நாவேந்தன்!

தோட்டுப்பாய் மூத்தம்மா
தொகுத்தளித்த காவியத்தின்
ஆர்த்த புகழாசிரியன் பாவேந்தன்
பாலமுனை பாறூக்கோ நாவேந்தன்

மரபுநெறி தவறாது
உரிமையுடன் தமிழமுதம்
பருகப் பகிர்ந்திடுவான் பாவேந்தன்
பாலமுனை பாறூக்கோ நாவேந்தன்!

நூற்றாண்டு விழாவும் காண்க...!

கவி ஒலி கலாபூஷணம்

ஆசுகவி அன்புடீன்

நான்
பார்த்துப் பார்த்து
படித்துப் படித்து
சுவைத்துச் சுவைத்து
செதுக்கிய சிற்பம்

தான்,
பார்த்துப் பார்த்து
படித்துப் படித்து
சுவைத்துச் சுவைத்து
என்னை செதுக்கிய சிற்பி

கவிஞர் பாலமுனை பாறுக் அவர்களுக்கு
இது இலக்கியப் பொற்காலம்

இன்று
இலக்கியப் பொன்விழாக் காணும்
கவிஞர் பாலமுனை பாறுக் அவர்கள்

மரகத விழா
மணி விழா
பவள விழா
அமுத விழா

முதலான விழாக்கள் கண்டு
இலக்கிய நூற்றாண்டு விழாவும் காண
வாழ்த்துவதில் பெருமை அடைகிறேன்

வாழ்க..
வாழ்க..
வாழ்க..
வானமும் பூமியும்
வாழும் வரையிலும்
வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்கவே!

■

பல்துறை வித்தகர் பாலமுனை பாறூக்

கலாநிதி **பிர்தௌஸ் சத்தார்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
கல்முனை.

எல்லோர்க்கும் ஒவ்வொன்றுதான் இலகு என்றிருக்கும் நிலையை உடைத்து பல்துறையிலும் தடம் பதித்தவர் பாவேந்தல் ஆனால் யாம்மெதிலும் வல்லோம் என்று வலிமை பேசுகின்ற வழக்கினை அவரிடம் நான் கண்டதில்லை. அதுதான் அவரது அடக்கமான வெற்றிகளுக்கு காரணம் என்பது எனது கருத்து.

கிழக்கு மண்ணின் சமூக அரசியலை, பண்பாட்டுக் கோலங் களை, வரலாற்றுச் சம்பவங்களை, ஆன்மீக விடயங்களை கவிதைகளாக மாத்திரமன்றி உரைநடையிலும் தெள்ளு தமிழிலும் அள்ளித்தந்தவர் பாவேந்தல் பாறூக். இதற்காக இவர் தெரிவு செய்த இலக்கிய வடிவங்கள் ஏனைய கவிஞர்களிலிருந் தும் இவரைத் தனித்துக் காட்டி நிற்பதகைக் கவனிக்கலாம். மஹாகவி, முருகையன், நீலாவணன் முதலிய தமிழ் ஆளுமைகள் குறுங்காவியங்களைச் செய்து காட்டியது போல் நவீன காவியங்களைத் தந்தவர் பாலமுனை பாறூக். குறிப்பாக இவரது 'கொந்தளிப்பு' தென்கிழக்கின் முக்கியமானதொரு ஆவண மென்று துணிந்து சொல்லலாம். ஆதம் என்பவரை நூலுடைத் தலைவனாகக் கொண்டு சமூக அரசியலை பேசி நிற்கின்றார். இவ்வாறே 2013 இல் இவர் புனைந்த குறும்பாக்களும் வாசகர் மனங்களில் நீங்கா இடத்தினைப் பிடித்துக்கொ்ணடவைதான். ஹைக்கூ கவிதைகள், தன்னார்வக் கவிதைகள், கவியரங்குக் கவிதைகள் என்று எதையும் விட்டுவைக்காமல் கால மாறுதலுக்கு ஏற்ப தன் எழுத்து முறைமைகளையும் மாற்றிக் கொண்டு இயங்கிவரும் மகத்தான கவிஞர்.

சைவப் புலவர் வி. சித்திவிநாயகரின் தமிழ் மாணவன் என்பதை அவரது யாப்பிலக்கணப்பயிற்சி இலகுவாகச் சொல்லிவிடுகிறது. மரபுக்கவிதை எழுதுவதில் பல மாணவர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டிப் பயிற்சி வழங்கிய அதேநேரம் புதுக்கவிதையையும் கைவசப்படுத்தத் தவறவில்லை. அவ்வகையில் மரபில் நின்று புதுமையை ஏற்ற அன்புக் கவிஞன் பாவேந்தல் பாலமுனை பாறூக் என்றால் மிகையில்லை.

விவாதம், விவாதத்தின் போதான நடுவனம் இவருக்குக் கைவந்த கலை. விவாதத்திற்கும் மேடைப்பேச்சிற்கும், நாடக நடிப்பிற்கு மாக அவர் பெற்றுக்கொண்ட விருதுகள் பல. ஈழமண்ணில் அதிக விருதுகளை வென்ற இக்கவிஞர் ஒரு சிறந்த அறிவிப்பாளரும் கூட. எழுபதுகளின் இறுதியிலும் எண்பதுகளிலும் தென்கிழக்கின் அதிக மேடை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியமையும் மனம்கொள்ளத்தக்கது.

‘அன்பு ஈனும் ஆர்வமுடைமை அது ஈனும்
நட்பெனும் நாடாச் சிறப்பு’

என்கிறது திருக்குறள். பாறூக் ஒருபடி அன்பை முந்திக்கொண்டு வழங்குகின்ற அற்புத மனிதன். காட்சிக்கு எளிமையானவர். யாரைக் கண்டாலும் முறுவலித்துச் சுகம் விசாரித்து அன்பை பறிமாறிக் கொள்ளும் தன்மை அவருக்கே உரியது. இலக்கியக் கூட்டம் தொடங்க முன்னமே ‘வாங்க சந்திக்கு சென்று வருவோம்’ என்பார். அந்த அழைப்பு தேநீருக்காக மாத்திரம் இருக்காது நிறைந்த சுவாரசியங்களையும் கொண்டிருக்கும்.

உண்மையில் இன்றும் ஓர் இளைஞனாக வலைப்பூக்களில் தாக்கும் பிடிக்கும் பல்துறை வித்தகர் பாவேந்தல் பாலமுறை பாறூக் கிழக்கு மண்ணின் பாரம்பரியம் தோய்ந்த இலக்கிய அடையாளம் என்பதில் ஐயமில்லை.

பெருவிழாக்காணும் அன்னாரை வாழ்த்துவதில் மகிழ்வுறுகிறேன்.

■

பாடறிந்து ஒழுகும் நல்ல படைப்பாளி

கலாநிதி

ஹனீபா இஸ்மாயில்

(I)

காப்பியக்கோ ஜின்னா, காப்பியக் கவிஞர் பாறுக். விருதுகள் பல வென்றவர். பாவேந்தல், கலாபூசணம் எனச்சிறப்புகள் ஏராளம். ஐம்பது வருட இலக்கிய பணி. ஆறு நூல்கள் பதம், சந்தனப் பொய்கை ஆகியவை தனிநிலைக் கவிதைகளின் தொகுப்புகள், கொந்தளிப்பு, தோட்டுப்பாய் மூத்தம்மா, எஞ்சிய பிராத்தனையோடு என்பவை குறுங்காவியங்கள். இன்னொன்று ‘வலைக்குள் மலர்ந்த வனப்பு’ முக நூல் கவிதைகளின் தொகுப்பு.

ஈழத்து படைப்புலகில் கவிஞர் பாறூக் தனக்கென்று ஒரு தனித்து வமான அடையாளத்தை பெற்றுக் கொண்டவர். அவரது குறுங்காவியங்கள் இங்கு முக்கியமானவை. காவியம் செய்வதற்கு நல்ல கவித்துவம் வேண்டற்பாலது. காவியம் தொடர் நிலைச் செய்யுள். அது செய்யுட்கள் தம்முள் பொருளால் தொடர்ந்து வருவது. நிகழ்வுகளை ஒன்றோடு ஒன்று பொருத்தி, தொடர் அறாமலும் தொய்வு இல்லாமலும் வளர்த்துச் செல்லப்படுவது. இதற்கேற்ற புலமையும் மொழிவளமும் காப்பியம் செய்வதற்கு அவசியமாகும். இத்தகைய காவிய ஆக்கத்தில் பாறுக் வெற்றி பெற்றிருக்கிறார்.

காவியம் இலக்கியத்தின் பழமையான வடிவம். காவியம் செய்வதற்கென்று இலக்கணமும் வகுக்கப்பட்டது எனினும், பாரதி முதல் புதிய பொருளில் காவியம் பாடும் மரபு தமிழில் அறிமுகமானது. இம்மரபு மகாகவி உருத்திரமூர்த்தியூடாக ஈழத்தில் அறிமுகமாகி வளர்கிறது. அதாவது காவியங்கள் ஈழத்தில் மட்டுமன்றி தமிழகத்திலும் பேசப்பட்டன. கவிஞர் பாறூக்கின் காவியங்களுக்கும் இத் தகைய பெறுமானம் உண்டு. அதாவது “தோட்டுப்பாய் மூத்தம்மா” தமிழகத் துப் பல்கலைக்கழகமொன்றின் ஆய்வுப் பொருளானதும் இவ்விடத்தில் கவனிக் கத்தக்கதாகும்.

கவிஞர் பாறூக் ஆழ்கடல் எனினும், தனது சமகால சமூகச் செயற்பாடு களில் நிகழும் வக்கிரங்களைக் கண்டு கொந்தளிப்பவர். இதன் விளைவாக உருவான அவரது 'கொந்தளிப்பு' எனும் குறுங்காவியம். ஆதங்காக்கா எனும் சாதரண மனிதனின் கதை. எண்ணங்களும் ஏக்கங்களுமாக கதை நீண்டு சென்றாலும், அனர்த்தம் ஒன்றின் பின் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட அநீதிகளும் அரசியல் சித்துக்களால் தனிமனிதனுக்கு ஏற்பட்ட அவலங்களும் வெளிப்படுத் தப்படுகின்றன.

இத்தகைய சமூக நிலைப்பட்ட மற்றொரு படைப்பே அவரது 'எஞ்சிய பிரார்த்தைனையோடு' எனும் காவியம். இராணுவ சுற்றிவளைப்பொன்றில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக் கப்பட்ட ஒருவனின் உணர்வுகளையும் ஏக்கங்களையும் சொல்வது. ஆயினும், ஈழநாட்டில் கொழுந்து விட்டு எரிந்த இனப்பிரச்சினையின் விளைவால் சாதாரண மக்கள் அடைந்த அவலங் களை வெளிப்படுத்துவதாய் உள்ளது.

'தோட்டுப்பாய் மூத்தம்மா' என்ற இராண்டாவது காப்பியம், இஸ்லாமிய சமூக அமைப்பில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை புலப்படுத்துவது. விவசாய சமூக அமைப்பில் காணப் பட்ட போடி, வயற்காரன் அல்லது போடி கூலிக்காரன் என்ற ஏற்றத் தாழ்வு உடைக்கப்படுகிறது. சொத்துக் களை பொது நலனுக்காக விட்டுக் கொடுக்கும் நலன் விரும்பு நிலை சிறப்பிக்கப்படுகிறது. இஸ்லாமிய திருமணம், விவாகரத்து முதலிய பண்பாடுகளின் உன்னதம் வெளிப் படுத்தப் படுகிறது. இவ்விதத்தில் ஒரு கால இஸ்லாமிய சமூக அமைப்பொன்று பற்றிய வரலாற்று ஆவணமாக பதிவாகிறது.

பண்டைய காவிய மரபிலிருந்து விடுபட்டுப் புதிய பொருளில் காவியம் செய்த கவிஞர் பாறூக், காவியத் திற்கே உரிய அகவலோசையை அடிப்பிரித்து எளிமையான தமிழில், இயல்பான பேச்சு மொழியினைப் பயன்படுத்தியிருப்பதனூடே தமிழ் காவியத்தின் வெளிப்பாட்டு முறையிலும் புதுமையைக் கையாண்டிருக்கிறார். இவ்விதங்களில் நவீன தமிழ் இலக் கியப் பரப்பில் பேசப்படக் கூடிய கவிஞராக அடையாளம் பெறுகிறார் என்பதை குறிப்பிடமுடியும்

(II)

கவிஞர் பாறூக் நல்ல படைப்பாளி மட்டுமல்ல நல்ல பண்பாளரும் ஆவார். பாடறிந்து ஒழுகுபவர். எங்களிடையே சுமார் இருபது ஆண்டுகள் நட்பு. நட்பை நாணயமாக பேணுபவர். நண்பர்களுக்குள்ளே ஏற்றத்தாழ்வு காண்பவர் அல்லர். சில படைப்பாளி களிடம் இயல்பாகவோ, இயல்பின் றியோ உருவெடுக்கும் மமதையை நான் அவரிடம் காண்பதில்லை.

படைப்புடைகளில் மட்டுமன்றி தனது தாராள மனத்தாலும் இலக்கிய

பணி செய்பவர். எத்திசையில் இலக்கிய நிகழ்வுகள் நடைபெற்றாலும் ஆர்வத்தோடு கலந்துகொள்பவர். ஆர்ப்பாட்டமில்லாத கருத்தாளர்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் தமிழ் மொழிப்பாட, இணைப்பாட விதான செயற்பாடுகளின் வெற்றிக்கும் சாதனைகளுக்கும் இவரது அர்ப்பணிப்பான செயற்பாடுகள் உரமாயின. இவ்விடத்தில் கலாபூசணம் ஆசுகவி அன்புடீன் அவர்களையும் நினைவுபடுத்துகிறேன். இவர்கள் இருவரிடமும் ஏராளமான நல்லவற்றை கற்றுக் கொண்டுள்ளேன்.

நண்பர் கவிஞர் பாறூக் அவர்கள் இலக்கியப் பணியில் பொன் விழாக் காணுகின்றார். மகிழ்ச்சியான தருணம். அவரது பணிகள் தொடர வேண்டும். அதற்குரிய ஆரோக்கியத்தையும் சந்தர்ப்பங்களையும் இறைவன் அருளப் பிரார்த்திக்கின்றேன்.

- நல்லவை நிலைத்து வாழும் -

பாலமுனை பாறூக் குறும்பாக்கள்...

சாப்பாடு

மேக்கப்புப் பொருள்விற்கும் பொண்ணு
மினுமினுப்பு,
அதில் சிலபேர் கண்ணு
கூப்பிட்டுக் கண்ணடிக்கக்
கூப்பிட்டாள் பொலிசையவள்
சாப்பாடு தின்றார்கள், மண்ணு!

விருது

“இலக்கியத்தில் உயர் விரு”தாம், போட்டான்
“எம்மொழியில்” என்றொருவன் கேட்டான்
“விறுதுக்கு தெறிவெ” ன்று
பதிவிட்ட புகழ்மணியோ
“தமிலெ”ன்றான். கேட்டவனோ வேர்த்தான் !

தமிழுலகம் அறிந்த ஆற்றல்மிகு கவிஞர்

தேசகீர்த்தி ஏ.எல்.தௌபீக் -JP
மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்,
(பண்பாட்டலுவல்கள் திணைக்களம் - கிழக்கு மாகாணம்)
கச்சேரி,
அம்பாறை.

நாடும் நகரமும் அறிந்த நல்லதொரு எழுத்தாளர் பாவேந்தல் பாலமுனை பாறூக். எனது இளமைப் பருவத்தில் இருந்தே பாலமுனை பாறூக் அவர்களின் கவிதைகளை தேசிய பத்திரிகை களின் மூலம் படித்து வந்திருக்கிறேன்.

2007ஆம் ஆண்டு காலப்பகுதியில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் கலாசார உத்தியோகத்தராககப் பணியாற்றிய காலப்பகுதியில் அவரோடு இணைந்து பழகக்கூடிய பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. கவிஞன் என்ற மமதையில்லாத எளிமை நிறைந்த அவரது பண்புகள் அடுத்தவரை மதித்து நடக்கும் விட்டுக்கொடுப்பு பெருந்தன்மை என்பன என்னை மிகவும் கவர்ந்தன. உயரமுடைய அவரைப் போலவே உயர்ந்த குணமுமுள்ளவர். பிரதேசத்தில் நடைபெறும் கலாசார விழாக்களில் அவரது பங்களிப்பு மிகவும் மகத்தானது.

பல எழுத்தாளர்கள் எமது பிராந்தியத்தில் வாழ்ந்து வருகின்ற போதிலும் வித்தியாசமான வடிவங்களில் கவிதைகள், காவியங்கள், குறும்பாக்கள் என்று தனது ஆற்றலை பேனாமுனைகளினால் ஏற்படுத்தி பேரின்பம் அடையச் செய்தவர்.

கவிப்பட்டறைகள், கவியரங்குகள் பலவற்றில் கலந்து சிறப்பித்து வரும் பாலமுனை பாறூக் அவர்கள் இளைய தலைமுறையினருக்காக ஓய்வு பெற்ற பின்னரும் தொடர்ந்தும் நட்போடு பணியாற்றி வருவது தமிழுக்கும் எமக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி என்றே கருதுகிறேன்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திலிருந்து இடமாற்றம் பெற்றபோது எனக்கு மனமுவந்தளித்த பிரியாவிடை அட்டாளைச் சேனை மத்திய கல்லூரியில் நடைபெற்றது. அந் நிகழ்வில் கையளிக்கப்பட்ட கவிதை பாலமுனை பாறூக் அவர்களின் கம்பீரக் குரலினால் வாசிக்கப்பட்டது இன்னும் ரீங்காரமாய் செவிகளில் ஒலிக்கிறது என்பதையும் என்னால் சொல்லாமல் இருந்து விட முடியாது.

அத்தகைய பல்வேறு ஆற்றல் மிகுந்த பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள் ஐம்பது ஆண்டுகள் ஆற்றிய கலை இலக்கியச் சேவையைப் பாராட்டும் பொன்விழா நிகழ்வு சிறப்பு மலருக்கு செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இறையருளால் எல்லா வளங்களும் பெற்று நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து இன்னும் இலக்கியப் பணியாற்ற வேண்டும் என வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் உளமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாவேந்தல் பாலமுனை பாறூக் - சமகால குறுங்காவியத்தின் ஒரு மைல் கல்

மன்சூர் ஏ. காதிர்

பாலமுனை என்பது ஒரு வளம்மிக்க மண். அது தமிழ் கூறும் நல்லுலகெங்கணும் பிரசித்தி பெற்ற கவிஞர் இருவரைத் தந்த செல்வச் செளிப்பான பூமி. அது மட்டுமல்ல அறிஞர்களையும் பல்கலைக்கழகப் புத்திஜீவிகளையும் நமது பிராந்தியத்தின் கல்வி வளம் பெருக்கமடைந்திராத அந்தநாட்களிலேயே தந்த மண். ஆசிரியர்களை, அதிபர்களை, நிருவாகிகளை, ஆற்றல் மிக்க மார்க்க அறிஞர்களைக் கண்டுகொண்டிருக்கின்ற மண். பொருட்செல்வத்திலும் பால் வளத்திலும் மட்டுமன்றி கலைச் செல்வத்திலும் கரைகண்ட மண்.

அந்தமண்ணின் மகத்தான மைந்தன்தான் பாவேந்தல் பாலமுனை பாறூக் என்ற சக்தியும் அழகியலும் பிரவாகித் தோடும் படைப்பாளி. கவிதை, குறுங்காவியம், சிறுகதை, உருவகக்கதைஎன்ற பல்வேறு அழகியல் செல்வங்களின் கவர்ச்சிமிக்க ஆக்கத்திறனாளி.

சமகாலத்தில் யாப்பிலக்கணத்தின் நுட்பங்களை சாஸ்திரீய அடிப்படையில் கற்றுத் தேறிய அடக்கமும் அமைதியும் பேணும் படிப்பாளி. புலமைத்துவ மற்றும் பண்டித மரபான சிக்கல்களை வேரறக்கற்றவரும் மற்றும் அதன் சாஸ்திரீய மரபியல் வேர்களைப் பற்றிய பிரக்ஞை மிகுந்தவருமான ஓர் இலக்கிய அரசன்.

இந்தப் பிரதேசத்தின் செல்வச் செழிப்பானதும் பாரம்பரிய கௌரவம் மிக்கதுமான ஒரு மேட்டுக் குடியமைப்பின் பிதுரார்ஜிதங்களை உடைமையாகக் கொண்டதுமான குடும்பம் ஒன்றில் உருவான மனிதாபிமானி. எனினும், மார்க்க அறிவிலும் மற்றும் மார்க்ஸிய, லெனினிஸ, மாவோஇஸ அறிவியல் கட்டமைப்பின் நுட்பங்களைத் தெரிந்து வைத்துள்ள கைதேர்ந்த வாசகன். ஆரம்ப காலங்களில் மாவோஇஸ சித்தாந்தத்தின் கட்டமைக்கப்பட்ட போராட்டத்தின் பேனாமுனைப் போராளி. பின்னவீன அரசியல் இனத்துவ அடையாங்களை நோக்கி தவிர்க்க முடியாமல் பயணித்தபோது அதனை செம்மையாக நெறிப்படுத்திய ஒரு மனிதாபிமானத்தின் சேவகன்.

எச்சந்தர்ப்பத்திலும் இலக்கியத்துக்கு ஒரு சமூகப்பணி உள்ளது என்பதை இன்றுவரைப் பிடிவாதமாகக் கடைப்பிடிக்கும் இலக்கியத்தின் ஒரு சமூக ஊழியன். ஆற்றல் பெற்ற இலக்கியச் செயற்பாட்டாளர்களின் கைவிளக்காக தனைது இமையைக் கரைத்தவன்.

பாலமுனை பாறூக் எனதுநெஞ்சுக்குநெருக்கமான நண்பர். 1972 இல் நான் முன் இடைநிலைக் கல்வி மாணவனாக இருக்கும்போது தினபதி எனும் பத்திரிகையிலே கவிதாமண்டலம் எனும் தலைப்பில் ஒரு நாளைக்கு ஓர் இளங்கவிஞரின் கவிதைகள் பிரசுரமாகும். அதில் அடிக்கடி பிரசுரிக்கப்பட்டு வரும் பெயராகவே பாலமுனை பாறூக் அவர்களின் பெயரைப் பார்த்திருக் கின்றேன். பலருக்கு அவர் சிறந்த முன்னுதாரணமாகவும் இலக்கியச் சாலையின் கலங்கரை விக்கமாகவும் தொழிற்பட்டவர். அவரின் கவிதைகளை வாசித்த அருட்டுணர்வாலேயே பிரசுரமாகும் வேட்கையோடு நானும் கவிதா மண்டலத்துக்கு எழுத முனைந்தேன்.

பின்னர் வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் மாதாந்தக் கவியரங்கில் பங்குபற்றும் வாய்ப்பொன்றை முதன்முதலாக மர்ஹூம் ஆஸாத் மௌலானா எனக்குத் தந்திருந்தார். நானும் என்னால் இயன்ற மட்டும் சிறப்பாக இதில் பங்குபற்றினேன். அதனைக் கேட்டுவிட்டு பாலமுனை பாறூக் என்னை உற்சாகப்படுத்தி நீண்டதோர் கடிதம் எனக்கு எழுதியிருந்தார். நீண்ட நாட்களாக அதனை நான் பாதுகாத்தேன். 1984 காலகட்டங்களில் தமிழ்த் தீவிரவாத இளைஞர்களோடு சேர்த்து முஸ்லீம் வீடுகளையும் வடக்குக் கிழக்கில் கபளீகரிக்கப்பட்டபோது என்னுடைய பிரசித்திபெற்ற கவிதையான ‘சிங்கத் தோட்டத்திலே சிக்கிவிட்டதொங்கள் பட்டம்’ முதலியவற்றோடு சேர்த்து அதுவும் தீக்குளித்துவிட்டது.

தன்னைப்போலவே பிறரும் பிரகாசித்தல் வேண்டும் எனும் மனப்பக்குவம் அவருக்கு இருந்தமையாலேயே முன்னர் நான் குறிப்பிட்டவாறானதொரு

கடிதத்தை அவரால் எழுத முடிந்திருக்கிறது. அதில் முக்கியமாக இலக்கியத்தின் பணிபற்றி மிக முதிர்ச்சியோடு எழுதியிருந்தார். மாக்ஸியம் பற்றிய ஒரு விரிவான பார்வையும் அறிவும் அவருக்கு இருந்தது. கவிஞரும் விமர்சகருமான வீ. ஆனந்தன் முதலிய இவர்களினால் மாக்ஸியம் தொடர்பான ஒரு சிறிதளவான அருட்டுணர்வு என்னிலும் ஏற்படவே செய்தது.

கலை கலைக்காக அல்ல கலை மக்களுக்காக என்ற தீவிர பார்வை அவரிடமும் இம்மண்ணின் இன்னொரு கவிஞரான அன்புடீனிடமும் இருந்தது.

சம்மாந்துறையிலுள்ள பெரும்பாலான படித்தவர்களுக்கு பாலமுனை பாறூக் அவர்களைத் தெரியும். இன்னும் சிறப்பாக இதை நான் சொன்னால் என்னை ஓர் கவிஞன் என்று சம்மாந்துறை மக்கள் அறிய முன்னரேயே பாலமுனை பாறூக் அங்கு ஒரு வெகு ஜனரஞ்சக கவிஞராக அறியப்பட்டிருந்தார். அப்போதெல்லாம் சம்மாந்துறையில் வாலிப முன்னணி என்ற ஓர் அமைப்பானது இப்பிரதேசத்தின் இலக்கிய நெடுஞ்சாலையிலே மிக நீண்ட தூரம் வரைப் பயணித்திருந்தது.

அந்த அமைப்பினர் மாதந்தோறும் இலக்கியச் சொற்பொழிவுகளையும், கருத்தரங்குகளையும், கவியரங்குகளையும் பாவலர் பஸீல் காரியப்பர், ஈழமேகம் பக்கீர்த்தம்பி, முதலிய புகழ் பெற்ற இலக்கியவாதிகளின் தலைமையில் தவறாமல் நடாத்தி வந்தனர். அந்தக் கவியரங்குகளில் ஜனரஞ்சகக் கவிஞர்களாக பாலமுனை என்ற ஊரின் இரட்டைக் கவிஞர்களான பாறூக் மற்றும் சிறந்த சந்தக் கவிஞராக பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆழ்ந்த படிப்பாளி ஆசுகவி அன்புடீன் ஆகியோர் திகழ்ந்தனர்.

நான் இலக்கிய உலகில் அறிமுகப்படாமல் பாடசாலை மாணவனாக, ஆனால் இலக்கியக் கூட்டங்களின் நிரந்தர அபிமானியாக வலம் வந்த காலத்தில் எனக்கு இன்னும் ஞாபகமிருக்கிறது இந்தக் கவிஞனின் இமாலய வசீகரம்.

“கூறுங்கள்.. கூறுங்கள்.. குவலயத்து மானிடரே கூறுங்கள்.. கூறுங்கள்..”

என்ற பாலமுனை பாறூக் அவர்கள் மக்களின் மனச்சாட்சியைத் தூண்டி எழுப்பிய பாடல் வரிகள் அன்றறைய ஏழை மக்களின் எழுச்சிக் கீதமாகப் பார்க்கப்பட்டது. கவியரங்கை நடாத்திக் கொண்டிருந்த நாவலர் ஈழமேகம் ஐயா அவர்கள் உணர்ச்சிவசப்பட்டுப் பாராட்டுவார். அது ஒருகாலம். இன்று சம்மாந்துறையில் மட்டுமல்ல கொழும்பைத் தவிர எங்குமே இலக்கிய அரங்குகள் தொடர்ச்சியாக நடைபெறுவதேயில்லையே.

1970களின் அடிவான ஈழத்து இலக்கிய உலகில் பாலமுனை பாறூக், கல்முனைப் பூபால், சம்மாந்துறை அஸீஸ், சம்மாந்துறை அக்பர், மண்டூர் அசோகா, திக்வெல்ல கமால், எஸ்எல்எம். இப்றாஹீம், பௌஸ்தீன், முல்லைவீரக்குட்டி, வாகரைவாணன், மூதூர்முகைதீன், பரீதா இஸ்மாயில் நோ. ராசம்மா, பேராசிரியர் யோகராஜா (கருணையோகன்) முதலியோர் அதிக வீச்சுடனும் வீரியத்துடனும் கவிதை பாடினர். அவர்களுக்குள்ளே உணர்ச்சிக் கவிஞராக பாலமுனைபாறூக், அரசியல் கவிஞராக கல்முனைப் பூபால், அங்கதக் கவிஞராக சம்மாந்துறை அஸீஸ், நல்லதோர் படைப்புத் திறன் வாய்ந்த கவிஞராக திக்வெல்ல கமால் ஆகிய நால்வரும் சிறந்துவிளங்கினர்.

இவர்களுக்குள்ளே சிலர் சில காலங்களில் காணாமல் போவதும் உண்டு. ஆனால், கவிஞர் பாலமுனை பாறூக் திக்குவல்லை கமால் முதலியோர் இன்றுவரை ஓய்வொளிச்சல் இல்லாது தன்னுடைய வங்கி மற்றும் உத்தியோகம் என்னும் சிலுவையின் பாரத்தையும் சுமந்துகொண்டு இலக்கியம் படைத்து வந்தது மிகுந்த சாதனையாகும்.

அது முற்போக்கு இலக்கியக் கோட்பாடு சிகரத்தில் இருந்த காலம். பாலமுனை பாறூக் இலக்கியத்தின் கலைப்பெறுமானம் என்பதைவிடவும் இலக்கியத்தின் சமூகப் பெறுமானம் என்பதில் தீவிர ஈடுபாடு காட்டினார். மூத்த கவிஞர்களான மருதூர்க்கொத்தன், மருதூர்க்கனி, சண்முகம் சிவலிங்கம், பேராசிரியர் நுஃமான் முதலியோரும் அக்காலத்தில் மாக்ஸிய எழுத்தாளர்களாக தம்மை இனங் காட்டிக் கொள்ளவே தலைப்பட்டனர். நான் உட்பட சிலர் எப்போதும் பாவலர் பஸீல்காரியப்பரின் ரசிகனாகவே இருந்து வந்தோம். அவர் இலக்கியத்தின் சமூகப் பெறுமானத்தின் அவசியம் உணரப்பட்டவராக இருந்தபோதும் அதன் அழகியல் மற்றும் கலைப் பெறுமானங்களிலேயே அக்கறைகாட்டினார். ஆனால், காலம் செல்லச் செல்ல ஒரு சமரசப்போக்கு எல்லா வற்றிலுமே தலை தூக்கிற்று.

1983இற்குப் பின்னர் நமது எல்லோரினதும் பார்வைகளும் விசாலிப்புக்களும் திடீர்த் திருப்பங்கொள்ள ஆரம்பித்தன. பலர் இனத்துவ அரசியல் சூழலில் தம்மையும் ஓர் போராளியாக மாற்றிக்கொண்டனர். அவை பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டன. ஆரம்பத்தில் சிங்களப் பேரிவாதத்தின் எதிர்க்குரலாகத் தொடங்கின.

இறக்குமதி செய்யப்பட்ட இயக்க வடிவங்கள் பல்வேறு புதிய புதிய களங்களை விசேடமாக கிழக்கில் உருவாக்கிற்று. இதனால் இயக்கங்களின் தனிநபர் பயங்கரவாதங்களோடு முரண்பாட்டுப்போக்கு கொண்ட கிழக்கு மக்கள் இரு

பகுதியினராக இயற்கையாகவும் மட்டுமன்றி செயற்கையாகவும் வழிப்படுத்தப் பட்டனர். அந்த பிரிபாட்டால் தமிழ்பேசும் முஸ்லிம்கள் என்றும் ஏனையோர் தமிழ் மக்கள் என்றும் பிரிந்தனர்.

இதனால் தனிநபர் பயங்கரவாதத்தின் ஆட்சேர்ப்புக்கான இழுபறியின்போது எது இலகுவான வழிமுறையோ எதன்பக்கம் நின்றால் அதிக இளைஞர்களையும் அவர்களை இழக்கும் பெற்றோர்களையும் கவர்ச்சிப்படுத்தலாமோ அந்த வழிமுறையை ஆயுத கலாசாரம் எந்தத் தயக்கமும் இல்லாமல் கைக்கொண்டது. இதனால் கிழக்கில் பின்நவீனத்துவ ஆயுதப் போராட்டம் சக்திபெற்றது. இந்தக் கட்டத்தில் தமிழ் இலக்கிய உலகம் இருவேறு மனச்சாட்சியைப் பிரதிபலித்தது. ஆக, இலக்கியத்துக்கு ஒரு சமூகப்பணி இருக்கிறது என நம்பியோர் மட்டுமன்றி நம்பாதோரும் இந்த சமூக இயங்கியலின் பொதுச் சுழற்சியில் திசைமாறியும் மாறாமலும் பயணிக்கத் தொடங்கினர்.

ஆனால், எல்லோரும் சண்முகம் சிவலிங்கமாகவோ அல்லது வ.ஐ.ச. ஜெயபாலனாகவோ களைகட்ட முடியாது போனாலும் எறும்புக்கும் அதன் அளவில் ஒரு நிழல் இருப்பதுபோல அவரவர்தம் சக்தியின் அளவுக்குப் படைத்தல் தொழிலில் ஈடுபட்டனர் என்பதை நாம் இலகுவில் புறந்தள்ளிவிட முடியாது. அந்தவகையில் பாலமுனை பாறூக் ஒரு சாதனையாளர் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

பாலமுனை பாறூக் தன்னுடைய பெயரோடு தன் மண்ணின் பெயரையும் சேர்த்துக் கொண்டமையானது இந்தமண்ணின் மீதும் இந்த மண்ணின் மக்களின் மீதும் அவர் கொண்டுள்ள இனம்புரியாத காதலின் வெளிப்பாடேயாகும்.

மண்ணின் மீதான காதல் வெறும் சடப்பொருள் அபிமானமாக இல்லாது ரத்தமும் தசையுமான அறிவு மற்றும் மனவெழுச்சிசார் பற்றுதலாகும்.

அதற்கான தலைசிறந்த எடுத்துக்கட்டாக நம்முடைய மொழியை நம்முடைய பண்பாட்டை பளிங்குக் கண்ணாடிபோல தம்முடைய படைப்புக்களிடையே அவர்கொண்டு வந்துள்ளமையை இங்குகோடிட்டுக் காட்டலாம்.

மிக நீண்டகால கவிதானுபவம் அதன் முதிர்ச்சிநிலையை அடைந்தமையின் குறியீடாக கொந்தளிப்பு என்ற முதல் காவியமாகவும், தோட்டுப்பாய் மூத்தம்மா என்ற இரண்டாவது குறுங்காவியமாகவும் மேலும் சில குறுங்காவியங்களும் இவரைப் படைப்புலகின் உயர் நிலைக்குக் கொண்டுவந்து சேர்த்துள்ளது.

சமகால குறுங்காவிய வரிசைகளிலே இன்னுமொரு புதிய வகைமாதிரியாக பாலமுனை பாறூக் அவர்களின் தோட்டுப்பாய் மூத்தம்மா சிறப்பிடம் பெறுகின்றது.

பின்னவீனத்துவமே பழசுபட்ட தத்துவமாகிப்போன இந்தக்காலத்திலே இன்னும் பலரும் காவியம் எழுதவும் செய்கின்றனர். எனினும் பலர் இதில் தோற்றுப் போய்விட்டதாகவே எனக்குப்படுகின்றது.

செம்மொழி-செம்மொழி என்று இன்று உயர்த்திப் பார்க்க வேண்டிய அளவுக்கு தமிழ்மொழியை எது கொண்டுவந்து நிறுத்தியிருக்கின்றது என்பதற்கான ஏதுநிலையை நம்முடைய காவியக் கவிஞர்கள் கொஞ்ச நாளைக்காவது தங்கள் பேனாவை ஓய்வுகொள்ள அனுமதித்துவிட்டு நம்முடைய சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் சீறாப்புராணத்தையும் மட்டுமன்றி நீலாவணனின் வேளாண்மைக் காவியத்தையும் வ.ஐ.ச. ஜெயபாலனின் ஈழத்து மண்ணும் எமது முகங்களும் என்ற ஆக்கத்தையும் சற்று கற்றுக்கொள்ளும் மனோநிலையுடன் வாசித்துப் பார்க்கவேண்டும்.

மேலும், மிக நிச்சயமாக இக்கால காவியங்களை விடவும் உன்னதமான சங்ககாலத்தின் தனிப்பாடல்களே இன்றைய நவீன உலக செம்மொழிப் புலமை சான்றோர்களை ஆச்சரியப்படச் செய்துள்ளன என்பது பலரும் இன்றைக்கு ஒத்துக்கொள்கின்ற விடயமே.

குறிப்பாக பேராசிரியர் கைலாசபதி சங்ககாலப் பாடல்களை தமிழ் வீரயுகப் பாடல்கள்- என்று எழுதிய ஆய்வு நூலானது சங்ககால இலக்கியங்களை வாசிக்க வேண்டும் என்ற பேரார்வத்தை ஐரோப்பிய மொழிகளில் மட்டுமே பரிச்சயமான அறிஞர்களைத் தூண்டிற்று.

ஆனால், நம்முடைய படைப்பாளிகள் இந்த ஏதுநிலைகளைப் புரிந்கொள்ளாமல் தங்களுடைய பேனாக்கள்தான் நவீன குலிஸ்தான்களைப் படைக்கின்றன என்ற ஒரு பெளவியமான அறியாமையிலே இருந்துகொண்டு அவர்களினதும் ஏனையோரினதும் காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றனர்.

பாலமுனை பாறூக்கின் *Master piece* என்று கருதத்தக்க தோட்டுப்பாய் மூத்தம்மாவை வாசிப்பதற்கு முன்னர் பாலமுனை பாறூக் இந்தத் துறையில் தடம்பதித்துள்ள ஆழ அகலத்தை நாம் புரிந்துகொள்ள கட்டாயமாக பின்வரும் இரண்டு நூல்களை வாசிக்கவேண்டும். ஒன்று கவிஞர் அப்துல் காதிர் லெப்பையின் செய்னம்பு நாச்சியார் மான்மியம் மற்றது கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலனின் ஈழத்து மண்ணும் எமது முகங்களும்.

சமகால குறுங்காவியங்களின் பொக்கிஷங்களாகக் கருதத்தக்க இவ்விரண்டின தும் வாசிப்பு அனுபவமானது கவிஞர் பாலமுனை பாறூக் எனும் போடியாரை 'பதம்' பார்க்க அனைவருக்கும் உதவக்கூடும்.

கவிஞர் அப்துல் காதிர் லெப்பையின் செய்னம்பு நாச்சியார் மான்மியம் சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னர் படைக்கப்பட்ட காவியமாகும். கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலனின் ஈழத்து மண்ணும் எமது முகங்களும் சுமார் கால் நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட குறுங்காவியமாகும்.

எமது பாரம்பரிய நடைமுறைகளை மற்றும் வாழ்வியலை ஷரீஆவிற்கு உள்ளேயும் வெளியேயும் நின்று படம்பிடித்துக்காட்டியதும் அற்புதமானதும் இலக்கிய ஜனநாயகத் தன்மை வாய்ந்ததுவுமே செய்னம்பு நாச்சியார் மான்மியம் என்ற வாழ்வியல் பொக்கிஷம் ஆகும். சுமார் கால் நூற்றாண்டுகளுக்கு முன்னர் யாழ் குடாநாட்டிலும் குறிப்பாக வன்னி பெருநிலப்பரப்பிலும் நடைபெற்ற தமிழ் இளைஞர்களின் போரியல் வாழ்வை படம்பிடித்த குறுங்காவியம்தான் ஜெயபாலனின் ஈழத்து மண்ணும் எமது முகங்களும் ஆகும்.

குறுங்காவியத்தின் அழகியல் நிருமாணத்திலும் சம்பவத் திரட்சியிலும் இவ்விரு கவிஞர் பெருமக்களும் ஆற்றிய இலக்கியப்பணி சமகால இலக்கிய வரலாற்றின் புதிய மைல் கற்களாகும். இப்பணியின் சமகால இலக்கிய மற்றும் வாழ்வியல் பரிமாணத்தோடு தோட்டுப்பாய் மூத்தம்மா ஒப்பிட்டுப் பார்க்கத் தக்கது மட்டுமன்றி அதன் புதிய பரிணாமத்துக்கு உதாரணமாகவும் எடுத்துக்காட்டத் தக்கதாகும்.

நட்புதலுக்காக இப்படி ஒரு அபிப்பிராயத்தை சொல்வதாக யாராவது கருதினால் அவர்கள் தோற்றுப்போகும் அளவிற்கு கலைப்பெறுமானம் பொங்கி வழியும் ஆதாரங்களை இங்கே நிரற்படுத்த முடியும்.

மேலே கூறிய இவ்விரண்டு காவியங்களையும் வாசிப்பதன் மூலம் குறுங்காவியமாகிய தோட்டுப்பாய் மூத்தம்மாவின் இலக்கிய அந்தஸ்தை ஒப்பிட்டுப் பார்த்து ஓர் அறிவார்ந்த முதிர்ச்சியுள்ள வாசகன் ஒரு முடிவுக்கு வரலாம்.

நான் பாடசாலை மாணவனாக இருக்கின்றபோது கவிஞர் அப்துல் காதிர் லெப்பையின் செய்நம்பு நாச்சியார் மான்மியத்தை வாசித்த சிலவரிகள் எனக்கு இப்போதும் ஞாபகத்தில் இருக்கின்றன.

"செய்நம்பு நாச்சியார் செங்காட்டுப் புலி

வாயில்லாமலே வங்காளம் போவார்
நோயில்லாமலே நூறு நாள் படுப்பார்".. என்ற வரிகள்

இப்போதைய பாடசாலை மாணவர்கள் தோட்டுப்பாய் மூத்தம்மா என்ற குறுங்காவியத்தை வாசிக்குங்கால் அவர்கள் என்னைப்போன்று ஓய்வு பெற்ற காலத்திலும் நெஞ்சைப் பசுந்தரையாக்கும் பாறூக்கின் சொல்லோவியத்தால் அனுபவத்தைப் பெறுதல் சாலும்.

"சாடைமாடையாய் சம்மந்தக்காரி
சூணைக்கூறையை உறுதி செய்ததை
புரிந்து மகிழ்ந்தார் போடியார் மனைவி"

என்ற வரிகள் எதிர்காலத்தில் இன்றைய மாணவர்க்கு ஞாபகத்துக்கு வரக்கூடும். குறுங்காவியம் என்பது வெறுமனே ஒரு கவிஞனின் ஆற்றலுக்கு விளம்பரம் தேடித்தரும் ஊடகம் மாத்திமல்ல. அதனைப் படைப்பதற்கு ஆழ்ந்த மொழிப்புலமையும் படைப்பாற்றலும் கவிஞர் தான் வாழும் சமூகத்திலும் அதன் இயற்கையிலும் இரண்டறக்கலந்த பிரிக்கமுடியாத அனுபவமும் அவசியமாகும். ஜெயபாலன் ஒரு கவிஞாக மாத்திரமன்றி வன்னிப் பெருநிலப்பரப்பில் திக்குத் தெரியாமல் அலைந்து திரிந்த ஒரு போராளியும் ஆவான். ஆதலால் இரத்தமும் சதையுமான இந்த ஒரு காவியத்தை அவனால் படைக்க முடிந்தது.

பாலமுனை பாறூக்கின் படைப்புக்களை குறிப்பாத குறுங்காவியங்களை வாசிக்கின்றபோது நமது மண்வாசனையும் நமது பாரம்பரியப் பிதுரார்ஜிதமும் அற்புதமாகக் கையாளப் பட்டிருப்பதனை இயல்பாகவே நம்மால் கண்டு கொள்ள முடியும். சுமார் 75 ஆண்டுகளுக்கு முந்தைய நம் தென்கிழக்கின் பாரம்பரிம் அற்புதமான மொழியாற்றலுடன் சேர்த்துப் பிசைந்து தரப் பட்டுள்ளது.

அதுவும் நமது பாரம்பரிய மொழி, நமது கிராமியக்கவிதை, அது பாடல் பெறும் அற்புதமான அழகிய சந்தர்ப்பங்கள், நமது வரலாறு, நமது பண்பாடு எல்லாமே உத்தம அளவில் நுகரத் தரும் பாங்கு பாலமுனை பாறூக் அவர்களுக்கு மிகவும் கைவரப் பெற்றுள்ளது.

நமது பண்பாட்டம்சத்தின் இன்னுமொரு குறியீடு நமது மூத்தம்மாமாரின் மாதங்களின் பெயர்களாகும்.

தலைக்கந்தூரி, கடக்கந்தூரி, காதர் கந்தூரி, மீராகந்தூரி, தோகத்து, விராத்து, றம்ழான், பெருநாள்மாதம், இடையிட்ட மாதம், ஹஜ்ஜு, ஆசூறாப்பொலி,

நெயினார் முடைகிடந்த மாதம் என்று அரபு மாதங்களுக்கு இணையாக மூத்தம்மாமார் மாதங்களுக்குப் பெயரிட்டிருந்தனர்.

நானறிய எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள்கூட இது தொடர்பான கட்டுரை ஒன்றை எழுதவில்லை. இனி பேராசிரியர் றமீஸ் அப்துல்லா மூத்தம்மாமாரைப் பேட்டி காணட்டும். இந்தக் காலத்து மூத்தம்மாமாரே ஆங்கிலம் கற்ற டீச்சர்மார். எங்கேபோய் அதனைக் கண்டுபிடிக்க முடியும்.

விழாக்காணும் எனது இளமைக்கால நண்பர் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களுக்கு எது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

■

பாலமுனை பாறூக் குறும்பாக்கள்...

உறவு

இத்தனைநாள் நோயினிலே கிடந்தார்
எவர்வந்து பார்த்தார்கள், மடிந்தார்
இப்பொழுது ஏன்வந்தார்
இத்தனை பேர்? அவர் பெயரில்
சொத்துளதாம், பிரித்திடவாம் விரைந்தார்.

தவிப்பு

ஒன்லைனில் பிள்ளைக்கு வகுப்பு
ஓ... அங்கே அம்மாதான் படிப்பு
பின்னாலும் முன்னாலும்
பிள்ளையவன் தொங்குவதால்
அம்மாவோ அங்கிருந்து தவிப்பு

பல்சுவைக் கவிமன்னர் பாலமுனை பாறூக்

கவிமணி மௌலவி

எம்.எச்.எம் புஹாரி (பலாஹி)

பாலமுனை யெனுமூரில் பிறந்து நல்ல
பாக்களினாற் பாராட்டும் புகழும் பெற்ற
பாலமுனை பாறூக்கின் கவிதை யெல்லாம்
படிக்கின்றோர் இதயத்தை ஈர்க்கு மென்றும்
காலத்தால் அழியாத கவிதை யாத்துக்
'கவியேந்தல்' எனும்பட்டம் பெற்ற நண்பர்
பாலமுனை பாறூக்கோ பல்லோ ராலும்
பராட்டப் படுகின்ற மாண்பு பெற்றார்

பொன்விழாக் காண்கின்ற பாறூக் நல்ல
பொற்கவிகள், காவியங்கள், நறுக்குப் பாக்கள்
நன்னயமாய்த் தமிழுலகம் நயக்கத் தந்தார்
நல்லறிஞர் பாராட்டை நன்றேபெற்றார்
வண்ணமுடன் நல்லுரைகள், வளமாய் வாழும்
வழிமுறைகள் கவிகளினால் வழங்க லானார்
இன்னமுதத் தமிழ்ப்பாக்கள் எல்லோர் தம்மின்
இதயத்தில் என்றென்றும் இடம் பிடிக்கும்

மரபுடனே புதுக்கவிதை யதுவும் செய்வார்
மனக்கருத்தைத் தெள்ளுதமிழ் வடிவிற் சொல்வார்
இரங்குகின்ற மனங்கொண்ட அவரோ என்றும்
இன்னலுறும் மக்களுக்காய்க் குரல் கொடுப்பார்
அரசியலார் தம்மையவர் நெறிப் படுத்தி
அன்பான போதனையும் புரிந்து நிற்பார்
செறிவான கருத்தெல்லாம் செழிக்கும் கவியில்
சீர்மையுடன் செய்தின்று செழித்து விட்டார்

சந்தனமாய் மணக்கின்ற கவிதை யெல்லாம்
சந்தனப் பொய்கையிவே மணக்கத் தந்தார்
செந்தமிழிற் கோர்த்துவொரு பதமும் தந்தார்
சமூகத்தின் சீர்கேட்டைக் கவிதை யாக்கி

கொந்தளிப்பு எனும் நூலில் கோர்த்துத் தந்தார்
குடும்பத்தின் அவலங்கள் குறைக ளெல்லாம்
சிந்தையள்ளும் தோட்டுப்பாய் மூத்தம் மாவில்
சிறப்பாகப் பாலமுனை பாறூக் தந்தார்

உணர்ச்சியுடன் உள்ளத்தைக் கிள்ளும் வண்ணம்
ஒளிர்கின்ற குறும்பாக்கள் நூலும் தந்தார்
பிணக்குகளும் பேதமதும் சமூகந் தன்னைப்
பிரித்துவிடும் அவலங்கள் நகைச்சுவையாய்
மனத்தினிவே பதிந்துவிடும் பான்மை யாக
மணிக்கவியாய் நூலாக்கி மாண்பு பெற்றார்
கனத்தவொரு கவிக்குரலாய் ஒலிக்கு மிந்தக்
கவிமன்னர் பாறூக்கை வாழ்த்து கின்றேன்.

■

பாலமுனை மண்ணின் மணம் பாலமுனை பாறூக் !

அல்–ஹாஜ். ரீ.எம். றின்ஸான்
மாவட்ட கலாசார உத்தியோகத்தர்
மாவட்ட செயலகம்.
அம்பாறை.

அல்லாஹ்வை புகழ்ந்து நபியவர்கள் மீது சலவாத்தும் சலாமும் கூறியவனாக..

கலாசாரம் எனும் தோப்பில் இலக்கியம் எனும் மரத்தில் பூத்துக் காய்த்து முற்றிக் கனிந்த சுவை நிறைந்த பழம் பாவேந்தல் பாலமுனை பாறூக். தனது பெயரோடு பிறந்த ஊரையும் சேர்த்து தான் பிறந்த மண்ணுக்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் பெருந்தகைக்கு ஊர்கூடி விழாவெடுத்து வெளிவரும் பொன்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதும் எனது பேனாவுக்கும் பெருமை, சிந்தனைக்கும் சிறப்பு.

“பொன்விழா நாயகன் பாலமுனை பாறூக்கை
பெற்றெடுத்த பூமி பெருமைபெறும்”

1970களிலிருந்து “இலக்கியத்தில் இயங்கி ஈற்றில் இற்றைவரை இலக்கியத்தை இயக்கும்’ இலக்கியகர்த்தா பாவேந்தல் பாலமுனை பாறூக் உடலால் உள்ளத்தால், அறிவால் அனுபவத்தால், பண்பால் பாரம்பரியத்தால் உயர்ந்தவர். மேடை அறிவிப்பாளராகவும் நாடகக்கலைஞராகவும் 1970களில் எழுத்துலகில் தடம் பதித்த அவரது ‘நகைச்சுவைத் துணுக்குகள்’ அக்காலப்பகுதியில் வெளிவந்த தினபதி பத்திரிகையின் ஞாயிறு பதிப்பான சிந்தாமணி சஞ்சிகையில் தொடராக வெளிவந்து 1987இல் அம்பாறை மாவட்ட மக்கள் காங்கிரஸினால் வெளியிட்டு வைத்த ‘ பதம்’ எனும் முதலாவது தொகுதியினூடாக எழுத்துலக அங்கிகாரம் பெற்று இன்று ‘அம்பாரை மாவட்ட நூலாசிரியர்கள் பேரவை’ இன் இணைத்தலைவர்களுள் ஒருவராக செயற்படுகின்றார். இவரது நவீன காவியங்கள், குறும்பாக்ககள், கவிதைகள் இன்று தேசிய, மற்றும் சர்வதேச, மட்டத்தில் பேசப்படுவதனூடாக அவருடைய பெயரோடு சேர்ந்த ஊரும் ஊரோடு சேர்ந்த மாவட்டமும் பெருமையடைகிறது.

1987களிலிருந்து சுமார் இருபது ஆண்டுகள் கழித்து 2009 இல் வெளிவந்த அவருடைய இரண்டாவது தொகுதி 'சந்தனப்பொய்கை' எனும் கவித்தொகுப்பும் 2004 இல் ஏற்பட்ட சுனாமியையும் அதனால் மக்கள் பட்ட துன்ப துயரங்களை உணர்த்தும் வகையில் 2010இல் 'கொந்தளிப்பு' எனும் குறுங்காவியமும் 2011 இன் 'தோட்டுப்பாய் மூத்தம்மா' எனும் இரண்டாவது குறுங்காவியத்தினூடாகவும் தனது சமூகம் சார்ந்த வாழ்வியலையும், சம்பிரதாய சடங்கு முறைகளுடன் கலை கலாசார விழுமியங்களையும் புடம் போட்டுக்காட்டினார். யுத்த காலத்தில் இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்த வேளை தமிழ் - முஸ்லிம் உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களை மையப்படுத்தி 'எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு' என்ற மூன்றாவது குறுங்காவியம் ஐந்தாவது தொகுதி வெளிவருகிறது. இதனை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் சங்கத்தினர் வெளியிட்டு வைத்தனர். 2009, 2010, 2011, 2012 என தொடராக பல தொகுதிகளைத் தந்த இலக்கியகர்த்தா பாவேந்தல் பாலமுனை பாறூக், 2013இல் 'பாலமுனை பாறூக் குறும்பாக்கள்' எனும் தொகுதியின் மூலம் "பொன்விழா நாயகன் பாலமுனை பாறூக்கை பெற்றெடுத்த பூமி பெருமைபெறும்" என்பதனை தேசிய மற்றும் சர்வதேசத்துக்கு சொல்ல எத்தனிக்கின்றார். அவர் இத்தோடு ஓயவில்லை; மீண்டும் 2017 இல் 'வலைக்குள் மலர்ந்த வனப்பு' என்ற தொகுதியுடன் பொன்விழா பரிசாக 'பாலமுனை பாறூக்கின் மூன்று நவீன காவியங்கள்' எனும் 2020 இல் வெளிவரும் தொகுதியுடன் 1970களிலிருந்து 2020வரை "இலக்கியத்தில் இயங்கி" என்பதனை நிரூபித்து 'பொன்விழா நாயகன் பாலமுனை பாறூக்' என்பதன் மூலம் தனது மண்ணையும் மாவட்டத்தையும் உலகறியச் செய்கின்றார்.

'அறிவிப்பு, நகைச்சுவை, நடிப்பு, கவி, காவியம், சிறுகதை' என பல்துறையில் பட்டை தீட்டப்பட்ட இவரது இலக்கியங்கள் தேசிய, சர்வதேச மட்டத்தில் தொடர்ந்தும் பேசப்படுகின்றமை அவரை ஈற்றில் இலக்கியத்தை இயக்கும் இயக்கி' என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. பேராசிரியர் எம். ஏ. நுஃமான் இவரது தொகுதிகள் தொடர்பில், "இஸ்லாமியப் பற்றும், சமூக உணர்வும் மிக்க ஓர் இடதுசாரியாக நாம் இவரை அடையாளம் காணலாம். இவரது பதம்-1987 மற்றும் சந்தனப் பொய்கை-2009 எனும் முதல் இரு கவிதைத் தொகுதிகளும் இதற்குச் சான்று எனவும், ஒரே இருப்பில் வாசித்து முடிக்கக்கூடிய தோட்டுப்பாய் மூத்தம்மா அளவில் சிறிய 18 அத்தியாயங்களில் வந்த படைப்பாயினும் அதன்

ஊடாக 'ஒரு முக்கால் நூற்றாண்டு கால முஸ்லிம் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளை சமூக அசைவியக்கத்தை மையக் கதையின் ஓரங்களில் இழையோட விட்டிருக்கின்றார்' எனவும் கொந்தளிப்பு, தோட்டுப்பாய் மூத்தம்மா, எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு போன்றவற்றினூடாக சமூக உளவிளல் தேவையை வலியுறுத்தியுள்ளார் எனவும் பாலமுனை பாறூக்கினுள் ஒரு நாவலாசிரியனும் ஒளிந்திருக்கிறான் என்று தெரிகிறது" என அவரிடமுள்ள மாற்றுத்திறனையும் வெளிக்காட்டியுள்ளார். மேலும், "இலங்கை தமிழ் இலக்கிய வரலாற்றில் 1970களில் முனைப்புப் பெற்ற இடதுசாரி சிந்தனைப் போக்கில் கவிதை எழுதத் தொடங்கிய பாலமுனை பாறூக் தான் சார்ந்த சமூகத்தின் துன்ப ஒலியைக் கவிதையாக்கிவர். தான் சார்ந்த சமூகத்தின் ஆன்மீக உணர்வுகளைக் கவிதை ஆக்கியவர், 'கொந்தளிப்பு' மூலம் தான் சார்ந்த பிரதேச, சமூக, பண்பாட்டு உணர்வுகளை மொத்தமாக வெளிப்படுத்தியவர்' எனவும் குறிப்பாக தென்கிழக்குப் பிரதேச முஸ்லிம்களின் வாழ்வினைப் புலப்படுத்தும் குறிப்பிடத்தக்கதொரு படைப்பாக 'கொந்தளிப்பு' அமைந்துள்ளது. துணிச்சலுடன் கவிஞர் எடுத்துரைக்கும் அரசியல், சமூக, சுரண்டலுக்கு எதிரான கருத்துக்கள் வரவேற்கத்தக்கன. கலை நயத்துடன் கவிதை சொல்லும் பாங்கும் விதந்துரைக்கத்தக்கது. இலக்கியத்தின் ஒட்டுமொத்தப் பணியினை தன் படைப்புக்கள் மூலம் வெளிப்படுத்தக்கூடிய ஆற்றல் உள்ள இலக்கியவாதி" என இவருடைய கொந்தளிப்பைத் தொட்டு பேசும்போது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதன்மைப் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் தனது கருத்தைப் பதிவிடுகின்றார்.

இதேபோன்று சென்னை புதுக்கல்லூரியின் முன்னாள் துணை முதல்வர் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் மு.இ. அகமது மரைக்காயர் அவர்கள் குறிப்பிடும் போது "2002 இல் என்னுடன் முதல் சந்திப்பை ஏற்படுத்திக் கொண்டவர் பாறூக். '2004 திசம்பரில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் எழுந்த அவரின் மனக்கொந்தளிப்பு அடங்கவில்லை. கொந்தளிப்பு என்ற தலைப்பிலேயே நூலாக்கித் தமது உள்ளக் குமுறல்களை அதில் கொட்டித் தீர்த்தார்'. 'தோட்டுப்பாய் மூத்தம்மா' கிழக்கிலங்கை முஸ்லிம்களின் சமூதாயச் சிக்கல்களை வெளிப்படுத்துவதுடன் அரிய பண்பாட்டுப் பதிவாகவும் அமைந்துள்ளது. 'நகைச்சுவையை நடிப்பில் கொண்டு வந்து விடலாம் எழுத்தில் கொண்டு வருவது மிகக் கடினம் ஆனால் பாலமுனை பாறூக் இதில் எளிதாக வென்றுவிட்டார். ஒவ்வொறு குறும்பாவுக்கும் பொருத்தமான படம் வரைந்து நகைச்சுவை உணர்வை வாசகரிடம் ஊட்டியிருக்கின்ற பாங்கு பாராட்டுக்குரியது" என விவரித்துள்ளார். மேலும் பேராசிரியர் செ. யோகராசா அவர்கள் 'ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் பாமுனை பாறூக்கின் சில தடயங்கள்' எனும் தலைப்பில் இவர் பற்றி தெரிவித்த கருத்துக்கள் மற்றும் மூத்த

கவிஞர் மு.சடாட்சரன் அவர்கள் கடந்த ***2011.11.04****ம் திகதிய தினகரன் பத்திரிகையில் எழுதிய பதிவுகள், கே.சேகர் M.A, B.Ed அவர்கள் சென்னை பல்கலைக்கழகத்திற்குட்பட்ட புதுக்கல்லூரியில் இவரது நூல்களை உள்ளடக்கிய 'பாலமுனை பாறூக்கின் குறுங்காவியங்கள் ஒரு ஆய்வு' எனும் தலைப்பில் ஆய்வு நூலை சமர்ப்பித்து தனது உயர் பட்டப்பின் படிப்பை மேற்கொண்டமை, மேலும் பல இலக்கியவாதிகளின் கருத்துக்கள் என்பன நமது இலக்கிய கர்த்தாவின் பெருமையை எடுத்தியம்புகிறது.*

இத்துறையில் இவர் பெற்றுக்கொண்ட ஏராளமான அரச, அரச சார்பற்ற அடைவுகள் இத்துறையில் இவரை இஸ்திரப்படுத்திய கால்கோல்களாகும். அதாவது ***2009*** *இல் இவருக்குக் கிடைத்த கலாபூஷணம் விருது,* ***2014****இல் மாகாண வித்தகர் விருது, அரச இலக்கிய விருது விழாவில் தோட்டுப்பாய் மூத்தம்மா நூலுக்குக் கிடைத்த அரச சாஹித்திய விருதும், கொந்தளிப்பு நூலுக்குக் கிடைத்த அரச சாஹித்திய சான்றிதழ், புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் ஞாபகார்த்த சர்வதேச மரபுக்கவிதைப் போட்டியில் முதலிடம், மேலும் வாசிப்பை ஊக்குவிக்கும் வகையில் சுடர்ஒளி பத்திரிகைக்குழுமம் இவரது வாசிப்பு தொடர்பான கவிதைகளைப் பதாகையாக இலங்கையின் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் காட்சிப்படுத்தியிருப்பது போன்றவை குறிப்பிடத்தக்க விடயங்கள். இலங்கை இந்திய மலேசிய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளில் பங்கேற்கும் இவருடைய மேடை வானொலி தொலைக்காட்சி கவியரங்குகள் இவரூடாக அழகு பெறுவது வழமை.*

இவற்றுக்கு மேலதிகமாக கூடுதலான அரச சார்பற்ற விருதுகள் கௌரவிப்புகள் சான்றிதழ்கள் சமுதாயம் சார் தலைமைத்துவப் பதவிகள் என இவரை அழகு படுத்தியவையும் இவரால் அழகு படுத்தப்பட்டவையும் எண்ணிலடங்காதவை. ஈற்றில் அம்பாரை மாவட்டத்தில் கலைசார் நூலாசிரியர்களின் எண்ணிக்கை இருநூறை அண்மித்த இக்காலப்பகுதியில் இலக்கியம் ஏனைய மாவட்டங் களுடன் ஒப்பிடுகையில் முன்னனியில் இருப்பதற்கான முகவெற்றிலைகளுள் இவரும் ஒருவர். எதிர்காலத்தில் இலக்கியத்துக்காக இலங்கை அரசினால் வழங்கப்படுகின்ற அதி உச்ச விருதாகிய 'ஷாஹித்திய ரத்னா' விருதினையும் பெற வாழ்த்துவதுடன் பாவேந்தல் அல்-ஹாஜ் பாலமுனை பாறூக் அவர்களின் இலக்கியப்பயணம் பொன்விழாக்காணும் வரை அவரோடு பொறுமையாக பயணித்த அன்னாரது குடும்பத்தினர்களும் இதுவரை அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய வாசகர்வட்டத்திற்கும் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் என்ற வகையில் உளமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன், உடல் உள ஆரோக்கியத் துடன் ஈருலகிலும் அவர் வெற்றியடைய இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

கலையுலக நாயகன் கலாபூஷணம் பாலமுனை பாறூக்

ஐ.எல்.றிஸ்வான்,
கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்,
கலாசார மத்திய நிலையம்,
அக்கரைப்பற்று.

கலைக்காகவே தன்னை அர்ப்பணித்து தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் தன் புகழைப் பரப்பியிருக்கும் பாலமுனை பாவேந்தல் பாறூக் அவர்களின் கலை, இலக்கியத் துறையின் 50 ஆண்டுகள் நிறைவை முன்னிட்ட பொன்விழா நிகழ்வில் வெளியிடப்படும் மலருக்காக வாழ்த்துச் செய்தியை பகர்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

அக்கரைப்பற்றின் கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் அவரைப்பற்றிச் சிலவார்த்தைகள் கூற வேண்டும். பல்வேறு கவிதை நூல்களை வெளியிட்டுள்ள இவர், சமூக தொண்டுகளையும் நிறைவேற்றிக் கொண்டு வருகின்றார். இவரைக் காண முடியாத கலை, இலக்கிய நிகழ்வுகளே கிடையாது. பெரும் மனம் கொண்டவர், கவியரங்குகளில் நீதமான இவரின் தலைமையைக் காணலாம். முன்னேற்பாடு களின்றி இவரின் நாவிலிருந்து கவிதை ஊற்றெடுக்கும் திறமை கொண்டவர்.

இன்று நடைபெறும் இவருக்கான இப் பொன்விழா, கலைத் துறைக்கு மகுடம் சூட்டும் விழாவாக நான் காண்கின்றேன். இக்கலைப் பொக்கிஷம் எமக்குக் கிடைத்த வரமாகும். இவர்களைப் போன்றவர்களின் திறமைகளினால் எமது எதிர்கால சந்ததியினர் வளம் பெறவேண்டும்.

எமது கலை, கலாசார விழுமியங்கள் மங்கி மறைந்து விடக்கூடாது அவற்றை பேணிப்பாதுகாத்து எம் எதிர்கால சந்ததியினரின் கைகளில் ஒப்படைப்பது கலைத்துறையில் எனவே

பாவேந்தல் பாறூக் அவர்களை தனது சிந்தனைகள், சேவை யாற்றும் நம் அனைவரினதும் பொறுப்பாகும். அவ்வாறில்லா விடில் எமது எதிர்கால சந்ததியினர் சமூகப் பொறுப்பின்றி சீரழிந்து வழிதவறிச் செல்வார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

பாலமுனை பாறூக் அவர்களின் கவிதைகள், சிந்தனைகள், ஆழமான கருத்துக்கள் போன்றவற்றை எழுத்துருவில் சமூகத்தின் மத்தியில் ஒப்புவித்தல், சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும் என நம்புகின்றேன். மேலும் இவரின் கலை, இலக்கியப்பணி தொடர நீண்டகால தேக ஆரோக்கியத்தை வழங்கவேண்டும் என்று அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றேன்.

பொய் முகம் இல்லா உண்மை முகம் என்னுடையது. ஒரு யதார்த்தத்தைத் தெரிவித்து விடுகிறேன்.

எனக்குக் கவிதை வராது! மற்றனைத் துத் துறைகளிலும் கொஞ்சம் கொஞ்சம் குழந்தை நடை!

எவ்வாறாயினும், புரட்சிக்கமாலின் 'பாரதி யார்?' தமிழக 'மணிவிளக்கு' சஞ்சிகையில் பார்த்தவன் கிண்ணியா 'அண்ணல்' சாலிஹ் ஆசிரியருடன் பழகி அவர் கவிதையில் லயித்தவன். கல்முனை பஸீல் காரியப்பர் என் 'லைட் ரீடிங்'கில் சொக்கி கொழும்பில் ஒட்டி உறவாடிய பொழுது, 'அழகான இரு சோடிக் கண்களை' பல தடவைப் பார்த்து 'லவ் பண்ண'ப் பழகியவன்! அப்புறம் பொத்துவில் 'யுவன்',எம். ஏ. கபூர் என்பானின் மரபுக் கவிதைகளில் களிப்புற்று, ஒரு பொழுது ' அழாதே சிரி' கவிதை நாடகமொன்றை வானொலிக்காக வீட்டிலேயே சிறை வைத்து எழுதச் செய்து ஒலிபரப்புக்கு ஏற்பாடு செய்தவன்.

இப்படி இன்னும் சிலர். அனைவருமே கிழக்கிலங்கை தான். ஒருவர் மட்டும் வடபுல சில்லாலை "தான் தோன்றிக் கவிராயர்"

இந்த வகையில், 'தினபதி' துவங்கிய காலத்தில் "ஒரு பாறூக்" தலையெடு' ப்பதைக் கண்டவன். ஆனால் என்னைப் போல நாடக ஆர்வமிக்கவர், நடிக சிகாமணி என்பதையெல்லாம் அறியாத வனாக இருந்தேன்.

இது,'தோட்டுப்பாய் மூத்தம்மா' நினைவில் நெகிழ்ந்து...

தமிழ்மணி, தேசத்தின் கண்

மானா மக்கீன்

காலங்கள் பல கால்ப்பந்தாட்டம் விளையாடிய பிறகு 2011,

ஓர் இஸ்லாமிய இலக்கிய மாநாடு, இஸ்லாம் தழைத்த காயல் பட்டணத்தில். கொழும்பிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட இலக்கிய நெஞ்சங்களை கப்பலில் தூத்துக்குடியில் கரை இறக்கி காயலுக்குக் கொண்டு சேர்க்கும் பொறுப்பைச் சுமந்திட்ட நேரத்தில், கடலோட்டத்திலே 'ஒரு பாலமுனை பாறூக்' விடிய, விடிய என்னை வியந்து இலக்கியப் பேச்சுப் பேசியது அருகிலிருந்த என் 'நிழ' லுக்கும் ஆச்சரியமான வியப்பு! மாநாட்டு அரங்கிலே அவர் ஆளுமை கண்டு அதிசயப்பட்ட என் அனுபவம்!

அப்புறம்...அப்புறம்...?

அதே 2011ல் பொக்கைவாய் முத்துப் புன்னகைப் பூத்து ஒரு தோட்டுப்பாய் மூத்தம்மா' (2011) என் அருகில்! அழைத்து வந்த வரும் 'பாவேந்த'லே!

"வாப்பா, கொழும்பூர் மானா, இந்த உயரமான என் மகனை உன் நல்ல மனம் வாழ்த்தணும் நீ சீதேவியா இருப்பே" எனக் கொஞ்சல்! (கெஞ்சல் அன்று)

என்னையும் விட மூத்த மூதாட்டியும், தான் சார்ந்த சமூகத்தின் யதார்த்தங் களையும் சிக்கல்களையும் தேங்காய்ப் புட்டுப் போல் பிட்டுப் பிட்டுவைக்கும் அனுபவசாலியுமான உம்மா எங்கே, நான் எங்கே?

கூனிக் குறுகிப் போகிறேன். மூத்தம்மா கையில் இரு புத்தகங்கள். படிக்கத் தெரிந்த மனுசியா?

"வாப்பாமானா, நான் படியா தற்குறி! என் கையால ஒனக்குத் தரணுமாம்! பாறூக் சொல்லுறான் இந்தா புடி"

அதுவரையில் அந்த உயரமான இலங்கை வங்கி உத்தியோகத்தரின் எந்தப் படைப்பையும் தொட்டிராத நான் அந்தருமை மூதாட்டியின் பொற் கரங்களிலிருந்து பெற்றுக் கொள்கிறேன்!

* எஞ்சியிருந்த பிரார்த்தனைகளோடு' -2012

* பாலமுனை குறும்பாக்கள்' -2013

இந்தக் 'கொழும்பானுக்கு' முதல்நூல் என்னசொல்கிறது?

கிழக்கில் ஏற்பட்டுப்போன இன விரிசலைப் புடம் போட்டு அதிர வைக்கிறது. கடந்த மூன்று தசாப்த காலத்தில் முற்றும் முழுதாக மாறிப் போன தமிழ் - முஸ்லிம் உறவுகள் குறித்த மனஉளைச்சலை உள்ளது உள்ளபடி உரைத்து வைத்துப் பெரும் கவலை கொள்ளச் செய்கிறது.

இரண்டாவதில் 'ஒரு நூறு குறும் புகள்' குறும்பா வடிவில் அதிலொன்றை, என் 'லைட் ரீடிங்' பக்கத்தில் தினகரன் வாரமஞ்சரியில் வெளியிடவும் செய்கி றேன். அது, இப்பொழுது மீண்டும். இன்றைக்கும் என்றைக்கும் பொருந்தும்.

நல்ல சாத்தானும் (சைத்தான்) கெட்ட சாத்தானும் ஒட்டி உறவாடும் முகநூல் தொடர்பாடல் பற்றியது.

'முகநூலில் படம் போட்டவேளை
முகம் பதித்துப் 'பிரண்டு'ஆனாள்
வாலை
இஸ்கைப்பில் கதைவளர்ந்து
இவளணைந்தாள் நேரில்
சுகம் பெற்றான்,
போனான் அக்காளை!'

ஆஹா! எத்தனை நிதர்சனம்!

***2013**-ல் பார்க்க வைத்த பாலமுனையே! **2020**-லும் பார்ப்பது கட்டாயமாகி விட்டதே பாவேந்தலே! பல்லாண்டு பல்லாண்டு வாழ்வீராக நீவிர்!*

உம்மா, தோட்டுப் பாய்
மூத்தம்மா இப்போ
உங்களுக்கு சந்தோசம் தானே?

பாலமுனை பாறூக் குறும்பா மணிக்கவிதை....

வாட்டம்

மாடிமனை கட்டிவைத்து வாழ்ந்தார்
மாது, மது சொர்க்கமென ஆழ்ந்தார்
கோடி பணம் கரைந்துவிட
கூத்திகளும் கலைந்துவிட
வாடுகிறார் நோயினிலே வீழ்ந்தார் !

அழைப்பிதழ்

இருபது பக்க நூல் வெளியீடு
இருபத்தைந்து பக்க அழைப்பிதழ்!
அன்பளிப்புத் தொகையை
அதிகரித்துக் கொள்ளும்
அரிய முயற்சி

பாலமுனை பாறூக் அவர்களின் ஆக்கங்களை எடுத்து நோக்கும் போது அவரது முயற்சிகள் எழுபதின் பிற்பகுதியிலும் எண்பதுகளின் தொடர்ச்சியிலும் வீறு பெற்று விரிந்தன. சுருங்கச் சொல்வதானால், இவரது கவிதைகள் பல தரப்பினராலும் வரவேற்கப்பட்டன. ஏன்? இரு பிரதான காரணம் உண்டென்பது நமது கருத்து. இவையெல்லாம் உடன் நிகழ்கால வரலாற்றிலே தோய்ந்து திளைத்த ஓர் உள்ளத்தின் வெளிப்பாடுகள். கண்முன் தெரியும் வாழ்க்கை பற்றி கவிஞர் பாறூக் அவ்வப்போது செய்த விமர்சனங்கள்

கவிஞர் இ.முருகையன்
மல்லிகை 1988 பெப்ரவரி.

நமது பிரதேசத்தின் மூத்த படைப்பாளி பாவேந்தர் பாலமுனை பாறூக். 1970 களில் முனைப்புப் பெற்றிருந்த ஈழத்துப் படைப்பாளிகளில் அதிலும் குறிப்பாக தென்கிழக்கு முஸ்லிம் எழுத்தாளர் வட்டத்துள் குறிப்பிடத்தக்க ஒருவர். பதம், சந்தனப் பொய்கை, பாலமுனை பாறுக்கின் குறும்பாக்கள், வலைக்குள் மலர்ந்த வனப்பு என நீண்டு செல்லும் கால ஓட்டத் தடவல்களுக்கேற்ப சமகாலத்திலும் தம் எழுத்துக்களினால் பெயரைத் தக்கவைத்துக் கொண்டிருப்பவர். பொன் விழாக்காணும் இலக்கியப் பயணத்தின் சொந்தக்காரன்.

கொந்தளிப்பு, தோட்டுப்பாய் மூத்தம்மா, எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு ஆகிய மூன்று நவீன காவியங்களுடன் நம் இலக்கிய ரசனையைப் பரிசோதிக்க வந்திருக்கும் கவிஞர் பாறுக்கின் முயற்சி தமிழ் இலக்கியத்திற்குப் பழக்கப்பட்டவையாயினும் நவீனத்துவம் என்ற கருத்தியலோடு அவர் வந்திருப்பது நமது பார்வையை அகலமாக்க வழி விட்டிருக்கிறது

தமிழ் மொழியின் ஆரம்பக் கருத்தாடல் பரிமாற்றமே காவிய மரபிலிருந்துதான் ஆரம்பமாகி இருக்கிறது. எழுத்தறிவில்லாத மக்களின் மொழி வெளிப்படுத்தல்களிலும் ரசனை உரையாடல்களிலும் இதனை இலக்கிய உலகு தரிசித்தே வந்திருக்கின்றது. அவைக்களப் புலவர்களின் முன்வைப்புக்களிலும் மன்னர் உரையாடல்களிலும் இம் மரபு சுவைக்கப்பட்டே வந்திருக்கிறன. எனினும் தமிழ் இலக்கியத்தின் காவிய வெளிப்பாடானது சிலப்பதிகாரம், மணிமேகலை, இராம காவியம், சீராப்புராணம் என கால ஓட்டத்தின் உந்தப்பாடல்களினால் சிற்சில வேறுபாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள போதிலும் அதன் நீட்சி ஒரு மையப் புள்ளியிலிருந்து பீறிட்ட எழுத்துப் பாய்ச்சலின் தெறிப்புக்களாகவே வெளிப்பட்டிருக்கின்றன

ஜெஸ்மி எம்.மூஸா

காவிய மரபின் தொடரி :
பாறுக்கின் மூன்று நவீன காவியங்கள்

கவிதைப் பாரம்பரியத்தில் மாற்றங் கொள்ளப்பட்ட நவீன கவிதை வெளிப்பாடுகள் போல் காவிய வெளிப்படுத்தல்களிலும் நவீன மரபுகள் தாராளமாக உள்வாங்கப்பட்டன. பாரதியின் உத்வேகமே இப்புதிய திரும்பல்களின் சாட்சியங்களாகின்றன.

கலை, ரசனை அனுபவிப்பு என்பவைகளான வேறுபாடுகளுடன் காவியங்களும் வளர்ந்து வருகின்றன. பழைய மொழிப்பாடுகளை விட்டுப் பிசகாத காவியங்கள் ஒருபுறமிருக்க. பாரதியின் பாஞ்சாலிசபதம் தொட்டுவந்த நவீன காவிய மரபின் உந்துதல்களால் மகாகவி, நீலாவணன், எஸ்.பொன்னுத்துரை, அப்துல்காதர் லெப்பைப் புலவர், ஜின்னா ஷரிபுத்தீன் என ஒரு பட்டியலே உருவெடுத்தது. கிழக்கு மாகாணத்தின் கிராமிய பண்பாட்டியல் கூறுகளின் மீதேறி அவர்களுக்கே உரித்தான மொழிவழக்குகளோடு நவீன காவிய மரபை தம் மரபியலாகவே வெளிக்காட்டியவர் அப்துல் காதர் லெப்பை. அவரின் வாரிசுகளாக நின்று காவியம் படைத்தவர்களாக ஒத்த இயல்பாக்கத்துடன் வருகின்ற பாலமுனை பாறூக், பாலமுனை முபீத் உள்ளிட்டோர்களை அடையாளப்படுத்தலாம். இருவரும் பிரதேச ஒத்திசைவுகளுடன் வருவதும் அடையாள மகிழ்ச்சிக்குரிய எடுகோள்களாகும்.

பாரதியின் பாஞ்சாலி சபதத்தையும் மகாகவியின் கண்மணியாளின் கதையையும் தொட்டாடும் மரபிலிருந்து விடுபட்டு இஸ்லாமிய மரபின் வருடலில் நமது காவியங்களின் பண்புகளை அப்துல்காதர் லெப்பையின் செய்னம்பு நாச்சியார் மான்மியத்தினூடாகவே விரிக்க வேண்டியுள்ளது.

இஸ்லாமிய பண்பாட்டியல் அடையாளங்களோடு காவியம் எழுதப் புகுந்த அல்லது காவிய முயற்சியில் இறங்கிய அப்துல்காதர்லெப்பை, ஜின்னாஹ் ஷரிபுதீன், பாலமுனை பாறூக், பாலமுனை முபீத் எல்லோருமே கிழக்கு மண்ணின் வெளிப்பாடுகள் என்பதும் முக்கியமான செய்திதான்.

குறிப்பிட்டுச் சொல்லப்பட்டவர்கள் நின்ற வட்டத்தினுள் பாலமுனை பாறுக்கும் பயணித்திருக்கின்ற போதிலும் சம காலச் சமூகப் பிரக்ஞையும் முற்போக் குணர்வும் எதிர்ப்பிலக்கிய துள்ளல்களும் நிறைந்த புதிய வேகப்பாய்ச்சலோடு கூடிய காவிய மரபொன்றையே பாலமுனை பாறுக் பரிசோதித்திருப்பது அவரது கொந்தளிப்பு,தோட்டுப்பாய் மூத்தம்மா, எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு ஆகிய முக்கனிகளில் பரவலாக்கப்பட்டுள்ளது. பாலமுனை பாறுக்கின் அனுபவ முதிர்ச்சியும், மொழிக் கையாளல் புலமையும் வெளிப்படுத்தல் பாணியும் புதிய அறுவடை நோக்கிய பயணிப்பின் நகர்வைக் காட்டுகிறது

தனிப்பாடல்களின் தொகுப்புக்களாக அமையாமல் நீண்ட கதையை தொடர் நிலையில் அமைத்துப் பாடுவது காவிய மரபாகும். இதனை நவீன நோக்காக்கப் புகுந்த முயற்சிகளே மூன்றுகாவியங்களின் இழையோட்டமாகும்.

சொந்த உணர்வுகளுக்கு வழி தேடும் கவிஞர் பட்டாளம் நிறைந்த சம உலகில் சமூகத்திற்காய் கொந்தளிக்கின்றவர்களைக் காண்பதரிது. இது மூத்த தொடரிகளின் அனுபவங்களினூடாகவே கவிஞர் பாறூக் அவர்களுக்கு வாய்த்திருக்கிறது. தலைமுறை இடை வெளிகள் கடந்து நாம் அனுபவித்த மிகப்பெரிய வடுவின் தடவலே ஆழிப்பேரலை அனர்த்தமாகும். அதில் மனைவி மக்களை இழந்து நிர்க்கதியானோரின் கவலைப் பீச்சலை எளிதில் அழித்து விடமுடியாது. அவ்வாறான நிலைமையில் தனிமைப்படுத்தப்பட்ட ஆதம் காக்கா தம் கடந்த கால நினைவுகளை பின்னோக்கு உத்தியினூடே நின்று அசைபோடுவதே **கொந்தளிப்பாகும்.**

சுனாமிப் பேரலையின் ஒரு வாரத்திற்கு முன்னர் பேசிய மூத்தமகளின் திருமணம், இரண்டு மாதங்களுக்கு முன் குமராகிய இளைய மகளுக்காகச் செய்த சடங்குகள் எல்லாவற்றையும் நிறைவுறுக் காட்சியாக்கி விட சந்தர்ப்பம் வழங்காத கடலின் ஏப்பத்தை கடற்கரை மாலைப் பொழுதொன்றில் நினைவோட்ட மாக்கியிருப் பதே இக் காவியமாகும். மீனவமும் வேளாண்மையும் ஒன்றிணைந்த தம் தரிசிப்பு மண்ணான ஒலுவில் - பாலமுனையில் அவை இரண்டினதும் ஓட்டத்தில் குறுக்கிடும் சமூகப்பாத்திரங்களை வெளிப்படுத்துவதாக நீளுவதே கொந்தளிப்பாகும்.

பிரதேச வழக்காறுகளையும் துார்ந்து போன சடங்குகளையும் மனக்கண் முன்கொண்டுவர பாறூக் எடுத்திருக்கும் முயற்சி மெச்சத்தக்கது. ஏதிர்கால சந்ததிக்கென விட்டு வைக்கும் இலக்கியத்தொடரியாக இதனைக் கொள்ள முடிகிறது. கவிதை, குறும்பா என தம் மொழியாளுமைகளால் தொட்டுச் சென்ற கவிஞரின் அனுபவம் இதற்குள்ளும் ஊசலாடுகிறது.

"ஆழிக்கட லெனும் அழகுப் பெண்ணாள்
நீலச்சேலை அணிந்தே இருந்தாள்..!
வெள்ளைக் கரையோடு வண்ணச் சேலை"

என கடலின் உருவகப்படுத்தலோடு கொந்தளிக்க ஆரம்பிப்பது உத்வேக மெடுக்கும் கருப் பொருளை அதே வீச்சில் வாசித்து முடிக்க வைக்கும் உத்வேகமாகவும் அமைந்து விடுகிறது.

கடல் வந்து இப்படியெல்லாம் காவு கொண்டதே என்பதை நம்ப முடியாத அதிச அமர்க்களம்தான் ஆழிப் பேரலை அனர்த்தம். எதையெல்லாமோ செய்து விட்டு

இவரா இப்படி என்கின்ற அமுசடக்கம் போல் கடலின் செயலை இன்றுமே நம்பமுடியாத நிலைதான் புதிதான தரிசனம் உள்ளவர்களுக்கு. அதனை,

“கொந்தளிப் பென்று கொடூரம் புரிந்த
அந்தக் கடல்தான்
இந்தக் கடலா?
எண்ணிப் பார்த்தார் இதயம் வலித்தது”

என வரிகளாக்குகிறார் கவிஞர்.

பேரலை அனர்த்தத்தில் ஊரின் நான்கில் ஒரு பகுதியையும் ஆயிரத்தை அண்மிய உயிர்களையும் கோடிக்கணக்கான உடமைகளையும் ஏப்பம் விட்ட சுனாமியை மருதமுனை மக்களும் ஒலுவிலைப் போல் எளிதில் மறக்கமாட்டர்கள். ஜனாஸாக்கள் மதிப்பிழந்த அன்றைய பொழுதில்,

“மனைவியைத் தேடி
பிள்ளையைத் தேடி
தினந்தினம் அலைந்தார்
ஆதம் காக்கா!
மனைவியை ஒரு நாள்
சடலமாய்க் கண்டார்..!

மறுநாள்-பிள்ளைகள்
ஒருவரை ஒருவர்
தழுவிய வாறு
மரணித் திருந்ததை
உறுதிப்படுத்தினார்!”

என்ற உணர்வலை மீட்டல் நமக்கான காவிய இழுப்பாகவுமே தெரிகிறது.

பேரலை வந்து நிர்க்கதியானோர் மீண்டெழுந்தார்களோ இல்லையோ அலைகாணாத பலர் உயர்நிலையடைந்தனர். “தங்கச் சுனாமி” என்ற அடை நமக்குள் பிரபல்யமாக அந்நிலை காரணமாகியது.

“நெத்தலிக் கென்று போட்ட இரையை
சுறாக்கள் வந்து
சுருட்டிக் கொண்டதாய்

கட்டிட மிருந்தோர்
தொழில் இழக் காதோர்
கடலே எதுவெனக் காணாதவர்கள்
பெற்றெடுத் தார்கள்
பெருந்தொகை யாகவே"

என்கின்ற வரிகளில் அதனை ஆழப்படுத்தியுள்ளார் பாறூக்.

துறைமுக அபிவிருத்தி என்ற பெயரில் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் கரைவலைத் தோணியாளர்கள்.

"துறைமுக வேலை தொடங்கிய தாலே
தொழிலில் இருந்து
விடுபட நேர்ந்ததும்...
வெளியேற் றங்கள்
விரைவாய் நடந்ததும்...
மீன்பிடி யாளர்
அகற்றப் பட்டதும்..."

எனும் வரிகளில் சாரப்படுத்துகின்றார் கவிஞர்.

"இவ்வூரில்
கடலும் போக
கமம் தான் மிச்சம்"

எனக் காவியத்தை வளர்க்கும் கவிஞர் அத்தொழிலின் சுக துக்கங்களையும் நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்.

உருவக ஓட்டத்தில், வினாக்களையே தாம் கொண்ட கருத்துக்களின் சாரமாக்கி, எதுகை மோனைகளை விரவவிட்டு, தூர்ந்துபோன முஸ்லிம் வழக்காறுகளையும் சடங்குகளையும் அதற்கான சொல்லாடல்களையும்சாரமாக்கி, தொழில் முறைகளைக் காட்சியாக்கி பின்னோக்கு உத்தியுடன் துணிச்சலான கதையோட்டத்தில் கவிஞர் பாறுக் படைத்துள்ள "கொந்தளிப்பு" நமது கொந்தளிப்புக்களுக்கும் ஆறுதலாய் அமைகிறது

செய்னம்பு நாச்சியை வெளிப்பாட்டுப் பாத்திரமாகக் கொண்டு கிழக்கு மண்ணின் திருமண நடைமுறையிலுள்ள அக்குத்தொட்டு ஆணிவரை மீள்சுழற்சி

செய்து வெற்றி கண்டவர் அப்துல்காதர் புலவர். செய்னம்பு நாச்சியார் பிரிய இருந்த குடும்பத்தை சரி செய்து சமாதானப்படுத்தி வைத்தார் அப்துல்காதர் லெப்பை. அதில் சீறியெழுந்தாள் செய்னம்பு நாச்சி. பாலமுனைபாறூக்கின் **தோட்டுப்பாய் மூத்தம்மாவின்** செய்னம்பு என்ற பாத்திரம் மணப் பெண்ணாகிறாள். அப்துல் காதரின் மணப்பெண் சச்சரவு நீங்கி குடும்ப மாகிறாள். பாலமுனை பாறூக்கின் மணப்பெண் மறுமணம் செய்கிறாள். இருவரது காவிய முயற்சியின் பயணிப்பு ஒன்றாகினும் அதன் தளமும் ஓட்ட வேகமும் மாறுபடுகின்றன. அப்துல்காதர் லெப்பை வழக்காறுகளை மட்டும் அடையாளப்படுத்துவதில் கரிசீலனைகாட்ட பாலமுனை பாறூக் மார்க்கம் என்ற போர்வையில் தாண்டவமாடிய அல்லது ஆடிக்கொண்டிருக்கின்ற விடயங்களில் சிலதை உள்நிலை விமர்சனப் பாணியில் தெரியப்படுத்தியுள்ளார்.

அப்துல் காதர்லெப்பையும் பாலமுனை பாறூக்கும் பாரிய வேறுபாடுகளற்ற உத்திகளுடன் வெளிக்காட்ட எத்தனித்துள்ள இஸ்லாமிய மரபுடன் கூடிய விடயங்களை விட்டு விலகி நவீன சூழலியல் பாங்கான நவீன குறுங்காவியத்தை அல்லது நெடுங்கவிதையினை பாலமுனை முபீத் “உடைந்த கால்கள்” தொகுதியில் அடையாளப்படுத்தி இருப்பதும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய முயற்சியாகும்

நமது சமூகத்தின் மறக்கடிக்கப்பட்டுக் கொண்டு வரும் பொக்கிஷம் மூத்தம்மாக்கள். இளவயது மறைவில் மூத்தம்மாக்களைத் தரிசிக்கக் கிடைக்குமோ என்ற அச்ச உணர்வுமிக்க விஞ்ஞான வளர்ச்சி யுகத்தில் ஓட்டமாவடி அறபாத், பாலமுனை பாறூக் போன்றவர்கள அவசியப்பட் டேயாகின்றனர். அறபாத்தின் “மூத்தம்மா” சிறுகதையும் பாறுக்கின் “தோட்டுப்பாய் மூத்தம்மா” வும் கிழக்குப் பண்பாட்டுக் கூறின் எச்சங்களே.

மூத்தம்மா மரணித்த செய்தியோடு தோட்டுப்பாய் மூத்தம்மாவின் கதை ஆரம்பமாகிறது.கொந்தளிப்பு குறுங்காவியம் போல் தோட்டுப்பாய் மூத்தம்மாவிலிலும் பின்னோக்கு உத்தியாகவே கதை விரிகிறது.

பரம்பரைப் போடியாரான பெரியம்பியின் ஒரே மகளான செய்னம்பு. பெரியம்பியின் சகோதரியின் கணவன் இளையம்பிப் போடியின் மகனான அகமன் ஆகியோருக்கு தடபுடலான திருமணங்கள் நடந்தேறுகிறது. ஐந்து ஆண்டுகளில் திருமண உறவு முறிந்து விட செய்னம்பு வண்டிக்கார இசுமாயிலைத் திருமணம் செய்கிறாள். போடியாரின் மகளான செய்னம்பு வண்டிக்காரனைத் திருமணம் செய்தமையினால் குடும்பத்தாரின் அவமதிப்புக்கு ஆளாகிறாள்.

தம்பரம்பரைச் சொத்துக்களை ஊரின் மார்க்கக் மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக தர்மம் செய்கின்றனர் தமபதிகள். ஊரைவிட்டு பத்துமைல் தொலைவிலுள்ள ஊருக்கு வந்து வாழ்ந்து அங்குமரணித்து விடுகிறாள் செய்னம்பு. அவளது உடல் அடக்கம் செய்யப்பட்ட நிலையில் கதை பழைய நினைவுகளை அசைபோட வைக்கிறது

இஸ்லாமிய மார்க்கத்தில் காணப்படும் கிரியைகள் தொடர்பான கருத்து முரண்பாடுகளை பாறூக் பல இடங்களில் சுட்டிக்காட்டுகின்றார். மரணித்தவரின் உடலை அடக்கம் செய்வதற்காக கொண்டு செல்லும் போது அமைதியாகச் செல்ல வேண்டுமென இஸ்லாம் அழகிய ஒழுக்க முறைகளைக் கற்றுத் தந்திருக்கும் போது சிலர் கலிமாக்களை ஓதிக்கொண்டு செல்வதை வழக்கமாக்கிக் கொண்டனர். அவ்வாறே மரணித்த பின்னர் மக்களுக்கான மார்க்க உபதேசம் செய்வதனைத் தவிர வேறு எதுவும் நபி வழியும் இல்லை. இருந்தும் ஒவ்வொருவரும் தம் மனோ இச்சைக்கேற்ப மார்கத்தை தம் வசப்படுத்தினர்.

“கடமை முடிந்ததெனக்
கலைந்து சிலர் சென்றார்கள்.
அமைதியாய் போவதுதான்
ஆகுமெனச் சில பேர்கள்
மௌனமாகச் சென்றார்கள்”

மேலும்,
“தல்கீனைச் சிலர் ஓத
தாமதித்து
குத்பாவைச் சிலர் ஓதிப்
பிரிந்தே கலைந்தார்கள்”

என்கின்ற வரிகளில் பாறூக் மூத்தம்மாவின் ஜனாஸாவை வைத்துவியாக்கினம் கொடுக்கிறார். ஜனாஸாக்களிலும் பிரிவினை தேடும் முஸ்லிம் உம்மாவின் நிலையினை எதிர்மறை விமர்சனப் பார்வை கொண்டு நோக்கும் கவிஞரின் நிலையும் இங்கு நிழலாடாமலில்லை.

பெண்களுக்கும் விருத்த சேதனம் செய்யும் வழக்கம் நமது சமூகத்தில் இருந்தது என்பதை,

“பெண் பிள்ளைச் சுன்னத்தை
பிசகின்றிச் செய்யவென
வந்திருந்தாள் மாமி…”

என அடையாளப்படுத்துகிறார் பாறுாக்.

மாப்பிள்ளை பேசுதல் என்பது முஸ்லிம் பண்பாட்டியலில் மிக முக்கியமான மரபுமுறையாகும். அதனை,

“ஏன்னெண்டு கேட்டயளா
இளயதம்பி
பெரியம்பிபப் போடியார்ர
புள்ளைக்கு
மாப்புள்ள கேக்கத்தான்
வந்திருக்கம்
படையாண்ட குடிக்குள்ள
மாப்புள்ள தாறயளா

இது கேட்டு
வண்டியன் குடி மரைக்கார்
வாய்திறந்தார்...”

என்பதான வரிகளில் சாரமாக்கியுள்ளார் கவிஞர்.

இவ்வாறாக நமது பண்பாட்டியலின் எஞ்சியுள்ள அல்லது துார்ந்து போக எத்தனிக்கின்ற பல கூறுகளைஅடையாளப்படுத்துவதில் பாலமுனை பாறுக் வெற்றிகண்டுள்ளார்.

கவிஞர் பாறுக்கின் **“எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு”** என்ற குறுங்காவிய மானது மூன்று தசாப்தங்களாக இலங்கை மக்களை நிர்க்கதியாக்கிய போர்ச் சூழலை மனக்கண் முன் மீளஅழைத்துவருகிறது. இச்சூழலில் அமைதியற்றிருந்த முஸ்லிம் சமூகத்தையும் அவர்கள் மீதானகட்டமைக்கப்பட்ட வன்முறைக் கலாசாரத்தையும் படம்பிடித்துள்ள காவியமே இதுவாகும்.

“சொந்த வீட்டைப் பார்க்க வந்தவன்
சுற்றி வளைப்பில்
அகப்பட்டிருந்தான்...”

என ஆரம்பமாகும் இக்காவியானது அன்றைய யுத்த சூழலுக்கு நம்மை அழைத்துச் செல்ல விளைகிறது.

அன்றைய அரச உதவியுடன் ஈழத்தில் வலம்வந்த அமைதிப்படையின் வருகையால்

சுற்றிவளைப்புகளுக்கும் பஞ்சமில்லாதிருந்தது. இன மத பேதமின்றி அனைவருமே இதற்குள் அள்ளுண்டு சென்றனர். வேண்டுமென்றே முரண்பாடு களையும் ஏற்படுத்திக் கொள்ளுவதற்குஏதுவான சூழலும் வரவழைக்கப் பட்டது.

"ஊரினில் இனங்களின்
உறவுகட் கிடையில்
பேதம் வளர்ந்து பிரிந்ததை எண்ணி
வேதனைப் பட்டாள்
விரிசலை நொந்தாள்"

"வண்டிக்கார முஸ்லிம்கள்
தமிழர்
ஒன்றாய்ச் சேர்ந்து
ஒற்றுமை யாகவே
காட்டினில் சென்று
கம்புகள் வெட்டி
கோயிலைப் பள்ளியைக்
கட்டிக் கொண்டதை
ஒருவருக்கொருவர்
உதவி வாழ்ந்ததை
இவ்வூர்கோயிற் பள்ளிக் குறிப்புக்கள் சொல்வதாய்
அப்பொழுதவரோ அடிக்கடி சொல்வார்"

கதையில் வரும் பொதுமைப்படுத்தப்பட்ட அவள்-அவன் என்னும் பாத்திரங்களில் பக்கத்து வீட்டு அக்கா முஸ்லிம் இளைஞனைப் பார்த்துக் கூறும் இவ்வாறான வாக்கியங்கள் இன உறவின் பாலமாய அவர்கள் இரண்டரக் கலந்து வாழ்ந்ததைக் கட்டியம் கூறுகின்றன.

தமிழ்-முஸ்லிம் பாகுபாடின்றி வாழ்ந்த பக்கத்து உறவுகள், தமிழால் இணைந்து பெருமைப்பட்டவாழ்க்கை, சுற்றிவளைப்புக்களாலும் கெடுபிடிகளாலும் சுயமிழந்த தவிப்பு, சொந்த ஊரில் வாழமுடியாத பரிதாபம், முகாம்களின் தடுப்புக்களும் தப்பித்துக் கொண்ட தருணங்களும், பிரிவினைகளுக்குள் அகப்பட்ட சிறுபான்மை, வாழ்வால் உறைந்து போன மனிதம்,அகதியாய்ப் போன வாழ்விதம், கடத்தல்களால் சிதறப்பட்ட வாழ்க்கைகளும் மீளப்படுத் தப்படாத பழைய நினைவலைகளும், பாடசாலைகளால் மீட்டப்படும் ஒன்றிணைந்த சமூக உறவுகள் என நாம் காணநினைக்கும் அன்றைய யுத்த சண்டித்தனத்தின் அகோரச் சூழலையும் அதன் அதிர்வலைகளையும்

ஒரேஓட்டத்தில் கூறி முடித்திருக்கும் கவிஞர் பாறுக்கின் சாரப்படுத்தல் பணி வாழ்த்துக்குரியது.

“ஓடிச் செல்வதா?
தேடும் குழுவைத்
தேடிச் செல்வதா?
ஊரை விட்டு
ஒளித்துச் சென்ற
கோழியைக் குஞ்சைக் கூட்டிவருவதா?
துளைத்தன நெஞ்சைக்
கேள்வி வண்டுகள்!
அழுது அழுது
வீங்கின கண்கள்
எஞ்சியிருந்தது
பிரார்த்தனை மட்டுமே!
இருகரம் ஏந்தினான்
புரிந் துணர்வோடு வாழ்வதற்கான
சரிசமமான சமாதானம் நாடியே!”

என முடிவுறுத்திக் கொள்ளும் “எஞ்சியிருந்த பிரார்த்தனை” யோடு நமது உணர்வலைகளையும் கவிஞனோடு இணைந்து முடித்துக் கொள்வதுதான நியாயமாகப்படுகிறது.

“எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு” ஆரம்பமாகி “விழித்துக் கொண்ட பஸ்தரிப்பு நிலையம் வரை” உப தலைப்பிடலோடு ஆரம்பமாகும் இந் நவீன காவியத்தில் தலைப்பிடலுக்குள்ளும் வரிகளின் தடவல்களிலும் படிமங்கள் ஊசலாடுகின்றன. இதில் பாம்பை நோக்கிய பயணம், சிறகுப் பட்டை சிலுப்பிய சேவல்” உள்ளிட்ட வரிகள் ரசனைக்குரியவை.

“அடைக்கபட்ட வாகனத்திலிருந்து கொட்டப்பட்டன மனித மூட்டைகள், மீண்டும் நெஞ்சுக் குழிக்குள் சுவர்க்கடிகாரம், நத்தையாகின அக்கம் பக்க அயற்புற வீடுகள்” என உருவகப்பாடுகளும்காவியத்திற்கு வலிமை சேர்த் துள்ளன. புதுமைப்படுத்தப்பட்ட படைப்பாக்க முயற்சிக்குள் தம்மை ஆட்படுத்திக் கொள்ள முனைந்துள்ள பாலமுனை பாாறுாக் முன்னரான காவியப் பாத்திரங்களின் சாயலை மீள்வாசிப்புச் செய்வதிலிருந்து மாறியிருக்கலாம்.

ஆக மொத்தத்தில் பாவேந்தர் பாலமுனை பாறுக்கின் கொந்தளிப்பு, தோட்டுப்பாய் மூத்தம்மா, எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு ஆகிய மூன்று

நவீன காவிய முயற்சிகளும் அதன் இலக்கை நோக்கி நகர்ந்ததாக அல்லது இலக்கைத் தொட்டிருக்கின்றன என்பதாகவே துணிய வைக்கிறது.

மரபோ நவீனமோ எச்சட்டத்துக்குள் வைத்து அளவிட்டாலும் கவிதை என்கின்ற துறைக்குள் கவிஞருக்கிருந்த நீண்ட அனுபவமும் தம் சமூகம் மீதான வாசிப்பும் அனுபவத்தின் தேடலும் குறும்பாக்கள் அல்லது குறுங்கவிதைகள் என அடையாளம் கூறிநிற்கும்அவரது அதுசார் புலமையும் மொழியினை லாபகரமாக்கிக் கொள்ளப் பக்குவப்பட்ட நிலையும் மொழித்துள்ளலை வேண்டிய நிற்கும் படிமங்களின் விசாலமும் இக் காவியஙகளின் பிரசவத்திற்குவலிமை சேர்த்துள்ளன.

"பாலமுனை பாறுக்கின் மூன்று நவீன காவியங்கள்" என்னும் இப்பிரதிகள் மீதானவாசிப்பில் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் குறிப்பிடுவது போல் இவ்வாளுமைகளைக் கொண்டு நாவல் படைத்திடுகின்ற முயற்சியில் இறங்கியிருக்கலாமே என்ற கருத்தியலை நானும் கூறிவிடை பெற முனையவில்லை. "அதை அவர்கள் செய்யட்டும், இது உங்களுக்குரியது"

மாற்றங்களே புதுமைகளுக்கான மூலங்கள். அம்மூலத்தை உள்வாங்குபவனே கால நேசிப்பின் படைப்பாளியாவான். இன்னும் பல புதுமையான கருத்தாடல்களை உள்வாங்கி எதிர்பார்ப்புக்களோடு இக்குறுங்காவிய அல்லது நவீன காவிய அல்லது புதுக் காவிய முயற்சி தொடர எமது கௌரவமான வாழ்த்துக்கள்.

தங்களின் இலக்கிப் பயணிப்புக்கு நமது உளம் நிறைந்த பிரார்த்தனைகள்

பாலமுனை பாறூக் குறும்பா...

பொருத்தம்

ஓடுகின்ற வண்டியிலே சோடி
ஊருலகைத் தான்மறந்து கூடி
ஓடிவிடக் குடும்பத்தார்
ஊடறுத்து உறவறுத்ததார்
(ஜாதகத்தில்)
சேரலையாம் பொருத்தமெனச் சாடி!

ஈழம் தந்த இலக்கிய மேதை : பாலமுனை பாறூக்

மேமன்கவி

தமிழ் இலக்கியச் சூழலில் இரட்டையர்கள் என அடையாளப் படுத்தப்பட்ட பல படைப்பாளிகள் நாம் அறிவோம். ஈழத்து தமிழ் இலக்கியச் சூழலிலும், இலக்கிய இரட்டையர்களை நாம் அறிவோம். என்னுடைய இலக்கிய உலகப் பயணத்திலே நான் அறிந்த, என் நண்பர்களாக வாய்த்த இலக்கிய இரட்டையர்களாக அன்புடீன்-பாலமுனை பாறூக் இருவரைச் சொல்வேன்.. இவர்களில் இரட்டையர்களில் ஒருவரான நண்பர் ஆசுகவி அன்புடீனின் பொன் விழா சமீபத்தில் கொண்டாடப்பட்டது. அதற்கு வெளியிடப்பட்ட மலருக்கு நண்பர் அன்புடீன் பற்றிய ஒரு சிறிய குறிப்பு எழுதக் கிடைத்தமை சந்தோஷமான சந்தர்ப்பம், அதே போல் இலக்கிய இரட்டையர்களில் இன்னுமொரு வருமான நண்பர் பாலமுனை பாறூக்கின் பொன் விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் இந்த மலருக்கும் எழுதச் சந்தர்ப்பம் கிடைத்தமை ஒரு மகிழ்ச்சியான தருணமே.

நண்பர் பாலமுனை பாறூக் எனக்குக் கவிஞராகவே அறிமுக மானார். புதுக்கவிதை, மரபு கவிதை, ஹைக்கூ, குறும்பா என பல்வேறு கவிதை உருவங்கள் கையாண்டு ஈழத்துக் கவிதைத் தளத்தில் இயங்கி வருபவர்,

நவீன தமிழ் இலக்கியத்தில் அங்கதச் சுவை, பேச்சோசைப் பண்பு ஆகியவை கையாளும் பிரதிகளை வாசித்து வருகிறோம். இவற்றில் தமிழகத்திலும், ஈழத்திலும் சிறுகதை இலக்கியத்தில் கையாளப்படும் அங்கதச் சவை பேச்சோசைப் பண்பு சிறப்பான அளவிலும், முறையிலும் வெளியிட்டு வந்துள்ளதை நாம் அவதானிக்க முடிகிறது. ஆனால் ஈழத்துத் தமிழ்க் கவிதையில் கையாளப்படும் அங்கதச் சுவையும். பேச்சோசைப் பண்பும் தமிழகத்திலிலிருந்து வேறுப்பட்டதாகவும், தனித்துவமாகவும் அமைகிறது.

ஈழத்துத் தமிழ்க்கவிதையில் பேச்சோசைப் பண்பையும் அங்கதச் சுவையையும், கையாளுவதில் சிறப்பு பெற்ற கவிஞர்கள் பலர் இருக்கிறார்கள், அவர்களில் மஹாகவி, நீலாவணன் ஆகியோர் களை முன்னோடியாகக் கொள்ளலாம். மஹாகவி அவர்களின் குறும்பாக்களிலும், கவிதைகளிலும், நீலாவணனின் நெடுங்கவிதை களிலும் காணப்படும். மேற்குறித்த இரு தன்மைகள் கையாளு கின்ற அவ்விரு முன்னோடி கவிஞர்களுக்கு அடுத்த தலைமுறை கவிஞர்களின் வரிசையில் பொன்விழா காணும் நண்பர் பாலமுனை பாறூக் முன்னணியில் நிற்கிறார். அவர் தரும் புதுக்கவிதை, மரபு கவிதை, ஹைக்கூ, குறும்பா, நெடுங்கவிதை போன்றவற்றில் அவருக்கான தனித்துவத்துடன், அவரது பிரதேசத்திற்குரிய தன்மையுடன் முன் வைக்கும் பேச்சோசைப் பண்பு, அங்கதச் சுவை கலந்த படைப்பு பிரதிகள் மூலம் கவனத்திற்குரிய கவிதைப் படைப்பாளியாக அடையாளமாகுகிறார்.

அவற்றில் அவரது நெடுங்கவிதைப் பிரதியான “தோட்டுப்பாய் மூத்தம்மா” மூலம் ஒரு பிரதேசத்தின் மூத்த தலைமுறையினரை கவிதையில் வாழ வைத்திருப்பதுடன், அப்பிரதியினூடாக அப்பிர தேசத்தின் சமூக கலாசார விழுமியங்களை கவிதை இலக்கியத்தின் வழியாக ஆவணப்படுத்தி இருப்பதும் பாராட்டத்தக்க ஓர் அம்சம் எனலாம். அதன் காரணமாகத்தான் 2011 ஆம் ஆண்டுக்கான கொடகே சாகித்திய விழாவில் அவ்வாண்டுக்கான சிறந்த கவிதைத் தொகுதிக்கான விருதினை பெற்றுக் கொண்டதுடன் தேசிய மட்டத்தில் வேறு பல பரிசில்களையும் அத்தொகுப்பு பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பொன்விழா நாயகன் நண்பர் பாலமூனை பாறூக் புரிந்த பணிகளுக்குப் பாராட்டுகள் தெரிவிப்பதோடு, எதிர் காலத்தில் மேலும் சிறப்பான இலக்கியப் பணிகள் ஆற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

பாலமுனை பாறூக் - ஒரு முத்தாரம் !

ஏம்பல் தஜம்முல் முகம்மது
இந்தியா.

நீலமணிக் கடலுக்கு மேற்கும், நெஞ்சை
நிறைக்கின்ற பசுமைக்குக் கிழக்கும் நின்று
காலமகள் கொடையாகத் திகழும் ஊரில்
கலை நூல்கள் பலவற்றைக் கற்றதோடு
சீலத்தில், சிந்தனையில் சிறந்த மக்கள்
செம்மாந்து வாழ்ந்துவரும் வரலாற் றுக்குப்
பாலமுனை பாறூக்,ஓர் அத்தி யாயம் !
பாரெல்லாம் போற்றுகிற முத்தின் ஆரம் !! (1)

எழுத்தாலே பழுத்தபழம் நன்மை கண்டால்
இதயத்தில் பூமணக்கும் நுகரு வோரை
இழுத்துவரும் நட்புவடம் எழுத்தில் பேச்சில்
இழையோடும் நகைச்சுவைக்குச் சொந்த மாம்,உன்
கழுத்துக்கு மாலைகளும் கைக ளுக்குள்
கண்ணியமாம் விருதுகளும் வருதல், மேலோர்
கெழுதகைமைக்(கு) அடையாளம்! உனக்கே யான
கீர்த்திக்கும் அடையாளம், ஆகும் அன்றோ! (2)

கவிதையுடன் கட்டுரையும் கதையும் நல்கும்
கைவிரலில் இலக்கியத்தேன் சுரக்கும் இந்தப்
புவிஎங்கும் பாலமுனைப் பேரைச் சொன்னால்,
புரிந்தவர்க்குப் பூரிப்பாய் இருக்கும் பேச்சில்
செவிச்செல்வம் வழங்கிடுவாய், மேடை காணும்
சிறப்பதிதி நீயென்றால் சிந்தை பூக்கும்
குவிக்கின்ற செல்வத்தின் மேலாய், இன்று
கொண்டபுகழ் நிலைத்திருக்க நீடுவாழ்க! (3)

வாழுமுனைக் கொண்டாட நண்பர் கூட்டம்
வாய்த்தது உன் நற்பேறு கருதிக் கற்ற

ஆழமுனை உயர்த்தியது உனக்கே யான
அன்புமனம் உயர்த்தியது! வாய்மை, ஆர்வம்
நாளுமுனை உயர்த்திவரும்! நல்லோர், கற்றோர்
நாடுகளைக் கடந்திருந்தும் இணைத்து நிற்கும்
பாலமுனை, பொன்னான போதில் வாழ்த்தும்
பாக்கியத்தைத் தந்தமைக்கு நன்றி! வாழ்க !! (4)

கெழுதகைமை	-	நெருங்கிய நட்பு
சிறப்பதிதி	-	சிறப்பு அதிதி - விருந்தினர்
வாழுமுனை	-	வாழும் + உனை
ஆழமுனை	-	ஆழம் + உனை
நாளுமுனை	-	நாளும் + உனை
பாலமுனை	-	பாலம் + உனை (நட்புக்குப் பாலமாகிய உனை)

குறுங் காவியப் பெருமகன் பாலமுனை பாறூக்கின் இலக்கியப் பிரவேசத்தின் ஐம்பதாண்டுகள்..

அட்டாளைச்சேனை எஸ். எல். மன்சூர்.

இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பர். அந்தக் கண்ணாடியைக் காலம் முழுவதும் மிகக் கவனமாகக் கையாண்டு கட்டிக் காப்பாற்றி வருபவன்தான் உண்மையான இலக்கியவான் என நோக்கப்படுகின்றான். ஏனெனில், புற்றீசல்கள் போல் திடீர்த் திடீரென வெளியாகும் கவிஞர்கள் என்கின்றவர்கள் முன்னிலையில் காத்திரமான படைப்புக்களாலும், பண்பட்ட நயமொழிகளாலும், தேடலின் ஊடாக, மொழியின் புணர்ச்சியைப் புத்தாக்கமாக, புத்தெழுச்சியுடன் இலக்கியத்தின் முடிச்சுகளை அவிழ்த்துத் தருபவன் சிறந்த கவிஞனாகிறான்.

நவீனயுகத்தின் மொழியாடல்களை அனைவரும் புரிந்து கொள்ளும் வகையிலும், மரபும், நவீனமும் சிந்துபாடும் அழகிய முத்தமிழை கடந்த ஐம்பது ஆண்டுகளாக இலக்கிய உலகில் கையாண்டு மணம்பரப்பும் ஒருசிலருள் பேசப்படுகின்ற ஒருவர்தான் நமது குறுங்காவிய பெருமகன் என்கிற கவிஞர் தென்கிழக்கின் பாலமுனை தந்த மாபெரும் கலைஞன் கவிஞர் பாறூக். இவரது இலக்கியப் பிரவேசம் ஐம்பது ஆண்டுகளைக் கடந்துவிட்டதை எண்ணுகிறபோது அப்பிராந்தியத்தில் வாழ்கின்றவன் என்கிறவகையில் எமக்கொல்லாம் பெருமையாக இருக்கிறது. இன்னும் பலநூறு கவிபடைக்க வாழ்த்துவோம்.

ஆம், தென்கிழக்கின் மூத்த கலை இலக்கிய ஆளுமை, கவிதைகளின் அடையாளம், பல்வேறு கவிதைகளை

நூலுருவாக்கிய கவிஞன், பதம் (1987), சந்தனப் பொய்கை (2009) தொடக்கம் தோட்டுப்பாய் மூத்தம்மா ஊடாக கடந்தகால சடத்துவ வித்தைகளை கவிவரிகள் ஊடாக குறுங்காவியமாக்கிய கவிஞர், பாவேந்தல்பாலமுனை பாறூக் அவர்கள் இற்றைக்கு சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தமது இலக்கியப் பயணத்தை ஆரம்பித்தார். தன்பெயரோடு தனது ஊரையும் தாங்கிய வண்ணம் உலகமெல்லாம் தன் கவி ஆளுமையின் மூலம் இன்று தமக்கான ஓரிடத்தைக் கொண்டுள்ள கவிஞரை எதிர்கால சந்ததிகளும், தமிழுலகம் உள்ளவரையிலும் தமிழுக்குத் தொண்டாற்றிய நமது காலத்துக் கவிஞரை பாராட்டி நினைவுகூறுவது காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்த அவரது நண்பர்கள் குழாம் இவ்வாண்டு பாவேந்தலுக்கான பொன் விழா ஆண்டாக மலரச் செய்திருக்கின்றமை பாராட்டுக்குரிய தாகும்.

பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள் 2010 இல் வெளியிட்ட கொந்தளிப்பு என்கிற நவீன குறுங்காவியத்தின் ஊடாக எம்மக்கள் மத்தியில் காணப்படும் சமூகப் பிரச்சினைகளை அதாவது விவசாயிகள், மீனவர்கள் போன்றோரின் வாழ்க்கைக் கோலங்களை, அவர்கள் எதிர் கொள்ளும் பல்வேறு அரசியல் நெருக்குவாரங்கள், உளக் குமுறல்கள், பேரினவாதிகளின் ஒடுக்குமுறைகள் போன்றவற்றை தமது கவித்துவ வித்தைகளை அற்புதமான மொழிவடிவில் உலகறியச் செய்திருந்தார். அந்நூலினைப் பற்றி கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியரான செ. யோகராசா "கொந்தளிப்பு என்றொரு நவீன குறுங்காவியத்தின் ஊடாக பாலமுனை பாறூக் முஸ்லிம் மக்களது சமூகப் பிரச்சினைகள் போன்றவற்றை பண்பாட்டு மாற்றங்கள் ஊடாக ஆர்பாட்டமில்லாமல் அழகான கோட்டுச் சித்திரங்களாகவும், பனித்துளிகள் நடனம்புரியும் புல்லின் இதழ்களில் வானம் முழுவதும் அடங்குவதுபோன்று கச்சிதமான உத்திகளைக் கையாண்டதன் மூலம் குறுங்காவியத்தினுள் பல விடயங்களை கொண்டுவருவது கவிஞருக்கு சாத்தியமாகி இருந்தது. அத்துடன் நல்லதொரு நாவல் வாசிப்பு அனுபவத்தை வாசகர்கள் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை கொந்தளிப்பு நூல் வழங்கியிருந்தது" என்கிற கருத்தினை பதிவுசெய்திருந்தார்.

இவ்வாறாக நமது கவிஞரின் இலக்கியப் பயணம் 1970களில் ஆரம்பித்த போது அக்கால கவிஞர்கள் புதியவர்களை தம்மோடு இணைத்துக் கொண்டு இலக்கியம் படைத்தலில் பல்வேறு புதுமைகளை இலக்கிய உலகிற்கு வழங்கியிருந்தனர்.

இலங்கையின் இலக்கியப் பரப்பு இடதுசாரிகளின் முற்போக்குச்சிந்தனையாளர்களால் தூசுதட்டப்பட்டு பெருவெளியில்இயங்கிக் கொண்டிருந்த காலமது. அக்காலங்களில் தமது மதவாதத்தைதன்வாதமாக்கி, கவித்துவங்களை மதப்பற்றோடு அரங்கேற்றியவர் நமது பொன்விழாக் கவிஞர்பாறூக் அவர்கள்.

தமது புலமைத்துவ எண்ணங்களை கவித்துளிகளாக்கி இலக்கியப் பரப் பில் வியாபிக்கச் செய்து வந்திருக் கிறார். அதன் சான்றாக பல நூல் களைப் படைத்திருக்கிறார் கவிஞர் பாவேந்தல். அவற்றுள் எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு (2012), குறும் பாக்கள் (2013), வலைக்குள் மலர்ந்த வனப்பு (2017) போன்றவைகளும் சான்று பகிர்கின்றன.

பாலமுனை பாறூக் அவர்களின் பதம் கொண்டுள்ள இரசனைக் குறிப் பொன்றில் பேராசிரியர் எம்.ஏ. நுஃ மான் அவர்கள், “வறுமைப்பட்ட பெண்களின் சமூகநிலை இங்கு பேசப்படுகிறது. கவிதையின் மொழி அழகைவிட அதன் பொருள் வலிமை யால் பேசப்படக்கூடிய கவிதைகளே பலவுண்டு. எவ்வகையில் பார்த்தாலும் பாலமுனை பாறூக் புறக்கணிக்கப்பட முடியாத ஒரு கவிஞர் என்பதை யாரும் மறுக்கமுடியாது” என்கிறார்.

இன்னுமொரு கட்டத்தில் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் பாலமுனை பாறூக் கின் காவியங்கள் பற்றிய நினைவாடலின் போது, “கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதிவரை காவியம் பெரிதும் கற்பனை உலகு சார்ந்ததாகவே இருந்தது. யதார்த்த உலகுக்குரிய இலக்கிய வடிவமாக நாவல் வளர்ச்சி பெற்றது. யதார்த்த வாழ்வையும் காவியத்தையும் இணைக்கும் முயற்சி இருபதாம் நூற்றாண்டுக்குரியதுதான். தமிழில் அதில்வெற்றி பெற்றவர்கள் மிகச் சிலரே. மகாகவி முக்கிய மானவர். இப்பொழுது பாலமுனை பாறூக் அத்தகைய ரசவாதத்தைச் செய்து பார்த்து தனது கொந்தளிப்பு, தோட்டுப்பாய் மூத்தம்மா ஆகிய இரண்டிலும் அவர் பெருமளவு வெற்றி பெற்றிருக்கிறார்” என்கிறார்.

நமது கவிஞர், நம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பவர், நாடறிந்த எழுத் தாளர் பாலமுனை பாறூக் அவர்கள் தமது கவித்துவமிக்க எழுத்துத் திறமையால் பல்வேறு பாராட்டுக் களைப் பெற்றவர். மஹாகவி, முருகையன், நீலாவணன் என்ற பெயர்வரிசை ஈழத்துக் கவிதை உலகில் பிரசித்தமானவை போன்று பாலமுனை பாறூக் என்கிற கவிஞர் நமது அடையாளமாக இன்றுவரை மிளிர்கின்றார். தமிழ் இலக்கியப் பரப்பில் பல தளங்களில் இயங்கிக் கொண்டிருக் கின்ற நமது மூத்த ஆளுமைகளுள் ஒருவராக வர்ணிக்கப்படும் பாவேந்தலின் துல்லியமான கவிதையாடல்கள் கேட்போரை கூர்மையாக்கச் செய்யும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக் காது. பல மூத்த, இளைய கலைஞர் கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் என எல்லோராலும் பாராட்டப் பட்டவர் எங்கள் பாலமுனை பாறூக் ஆவார். இவர், அனைவரோடும் சிறந்த முறையில் பழகும் நற்குண

முடையவர். இவருக்கு பலதளங்களி லிருந்தும் பலதரப்பட்ட விருதுகள் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்க தாகும்.

அந்தவகையில் 2009ஆம் ஆண்டு "கலாபூஷணம்" விருது கிடைத்து பாராட்டப்பட்டார். மேலும், சாமஸ்ரீ சிறாஜூல் புனூஸ், கவிப்புனல், கவித் தாரகை, கவிஞர் திலகம் போன்ற விருதுகளையும் பட்டங்களையும் பெற்றிருந்தார். 2002இல் இலங்கையில் இடம்பெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய நிகழ்வில் சிரேஷ்ட கவிஞருக்கான விருது இவருக்கு கிடைத்தது. மலேசியா, இந்தியா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற இலக்கிய மாநாடுகளில் பங்கேற்று தமது கவித்துவத்தை நிலைநிறுத்தி பாரட்டப்பட்டதுடன், இந்தியாவில் இடம்பெற்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கிய 15 ஆவது மாநாட்டில் (2011 - காயல்பட்டினம்) கலந்து கொண்டு கவிஞர் தமிழன்பன் தலைமையில் ஊடகம் எனும் தலைப்பில் கவிதை பாடியபோது அனைவராலும் பாராட் டிப் பேசப்பட்டவர்.

மேலும், சிறந்த சமூக சேவையாள ரான பாவேந்தல் பாலமுனை பாறூக், அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னனியின் அம்பாறை மாவட்டத் தலைவராகவும், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.யின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் ஆகவும், பாலமுனை கிராமோதய சபையின் தலைவராக வும், பாலமுனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவராகவும், பால முனை பூஞ்சோலை எழுத்தாளர் மன்றம், தென் கிழக்கு கலாசார பேரவை என்பவற்றின் செயலாளரா கவும் திறம்பட ஆற்றியபெருமை அவரையே சாரும். மேலும், இலங்கை வங்கியின் உயர்பதவிகளை வகித்த நமது பொன்விழா நாயகன், இலங்கை இஸ்லாமிய நூல் வெளியீட்டு பணியக பணிப்பாளர் சபை உறுப்பினரா கவும், கல்முனை புதிய பறவைகள் கவிதா மன்டலத்தின் ஸ்தாபக உறுப்பினராகவும், அகில இலங்கை சமாதான நீதிபதியாகவும், அட்டாளைச் சேனை மத்தியஸ்த சபை உறுப்பினரா கவும் இன்னும் பல்வேறு இலக்கிய கருக்களின் பிதாமகனாகவும், ஆலோச கராகவும், அனைவரையும் மதிக்கின்ற மகோன்னத புரிசராகவும் நமது கண்முன்னே இலக்கிய கவிதா சாகரத்தில் கவிமணம் பரப்புகின்ற இலக்கிய வேந்தன் குறுங்காவிய நாயகன் அன்புக்குரிய பாலமுனை பாறூக் அவர்கள். அத்துடன், பாலமுனை உதுமாபுரம் மீள்குடி யேற்றக் கிராமத்தை நிறுவுவதிலும், அங்கு அமைக்கப்பட்டுள்ள ஜும்ஆப் பள்ளிவாசலை அமைப்பதிலும் முன்னின்று உழைத்திருந்ததையும் எம்மால் இவ்வேளை நினைவுகூற வேண்டியிருக்கிறது.

மேலும், தமது வெளியீடுகளுக்கான விருதுகள் பலவற்றையும் பெற்றிருந்த மையும் மறக்கமுடியாத வைகளுள் சிலவாகும். அதாவது, பதம் (1987), சந்தனப் பொய்கை (2009) கவிதை

நூல்களின் மூலம் பிரகாசித்தவர் பாவேந்தல் அவர்கள். இவரது கொந்தளிப்பு எனும் குறுங்காவியம் 2010ல் சிறந்த காவிய நூல் என இலங்கை அரச சாஹித்ய சான்றிதழைப் பெற்றுக் கொண்டது. இவரது தோட்டுப்பாய் மூத்தம்மா (2011) குறுங்காவியமும் மூன்று தேசிய சாஹித்ய விருதுகளான இலங்கை அரச சாஹித்ய விருது (2012), கொடகே தேசிய சாஹித்ய விருது 2012ன் உருத்திரமூர்த்தி மகாகவி விருது, இலங்கை இலக்கிய பேரவை (யாழ்ப்பாணம்) சிறப்புச்சான்று என்பன அவ்விருதுகளும் பரிசுகளும் என்பதை நினைவுறுத்துவோம்.

தற்காலத்தில் முகநூலில் அதிகாலை கவிதைகளோடு தன் இலக்கியப் பணியைத் தொடங்கி புதுக்கவிதை யிலும், மரபுக் கவிதையிலும், புனைகதை இலக்கியத்திலும் முனைப்போடு இயங்கி வரும் அன்புக்குரிய பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள் இன்னும் இலக்கிய உலகில் நீண்டு நிலைக்க வேண்டும். தமது இலக்கிய ஆளுமை கள் ஊடாக எதிர்கால சந்ததிகளுக்கும் இவரது கவிப்பேளை சென்றடைய வேண்டும். இன்னும் பல நெடுங் காவியங்கள் படைக்க வேண்டும் என்பதே அனைவரதும் அவாவாகும். அந்த எண்ணம் கொண்டு பாவேந்தல் பொன்விழா மன்றம் அமைத்து நண்பர்கள் வட்டம் இயங்குவதைக் காண்கின்றபோது தென்கிழக்கு கவி ஒளி பெறுகிறது என்றே நினைக்கத் தோன்றுகிறது. வாழ்க அவர் நாமம். வளர்க அவர் கவித்துளிகள். பாவேந்தல் பொன்விழா சிறப்பாக நடைபெற நாமும் வாழத்துவோம்.

பாலமுனை பாறூக் குறும்பா..

பிஞ்சு

வஞ்சகமே இல்லாத நெஞ்சு
வடிவான உடல்வாகு மஞ்சு
அஞ்சுகமே அஞ்சுகமே
என்றவளை அணைத்தவனேன்
பிரிந்தானோ? இன்றவளின்
வயிற்றினிலே பிஞ்சு !

பரந்த உள்ளம் கொண்ட பண்பட்ட கவிஞர் பாலமுனை பாறூக் !

நாளும் இலக்கியம் படைக்கும் கவிஞர்களில் நாடறிந்தவர் நம் பாலமுனை பாறூக்.

இலக்கியப் பணியில் பொன் விழாக் காணுகின்றார்.
இந்திய - இலங்கை இலக்கிய உறவை விசாலித்த மானா மக்கீன் வழியில் அந்த உறவைப் பேணிக் காத்து வருபவர் நம்கவிஞர் பாலமுனை பாறூக்.

நெடிய தோற்றமும்
நேரிய தன்மையும்
பரந்த உள்ளமும்
பண்பட்ட எழுத்தும்
மண்மணக்கும் மொழியும்
மனதைக் கவரும் கவியும்
வாய்க்கப் பெற்றவர்.

எழுத்துத் தவத்தில் இவருக்கு வளமாக வாய்த்த தெல்லாம் மக்களை வசீகரிக்கும் இவரின் நூல்கள்.

இவர்-
கரும்பாகவும் இனிப்பார்
அரும்பாக்களும் இசைப்பார்
குறும்பாக்களும் வடிப்பார்.
இவரின் சிந்தனைகள்-
புதுமையை உருவாக்கும்
புரட்சிக்கு வித்திடும்.

இவர்-
கவித்தேன் வடிக்கும்
சிந்தனைத் தேனி
நம் கனவைத் தான் காணும் ஞானி.

இவரின்-
சொல்லாட்சியும் கவியாட்சியும் இந்த மண்ணை யாளும்.
பாலமுனை பாறூக் பொன்விழாக்
காணுகின்றார்.
நம் வாழ்க்கை- பலரின் வாழ்த்தைச் சூட வேண்டும்
பாலமுனை பாறூக் இன்று பலர்வாழ்த்தை மாலையாகச்
சூடுகின்றார்.

வாழ்க அவர்! வளர்க அவர் பணி!!

கவிஞர் எம் .ஜலாலுதீன்

செயலாளர், இஸ்லாமிய இலக்கியப் பேரவை,
அமைப்பாளர் நிலா வட்டம்,
சென்னை- 39
தமிழ்நாடு
இந்தியா.

கலை வளர்த்த காவிய நாயகன் !

நட்புடன் எழுகவி.

பாக்களினால் பூத்த அந்த முகத்தைப் பலமுறை பார்த்திருக்கிறேன் இருந்தாலும் இதயத்தில் சொருகி எண்ணத்தில் இருப்பாட்டியது எனது "தண்ணீருக்கு வந்த தாகம்" நூல் வெளியீட்டு நிகழ்வில்தான். ஊரின் பெயரைத் தாங்கி பல காலங்களாக உச்சாடனம் செய்யப்பட்ட பழக்கமான பெயர் கொண்டவர் இந்த பாலமுனை பாறூக் அவர்கள். வாசகனாகவும், ரசிகனாகவும், வானொலி, பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும் பார்த்தும், கேட்டும் வந்திருக்கின்றேன். அப்போதெல்லாம் இந்தக் கவியுலக ஜாம்பவானைக் காண்பது, கதைப்பது, கைகுலுக்குவது கடினமாகத்தான் இருக்குமென உள் மனதில் பிம்பம் ஒன்று தோன்றியிருந்தது.

நினைப்பதெல்லாம் உண்மையல்ல என்பதை உணர்ந்த அந்தப் பொன்னான நன்நாளில் முதலிரவில் கணவன் மனைவி கைதொடும்போது எல்லா மனசுக்குள்ளும் ஏற்படுவது போலவே ஆனந்தம் பாதி கூச்சம் மீதியாகவும் இருந்தது. அதற்குப் பிந்திய காலமெல்லாம் அவரது பேச்சு செயற்பாடுகள் பழகப் பழக இனித்துப் போனதால் இருவருக்குள்ளும் நட்பெனும் அமுதான காதல் வளர்ந்திற்று.

லாவகமாகக் கையாளும் அவரது கவி மொழிகள் மிகவும் கனதியானது அவை சிந்திக்கவும், சிரிக்கவும், சிலவேளைகளில் அழவும் செய்திருக்கின்றன. இலக்கிய வடிவங்களில் சகலவிதமான பக்கங்களும் அவரது சிந்தனைக்குள் சிறைப்பட்டிருப்பதை வெளிவந்த நூல்கள் முதல் சஞ்சிகைகள் பத்திரிகைகள் என்பன கட்டியம் கூறுகின்றன. அத்தகைய பேரின்பம் தரவல்ல ஆத்மீகக் கவிதைகளைக் கூட தீட்சண்யமாக எழுத வல்லவர் என்பது உலகறிந்த உண்மை.

பாமரர்கள் கூட புரிந்து கொள்ளத் தக்க வகையில் கருத்துச் சிதைவில்லாமல் எளிமையான முறையில் எழுதுவது மட்டுமல்லாது கணீர் என்ற தனது கம்பீரக்குரலில் கவியரங்குகளைத் தலைமையேற்று தொகுத்து வழங்கும்

பொழுதுகளில் சோர்வின்றி கேட்டுக் கொண்டே இருக்கலாம்... அவைகளால் தான் என்னவோ ஈர்த்துப்போன எனது உணர்வுகள் பெரிய மரத்தைச் சுற்றிய பல்லி போல ஆறேழு வருடங்களாக அவரோடு நட்பு கொண்டிருக்கின்றன.

கவிஞன் என்ற தலைக்கனம், பெருமை, ஆதிக்கம் எதுவுமே துளியும் இல்லாத சாதாரணமானவனாக வாழ்ந்து வருவதனால் தான் இன்னும் சொற்கள் சொப்பனமாகி வசனங்கள் வாய்ப்பாடாகி அவரது விரல்களுக்குள் விளையாடிக் கொண்டிருக்கின்றன. இலக்கியக் களத்தில் இத்தனை காலங்களில் பல்வேறு பாத்திரங்களில் பலநூறு மேடைகளில் வளவாளராக, நடுவராக, கவியரங்கத் தலைமையாக மட்டுமன்றி அணிந்துரைகள், வாழ்த்துப் பாக்கள், நூலறிமுகங்கள், நயவுரைகள், அஞ்சலிக் கவிதைகள் என அனைத்துத் தளங்களிலும் விரிந்து வேரூன்றி உயர்ந்த தாழ்ந்த வர்க்க நிலை பாராது குழுக்கள் கோத்திரங்கள் எனப் பிரிந்து வேறுபடாமல் கலை இலக்கியத்தின் பால் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி எதிர்கால சந்ததியினர்க்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்து வரும் பாவேந்தல் அவர்களின் ஆற்றல் கண்டு சில வேளைகளில் நான் பிரமித்துப் போயிருக்கிறேன்.

உருவத்தில் உயர்ந்த மனிதராக மட்டுமல்லாது குணத்திலும் மிக உயர்ந்தவர் என்பது மிகுதமானவர்களுக்குள் அகப்படாத அவரிடம் இருக்கும் மற்றொரு பக்கமாகும். ஏனெனில் இடது கரமறியாது இடம் பொருள் ஏவல் அறிந்து வலது கரத்தால் வாரிவழங்கி பலரின் பசிபோக்கி கண்ணீர் துடைக்கக் காரணமான பெருமனம் கொண்டவர் என்பது நான் சுழியோடியவைகளில் கிடைத்த மெய்மையது.

திட்டமிட்ட நெறிமுறையான நிரல் அமைத்து அதன்பால் கால வண்டியைச் ஓட்டிக் கொண்டிருக்கும் பாவேந்தல் பாறூக் அவர்கள் நானறிந்த வரையில் எவரது விமர்சனப் பக்கங்களுக்குள்ளும் புரட்டப்படாதவர். வாழ்த்துகள், விருதுகள், பொன்னாடை, புகழ் மாலை என அலைந்து குழைந்து திரியாமல் கடந்த ஐம்பது ஆண்டுகளில் தன்னை நாடி வந்த பேறுகளைப் பெற்று திருப்தியுடன் வாழ்ந்து வருகிறார் அல்ஹம்துலில்லாஹ்.

காலத்தால் அழியாத காவியங்கள் தந்த இந் நாயகனுக்கு ஈழத்து வாழ் மண்ணும் மக்களும் கூடி பொன்விழாக் காண்பதில் உளம் பூரிப்படைகிறேன்.

அந்த நல்லுள்ளம் நீள் காலம் இருந்து நிறைசெல்வம் பெற்று நிம்மதியாய் வாழவேண்டி இறைவனைப் பிரார்த்தித்து இனிதாக வாழ்த்துகிறேன்.

பாலமுனை தந்த பாவலன் !

திக்குவல்லை கமால்

எழுபதுகளில் கவிதையாக்கம் மூலம் இலக்கிய பிரவேசம் செய்தவர் பாலமுனை பாறூக். தினபதி கவிதா மண்டலம் அவருக்கு கைகொடுத்தது. எனக்கும்தான்.

இன்று ஐந்து தசாப்தங்களைக் கடந்து நிற்கின்றோம். இலக்கிய உலகில் நின்று பிடிப்பது அப்படியொன்றும் இலகுவான காரியமல்ல. தீர்க்கமான நோக்கும், கடும் உழைப்பும், தொடர் முயற்சியும் அதற்குத் தேவை.

இதில் எங்கோ ஓரிடத்தில் பலவீனமுற்றால் கதை அவ்வளவுதான். பலநூறுபேர் வந்தார்கள் போனார்கள். கிழக்கு மண் - பாலமுனை தந்த இந்தப் பாவலன். காலூன்றி கம்பீரமாக நிற்பவர் சிலரில் ஒருவன்.

இவர் தொட்ட கவிதையை கடைசிவரை கைவிடவில்லை. இன்னொன்றைக் கைதொடவுமில்லை அதில் மரபையும் புதுமையையும் கண்டார். மஹாகவியின் தொடர்ச்சியாக குறும்பாக் களில் நகைப்பையும் நயத்தையும் சிறப்பாகக் கையாண்டு பெயர் பெற்றார். நடைமுறை வாழ்விலிருந்து காவியங்கள் உருவாகாத தேக்கத்தை உடைத்து யதார்த்த காவியங்கள் படைத்தார்.

இலக்கிய வாழ்வின் அறுவடையாக பலநூல்களை வெளிக்கொனர்ந் துள்ளார். அரச இலக்கிய விருது உள்ளிட்ட பல பரிசுகளைக் குவித்தார். இலக்கிய கௌரவங்களை அடைந்தார்.

நண்பர் பாலமுனை பாறூக்கின் இலக்கியப் பணிகளைப் பதிவுசெய்து ஆவணமாக்கும் முயற்சியில் அவரது நேசநெஞ்சங்கள் இயங்கி வருவதைக் கேள்வியுற்று மிகுந்த மகிழ்ச்சிக்குள்ளானேன்.

வாழ்த்துக்கள் நண்பரே !

■

பாவேந்தல் எனும் பவித்திர நாயகன்

அ.ஸ. அஹமட் கியாஸ்

பிரதிக் கல்விப் பணிப்பாளர்

நேற்றுப் போல் இன்னும் நினைவிருக்கின்றது பாலமுனை பாறூக் உள்ளிட்ட குழுவினர் எனது தந்தை அ.ஸ. அப்துஸ்ஸமது வீட்டில் முகாமமைத்து இலக்கியம் பேசிய காட்சி.

சமகால இலக்கியம், முற்போக்கு எழுத்தாளர் பற்றிய விமர்சனங்கள் ஈழத்து இலக்கியப் போக்கு என்றவாறு அவர்கள் ரசித்து, ருசித்து, இலக்கியம் பேசியது எனக்குள் இலக்கியத்தின் மீது ஈர்ப்பினை ஏற்படுத்தியது.

கவிஞர் பாலமுனை பாறூக் அவர்கள் தான் எழுதிய கவிதையை என் தந்தை அ.ஸவிடம் உரத்து வாசித்து விமர்சித்தபோது கவிஞன் என்பவன் இப்படித்தான் இருப்பாரோ என நான் ரசித்ததுண்டு

கவிஞர் என்றால் இப்படித்தான் என நான் இளவயதில் விம்பம் கொடுத்த உருவம்தான் பாலமுனை பாறூக் அவர்கள்.

அமுதென இனிக்கும் இன்பத்தமிழை, எம் உயிரினும் மேலாக நாம் நேசிக்கும் தமிழை உலகமே சிறக்க உச்சரிக்கும் எம் தமிழை பழுதுபடாமல் பாதுகாத்து அடுத்தடுத்த சந்ததிக்காய் புடம் போட்டு, அழகூட்டி, கவியாகவும், கலையாகவும், கதையாகவும், கருத்தாகவும் வெளிக்கொணர்ந்த கலைஞர்களின் பங்களிப்பு போற்றுவதற்குரியது.

அந்தவகையில் ஐம்பது ஆண்டுகள் ஆழப்பணி செய்த பாலமுனை பாறூக் அவர்கள் பாவேந்தலாக பக்குவம் பெற்று உயர்ந் திருக்கிறார். இது அவரது அர்ப்பணிப்புக்கும், தியாகத்திற்கும் இலக்கியத்தின் மீது அவர் கொண்ட காதலுக்குமான அத்தாட்சியே. அதற்காக அவரை பாராட்டுகின்றேன் வாழ்த்துகின்றேன். இன்று அவருக்கான இந்த பொன்விழாவும் பொன்விழா மலரும் அவரது கவித்துவப் பங்களிப்புக்கான கைமாறே.

அ.ஸ. என்ற பெருவிருட்சத்தின் நிழலில் தவழ்ந்து விளையாடிய இலக்கியக் குழந்தையான பாவேந்தல் பாலமுனை பாறூக் இன்று அதே அ.ஸ என்ற பெருவிருட்சத்தை பெருமைப்படுத்தி பாதுகாத்து நினைவுபடுத்தும் மாபெரும் விருட்சமாக வளர்ந்து நிற்பது எமக்கெல்லாம் பெருமையிலும் பெருமையே.

சாஹித்ய விருது உட்பட இலக்கியத்திற்கான அநேக உயர் விருதுகளை தனதாக்கிக் கொண்ட கவிஞர் பாறூக் இன்று சர்வதேச கவிஞர் புலத்திலும் ஆழக்கால் பதித்துள்ளார். தனது கவிதைகளில் அறிவியலையும், ஆத்மீகத்தையும் கலந்து அதனுள் பொருட்சுவை புகுத்தி கனதியும், அழகும், கொண்டு அவர்தந்த இலக்கியங்கள் அவரை அதிகம் நேசிக்க வைத்திருக்கிறது.

சாவின்றி வாழ்பவன் இலக்கியவாதி, சாகரத்தை தன்னுள் அடக்குவபனும் இலக்கியவாதிதான். அவனது படைப்புகள் அவனை பலநூறு வருடங்களுக்கு இப்பூவுலகில் வாழவைக்கும் அந்த வகையில் பாவேந்தல் பாறூக் அவர்கள் இதுவரை ஒன்பது நூல்களைப் படைத்து சாதனை படைத்திருக்கின்றார்.

கிழக்கிலங்கை கவிஞர்கள் வரிசையில் முன்னிற்கும் பாறூக் அவர்கள் சமூகத்தினால் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிசமாகவே நான் கருதுகிறேன்.

ஈழத்து சமுகப் பண்பாட்டினையும், கிழக்கிலங்கையின் தனித்துவப் போக்கினையும், கரையோர மக்களின் வாழ்வியலையும் கவித்துவத்தினூடாக உலகறியச் செய்த இக்கவிஞர், கவிஞர் திலகமாக உலாவருவது எம்மையெல்லாம் பேருவகை கொள்ளச் செய்கிறது.

ஈழத்தின் மூத்த கவிஞராகத் திகழும் பாவேந்தல் பாறூக் அவர்களின் படைப்புகளும், பேச்சுகளும் கனதியானவை. நாவன்மையும் சிந்தனைவளமும் கொண்ட பாலமுனை பாறூக் நீடூழி காலம் வாழ இறைவனை வேண்டுகிறேன். இலக்கியத் தினூடாக எமது பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்கள் பவித்திரப்படுத்திய இப்பேராசான் பேறுகள் பலவும் பெற்று நிம்மதியாய் வாழ இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

மண் தந்த முதுசம் பாவணிந்த கலசம் நம் பாலமுனை பாறூக் ஐயா

சந்தக்கவி எம். ஐ.அச்சிமுகம்மது

சம்மாந்துறை

சிந்து

ஆழத்து மனக்கடலின்
நீளத்தில் கவி புனையும்
ஆளுமையின் உறைவிடமாய் நின்றவர் - நம்
ஈழத்துக் கவி மரபில்
காலத்தால் அழியாத
இன்பத்தேன் கவிதைகளைத் தந்தவர்

மருதத்தின் பசுமையையும்
நெய்தலின் தென்றலையும்
மனந்தழுவக் கல்வியினைக் கற்றவர் - சிறு
பருவத்தில் தமிழன்னை
பக்குவமாய் வளைந்ததனால்
பாவேந்தல் எனும் நாமம் பெற்றவர்

பாலமுனை என்றவுடன்
பாறூக் கெனும் நாமம்
பான்மையுறத் தெரியும் பேர் அடையாளம் - இன்பக்
காலம் முனைப்புடனே
காவியமாய் ஆக்கிவிட
கவிஞர் குழாம் இருமருங்கும் புடைசூழும்

உள்ளத்தில் வெண்பட்டு
உடுத்திருக்கும் காரணத்தால்
உண்மையொளி முகமெங்கும் வார்த்திருக்கும் -அன்பு
வெள்ளத்தில் அகப்பட்ட
எத்தனையோ கவிஞர்களின்
மனப்பூங்கா உங்களினால் பூத்திருக்கும்

தோட்டுப்பாய் மூத்தம்மா
தொன்மைகளின் சாரத்தைத்
துலங்கும் வகை எங்களுக்குக் கொடுத்தாய் - நம்
வீட்டுத் தாய்க் குலங்களுக்கு
விரும்பிநுகர் கனிபோன்றே
விருந்தளிக்கும் பாநடையில் தொடுத்தாய்

பொன் விழாக் காணுகின்ற
பூரிப்பில் வரைந்த கவி
பிழைஎன்றால் வேண்டுகிறேன் மன்னிப்பு - உங்கள்
அன்பில் தான் வரைகின்றேன்
அரும் சிந்தும் குறும்பாவும்
அமைவுற்றால் மனங் கொள்ளும் தித்திப்பு

குறும்பா

பாலமுனை மண்ணீன்ற கலைஞர்
பாவேந்தல் பாறுக் நம் கவிஞர்
காலமுனை வரலாற்றில்
கவிவேந்தர் என்றழைக்கும்
சீலமுறுங் குணங் கொண்ட சுவைஞர்

கிழக்கிலங்கை கவி மரபில் மூத்தவர்
கிளர் மதியில் கூறும் பா யாத்தவர்
வழக்கொழிந்து போகின்ற
வண்மரபை எமக்களித்து
முழக்குகின்ற பெருந்தகைமை பூத்தவர்

வலைக்குள்ளே மலர் வனப்பிற் சென்றேன்
வடித்தெடுத்த சாரங்களைக் கண்டேன்
கலைக்குள்ளே மூத்தகலை
கவிதையெனும் தெள்ளமுதை
மலைக்குள்ளே எடுத்த தேனாய் உண்டேன்

மலர்ச்சியென ஒருவரியிற் தலையங்கம்
மலர்ந்த காலை மலர்வோம் நிலை எங்கும்
புலர்ச்சி அடைகின்றதொரு
புது விடியற் கறை கூவல்

வளர்ச்சியடைகின்ற வகை முழங்கும்
பணிதொடங்க நல்லெண்ணம் வேண்டும்
பகரும் வழி நடப்போமே யாண்டும்
கணிப் பொறியில் மலர்ந்தவற்றை
கைகளிலே தவழவிட்டார்
துணிச்சலுடன் பணிசெய்வோம் மீண்டும்

புன்னகையின் வலிமையினைச் சொன்னார்
புலன் கொள்ளும் மௌனத்தைச் சொன்னார்
தன் வாழ்வின் அனுபவத்தைத்
தந்தார்கள் மற்றோர்க்கும்
நன்னெறியைக் கோர்த்துவைத்தார் அன்னார்

முகமலரில் புகுத்திவைத்த கருத்து
முத்துக்கள் என்றகத்தில் நிறுத்து
நகைகளிலே புன்னகைதான்
நானிலத்தில் முதன்மையெனச்
சுகமாகச் சொன்னவையும் இருத்து

புதுக்கவிதை இலக்கணத்தைப் படித்தேன்
பூட்டிவைத்த சிந்தனையை உடைத்தேன்
எதுகவிதை என்பதற்கு
ஏற்றதொரு தத்துவத்தைப்
பதுக்கிவைத்து எனக்குள்ளே வடித்தேன்

கவிமழையில் வாசித்து நனைந்தேன்
கடும் விகடம் அதற்குள்ளே அறிந்தேன்
செவிநுகரும் வேளையிலே
சிந்தனைகள் ஆர்ப்பரித்து
நவின்றிடத்தான் நளினமாகப் புனைந்தேன்

அப்பப்பா அத்தனையும் சாரம்
அது அவரின் சிந்தனையச் சாரும்
ஒப்பில்லாலயத்தோடு
ஓசையுடன் கற்றறிந்தேன்
எப்படித்தான் அவர் திறனை உரைப்பேன்...?

பாவேந்தல் பாலமுனை பாறுக் என்ற 'பாலமனையார்'..!



மீலாத்கீரன்

பாலமனையாரும் (நான் அன்புடன் அப்படித்தான் பாறுக்கை அழைப்ப துண்டு - எழுத்துவடிவில்) நானும் ஒருவரையொருவர் இருவகைகளில் அறிவோம். ஒன்று - நாங்கள் இருவரும் இலக்கியவாதிகள் என்றவகையில்! மற்றது, இருவருமே இலங்கை வங்கியில் வாலிபம் முழுவதையும் இழந்து 'உர' வரம் பெற்றவர்கள் என்றவகையில்!! எனினும் இலக்கிய வாதி என்ற அறிமுகமே காலத்தால் முன்னிலைபெற்றது சந்தோசமானதும் கூட!

ஒருவிசயத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இவ்வளவு தொடர்பிருந்தும் நான் இதுவரை அவரது கவிதை வாசிப்பை நேரடியாகக் கேட்டதில்லை அதற்கான சந்தர்ப்பம் எனக்கு அமையவில்லை - அவர் கிழக்கில், நான் மேற்கில் என்று எதிர்த் திசைகளில் சீவிப்பதனால்! கடந்த நான்கு வருடங்களாகத்தான் நாங்கள் இருவரும் முகநூல் வழியாகத்தான் பேசிக்கொள்கிறோம் கருத்துக்களை உழுது கொள்கிறோம்...

1970ன் ஆரம்பங்களில் பாலமுனைக் கிராமத்தைப்பற்றிநான் அறிந்திருக்க வில்லை. தன் மண்ணுக்கு தனது கவிதைகள் மூலம் முகவரி தந்து - எனக்கும் என்னைப் போன்றோருக்கும் இன்னுமேன், தமிழகத்திற்கும் - பாலமுனை என்ற தனது சிறு கிராமத்தை அடையாளப்படுத்தியதில் முதன்மை யானவர்!

அதற்காகவேனும் பாலமுனை மக்கள் பாவேந்தலுக்கு நன்றிக்கடன் பட்டிருக் கிறார்கள்.

எழுபதுகளில், மருதமுனையில் வாழ்ந்த குறுகிய காலத்தில் - அவரது வீட்டுக்கு ஒரேயொரு விசிட் அடித்து ஓர் இரவு தங்கி, காலையில் சுவையான பாலப்பமும், கப்பல் வாழைப்பழமும், கட்டித் தயிரும் வயிறாரத் தந்து உபசரித்தது இன்றும் ஞாபகத்தில் இருக்கிறது...

அக்காலங்களில் பாறுக், 'பயணங்கள் முடிவதில்லை' கதாநாயகனின் 'கெட்டப்'ல் எப்போதும் காணப் படுவார். ஒரேயொரு வித்தியாசம் - அவருக்குத் தாடியுண்டு நம்மவருக்கு அது மிஸ்ஸிங்! அக்கால 'ட்ரெண்டிங்' கும் கூட ஹிப்பி ஹெயார் ஸ்டைலும், பெல்பொட்டம் டவுசரும்தான்!

பாலமனையார் கைவைக்காத கவிதை வடிவம் எதுவும் இல்லையெனலாம். அந்தளவுக்கு அவர் கவிதை இலக்கியத் தைக் காதலித்தவர். கவிதையே அவரது முதலாவது காதலியும் கூட என்பது எனது உறுதியான ஊகம்.

பாவேந்தலின் கவிதைவடிவங்களில் என்னைமிகவும் கவர்ந்து லயிப்புக் குள்ளாக்குவது அவரது குறும்பாக்கள் தான்! அதில் அவர் கையாளும் கருப்பொருளும் சமூகம் சார்ந்தவை. குறும்பாவின் சிலஉள்ளீடுகளான அங்கதம், நகைச்சுவை, நக்கல் நையாண்டிகளுக்கும் இருக்காது - குறை!

இலங்கையில் குறும்பாவின் முன்னோடி யும், சக்கரவர்த்தியுமாக விளங்குபவர் - மகாகவி என்று பிரபலமான கவிஞர் உருத்திரமூர்த்தியாவார். மரணிக்கக் கூடாதவயதில் - இலக்கிய உலகில் மேலும் சாதிக்க வேண்டிய நிலையில் காலமான அவர் - சர்வதேசக் கவிஞனும் எனது நண்பனுமான சேரனின் தந்தை.

மகாகவிக்குப் பிறகு, குறும்பாவை வளர்த்தெடுத்து - அதனை இற்றை வரை காலூன்றி நிலைக்க வைத்துக் கொண்டிருப்பவர் நமது பாறுக் என்றால் அது நிச்சயம் மிகையான கூற்றல்ல! ஏனெனில் குறும்பா என்பது எல்லாக் கவிஞர்களாலும் கையாளக்கூடிய வடிவமல்ல! அது ஒரு வரம். அது நண்பருக்கு வாய்த் திருக்கிறது அதனால்தான் அவர் குறும்பா மன்னர்.

பாவேந்தல் 2011ல் வெளியிட்ட 'தோட்டுப்பாய் மூத்தம்மா' குறுங் காவியம் அவருக்குப் புகழ் சேர்த்த பெருங்காவியம். அதனால்தான் அது அடையாளம் காணப்பட்டு-இலங்கை அரசின் சாஹித்ய மண்டல விருது, கொடகே தேசிய சாஹித்யவிருது, யாழ். இலக்கியப் பேரவைச் சான்று என்ற முக்கிய விருதுகளைப்பெற்றுள்ளது!

இக்குறுங்காவியம் கிழக்குவாழ் முஸ்லிம்களின் சமூக, பண்பாட்டு விழுமியங்களை எம் கண் முன்னே காட்சிப்படுத்தி வேரூன்றவைக்கிறது - நம் மனதினில் !

இலக்கிய உலகில் ஐம்பது ஆண்டுகள் இயக்கத்தில் இருப்பதென்பது எல்லா இலக்கியவாதிகளுக்கும் சித்தமாகும் ஒன்றல்ல! (கடந்தவாரம் கூட மட்டு நகரில் நடைபெற்ற ஓர் இலக்கிய நிகழ்வில் கலந்து கொண்டு பேசியதாக அவரது முகநூல் சுவர் கூறியது) அதற்கு அல்லாஹ்வின் அனுசரணை அவசியம் அதுகிடைத்திருக்கிறது - நிறையவே அவருக்கு!

என் நண்பர், பாலமனையார், மேலும் பல்லாண்டுகள் உடல்நலத்துடன் வாழ்ந்து இலக்கிய வேள்வியில் - குறிப்பாககவிதைக் கேணியில் நீந்தி எங்கள் அனைவரையும் மகிழ்விக்க அல்லாஹ்வின் முழு ஆசியும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

கவிஞருக்கான பொன்விழா இனிதே நிறைவேற என் வாழ்த்துக்கள்! ■

பாவேந்தல் பாறூக் :

இலக்கிய வானில் மின்னிச்சுடரும் தாரகை!

எம். சிறாஜ் அஹ்மத்,
ஓய்வுநிலை ஶ்ரீலங்கா வெளிநாட்டுத் தூதரக அதிகாரி,
அட்டாளைச்சேனை.

தென்கிழக்கு பிரதேசம் தந்த மூத்த கவிஞர்களுள் ஒருவரான அன்பு நண்பர் பாவேந்தல் பாறூக், இலக்கிய உலகில் கால்பதித்து ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்கின்றமையும், அதன் பொருட்டு அவருக்கு பொன்விழா நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமையும் எம் நெஞ்சங் களை நிறைக்கும் இனிய செய்திகள், அவ்வமையம் வெளியிடப்படவிருக்கும் பொன்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி யொன்றினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அல்ஹம்து லில்லாஹ் !

நாடும் ஏடும் போற்றும் நல்ல கவிஞர் - நவீன காவியங்கள், குறும்பாக்கள், கவிதைகள் என பல்வேறு படைப்புக்கள் தந்த பன்னூலாசிரியர் - அரசின் சாஹித்திய மண்டல விருது, கலாபூஷணம் விருது உட்பட பல பட்டங்களையும், பரிசில்களையும் பெற்று பிரதேசத்திற்குப் பெருமை சேர்த்தவர் - இலங்கையிலும், வெளிநாடுகளிலும் பல இலக்கிய மாநாடுகளில் பங்குபற்றி பாராட்டுப் பெற்றவர் - இனிய பேச்சாளர் - இலக்கிய விமர்சகர் - அவையோர் ஆர்வம் மிகுந்திடுமாறு கவி விருந்து படைக்கும் பல்துறை விற்பன்னர். இவ்வாறு பல்வேறு ஆளுமைகள் கொண்ட பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களை அங்கீ கரித்து, அவரது படைப்புக்களின்

செழுமையைப்பாராட்டி, கௌரவித்து, பெருமையுடன் விழா எடுப்பது மிக பொருத்தமானதும் இலக்கியத்திற்குச் செய்யும் தொண்டுமாகும். இதற்காக முன்னின்று உழைக்கும் நல்லுள்ளங் களை வாழ்த்துவதிலும் நன்றியுடன் அவர்களை நினைவுகூர்வதிலும் பேருவகை அடைகின்றேன்.

இலக்கிய மணம் கமழும் பாலமுனைக் கிராமத்தில் பிறந்த பாவேந்தல் பாறூக், எனது நீண்டகால, நெருங்கிய நண்பர். பாடசாலைப் பருவத்திலிருந்து தொடங்கிய நட்பு நீடித்து நிலைத்து நிற்கின்றது. 1968 முதல் "தினபதி கவிதா மண்டலத்தில்" அவர் எழுதிய கவிதைகளை ஆர்வத்துடன் படித்து வந்துள்ளேன். அவர் பங்கு பற்றும் கவியரங்குகள், கருத்தரங்குகள் உட் பட ஏனைய இலக்கிய நிகழ்வுகளிலும் பங்குபற்றியதை இன்றும் நினைவுறு கின்றேன். அவரது இலக்கிய செயற்பாடு களை அவதானித்து உற்சாகமூட்டும் நண்பர்களில் நானும் ஒருவனாக இருந்துள்ளமையை பெருமையுடன் குறிப்பிடுவதில் மகிழ்வுறுகிறேன்.

1980 முதல் அட்டாளைச்சேனை பொதுநூலக ஆலோசனைக்குழு உறுப்பினராகவிருந்து பாவேந்தல் ஆற்றிய பணிகள் பசுமையானவை. எம்மால் அவ்வப்போது ஏற்பாடு செய்யப்பட்ட இலக்கிய விழாக்கள், கவியரங்குகள், கருத்தரங்குகள், நூலகவார நிகழ்ச்சிகள் போன்ற இன்னோரன்ன கலை, கலாச்சார நிகழ்வுகளில் அவரது பெறுமதிமிக்க பங்களிப்புக்கள் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியவை.

பாவேந்தல் பாறூக் அவர்களின் கவிதைகள் பாகாய் இனிப்பவை செந்தமிழுக்கு சீர்மை சேர்ப்பவை. 'சொல்லும் பொருளும் பொருந்தி வருவதோடு வேறொரு வெல்லும் - சொல் இல்லாத அளவிற்கு எதுகையும் தடுமாறாமல் எழுதிக் காட்டுவது ஒரு கவிஞனின் திறமைக்கும் மொழிப் புலமைக்கும் எடுத்துக் காட்டாகும்" என்பார்கள். இது பாவேந்தலின் கவிதைகளில் இரண்டறக்கலந்து இழையோடுவதை அவதானிக்கலாம்.

இச்சந்தர்ப்பத்தில் 'இனிப்பு நிகழ்வாக என் இதயத்தில் மணக்கும்' ஒரு விடயத்தினையும் குறிப்பிட விழைகின் றேன். 1983ல் நடைபெற்ற எமது திருமணத்தின்போது அன்பு நண்பர் கள் ஆசுகவி அன்புடீன், பாவேந்தல் பாலமுனை பாறூக், எம்.ஐ. உதுமா லெவ்வை (அம்பாறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் பணிப்பாளர்) ஆகியோர் இணைந்து "சோடிப் புறாக்களுக்கு சோபன கீதங்கள்" என்ற மகுடத்தில் திருமண வாழ்த்தினை அழகுற அச்சிட்டு வெளியிட்டனர். அது பலராலும் பாராட்டப்பெற்றது எம்மை பரவசத்தில் ஆழ்த்தியது, அதில் கவிஞர்கள் ஆசுகவி, பாலமுனை பாறூக் இரு வரும் இனிய கவிதைகளாக தமது வாழ்த்தினை எழுதி குறித்த திருமண வாழ்த்தினை அலங்கரித்தனர். நண்பர் பாவேந்தல் பாறூக் அத்திருமண

வாழ்த்துக் கவிதையின் ஒரு பகுதியில் எழுதிய

“இருப்பதைக் கொண்டு
இன்புறும் மனோநிலை,
வருமிடர் எதுவும்
சிறிதென எண்ணும் பெருமனம்
பொறுமை, பொறுப்பு இவையொடு
இருமனம்
கலந்திட்ட ஒருமனமாகிடில்
தெவிட்டாதத் தேனே”

என்ற அனைவருக்கும் பொதுவான அறிவுரைகள் பொதிந்த அருமையான வரிகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் அக மகிழும் அதேவேளை, அவரது கவிதா விலாசத்திற்கு நன்றி பாராட்டும் ஒரு சந்தர்ப்பமாகவும் இதனைக் கருதுகின்றேன்.

பொன்விழாக்காணும் அன்பு நண்பர் பாறூக், இன்னும் பல பயனுள்ள ஆக்கங்களை தமிழ்கூறும் நல்லுலகிற்கு வழங்க ஆவனசெய்ய வேண்டுமெனக் கேட்டு, விழா சிறக்க நெஞ்சார்ந்த நல் வாழ்த்துக்களை தெரிவித்து நிறைவு செய்கின்றேன்..

எல்லாம் வல்ல அல்லாஹ் அவருக்கு எல்லா நலன்களையும் வளங்களையும் வழங்கியருள்வானாக என பிரார்த்திக் கின்றேன்.

பாவேந்தல் பாறூக் வாழ்க!
அவர்தம் இலக்கியப் பணிகளும் வாழ்க!
அல்லாஹ் ஒருவனுக்கே அனைத்து புகழும்.

■

பாலமுனை பாறூக் குறும்பாக்கள்...

விண்ணர்

முகநூலில் இவர்தானாம் வின்னர்
முந்நூறு “லைக்” பெற்ற மன்னர்
இருவரியில் பதிவிட்டு
இவர்பெற்ற “லைக்”குகளால்
பேர் புகழாம், விழாச்செய்தார் ‘வின்னர்’

தடைநீக்கம்

“ஹெட்கிளாக்கர்” பெயரவர்க்குக் கோனார்
இன்றவரோ வேலைக்குப் போனார்
இல்லத்தில் முடங்கி
இல்லாளுக் கடங்கி இருந்தவர்தான்
மதிப்பிலுயர்வானார் !

ஆசிகள் தந்தேன் அலி !

சந்தக் கவிமணி
கிண்ணியா அமீர் அலி

பாவேந்தல் பாலமுனை பாறூக்:பா வாணர், "பே
னா" வேந்தித் தீட்டும்பா நாணேந்தும்-பாவேந்தும்
பாடு பொருள்யாவும் மானுட மேம்பாடாய்ப்
பாடுவதொன் றேயிவர் பண்பு!

"கலாபூ ஷணம்கலைத் தீபம்"பா றூக்பொன்
விழாதேசம் வாழ்த்தி மகிழ்நாள்-அலாதி!
கவிஞர்தம் பாவரங் கத்தலைமைப் பாக்"கள்"
செவிக்கின்பம் தித்திக்கும் தேன்!

"பதமே" பதமாகப் பானூற்கள் தந்தார்
இதமேதான் "சந்தனப்பொய் கை"யும்-புதுமைத்தாய்
"தோட்டுப்பாய் மூத்தம்மா" தோற்கா தெழுது மிவர்
பாட்டுக்காய் அல்ல பழம்!

"கொந்தளிப் பா"ய்ச்சீறிக் கொட்டும்பாக் கள்"தீ"தான்
தந்தளித்தார் சந்ததமும் சந்தத்தில்-செந்தமிழ்பால்
தீரா திவர்காதல் திக்கெட்டும் தேசத்தார்
பாராட்டும் பா.முனைபா. றூக்!

வித்தகர் தாமிவரே வீச்சுநடைப் பாக்களெலாம்
புத்தகமாய்த் தந்தார் புலவர்தான்- தத்துவ
ஞான நிறைவான நமதாளு மைபாறூக்
வானவ னீந்த வளம்!

பேரறி ஞர்நம் பெருமகன்பா றூக்தம்
பேரர்கள் வாழ்வும் பெருமையுறும்-பூரணமாய்
ஹக்கன் அருளாலே காசினியில் சேர்த்தநலஞ்
சொர்க்கத்து வாழ்வின் தொடர்!

பொன்மனத் தார்பாறூக் பொன்விழா நாயகனே
மென்மனத் துள்ள மிகையன்பே- புன்னகையாய்
வீசுங் குருவே மிகநீடு வாழிநலம்
ஆசிகள் தந்தேன் அலி!

நடைமுறை வாழ்வின் யதார்த்தங்களை தமிழ்ப்பாவுக்குள் வடிக்கும் பாவேந்தல் பாலமுனை பாறூக்

இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள தென்கிழக்கு பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்கள் "தென் கிழக்கு முஸ்லிம் தேசத்தார்" என அழைக்கப்படுவர். தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தார் மரபுவழி கலை இலக்கியத்தில் தலைமுறை தலைமுறையாக பெரும் ஈடுபாடு கொண்டவர்களாக இருந்து வருகின்றனர்.இப்பிரதேசத்தில் பல புலவர்களும் இலக்கிய ஆளுமைகளும் வாழ்ந்து மறைந்த வரலாறுகள் பதிவாகி இருக்கின்றன.

அவ்வாறான மான்மியம் மிகுந்த தென்கிழக்கின் பல ஊர்களில் பாலமுனை எனும் ஊரை தனது பெயரின் முன்னால் இணைத்துக்கொண்டு 50வருடங்களாக எழுதியும் இலக்கிய செயற்பாட்டாளராகவும் இருந்துவரும் பாலமுனை பாறூக் அவர்கள் தமிழ்க்கவிதை இலக்கியத்தில் சிறப்பான ஈடுபாடு கொண்டு எழுதி வருபவராவார்.

தமிழ்க்கவிதை இலக்கியத்தின் பல பரிமாணங்களில் இவர் இயற்றியுள்ளவை தனிக்கவிதைகளாகவும் குறுங்காவியங் களாகவும் குறும்பாக்களாகவும் வெளிவந்துள்ளன.

1970களில் எழுத்துலகில் கவிதை மூலம் நுழைந்த பாலமுனை பாறூக் அவர்கள் தினபதி பத்திரிகை வாயிலாக அறிமுகமானார். பதம் (1987) சந்தனப் பொய்கை (2009) ஆகிய தொகுப்புகளையும் கொந்தளிப்பு (2010) தோட்டுப்பாய் மூத்தம்மா (2011) எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு (2012) ஆகிய குறுங்காவிய நூல்களையும் "பாலமுனை பாறூக் குறும்பாக்கள்" எனும் தொகுப்பை 2013 இலும் வெளியிட்டுள்ளார்.

நடைமுறை வாழ்வின் யதார்த்தங்களை குறும்பாவில் வடிப்பதில் தனி ஆளுமை உள்ளவர். அவரது குறும்பாக்கள் காலத்துக்கேற்ற கருப்பொருட்கள் தாங்கிவருவது சிறப்பான ஒன்றாகும்.

அக்குறும்பாக்கள் பிரதான பருவ இதழ்களிலும் முகநூலிலும் வெளிவருகின்றன யாப்புடன் கூடிய குறும்பாக்கள் எழுதுவதில் பாலமுனை பாறூக் தேர்ச்சியுள்ளவராயிருக்கிறார்.

பல பட்டங்களும் விருதுகளும் பெற்றிலங்கும் பாலமுனை பாறூக் தனக்குக் கிடைத்த பட்டங்களுள் 2012 இல் கல்முனை புதுமை கலை இலக்கிய வட்டம் வழங்கிய "பாவேந்தல்" பட்டத்தையே விரும்பித் தன் பெயரின் முன்னால் குறிப்பிட்டு வருகின்றார். அப்பட்டம் அவருக்குப் பொருத்தமானதே. அனைவருடனும் நட்புப் பாராட்டி அன்புடன் பழகிவரும் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களது பொன்விழா சிறப்புறவும் எழுத்து வன்மையினால் தொடர்ந்து இன்னும் பல படைப்புகளை இலக்கிய உலகுக்கு வழங்கவேண்டுமெனவும் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கலாபூஷணம் தாஸிம் அகமது
ஸ்தாபக குழு வலம்புரி கவிதா வட்டம்,
கொழும்பு.

பாலம் அமைத்த பாலமுனை பாறூக்.

மௌலவி
காத்தான்குடி பௌஸ்

பால(ம்)அமைத்தாரு,
இலக்கியப் பாலம் அமைத்தாரு!
காலத்தின்
கதைகளைக்
கவிகவியாய் வடித்தாரு!
முனைவர்களுடன் வாழ்ந்தாரு!
(முனையூரைமுகந்தாரு)
துணைவியார் ஊக்கத்தில் துடிதுடிப்பாய் சிறந்தாரு.!
அவர்...பாலமுனைபாறூக்
பாவேந்தல் பாறூக்!

வெறும் பா எழுதாது
கவியில் குறும்பா தருவாரு!
கரும்பாய் இனிப்பாரு கவியரங்கில் ஜொலிப்பாரு!
அரசியல் ஜோக்குகளை
அடுக்கி வைப்பாரு!
பரபரப்பாய் பலநாட்டில் பாபடிக்கச் சென்றாரு!
அவர்.. பாலமுனைபாறூக்!
பாவேந்தல் பாறூக்!

உரலும் கவிபாடும்
உமர் புலவர் சிறந்தாரு!
விரலும் கவிபாடும் எங்கள்
வீரமகன் தமிழாகி
அரங்கே அசைந்தாட
அருமையாய்த் தருவாரு!
கிருபை இறைவழங்கி
ஹஜ்ஜூம் செய்தாரு!
அவர்.. பாலமுனைபாறூக்!
பாவேந்தல் பாறூக்!

தோட்டா மாட்டாமல் கவி
துணிவாய்ச் சூடுவாரு!
தோட்டுப்பாய் மூத்தம்மா
தொட்டதனால் கவர்ந்தாரு!
நாட்டுப் பாக்கள்
நாவினிக்கத் தருவாரு!
கூட்டத்தில் உயர்வாரு!
கூடியகாலம் வாழ்வாரு!
அவர்.. பாலமுனைபாறூக்!
பாவேந்தல் பாறூக்!

பாவேந்தல் பல்லாண்டு வாழ்க !

தமிழ்நெஞ்சம் அமின்
இதழாசிரியர் :
தமிழ்நெஞ்சம் - பிரான்சு

தேன்போல் இனிக்கும் செந்தமிழைத்
தீட்டும் வண்ணத் திறன்மேவி
மான்போல் துள்ளும் நடையழகும்,
மழைபோல் தொடரும் தொடையழகும்,
கான்போல் கமழும் கருத்தழகும்,
கற்றோர் மனத்தைக் கொள்ளையிடும்!
வான்போல் விரிந்த புகழேந்தி
வாழ்க! வாழ்க! பாவேந்தல்!

கலைக்குள் முதன்மை கொண்டொளிரும்
கவிதை! நாளும் அதைக்கற்றுத்
தலைக்குள் தமிழைத் தாமேந்தித்
தகவாய்ப் பாக்கள் படைத்திட்டார்!
மலைக்குள் உள்ள வலம்யாவும்
மனத்துள் வந்துமணம்..வீசும்
வலைக்குள் மலர்ந்த வனப்புகளை
வார்த்தார் வாழ்க பாவேந்தல்!

மொழியின் தொண்டே உயிரென்று
முன்னே இருந்து செயற்பட்டார்!
விழியின் இமைபோல் நற்காவல்
விளைத்து நன்றே புகழ்பெற்றார்!
பொழிலின் அழகாய்ப் பன்னூல்கள்
புனைந்து புலமைப் பொலிவுற்றார்!
வழியின் துணையாய் அறப்பாக்கள்
வடித்தார் வாழ்க பாவேந்தல்!

■

பாலமுனை என்ற எழில் கொஞ்சும் கிராமத்தை உலகமெல்லாம், கொண்டு சென்ற பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள் கவிதைக்காக வாழ்பவர், கவிதையாக வாழ்பவர், கவிதையோடு வாழ்பவர். ஆளுமைமிக்க ஒரு மனிதர். யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற கோட்பாட்டைப் பின்பற்றுபவர். ஆகவே அவருடைய ஐம்பதாண்டு பொன்விழாச் செயற்பாட்டு மலருக்கு என்னுடைய வாழ்த்துச் செய்தியை அளிப்பதில் பெரு மகிழ்வெய்துகிறேன்.

ஒரு கவிஞனுக்கு தான் படைக்கும் கவிதை தொடர்பில் பொறுப்புக்கூறல் இருக்கிறது. மேலும் தன்னுடைய கவிதைக்கு வாசகன் இருப்பதையும் அவன் நம்புகிறான். எல்லாவற்றிற்கும் மேலாக கவிஞன் தன்னைச்சூழ்ந்த சமூகத்தின் ஒரு அங்கமாக இருக்கிறான்.

இந்த மூன்று விஷயங்களிலும் தனக்கு நிகர் தானே என்று வாழ்பவர்தான் பாலமுனை பாறூக் அவர்கள்.

கவிதைக்குப் பொறுப்புக்கூறல் என்பது தன்னுடைய கவிதை மொழியை இலாவகமாகவும் நேர்த்தியாகவும், கனதியாகவும் பயன்படுத்துவதோடு மிகவும் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்தலுமாகும். இக்கவிதைக் கூறுகளோடு கவித்துவமும் ஒருங்கே வரப்பெற்றவன்தான் மிகச்சிறந் கவிஞனாக இருப்பான்.

Dr.எம். எம். நௌஷாத்
(குயிலோசை நிறுவுனர்)

பாலமுனை பாறூக்கை அறிந்து கொள்ளல்

பாலமுனை பாறூக் அவர்களின் ஐம்ப தாண்டு கவிதை மொழியின் வளர்ச்சிப் படிநிலைகளை நுணுக்கமாக ஆராய் வோமாயின் சொற்களை வசப்படுத்தும் வசீகர மந்திரத்தை கற்றறிந்த ஓர் அற்புதமான கவிஞராக அவர் மிளிர் வதைக் கண்டு கொள்ளலாம்

தன்னுடைய கவிதை வாழ்க்கையை கவியரங்கோடு ஆரம்பித்த அவர் பல சவால்களை எதிர்கொண்டு, கடந்து இன்று தவிர்க்க முடியாத கவிஞராக தன்னை அடையாளப்படுத்தி அல்லது நிலைநிறுத்தி கம்பீரமாக உயர்ந்து நிற்கிறார் என்பதற்கு உதாரணமாக பிற்காலத்தில் வெளிவந்த அவருடைய சிறந்த படைப்புகளான தோட்டுப் பாய் மூத்தம்மா மற்றும் கொந்தளிப்பு ஆகிய நவீன குறுங்காவியங்களைக் குறிப்பிடலாம். அதிலும் பாலமுனை பாறூக் அவர்களின் விதந்து போற்றக் கூடிய படைப்பாக 2011ம் ஆண்டு வெளிவந்து தேசிய சாஹித்திய விருது உட்பட முக்கிய விருதுகளை தன தாக்கிக் கொண்ட தோட்டுப்பாய் மூத்தம்மா என்ற குறுங்காவியத்தைச் சொல்வேன்.

கல்முனை பிராந்தியத்தின் இஸ்லாமிய பண்பாட்டுக் கூறுகள் பேச்சுமொழி, பழக்கவழக்கங்கள், சடங்குகள், கலாசார சமய விழுமியங்களை விரிவாகச் சித்திரிக்கும் இக்காவிய மானது ஆய்வாளர்கள் குறிப்பிடுவது போல் கவிஞர் அப்துல் காதர் லெப்பை அவர்களின் செய்னம்பு நாச்சியார் மான்மியத்தையும் ஒருபடி மேலே மேவி நிற்கிறது எனலாம்.

ஏனெனில் கல்யாணச் சம்பிரதாயங் களை மாத்திரமே சுட்டும் செய்னம்பு நாச்சியார் மான்மியத்தை போலல் லாது இக்காவியமானது பிறப்பு மற்றும் மையத்துச் சம்பிரதாயங் களையும் விபரிப்பதைக் காணலாம்.

மேலும் 80,90களில் பாலமுனை பாறூக் அவர்கள் அக்கால அவலநிலை களைச் சித்திரிக்கும் அரசியற் கவிதை கள் எழுதியுள்ளமையும் மஹாகவி அவர்களின் அடிச்சுவட்டைப் பின் பற்றி குறும்பாக்களில் பரிசோதனை முயற்சிகள் மேற்கொண்டுள்ளமையும் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டி யனவாகும்.

தன்னுடைய கவிதைக்கு வாசகன் இருப்பதை நம்பும் பாலமுனை பாறூக் அவர்கள் வாசகர்களை மகிழ்ச்சிப் படுத்துவதற்காக அதிகூடிய சிரத்தை எடுக்கிறார் என்பதற்கு சாட்சியாக அவரின் சரளமானதும் வசிகரமானது மான கவிதைப்பாணி இருக்கிறது. ஒளிர்வான இறுக்கமான சொற்பாவனை அவருடைய படைப்புகளை பிரகாச மாக்குகிறது.

இவ்வேளை இன்னுமொரு முக்கியமான வாசகத்தைக் குறிப்பிட்டாலன்றி என் வாழ்த்துரை பூரணத்துவம் அடைய மாட்டாது. அதாவது சமூகம் சார்ந்த, அரசியல் சார்ந்த அல்லது பண்பாடு கள் சார்ந்த படைப்புகளைப் படைத்து விட்டு சமூகத்திலிருந்து விலகி நிற்கின்ற அல்லது தனிமைப்பட்டு நிற கின்ற படைப்பாளிகளைப் போலல் லாது தான் சமூகத்தின் ஓர் அங்கம்

என்பதை எப்போதும் உணர்ந்தவர் பாலமுனை பாறூக் அவர்கள்.

இற்றைவரை அவருடைய கவிதைச் செயற்பாடுகளும் இலக்கியச் செயற் பாடுகளும் தொடர்கின்ற அதேவேளை சமூகம் சார்ந்த செயற்பாடுகளிலும் அவர் பங்குபற்றுனராக இருக்கின்றார்.

மேலும் முகநூலில் தன்னை இணைத் துக் கொண்டதன் மூலமாகக் கால மாற்றங்களுக்கேற்ப தன்னை அற்றைப் படுத்துவதிலும் அவர் முன் நிற்கிறார் என்பது மட்டுமல்ல கவிதைப் பரிச்சயம் இல்லாதவர்களுக்கும் புதிதாக எழுத வருபவர்களுக்கும் பயிற்சிப் பட்டறைகளைக் கூட அவர் கிரமமாக நடத்தி வருகிறார்

மிகப்பரந்த உள்ளத்துடன் மற்றைய கலைஞர்களை தட்டிக் கொடுத்துப் பாராட்டுதல் இனிமையாகப் பழகக் கூடிய நற்குணம் என்றும் புன்னகை யுடனிருத்தல் போன்ற அரிய குணாதி சயங்களைக் கொண்ட பண்பாளராக நான் பாலமுனை பாறூக் அவர்களைக் காண்கிறேன்

இது வெறுமனே வாழ்த்துமடல் மட்டுமல்ல இன்னுமின்னும் மிகச்சிறந்த படைப்புகளை அவரிடமிருந்து எதிர்பார்க்கும் வேண்டுகோள் ஓலையும் ஆகும். அதற்கான ஆற்றல் அவரிடம் நிறையவே இருக்கிறது என்பதோடு பாலமுனை பாறூக் ஐயா அவர்களே, கவிதையுலகில் உங்களுக்கென்று தனித்துவமான ஓரிடம் நிச்சயமாக உண்டு என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

■

பாலமுனை பாறூக் குறும்பாக்கள்...

மாப்பிள்ளை

பெற்றமகள் படித்துவிட அப்பா
பெரும்பாடு பட்டவர்தான் தப்பா?
எத்தனையோ பட்டங்கள்
எடுத்துவிட்டார் மகளிங்கே
(ஆனாலும்)
இப்பொழுதும் அலைச்சல் அப் பப்பா!
தரமான மாப்பிள்ளையைத் தேடி
தானவரும் அலைகின்றார் ஓடி
கரம்பற்ற அவளுக்கும்
தரமுயர்ந்த ஆள் வேண்டும்
வருவானோ...கேட்பானோ கோடி?

இலக்கிய வல்லான் பாலமுனை பாறூக்...

பாடசாலையில் படிக்கும்போதே, 1970களில் தனது இலக்கியப் பயணத்தைத் தொடங்கி, பணி ஓய்வு பெற்ற பின்பும் இன்றுவரை (2020) தொய்வின்றி இப்பணியைத் தொடரும் 'பாலமுனைபாறூக்' அவர்கள் உண்மையில் பொன் விழாக்காண தகுதியுடையவரும் பாராட்டப்படவேண்டியவரும் என்றால் அது மிகையல்ல.

தத்துவமான தளமொன்றில் கதை, கவிதை, காவியம் என்று இலக்கியத்தின் பல்துறைகளிலும் கால் பதித்து தமிழ் இலக்கியத் திற்கு அணிசேர்த்துக் கொண்டிருக்கும் பாவேந்தல் அவர்கள் ஒரு எளிமையான இலக்கியவாதியாவார்.

கலாபூஷணம், கவிப்புனல், கவித்தாரகை, கவிஞர் திலகம், சாமஸ்ரீ, சிறாஜுல் புனூன், பாவேந்தல் போன்ற விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுத் திகழும் இவர்கள் 'பதம்' (1987), 'சந்தனப் பொய்கை' (2009) போன்ற கவிதைத் தொகுதிகளையும் 'கொந்தளிப்பு' (2010), 'தோட்டுப்பாய் மூத்தம்மா' (2011) போன்ற குறுங்காவியங்களையும் படைத்து, சாஹித்திய விருதுகளையும் பலதேசிய விருதுகளையும் பெற்று முன்னணி எழுத்தாளர்களுள் ஒருவராகத் திகழ்பவர்.

இளங்கலைஞர்களை ஊக்குவிப்பதிலும் மற்ற இலக்கியவாதிகளைப் பாராட்டுவதிலும் தனித்துவம் காக்கும் தன்னலமற்றவர. சுயமரியாதை பேணுபவர். வாழ்வும் இலக்கியமும் ஒன்றென வாழ்பவர்.

நிந்தவூர் கலை, இலக்கியப் பேரவையானது பாலமுனை பாறூக் அவர்களை மனமுவந்து வாழ்த்துவதோடு, அவர்களது இலக்கியப் பயணம் மென்மேலும் தொடர்ந்து இன்னும் பல இலக்கியப் படைப்புகளைத் தர இறைவன் அவர்களுக்கு உடல், உள ஆரோக்கியத்தை கொடுக்க பிரார்த்தனைசெய்கிறோம்.

டாக்டர். **ஏ.எம். ஜாபிர்,**

தலைவர்,

கலை, இலக்கியப் பேரவை- நிந்தவூர்.

பாலமுனையின் அடையாளம் : பாலமுனை பாறூக்

பல துறைகளிலும் இன்று எழுச்சி பெற்றுவரும் பாலமுனை மண்ணைப் பொறுத்தமட்டில் கலை இலக்கிய துறையில் ஏனைய பல ஊர்களை விடவும் பழமை வாய்ந்த முதன்மையான கிராமம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. இதற்கான சான்றுகளாக பாலமுனை பாறூக், ஆசுகவி அன்புடீன், பாலமுனை ஆதம் எனும் வாழும் வரலாறுகளை சான்றாக முன்னிறுத்தலாம்.

பாலமுனையின் கவிப்பயணத்தில் மண்ணைப் பெருமைப் படுத்தியதில் பாலமுனை பாறூக் முதன்மையானவர் என்பதோடு எமது முழு இலங்கை மண்ணுக்கும் இவர் ஓர் அரிய சொத்து.

உலகின் தமிழ் பேசும் இடமெல்லாம் என்றும் பாலமுனை பாறூக்கின் நாமம் கவிதையினூடு ஒலித்துக் கொண்டே இருக்கிறது. இதனால் எமது மண்ணுக்கு என்றும் பெருமையும் மகிழ்ச்சியுமே. பாலமுனை என்றால் “அது பாலமுனை பாறூக்கின் ஊரா?” என்ற கேள்வி எந்த ஊரிலும் எழும். அவர் எங்கள் மண்ணின் அடையாளம்தான்.

1987 இல் வெளியான இவரது முதல் பிரசவம் “பதம்” மற்றும் 2017இல் வெளியான “வலைக்குள் மலர்ந்த வனப்பு” ஆகியவற்றை நான் இன்று தலைமை வகிக்கும் “சமூக சேவை ஆய்வு சபை” அமைப்பின் மூலம் வெளியீடு செய்யப்பட்டதை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்து மகிழ்ச்சி கொள்வதோடு பொன்விழா நாயகனை வாழ்த்தி நீண்ட ஆயுளுக்காய்ப் பிரார்த்திக்கிறேன். இன்னும் படைப்புகள் தொடரட்டும்...

Dr. எஸ்.எம். றிபாஸ்தீன்

தலைவர்

சமூக சேவை ஆய்வு சபை, மரண உபகார நிதியம்.

பாலமுனை.

பொருத்தமான நாயகன்

அக்கரையூர் அப்துல் குத்தூஸ்

அன்பரே,
உன் தகுதிக்கு வாய்த்த பெயர் பாவேந்தல்
எம் பகுதிக்கு நீ என்றும் பாவேந்தன்

பாவேந்தா - நீ
எழுபதைத் தொட்டாலும் இளைஞன்
எழுவானின் முதுபெரும் கவிஞன்

இலக்கியப் பரப்பில்...நீ
தேசியம் பேசும்
தென்கிழக்கின் ஆளுமை
நேசமாய்ப் பழகும்
நீண்டநாள் தோழமை

தென் இந்தியாவில் ஒருபாவேந்தர் - நம்
தென் கிழக்கில் ஒரு பாவேந்தல்
அங்கே
பாரதிதாசன் என்றால்
இங்கே
பாலமுனை பாறூக்

இன்றுவரைஅன்றுபோல்
இயங்கிக் கொண்டிருக்கிறாய்!
விரல் விட்டு எண்ணுவோனாய்
விளங்கிக் கொண்டிருக்கிறாய்!

நீ
எழுவான் திசையில்
இலக்கிய முகவெற்றிலை
முழுநாள் பொழுதும்
பதிக்கிறாய் கவி முத்திரை
எழுத்தால் ஊடகங்களில்
இனியதடம் பதித்திருக்கிறாய்
இலக்கிய இளம் தேர்களுக்கு
எழுதவடம் பிடித்திருக்கிறாய்

வானொலியில் ஆக்கங்களோடு
பல்லாண்டு வலம் வந்திருக்கிறாய்
சக எழுத்தாளர் பலர்
சாதிக்கப் பலம் தந்திருக்கிறாய்

பன்னூல் எழுதி
பரிசுகள் தட்டியிருக்கிறாய்
முகநூல் பரப்பில்
முகவரி குத்தியிருக்கிறாய்

சுதேச விருதனைத்தும்
சுவீகாரம் செய்திருக்கிறாய்
விதேசத்திலிருந்தும்
விருதுகளை வென்றிருக்கிறாய்

இங்கே
சாஹித்ய விருதுவரை
சாதித்திருக்கிறாய்.

நெடும்பாவினை குறும்பாவினால் மிகைத்தவர்

கலாபூசணம் ஏ. பீர்முகம்மது

மருதமும் நெய்தலும் ஒட்டி உறவாடும் பாலமுனைக் கிராமத்தில் பிறப்பெடுத்தவர் பாறூக் அவர்கள். பாலமுனை பாறூக் எனவே பலராலும் நன்கு அறியப்பட்டவர். தினபதி கவிதா மண்டலத்தில் கனவுக்கன்னி என்ற கவிதையுடன் ஆரம்பமாகி இன்று முகநூலில் தினமும் காலை வாழ்த்துக் கவிதைகள் வரையான அவரது அய்ம்பது வருட இலக்கிய நிகழ்த்துகையின் எல்லை எதுவரை என்பனத உசாவுவதே இக்கட்டுரையின் மையமாகும்.

முதலில் அவர் இலங்கையின் தென்கிழக்குப் பிரதேச கவிதை வெளியின் குறியீடு எனலாம். இப்பிரதேசத்தின் கலை, பண்பாடு, மொழி, அரசியல் இருப்பு, விளிம்புநிலை மக்களின் வாழ்வியல் என்று பல தளங்களிலும் அவரது கவிதையின் குரல் வெளிப்படுவது இதற்கான சான்றுகளாகும்.

நமது நாட்டுக் கலை இலக்கியப் பங்களிப்பில் தென்கிழக்குப் பிரதேசத்துக்கென தனிப்பங்குண்டு. அதன் உரிமையாளர் வரிசையில் பாலமுனை பாறூக்கிற்கும் ஆசனமுண்டு. அவரின் ஒட்டுமொத்த இலக்கிய ஊழியத்தின் இறுதி விளைவுதான் அவரை தென்கிழக்கின் கவிதா சாகரத்தின் குறியீடாகப் பிரசவித்துள்ளது.

பாலமுனை என்ற சொல்லை தனது பெயரில் இணைத்துக் கொண்டமையும் இதன் வெளிப்பாடே. கொந்தளிப்பு, தோட்டுப்பாய் மூத்தம்மா, எஞ்சியிருந்த பிரார்தனையோடு ஆகிய அவரின் (குறுங்காவியம்) நெடுங் கவிதைகளின் களம் தென்கிழக்கிலங்கையின் மண்ணாக இருப்பது அதனை இன்னும் ருசுப்படுத்தும்.

மற்றொரு விடயம் கவிதைகளைக் கையாளும்போதான அவரின்தனித்துவம் ஆகும். எழுபதுக்குப் பின்னர் தோற்றம் பெற்ற புதிய கவிதைப் போக்கில் தன்னை

இணைத்துக் கொண்ட இக்கவிஞர் கால மாற்றங்களுக்கேற்ப கவிதையின் உருவ உள்ளடக்கங்களில் நெகிழ்ச்சிகளையும் மாற்றங்களையும் உள்வாங்கியதன் மூலம் தனது படைப்புக்களில் தனித்துவத்தை வெளிக் கொணர்ந்தார்.

கொந்தளிப்பு (2010), தோட்டுப்பாய் மூத்தம்மா (2011), எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு (2012) ஆகிய மூன்று காவியங்களும் அவரின் தனித்துவத்தை ஓங்கி ஒலித்தன. திறன் நோக்காளர்கள் பலரின் கவனத்தை அவை ஈர்க்கத் தவறவில்லை. 2010 இல் இருந்து இக்கவிஞரிடம் திடீரென்று ஒரு விகசிப்புத் தெரிந்தது என்று பலராலும் அவர் பேசப்பட்டமைக்கு இம்மூன்று குறுங்காவியங்களே காரணம் எனலும் தகும்.

கவிஞரின் தனித்துவத்தை வர்ணம் பூசிக் காட்டும் பிறிதொரு விடயம் கவிதைகளை அவர் கையாண்ட விதமாகும். பேச்சோரைப் பாங்கும் சந்தமும் அவரிடம் கைகட்டிச் சேவகம் செய்தன.

மஹாகவி நீலாவணன், எம்.ஏ. நுஃமான் போன்ற பெருங்கவிஞர்கள் அமர்ந்திருக்கும் வரிசையிலே அவருக்கும் இடமுண்டு என்பதை பல சந்தர்ப்பங்களில் அவர் நிரூபித்துள்ளார்.

"என்று ஏதோ அரசியல்
மேடையில் பேசிய பேச்சு ஞாபகம் வந்தது"
(கொந்தளிப்பு) போன்ற அடிகளில் கவிஞர் நுஃமானையும்,

தானாய்த் தன் கை காலை
நம்பி வாழ்ந்த அவள்
போனாள் எனச் சிலபேர்
புலம்பி அழுதார்கள்
(தோட்டுப்பாய் மூத்தம்மா) போன்ற வரிகளில் நீலாவணனையும் நினைவு படுத்தினர்.

மேலே குறிப்பிட்ட மூன்று காவியங்களையும் வெளியிட்ட பின்னர் பாலமுனை பாறூக் குறும்பாக்கள் (2013) என்ற தொகுப்பு நூலை வெளியிட்டார்.

நெடும்பாக்களை (நெடுங்கவிதைகளை) வெளியிட்ட சூட்டோடு பாலமுனை பாறூக் குறும்பாக்கள் என்னும் தொகுதியொன்றை தந்ததன் மூலம் அனைவரின் கவனத்தையும் வேறொரு திசைக்கு அழைத்துச் சென்றார்.

அவரின் குறும்பாக்களில் ஒன்று பின்வருமாறு :

அற்புதமாய் மெட்டெடுத்துப் படித்தாள்
அபிநயமும் அழகழகாய்ப் பிடித்தாள்
பொத்தென்று விழுந்தனரே
போய்ப் பார்த்துச் சுழித்தார்கள்
இப்படியேன் வாந்திவரக் குடித்தாள்.

இதுபோன்ற குறும்பாக்கள் மூலம் கவிஞர் மஹாகவியாக நாம் பாலமுனை பாறூக் அவர்களைப் பார்க்க முனைந்தோம்.

இந்த இடத்தில் குறும்பா தொடர்பாக சற்று விரிவாகப் பேச வேண்டியுள்ளது. கட்டுரையின் தலைப்புக்கு அது அவசியமாகின்றது.

கவிஞர் மஹாகவி தமிழிலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவர். அவரே குறும்பா என்ற கவிதை வடிவத்தை புதிதாக தமிழுக்கு அறிமுகம் செய்தார். இன்றும்கூட தமிழில் உள்ள குறும்பா வடிவத்தை லிமெரிக் என்னும் ஆங்கிலக் கவிதை வடிவத்தின் தமிழ் மாற்று வடிவம் எனக் கருதுவோரும் உள்ளனர். உண்மை அதுவல்ல.

நீர்கொழும்பில் இடம்பெற்ற தமிழ் விழாக் கவியரங்கில் அவர் இயற்றிய குறும்பா முதன்முதலாகப் படிக்கப்பட்டது. அக்குறும்பாக்கள் 1965 ஜனவரியில் இளம்பிறை என்ற இலக்கிய மாசிகையில் வெளியாகின. பிரபல எழுத்தாளரும் தற்போது தமிழ் நாட்டில் வாழ்வருமான எம்.ஏ. ரஹ்மானின் இளம்பிறை என்ற இச்சஞ்சிகைதான் மஹாகவியின் குறும்பாக்களின் பரவலான அறிமுகத்திற்கும் வளர்ச்சிக்கும் உந்துதலாய் இருந்தது.

தொடர்ச்சியாக இளம்பிறையில் இதழுக்கு ஆறு ஏழு என வெளிவந்த நூறு குறும்பாக்களைத் தொகுத்து மஹாகவியின் குறும்பா என்னும் தொகுதி 1966 இல் அரசு வெளியீடாக வெளிவந்தது. அரசு வெளியீடும் இளம்பிறை ரஹ்மானுக்குரியதே. குறும்பாவைக் கொண்ட முதல் தொகுப்பும் இதுவே.

இத்தொகுதிக்கு பிரபல எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை வழங்கிய முன்னீட்டில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். “லிமெரிக்கிலும் பார்க்க மஹாகவியின் குறும்பாவின் பார்வை அகலமும் ஆழமும் கொண்டது. லிமரிக்ஸ் இல் கேலிச்சிரிப்பு மட்டுமிருக்க மஹாகவியின் குறும்பாவிலே கேலிச்சிரிப்புடன்

சிந்தனையைத் தூண்டும் விடயமும் உள்ளது. குறும்பாவின் ஊடாக தமிழ்க் கவிதையின் பொருண் மரபையும் விரிவுபடுத்தினார்"

இக்குறிப்பானது குறும்பா தமிழுக்குப் புதிய வடிவமென்பதையும் அதன் கனதியான உள்ளடக்கம் பற்றியும் தெளிவுபடுத்துகின்றது.

மஹாகவியின் குறும்பா அறிமுகத்தைத் தொடர்ந்து சிலர் குறும்பாக்களை எழுதிப் பயின்றனர். இன்னுஞ் சிலர் பயின்று எழுதினர். தூது என்ற கவிதைத் சஞ்சிகையின் ஆசிரியத் தலையங்கத்தைப் பிரபல நாவலாசிரியர் ஆர்.எம். நௌசாத் குறும்பாவிலே எழுதினார். தொகுப்புகள் வரத் தொடங்கின. நகை (சிவபாலன் - 2000), சுடுகின்ற மலர்கள் (ஒலுவில் ஜலால்தீன் - 2002), வெட்டுக் கற்கள் (ஜே. வஹாப்தீன்- 2010),ஆகிய தொகுப்புகள் வெளிவந்தன. பாலமுனை பாறூக் குறும்பாக்கள் (2013) வெளிவந்துள்ளது.

குறும்பாவின் யாப்பு முறையைப் பின்பற்றி கவிஞர் பாறூக்கின் இத்தொகுப்பில் பெரும்பாலான கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுக்கு அப்பாலும் சென்று குறும்பா தொடர்கவிதை எனவும் அந்தாதித் தொடையிலும் காவடிச்சிந்து சீர் அமைப்பிலும் ஒயிற் கும்மியின் வடிவில் ஒயிற்குறும்பா எனவும் சில குறும்பாக்களை எழுதிய பரிசோதனை முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார் என்பதை தொகுப்பு சுட்டி நிற்கின்றது.

குறும்பா மூன்று அடிகளிலும் ஐந்து வரிகளிலும் அமையப்பெறும் கவிதை வடிவமாகும். முதலாம் அடி வழிகோலுவதாகவும் இரண்டாம் அடி கட்டியெழுப்புவதாகவும் மூன்றாம் அடி முத்தாய்ப்பிடுவதாகவும் அமைதலே குறும்பாக்களின் கவிதைச் சுவைப்புக்கு உதவும். கவிஞர் இதனைக் கவனத்திற் கொண்டு குறும்பாக்களைத் தந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

மஹாகவியைப் போலவே சமூகத்தின் இருட்டுறைந்த மூலைகளிலிருந்து குறும்பாக்களுக்கான தேடலைப் பெற்றுள்ளமை தமிழ்க் குறும்பாக்கள் மீதான அவரின் கவிதா ஆளுமையை பறை சாற்றுகின்றது.

கவிஞர் மஹாகவி தனது குறும்பா ஒன்றில் கையூட்டு எனப்படும் இலஞ்சம் பற்றி பின்வருமாறு பாடினார்.

"முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்
முன்னாலே வந்து நின்றான் காலன்

கைத்தலத்திற் பத்துமுத்தைப்
பொத்தி வைத்தான் போனான் முச்சூலன்”

கையூட்டின் கோரமுகத்தை மஹாகவி இக்குறும்பாவில் முன்கொண்டு வருகின்றார். இதே கையூட்டு சமாச்சாரத்தை வேறொரு கோணத்தில் காட்சிப்படுத்துகின்றார் கவிஞர் பாறூக்.

“கந்தோரில் பணிமுடிக்க வந்து
கனநாளாய் அலைகின்றாள் இந்து
சந்தோசம் வேண்டுமெனக்
கந்தோரின் தலைகேட்க
தந்தாளே தாடையினில் பந்து”

இக்குறும்பாக்கள் சோற்றுப் பதமே. மஹாகவியின் அருகில் கவிஞர் பாறூக் நிற்கின்றார் என்பதை அவை நிறுவுகின்றன.

கருத்துச் செழிப்பும் ஓசையின் நகர்வும் குறுகத் தறிக்கும் நுட்பமும் தொகுப்புக்கு மருதோன்றி இடுகின்றன.

மஹாகவியின் குறும்பாவுக்கு தனித் தனித் தலைப்புகள் இல்லை. இங்கு கவிஞர் ஒவ்வொன்றிற்கும் தனித் தலைப்பு இடுவதன் மூலம் தனது தனித்துவத்தைப் பிரகடனப்படுத்துகின்றார்.

கொந்தளிப்பு, தோட்டுப்பாய் மூத்தம்மா, எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு ஆகிய மூன்று நெடும்பா தொகுப்புக்களைத் தந்தவர் கவிஞர் பாலமுனை பாறூக். அவர் குறும்பாத் தொகுதியொன்றினை முற்றிலும் வேறுபட்ட இன்னுமொரு தளத்தில் நின்று தருகின்றார். குறுங்காவிய முயற்சியில் அவர் வெற்றி பெற்றுள்ளார் என்பதே புலமையாளர்கள் பலரின் கருத்தாகும். அதை மறுப்பதற்கில்லை.

வளர்ந்து செல்லும் எதிர்கால தமிழ் இலக்கிய ஆவண வரலாற்றில் பாலமுனை பாறூக்கின் குறும்பாக்கள் எனும் தொகுப்பே அவரின் பெயர் விளங்கத் தென்படும்.

மஹாகவியின் குறும்பாத் தொகுப்புக்கு எஸ். பொன்னுத்துரை வழங்கிய சான்று பின்வருமாறு :

“மஹாகவி மஹாகவியேதான் என்பதை நிலைநாட்டப் போகின்ற நூல்களுள் இக்குறும்பாக் கவித் தொகையும் ஒன்றாகும்”

கவிஞரின் நெடும்பாவிலும் குறும்பாத் தொகுப்பே மேலெழுந்து நிற்கும் என்பதே என் வாக்குமூலமாகும்.

■

“ பாலமுனை பாறூக்கின் குறுங்காவியங்கள்” - ஓர் ஆய்வு

ஆய்வியல் நிறைஞர் (எம்ஃபில்) பட்டத்திற்காகச் சென்னைப் பல்கலைக் கழக அனுமதிக்குட்பட்ட புதுக்கல்லூரிக்கு (தன்னாட்சி) அளிக்கப்பட்ட ஆய்வேடு.

ஆய்வாளர்

க. சேகர். எம்.ஏ.,பி.எட்.

தேர்வு எண் : 12 MTM 3610

பகுதிநேர ஆய்வாளர்

நெறியாளர்

முனைவர் மு.இ.அகமது மரைக்காயர். எம்.ஏ., எம்ஃபில்.,பி.எட்., பி.எச்டி.

தமிழ்த்துறைத் தலைவர்,

தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,

புதுக்கல்லூரி, (தன்னாட்சி),

சென்னை-600 014

Ya Allah

Increase My Knowledge

தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை

புதுக்கல்லூரி (தன்னாட்சி)

சென்னை - 600 014

செப்டம்பர் - 2014

பாவெனும் வேந்தே
பாலமுனை பாவேந்தலே!

அலியார் சுபைர்,
தலைவர்,
தேனீகலை இலக்கியமன்றம்,
ஏறாவூர்.

கவியுலகின் பொன்விழா நாயகன்
பாவேந்தல் பாறுக் அவர்களை
பாராட்டக் கிடைத்தமை மகிழ்வே
தேனீ கலை இலக்கிய மன்றம்
தேனமுத நாயகனை வாழ்த்துவதில் மகிழ்வுறுகின்றது

கவிப்புலமை உன் விளைநிலம்
சோவெனப் பொழியும் மழைபோல
தாவிடும் காற்றினில் இசைபோல
கூவிடும் குயிலின் குரல் போல
மேவியே வருவது உன்கவியே

ஐம்பதை தாண்டிய உன் புலமை
வையத்தில் வாழ்ந்திடும் உயிரென்போம்
பல்கலை கழகமாய் உன் தோன்றல்
சொல்லினில் உயர்ந்த மொழியென்போம்

இளமையும் புதுமையும் உன் வரியில்
புயலாய் வரிந்துவலம் வருதல்
செயலால் விளையும் உண்மைகளை
செப்புதல் உந்தன் வாய்மையன்றோ

அறநெறி கூறும் காவியங்கள் பிறர்
திறனது காக்கும் நேரிடையாய் உள
வரமது கூறும் காப்பகங்கள் அதில்
சுரமென ஊறும் நிலை கண்டோம்

கறைகளை விதைக்கா கருப்பொருளே
குறைகளை எதிர்க்கும் நன் னெறியே
திரைகளை உடைத்து காட்சிகள் கூறும்
பறையெனக் கண்டோம் உம் கவியில்

நகைச்சுவைப் பாக்கள் வரிகளில் பூக்கும்
குறும்பெனப் பாடும் இனித்திடும் தாக்கம்
அரும்பிடும் மலரின் அழகியதோற்றம்
விரும்பியே படிப்போம் உம்வரிகளில் என்றும்
கருமை மறந்து வெண்மைக் கோலம்
பெருமை களைந்து அன்புக் கோலம்
அருமை வாங்கிடும் நிறைந்தகோலம்
புலமையே உந்தன் வாழ்வியல் கோலம்

சான்றோர் பட்டியல் உனக்கென உண்டு
வென்றோர் வாழ்த்திடும் பண்புகள் உண்டு
நன்றோர் சபையினில் பாத்திரம் உண்டு
நிறைந்தாய் எம்மில் நிச்சயம் அன்பு

பொறாமை என்பது உன்னில் இல்லை
அனைவரும் ஒன்றென கூறுதல் உண்மை
வினைகளை வெறுத்து பாடுதல் உண்மை
நினைவினில் கொண்டோம் மறவோம் பாவே

நாணயம் என்றும் கூடவே பிறந்து
நாணயம் எண்ணும் பதவியில் சேர்ந்து
நானிலம் போற்றிட வாழ்கிறாய் என்றும்
நலமே வாழ்க நற்றமிழ்க் கவியே

பாலமுனை தந்த பைந்தமிழ் நீயே
தாளமுடன் கவிதை தந்தவன் நீயே
பாலமுதாய் பருகிட்ட உம் வரிகள்
வீழாது மண்ணில் நிலைகொள்ளும்

மனதால் நினைந்தே வாழ்த்துகிறோம் உன்னை
நினைவில் வைத்தேபோற்றுகிறோம் வேந்தே
குணத்தால் உயர்ந்த கோவலன் நீயும்
குவலயவாழ்வில் நீண்டிட வாழ்த்துகின்றோம்.

சேவை நாயகன் பாலமுனை பாறூக் !

கிழக்கிலங்கையின் மூத்த கவிஞர் பாலமுனை பாறூக் அவர்களின் பொன்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாரை மாவட்ட சம்மேளனத்தின் ஆரம்ப கால உறுப்பினராகவும் மாவட்டத் தலைவராகவும் இருந்து மாவட்ட கூட்டங்களில் கவிதைபாடிச் சகலரையும் மகிழ்விக்கும் பாவேந்தலின் நிகழ்வுகளை மறக்கமுடியாது. மாவட்டத்தில் நடைபெறும் பாராட்டு விழாக்கள், திருமண நிகழ்வுகள், மரண மானவர்களின் அனுதாபம் என்பவற்றுக்கான கவிதைகளை இவரிடமிருந்தே எழுதிப்பெற்று வெளியிடுவோம். கவிதை உலகில் இவரை மறக்கவே முடியாது. அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்க பேரவையின் பாலமுனை கிளையின் தலைவராக, மாவட்டப் பணிப்பாளராக இருந்து சுனாமி, வெள்ளம் ஏற்பட்ட காலங்களில் நிவாரண உதவிகளை பொது மக்களுக்கு வழங்கினார்.

கிராமோதய சபைகள் இயங்கும் காலங்களில் ஒவ்வொரு மாதமும் பூரண தினத்தில் இவரின் தலைமையில் கவியரங்குகள் சிறப்பாக நடைபெற்றன. பொதுவாக நான் பொறுப்பாக இருந்த முஸ்லிம் லீக் வாலிப முன்னணி, வை.எம்.எம்.ஏ மற்றும் கிராமோதைய சபை ஆகிய அமைப்புக்கள் மூலம் பல சேவைகளைச் செய்துள்ளார். மேலும் பல கவிதை, நாவல், சிறுகதை புத்தகங்கள் இவரின் தலைமையில் வெளியிடப் பட்டது குறிப்பிடத்தக்கது.

பொன்விழாக் காணும் கவிஞர் பாலமுனை பாறூக் அவர்களும் அவரின் குடும்பத்தினரும் சகல பாக்கியங்களும் பெற்று நீண்ட காலம் வாழ அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சார்பாக இறைவனை வேண்டுகின்றேன்.

எம்.ஐ. உதுமாலெவ்வை (ஜெ. பி)

முன்னாள் தேசிய தலைவர்

அகில இலங்கை மு.லீ.வா.மு சம்மேளனம்

அக்கரைப்பற்று

பாவேந்தல் பாலமுனை பாறூக் எனும் இலக்கிய ஞானி

மணிக்கூ கவி நஸீரா ஆப்தீன்.
ஓய்வு நிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்.
நிறுவுனர், புத்தொளி இலக்கிய பண்பாட்டுக் குழுமம்.

நான் இலக்கிய உலகில் காலடி வைத்து ஆனது இரண்டு வருடங்களே. இலக்கிய உலகில் தடம் பதித்து ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்த பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் நினைவு மலருக்கு வாழ்த்துரை எழுதும் பாக்கியம் கிடைத்துள்ளதென்றால் அரும் பேறு என்றுதான் சொல்வேன்.

ஓட்டமாவடியில் மீறாவோடை எனுமிடத்தில் நடை பெற்ற நுட்பம் குழுமத்தின் முதலாம் ஆண்டு விழாவின் போதுதான் நான் அவரை முதன்முதலாக சந்தித்தேன். இரண்டாவது தடவையாக சந்திப்பு கவிநுட்பம் பாயிஷா நௌபல் வெளியிட்ட “கவிநுட்ப துளிப்பாக்கள்” நூல் வெளியீட்டின் போது. இவ்விரு சந்திப்புகளும் எந்தப்

பேச்சுமில்லாத வெறும் புன்னகை யுடன்தான் முடிந்த போதிலும் அங்கு அவர் மேடையில் பேசிய பேச்சுக்கள், அவரது நிமிர்ந்த ஞானச் செருக்கு, தீர்க்கமான பார்வை, அமைதியான முகம் என்னுள்ளே புதையுண்டு கிடந்த இலக்கிய உணர்வுகளுக்கு ஒரு துருப்பாக அமைந்ததென்றே தயக்க மின்றிக் கூறுவேன். அத் தருணங் களிலிருந்து அவரை சந்தித்து இலக்கியம் தொடர்பாக நிறையக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற பேராவல். ஹைக்கூ கவிதைகள் பற்றி "கவிநுட்ப துளிப்பாக்கள்" நூல் வெளியீட்டின் போது அவர் பேசிய உரையே நான் ஹைக்கூ பற்றி ஆழமான தேடலை மேற்கொள்வதற் கும் "ஹைக்கூவில் கரைவோமா?" என்ற நூலை எழுதுவதற்கும் அத்தி வாரமிட்டது என்றால் உண்மைக் குப் புறம்பானதல்ல. "சிலர் ஹைக்கூ எனும் பெயரில் மூன்று வரிகளில் என்னென்னவோ எழுதுகிறார்கள்" என்று அவர் மேடையில் கூறிய வரிகளே எனது நூலுக்கான அடிக் கல்லாகும்.

அவ்வாறே நான் "ஹைக்கூவில் கரைவோமா?" நூலை எழுதும் போது அந்நூலில் மகாகவியின் குறும்பாக் களைத் தொட்டு லிமரைக்கூ எனும் ஹைக்கூ வடிவத்தை விவரிக்க எத் தனித்தேன். ("மகாகவியின் குறும்பா" எனும் கவிதை நூல் நான் பள்ளிப் பருவத்திலிருந்த போது மறைந்த எனது தந்தை ஆர்.யு. செயினுலாப்தீன் அவர்கள் வைத்திருந்தார். அந்நூலை நான் படித்து விளையாடியதுண்டு) லிமரைக்கூ பற்றிய தேடலின் போது அந்நாளில் நான் விளையாட்டாகப் படித்து என் மனதுள் புதையுண்டு கிடந்த சில வரிகள் வெளிப்பட்டது.

அவ்வாறு நான் "மகாகவியின் குறும்பா" க்களில் இருபாக்களை எனது நூலுக்குள் வரவழைத்தேன். அப்பாக்கள் எனது மனதுக்குள்ளி ருந்து வெளி வந்ததாலும் அப் பாக்களின் யாப்பிலக்கணம் எனக்குத் தெரியாததாலும் நான் எனது நூலில் எழுதிய குறும்பாக்களில் சில தவறுகளை விட்டிருந்தேன்.

எனது "ஹைக்கூவில் கரைவோமா?" நூலினை பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் அணிந்துரைக் காக சமர்ப்பித்த போது அவர் நான் எழுதிய குறும்பாக்களிலிருந்த தவறு களை சுட்டிக்காட்டியதுடன் மஹாகவி து. உருத்திரமூர்த்தி அவர்கள் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவரென்றும் அவரது குடும்ப வரலாறுகளையும் எனக்கு முகநூல் உள்பெட்டியில் அறியத்தந்தார். (நான் மகாகவி உருத்திரமூர்த்தி தமிழகக் கவிஞர் என்று எழுதியிருந்தேன்) அதனோடு குறும்பாவில் காய், காய், தேமா என்ற யாப்பிலக்கணத்தையும் சுட்டியிருந் தார். அதன் பின்னரே காய், காய், தேமா பற்றிக் கற்றுக்கொள்ள ஓடினேன். பாலமுனை பாறூக் அவர்களின் குறும்பாக்களையும் நான் முகநூலில் படித்து வந்துள்ளேன்.

எனது "ஹைக்கூவில் கரைவோமா?" நூலுக்கான அணிந்துரையை சிறப்பாக வழங்கி எனை உளப் பூரிப்படையச் செய்ததுடன் இதனுள் இலங்கைக் கவிஞர்களால் எழுதப்பட்ட ஹைக்கூ நூல்கள் பற்றியும் சேர்த்துக் கொள்ளும் படியும் அவை பற்றிய விளக்கங்கள் ஜீவநதியில் வெளியிடப்பட்டுள்ளது என்ற ஆலோசனையையும் உள்பெட்டியில் தந்தார். இத்தனைக்கும் அதுவரை நான் பாறூக் ஐயா அவர்களுடன் ஒரு வார்த்தை கூடப் பேசியதுமில்லை. உண்மையில் சொல்லப் போனால் "ஜீவநதி" என்பது என்ன என்பதும் அதனை எங்கே பெறலாம் என்பதும் தெரியாமலும் அதை மீண்டும் அவரிடமே கேட்கத் தயக்கத்துடனும் பல இடங்களில் விசாரித்தும் தகவல் கிடைக்காமலும் சில வாரங்கள் நகர்ந்தன. அதன்பின் மீண்டும் அவரே "ஜீவநதி" பற்றிய தகவல்களையும் தொடர்பு இலக்கத்தையும் தந்த பின்புதான் நான் "ஜீவநதி" சஞ்சிகையை யாழ்ப்பாணத்திலிருந்து பெற்று ஈழத்து ஹைக்கூ கவிஞர்களின் விபரங்களை சுருக்கமாக எனது நூலில் சேர்த்துக் கொண்டேன்.

22.02.2020 நுட்பம் குழுமத்தின் மூன்றாம் ஆண்டு விழாவின்போது பாலமுனை பாறூக் ஐயா அவர்கள் தனது "வலைக்குள் மலர்ந்த வனப்பு" கவிதை நூலை எனக்குத் தந்தார். அந்நூலும் பல குறும்பாக்களுடன் வெளிவந்திருப்பதும் கண்டேன். அது மட்டுமன்றி "வலைக்குள் மலர்ந்த வனப்பு" அதன் அமைப்பு உள்ளடக்கம் போன்ற விடயங்கள் இனிவரும் காலங்களில் எனது பல நூல்களுக்கு வழிகாட்டியாகவும் அமையுமெனவும் உறுதியாக நம்புகின்றேன்.

பாவேந்தல் பாலமுனை பாறூக் ஐயா அவர்களின் ஐம்பது வருட கால இலக்கியப் பயணத்தில் 48 அல்லது 49 ஆம் வருடத்தில் அவரை அறிந்து கொண்டவள் அவருடன் தொடர்பு கொண்டவள் நான் என்பதுடன், மிகக் குறுகிய காலத்தில் அவர் மூலம் கற்றுக் கொண்டவைகள் ஏராளமென்பேன்.

இன்னும் இறைவனுதவியினால் நிறைய அறிந்து கொள்வேன். உண்மையில் அவரது இலக்கிய ஞானம் பற்றி விவரிக்கும் தகுதி எனக்கில்லை என்பேன். அவர் இன்னும் பல்லாண்டுகள் தேகாரோக்கியத்துடன் இப்பணியைத் தொடர வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பாவேந்தல் பாலமுனை பாறூக் ஐயா அவர்களும் அவரது சமூக, இலக்கியப் பணிகளும் நீடூழி வாழ வேண்டுமென எமது புத்தொளி இலக்கிய பண்பாட்டுக் குழுமம் சார்பாகவும் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

■

பாவார்த்தம்

பாலமுனை ஊரின் முதல் எழுத்து "பா" வில்தான் ஆரம்பிக்கிறது. பாறூக் என்ற பெயரிலும் "பா" தான் முதல் எழுத்து...பாவேந்தல் பட்டத்திலும் "பா" தான் முன்னிலை.... அவரது பிள்ளைகளின் பெயர்களிலும் "பா" தான் பரவியிருக்கிறது.. மொத்தத்தில் "பா" வே அவரது உயிரிலும் பெயரிலும் ஊடுபாவி இருக்கிறது..

பாதான் அவரது மூச்சு பேச்சு எல்லாமே.. பாவினங்கள் அவரது பாடல்களில் பற்பல வடிவெடுக்கும்.. பாத்திறம் அவரது பாக்களில் நிறைந்து பரவசம் தரும்.. எப்போதும் பாக்களால் நிறைந்திருக்கும் அவரது பாத்திரம்.. பாமேடைகளில் அவரது பாத்திரமே முதன்மை பெறுகிறது..

வெண்பா, குறும்பா, புதுப்பா எப்பாவென்றாலும் அப்பாவில் பாப்புனையும் திறமையில் ஒரு சொல்லேனும் தப்பா. அப்பா...இவரது தமிழ் புலமைக் கொப்பாரிலர் இப்பாரில்...

பாவார்த்தம் பார்த்து உரிய பாவினம் தேர்ந்து பாவனம் கூட்டிச் சொற்களில் பாவிகம் சேர்த்துப் பாவியற்றும் பாங்கு கைவரப்பெற்ற திறமை பார்த்தே பாறூக் அவர்களுக்கு 2013.06.26 இல் சாய்ந்தமருது அபாபீல்கள் கவிதா வட்டம் 'பாவேந்தல்'' என்ற பட்டமளித்துக் கௌரவம் வழங்கியது. அந்நிகழ்வை இக்கணத்தில் எண்ணி மேலும் பெருமைப் படுகின்றோம்...

ஓங்குக மேலும் பாவேந்தல் புகழ்..

தீரன். ஆர்.எம். நௌஷாத்

செயற்சபை முதல்வர்

சாய்ந்தமருது அபாபீல்கள் கவிதா வட்டம்.

காவியநாயகன் பாவேந்தல்

ஜே.வஹாப்தீன்

பதமாகப் பழகியபால் மனசு
பாலமுனை மண்ணின் பெருமவுசு

மண்மணக்கும் எழுதுகோலை
எங்கிருந்து பெற்றாரோ
சந்தனப் பொய்கையின் வாசம்
சந்து பொந்தெல்லாம் மணம் பரப்பியதே.

கள்ளங் கபடமில்லா காவியத்தோணி இது
கரை சேர்ந்திருக்கிறது.

வலைக்குள் மலர்ந்து
நல்லநிலைக்கு வந்த சாதனை.
எஞ்சியிருந்த பிரார்த்தனையால்
நெஞ்சு வருடி நிலைத்த சோதனை.

கொந்தளிப்பால் கண்களை திசை திருப்பிய பொன்னெழுத்து
கொந்தளிக்காமல் ஆழ்கடலாய் அமைதிகொள்ளும்
நல்லெழுத்து.

ஊருக்குமகுடம் சூட்டிய
பாறுக் என்னும் பாவலர்
யாருக்கும் தீண்டி நோவினை செய்து
யானறியவில்லை.
வேருக்குநீர் வேண்டும்
பாறுக் தமிழ்செய்யப் பிறந்தவர்.

யாப்பிலக்கணத்தில் தேர்ந்தவர்
குறுங்காவிய உலகைச் சேர்ந்தவர்

குறும்பாக்களையும் கோர்த்தவர்
கிராமத்துமணம் வீசும் தோட்டுப்பாயில்
மூத்தம்மாவை இருத்தி விருதுபெற்றவர்.

நிலாவாகி ஜொலிப்பது
கவியரங்க வானத்தில்
கவிக்குயிலாகக் கூவுவது
செந்தமிழ்க் கானகத்தில்.

நிலைத்த பல தமிழ்ப்பாட்டு
ஈழத்துக் கானகத்தில்
இவர் பெயர் பொறிக்கும்
பாலமுனை பாறுக்கின் எழுத்துமணிகளை
வருங்காலப் புறாக்களும் கொறிக்கும்.

சொல்லத் துடிக்கிறது மனசு !

அல்ஹாஜ். ஐ.பி.எம். ஜிப்ரி
ஸ்தாபக சேவைத்திட்ட பணிப்பாளர்,
பாலமுனை

அன்று பாலமுனையில் உருவாக்கப்பட்டிருந்த பாலமுனை பூஞ்சோலை எழுத்தாளர் மன்றத்தில், இன்று பொன் விழாக் காணும் பாலமுனை பாறூக் அவர்கள் முக்கிய இடம் பெற்றிருந்தார். "எழடா எழடா எழு" எனும் தலைப்பில் அம்மன்றம் நடத்திய கவியரங்கின் மூலம் இக்கவிஞரின் தொடர்பு எனக்கு கிடைத்தது.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் கல்விகற்று, 1977ஆம் ஆண்டு தொழில் வாய்ப்புப் பெற்று இலங்கை வங்கியில் பணிபுரிந்தவர் பாலமுனை பாறூக். அக்காலங்களில், இவரின் கருத்தாழம் மிக்க கவிதைகள், தினபதி, சிந்தாமணிப் பத்திரிகைகளில் அடிக்கடி வெளிவரும். கவிதைத் துறையில் மட்டுமல்லாமல் நாடகத் துறையிலும் இவர் ஆர்வம் காட்டினார். இவரால் எழுதப்பட்டு மேடையேற்றப்பட்ட "பழைய மெம்பர் பறந்தார்" எனும் நாடகம் பலரின் பாராட்டைப் பெற்றது.

1974 ஆம் ஆண்டு கல்முனைப் பிராந்திய கூட்டுறவு தின விழாவில் அன்புடீன் அவர்களின் கடன் கட்டினால் கல்யாணம் என்ற நாடகத்தோடு இவரின் பழைய மெம்பர் பறந்தார் நாடகம் புதுயுகம் பிறக்கிறது என்ற பெயரில் மேடையேற்றப் பட்டு, மட்டு பாராளுமன்ற உறுப்பினர் இராஜன் செல்வநாயகம், மற்றும் கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோரின் பாராட்டையும் பரிசையும் பெற்றது.

கவிஞர் ஒரு மேடை அறிவிப்பாளராகவும் பணி புரிந்தார். 1975 இல் அக்கரைப்பற்றில் இடம்பெற்ற பொலிஸ் - பொதுமக்கள் விழாவில் எனது நடனத்தை அறிமுகம் செய்த போது "இடை நெளிய, துடை தெரிய, அங்க மெல்லாம் பளபளக்க, தங்க ரதமொன்று இதோ மேடைக்கு வருகிறது" என்று

கவிநடையில் குறிப்பிட்டது இப்பொழுதும் நினைவுக்கு வருகின்றது.. (வெளிவாரியாக நடனக் கல்லூரியில் கற்றுக் கொண்டிருந்த நான் அப்பொழு தெல்லாம் நடனமங்கையாக வேடமிட்டு மேடைகளில் தோன்றி நடன மாடினேன். பின்னர், வேடமிடுவதில் மார்க்கத்தின் போதனையை அறிந்து நடனத்தில் இருந்து விலகிக் கொண்டேன்)

தென்கிழக்கு பிராந்தியத்தில் ஊரின் பெயரோடு தன்நாமத்தை இணைத்து ஊருக்குப் பெருமை சேர்த்த கவிஞர்களில் பாலமுனை பாறூக் முக்கியமானவர். இதன்மூலம் இவ்வூரில் பிறந்து வாழ்ந்து இவ்வூருக்குக் கண்ணியம் சேர்த்த இவரின் பிதா முகம்மது லெவ்வை தாய் அலிமா நாச்சி ஆகியோருக்கும் பெருமை சேர்த்துள்ளார் கவிஞர்.

கவிஞர் 10-10-1979 இல் திருமணம் செய்து கொண்ட நாளிலும் அவரின் கவிதை பத்திரிகையில் வெளியானது. எவ்வித தடங்கலுமின்றி தொடர்ந்தும் ஓய்வில்லாமல் இறைவன் உதவியால் அவரின் எழுத்துப் பணி நீள்கிறது. இவருக்கு பொன் விழாக் காண்பதில் மகிழ்கிறது மனசு. பவள விழா நோக்கியும் என்பார்வை விரிகிறது.

இவருடைய முதல் கவிதைத் தொகுதியான “பதம்” பாலமுனையில் எமது பாலமுனை சமூக சேவை ஆய்வு சபையினாலேயே வெளியிடப்பட்டது என்பது பதிவு. அதன்பின் வெளிவந்த தோட்டுப்பாய் மூத்தம்மா, எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு நூல் வெளியீடுகளின் போதும் எமது ஆதரவு இருந்தது. 2017 இல் வலைக்குள் மலர்ந்த வனப்பு கவிதை நூலும் எமது சபையினாலேயே வெளியீடு செய்யப்பட்டது என்பது எமக்கு மகிழ்ச்சி தரும் நினைவுகளாகும்.

1995 இல் நாம் நடத்திய கலைஞர் கௌரவிப்பு விழாவிலும் கவிஞர் பாலமுனை பாறூக் கௌரவம் பெற்றார். பிரபல எழுத்தாளர் அ.ஸ. அப்துஸ்ஸமது அவர்கள் தலைவராகவும் அன்றைய மேலதிக அரசாங்க அதிபர் யு.எல்.ஏ. அஸீஸ் அவர்கள் பிரதம அதிதியாகவும் இருந்த அவ்விழாவில் அ. ஸ. அவர்கள் உரையாற்று கையில், இவ்வாறான ஒரு விழாவை சமூக சேவை ஆய்வுச்சபை எடுத்திருப்பது அவருக்குக் கிடைத்துள்ள கௌரவமாகும். பாலமுனை பாறூக் படைப்புகளைத் தந்துள்ளார் என்பதை நான் அறிவேன். சமூக சேவையின் மூலமும் இவர் உயர்ந்து நிற்பதை இப்பொழுது அறிந்து பெருமிதமடைகின்றேன் என்று அவர் குறிப்பிட்டது ஞாபகத்திலுள்ளது.

உண்மையில்,கவிஞராக மட்டுமல்லாது,சமூக சேவையிலும் அவரின் ஈடுபாடு காணப்படுகின்றது. பாதை,கல்வி, மாதர் மேம்பாடு என பல்வேறு உதவிகளை அளித்து வரும் ஒரு சேவகனுக்கு பொன்விழா கொள்வது சிறப்பானதாகும்.

1988 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் எமது சபை அங்கவீனர்கட்கான 2 ஆம் கட்ட கொடுப்பனவை வழங்கிய நிகழ்வுக்கு பொத்துவில் தொகுதி முதலாவது பா. உ. எம் .ஐ. உதுமாலெவ்வை அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். அதில் கலந்து கொண்டு சமூக சேவை ஆய்வுசபை பற்றி கவிதை பாடிய கவிஞர் பாறூக், கண்இல்லா மனிதருக்கு கண்வைத்துப் பார்க்க, காலில்லா மனிதருக்கு கால்வைத்துப் பார்க்க இச்சபையினர் விரும்புகின்றனர். மணக்கும் மலர்களால் மாலை தொடுத்து மக்களுக்குச் சூட விரும்புகின்றனர் என்று “சேவை மனங்களுக்கு ஒரு தெருப்பாடகனின் ஆசிப்பூக்கள்” என்ற தலைப்பில் புகழ்ந்துரைத்தார். இதனை அடியொற்றி அன்றைய விழாவில் பொத்துவில் முதல்வர் அவர்கள் பாராட்டிப் பேசியது இன்றும் நினைவில் உள்ளது.

1981 ஆம் ஆண்டு முன்னை நாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ அவர்களால் முன்மொழியப்பட்டு, 2000 ஆம் வருடம் யாவருக்கும் புகலிடம் எனும் கோட்பாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட கிராமோதய சபைகளின் பாலமுனை சபையின் மூன்றாவது தலைவராக பாலமுனை சமூக சேவை ஆய்வுச்சபையின் ஆதரவுடன் 17 இயக்கத் தலைவர்களினால் வெற்றி பெற்றுத் தெரிவானார் பாலமுனை பாறூக் அவர்கள். இவரின் காலத்திலேயே சன சமூக நிலையத்தினால் முன்மொழியப்பட்ட அல் ஹிதாயா முன்வீதி அமைக்கப்பட்டது. தபாலக வீதி, மில்லடி வீதி, விளையாட்டு மைதான வீதி, பள்ளிவாசல் தெற்கு வீதி, வடக்கு வீதி, அரசடி வீதி, கடற்கரை வீதி, உதுமாபுர வீதி, வடிகான் வீதி, என்று வீதிகள் புனரமைக்கப்பட்டு நாமம் கொண்டதும் இவரின் காலத்திலேயாகும்.

குடும்பச் சர்ச்சைகளைத் தீர்க்கும் நல்லிணக்க சபையொன்றும் கிராமோதய சபையின் ஏற்பாட்டில் அமையப் பெற்றது. இவரின் தலைமையில் இயங்கிய இச்சபை 1917 வழக்குகளில் 1717 பிணக்குகளைத் தீர்த்து வைத்தது. மூன்று வழக்குகள் மட்டும் நீதிமன்றம் சென்று கிராமோதய சபையைச் சரிகண்டு திருப்பி அனுப்பப்பட்டன. இந்த நற்பணியில் சமூக சேவை ஆய்வுச் சபையின் சார்பில் எவ்வித கொடுப்பனவுமின்றி நல்லிணக்க சபையின் பதிவாளராக நான் செயற்பட்டேன். பொன்விழா நாயகரோடு இணைந்து செயற்பட்ட இவ்வாறான நிகழ்வுகள் மறக்க முடியாதன.

இலக்கியப்பணியில் மட்டுமன்றி சமூக நலத் திட்டங்களிலும் ஆதரவுதரும் பொன்விழா நாயகனை எமது சமூக சேவை ஆய்வுச் சபையின் சார்பில் வாழ்த்துவதில் மகிழ்கின்றேன்.

அல்லாஹூ அக்பர்.

கலைப் பொக்கிஷம்

சின்னப்பாலமுனை
முஹா

வாசம் தூவும் கலைப் பொன்விழா சேதியே
வீசும் காற்றெல்லாம் கலக்கிறதே
பாலமுனை பாறூக் பாவேந்தலரே
பேசுதே புவி நித்தமுமே உம்மை
நெஞ்சமெல்லாம் நேசம் பரப்பியே..!

தலைமுறை பல கடந்து
தசாப்தங்கள் ஐந்தாக உயர்ந்து
விலை தொடா படைப்புகள் தந்து
வியந்து நோக்கும் அனுபவங்கள் சுமந்து
கலை முதுசமாய்
இலக்கியப் பெருங்கடலாய்
அலைகளாகி இன்னும் சுறுசுறுப்புக் குறையாமல்
மலைகளெனக் குவிந்த
சரித்திரங்களின் பொக்கிஷமே! கவிப்புனலே!

பட்டறிந்த எழுத்தாளர், பண்பாளர் பாவேந்தல்
விட்டகலார் நட்புத்தேன்!
கூர்மை கொண்டிருந்த பார்வையினால்
ஓர்மமுள்ள கதா விலாசமும்
சீர்மைமிகு கவிதா விசாலமும் கண்டவர்!

நேரிய சிந்தனையில் நீந்தி
வீரிய சொல்லாட்சியில் விளைந்து
சீரிய கலைப்பணியில் பரிமாணங்கள் பல கடந்து
கூரிய பேனாமுனை கொண்டு
கூறிய சொல்லதனால்
'பாலமுனை'க்கு முகவரி தந்தார்!
பலமுனைகளிலே வென்றார்!

கவிஞர் பெருமகனாய்
அவரேற்ற பாத்திரங்கள் அளப்பெரிய சமுத்திரங்கள்!

பாறூக் ஜீவிக்கும் தருணத்தில்
ஜீவிதம் பெறும் வரமிங்கு
நமக்கு பெரும் பாக்கியம்!
வருமே வாழ்வில் நிரந்தர சௌபாக்கியம்!

பொன்விழாக் காணும் முதுசம்!

பாலமுனை கலைக்குடும்பத்தின் கதாநாயகனும், புகழ் பூத்த புதல்வரும் நீங்களே. அதனால்தான் என்னவோ எமது மண் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது. உங்கள் கவிதைகளாலும், குறும்பாக்களாலும், காவியங்களாலும் உலகம் போற்றும் கவிஞனாகி பாவேந்தல், கலாபூஷணம் எனும் பட்டத்தோடு எமது ஊரை அடையாளப் படுத்தி பாலமுனை பாறூக்காய் வலம் வந்தாய். இன்று வரை வெற்றி நாயகனாய் மின்னுகிறாய்.

“மேகங்கள் மெல்ல விலகும்போது
நீல மேனி ஒன்றில்
நகை அணிந்தாற் போல்
நட்சத்திரங்கள் உன்னிடத்தில்
நாற்றிசை நாமம் பெற்று
முழு உலக உயிர்களுக்கு திசைகாட்டி...
எத்தனை எத்தனை அதிசயம் ஆனாலும்
ஒரு துளி கர்வமில்லை உன்னிடத்தில்”

ரைஸ்டார் அணியின் ஆரம்ப கால உறுப்பினராக கழகத்தை ஊர் அறியச் செய்த பெருமை உன்னையே சாரும். அதுமட்டுமா! தம் புதல்வர்களை கழகத்திற்கு அளித்து புத்துயிரூட்டி பல தியாகங்கள் செய்து இன்று வரை எம்மோடு கைகோர்க்கின்றீர்.

ஆயிரம் மேடை உன்னை அலங்கரிக்க நினைத்தாலும் நடுவில் ஓர் நட்சத்திரமாய் ஜொலிக்கின்றாய் எப்பொழுதும். வாழ்த்துரை எழுதுவதில் மிக்க மகிழ்ச்சி.

பிரார்த்தனைகளும் நன்றிகளும்

ஐ.எல்.எம்.பாயிஸ் - தலைவர்

கவிஞர் வை.எம். அஸாம் - செயலாளர்

நிர்வாக உறுப்பினர்களோடு கழக உறுப்பினர்கள்

ரைஸ்டார் விளையாட்டுக்கழகம்

பொன்விழாக் காணும் பன்முக ஆளுமை

பாலமுனை அல் ஹிதாயா மகளிர் கல்லூரியில் (அன்றைய அல் ஹிதாயா வித்தியாலயம்) பாலமுனை பாறூக் அவர்களின் 'பதம்' எனும் கவிதை நூல் வெளியிடப்பட்டது. அப்போது அப்பாடசாலையில் மாணவனாக கற்றுக் கொண்டிருந்தேன். அந்நூல் வெளியீட்டின் போது நானும் சிறுவனாக கலந்து கொண்ட அனுபவமும் மகிழ்ச்சியும் இப்போது என் கண் முன்னே நிழலாக ஓடிக்கொண்டிருப்பதை பாவேந்தல் பாலமுனை பாறுக் அவர்களுடைய பொன்விழா மலருக்காக வாழ்த்தும் சில வரிகளில் உணர முடிகிறது அல் ஹம்துலில்லாஹ்.

பாலமுனை மண்ணினுடைய பெருமையை தனது எழுத்தின் மூலம் வெளியுலகிற்கு பறைசாற்றிய வல்லமை பாலமுனை பாறூக் அவர்களையே சாரும் என்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது என்பது யதார்த்தம். அவருக்கு என் ஆத்மார்த்தமான வாழ்த்துகளுடனான பிரார்த்தனைகள்.

பதம் எனும் நூலில் தொடங்கி பல காவியங்களைப் படைத்து பல் துறைகளிலும் எழுந்த வலிகளை நூல்களாக தொகுத்து உயர் விருதுகள் பல பெற்று பொன் விழாக்காணும் வரை இலக்கியப் பணி செய்த பெருமைக்குரியவருக்கான இம்மலர் சிறக்கவும் இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

இவ்வையகத்தில் வாழும் ஒரு சமூகசேவையாளனை, எழுத்தாளனை, கலைஞனை மற்றும் கல்வியலாளன் போன்றோரை வாழும் போதே வாழ்த்துவதே நாம் அவர்களுக்கு செய்கின்ற கைமாறும் அடுத்த தலைமுறை யினருக்கான எடுத்துக் காட்டுமாகும். அந்த வரிசையிலே இவ்வனைத்து துறைகளிலும் தடம் பதித்த பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது மண் ஒன்று கூடி பொன்விழாக் காணும் பாலமுனை பாறூக் அவர்களை கௌரவித்து வாழ்த்துவதே பாலமுனை மண்ணில் இலக்கியப்பணி செய்த ஒரு கலைஞனுக்கு

விழாக்கோலம் பூணும் முதற் தடவையாகும். எமது மண்ணின் பொக்கிசங்களில் ஒருவரான பாலமுனை பாறூக் அவர்களின் இலக்கியப்பணி மற்றும் சமூகசேவை இன்னும் நீடிக்க வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அகமகிழ்ந்து மீண்டும் வாழ்த்துகின்றேன்.

ஐ.அஹமத் ஸிறாஜ் (ஜே.பி)

ஊடகவியலாளர்

தலைவர்

கலாசார அபிவிருத்தி மையம்

பாலமுனை.

பாலமுனை உள்ளவரை பாறூக் நீ வாழ்க.

ஜலால்டீன் மஹாகவி

பாலமுனை பாறூக்கை பாவில் நான் பாடுதற்குப்
பாக்கியத்தைத் தந்தவனே பாரின் தலைவா என்
காலக் கவியாற்றல் கரையின்றிப் பாய்வதற்கு
கல்வி பெருஞ்ஞானம் கற்றுயரக் கைகொடுப்பாய்!

முகம்மது லெவ்வை என்னும் முறையான காதி மகன்
முற்றத்து மல்லிகையை முகர்ந்து கவியெழுதி
அகமது குளிர்ந்துவிட அன்பொழுக வாசித்தாய்
அணைக்கிறது உன் சமூகம் ஆணழகா வெற்றியடா!

புதியதொரு பறவை என புறப்பட்டாய் பேனாவுடன்
புதுப்புதுப் படிமங்களை போட்டாய் பதம் படைத்தாய்
அதிகம் உனைப்பாடி அலங்கரிக்கத் தேவை இல்லை
அவைக்கு நீ முதலோன் அரும்பதங்கள் உன் கவிகள்!

இஸ்லாத்தைக் கவிதையிலே எழுதிவரும் கவிஞன் நீ
இனிமை மொழியொழுக இங்கிதமாய் பேசுமுந்தன்
கனிந்த இதயமதை கண்டேன் நண்பா உன்
கவிகள் இத்தரையில் காலமதை வெல்லுமடா!

காழ்ப்புணர்ச்சி உன்னிடத்தில் கடுகளவும் இல்லையடா
கைகொடுக்கும் மனப்பாங்கை "கல்பெல்லாம்" கொண்டவனே
நாள் முழுதும் உன்புகழை நான்பாடவேண்டுமின்னும்
நன்றிகளை மறக்காத நல்மனிதா வாழ்க நீ!

பாலமுனை பாறூக்கின் பண்பான பெயர் சொல்லி
பாவையவள் தாலாட்டி பால்கொடுத்து முத்தமிட
ஓலமிட்டு நடுச்சாமம் ஓயாது அழும் குழந்தை
ஓய்வெடுத்துத் தூங்கிடுமாம் உட்கவலை தனைமறந்து!

வங்கிக்கு வருவோரை வரவேற்று உபசரிக்கும்
வங்கக்கடல்போன்ற வள உள்ளம் கொண்டவனே
அங்கி அணியாத அழகு நிலாப் பெண்போல
அங்கமெல்லாம் நிலவொளிரும் அன்பென்னும் சந்திரன் நீ!

சிங்கத்கத்து ராசியுள்ள சிறப்பான கட்டழகன்
சங்கத்துத் தமிழுமுன்னை சங்கு என்று தான் சொல்லும்
தங்கத்தை போலுன்றன் தகதகக்கு முள்ளன்பு
எங்கெங்கும் பொங்குமுந்தன் இன்னாமம் காலமெல்லாம்!

பால்பொங்கித் தேன்வழியும் பால முனையூரின்
பண்பான பரம்பரையில் பகலவனாய் உதித்தொளிர்ந்து
நூல்கள் பலகற்று நுண்ணறிவும் தான்கொண்டு
நுட்பமுள்ள சிந்தனையால் நுணுக்கமுடன் வாழ்பவனே!

நாள்கள் பலகடந்தும் நட்புக்கு நீ அற்புதம்தான்
நாட்டமுடன் தேடிவரும் நன்றியுள்ள ஜீவனும்தான்
தோள்கொடுக்கும் நேரமதில் துடித்துவரும் துணையாளா
துன்பத்தில் பங்கெடுக்கும் தூய்மையுளம் கொண்டவன் நீ!

சுடுகாட்டுக் கட்டிடம்போல் சுகாதார மனைகண்டு
சுற்றயல் கூறாக்க "சொசைற்றியும்" வேண்டுமென்றேன்
எடுபேனா எடு என்றீர் சேர்ந்து எழுதிடுவோம் வாவென்றீர்
நடு இரவும் எங்களுடன் நற்கருமம் செய்து நின்றீர்

எத்தனையோ திருமணங்கள் இரண்டுபட்டு நிற்கையிலே
இன்பமுடன் மொழிபேசி இருவரையும் ஒன்றினைத்து
சொத்தினிலும் பத்தினிலும் சுகமில்லை மச்சியவள்
முத்தமொன்று போதுமென்று புத்திகளைச் சொல்பவன் நீ!

எழுதும் என் கவியின் இயல்புகளைக் கூறியதன்
ஒழுகும் முறை சொல்லி உய்வடைய வாழ்த்துமுந்தன்
பழகும் தனிப்பாணி பண்புக்கோர் இலக்கணம்தான்
பாறூக் நீ வாழ்க பாலமுனை உள்ளவரை!

■

பாலமுனை பாறூக் என்னும் வரலாற்றுத் தடயம்

உலகளாவிய ரீதியில் இலக்கியம் படைத்து தமிழ்த் தொண்டாற்றிய வர்களைப் பட்டியலிட்டால் இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் அடையாளப் படுத்தப்படும் தமிழ் வளர்த்தோர்களின் முதன்மைப் பெயர்ப் பட்டியலில் இடம் பிடிக்கும் ஒரு பெயர்தான் “பாலமுனை பாறூக்”

கவிப்புனல் என ஆரம்பித்து பாவேந்தலாய் தொடரும் இந்த இலக்கியப் பயணத்தில் பாலமுனைபாறூக் அவர்களின் இலக்கியப் பணி அளப்பெரியது. கவிதையில் தொடங்கி அது காவியம்வரை நீண்டு செல்கிறது. தனக்கென மாறுபட்ட ஒருதளத்தை உருவாக்கி அதில் பயணிப்பவர் பாறூக்.

இலக்கிய உலகில் ஐம்பதுவருடங்கள் தொய்வில்லாமல் பயணிப்ப தென்பது அத்தனை இலகுவானதல்ல, ஆனால் அது பாறூக் அவர்களால் முடிந்திருக்கிறது என்பது உண்மையில் பெருமைக் குரியதும் பாராட்டப்படவேண்டியதுமான விடயமே.

இலக்கிய படைப்போரில் படைப்புக்கும் தங்களது வாழ்க்கைக்கும் இடையில் வானும் நிலமும் போல இடைவெளி கொண்ட படைப்பாளிகளுக்கு மத்தியில் இலக்கியத்தோடு ஒன்றித்து வாழ்பவர்கள் சிலபேர் மாத்திரமே அதில் பாவேந்தல் அவர்களும் ஒருவர்.

தங்களைத் தாங்களே புகழ்ந்து கொண்டும் தங்களுக்கு தாங்களே விருதுகளும் கெளரவமும் வழங்கிக் கொண்டும், பணம் கொடுத்தும் கால்களில் விழுந்தும் தனக்கான புகழினையும் தன்பெருமையை மேடைகளில் பாடவும் வேண்டியலையும் இலக்கியவாதிகளுக்குள் புகழின் பின்னால் பயணிக்காத எளிமையான ஒருஎழுத்தாளர் பாலமுனைபாறூக் என்றால் அதுமிகையாகாது.

இளையவர்களையும் வளரந்து வருகின்ற கலைஞர்களையும்

மட்டம் தட்டி அவர்களுக்கான சந்தர்ப்பங்களை வழங்காது அவைகளையும் தாங்களே அடைந்து கொண்டு தன்பெயர் மட்டுமே எதிலும் ஜொலிக்கவேண்டும் தன்புகழ் மட்டுமே எங்கும் பாடப்படவேண்டும் என்னும் பண்புடைய இலக்கியவாதிகளுக்கு மத்தியில் இளையவர்களை பாராட்டி ஊக்கப்படுத்தி வளர்த்துவிடும் நல்ல பண்பினைக் கொண்ட ஒரு இலக்கியவாதி அன்பிற்குரிய கவிஞர் பாவேந்தல் பாலமுனை பாறூக் என்றால் அதில் மாற்றுகருத்துக்கு இடமில்லை.

இத்தனை நல்ல பண்புகளோடு ஐம்பதுவருடங்கள் இலக்கிய உலகில் பயணித்து பொன்விழாக் காணும் பாலமுனை பாறூக் நிச்சயம் இந்த விழாக் காண தகுதியானவர்தான் என்பதை மனம் திறந்து சொல்வதில் ஒலுவில் மின்னல் வெளியீட்டகம் பெருமிதம் கொள்கிறது.

இலக்கிய உலகில் இவர் ஒரு வரலாற்றுத் தடயம் இன்னுமின்னும் இந்தப் பயணம் இனிதே தொடர மனம் திறந்து வாழ்த்துகிறோம்.

கவிஞர், நாவலாசிரியர் அஸீஸ் எம் பாயிஸ்
தலைவர் - மின்னல் வெளியீட்டகம்
ஒலுவில்.

எழுத்தூழியத்தில் ஐம்பது வருடங்களைக் கடந்த இளைஞன் பாவேந்தல் பாலமுனை பாறூக்

ஈழத்து இலக்கியத்தில் இன்றுவரை உயிர்ப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு இளைஞன் தன் இலக்கியப் பயணத்தில் ஐம்பது வருடங்களை கடந்திருப்பதைக் காண்பதும் அந்த வெற்றி நாயகனுக்கு ஓடிச்சென்று ஒருமாலையிட நமக்கெல்லாம் ஒரு சந்தர்ப்பம் கிடைதிருக்கின்றதென்பதை எண்ணுகின்றபோது ஏற்படுகின்ற சந்தோஷிப்புக்களே ஆத்ம திருப்தியாகிவிடுகின்றது.

எழுத்தூழியத்தால் தன்னையும் ஈன்ற மண்ணையும் பெருமை கொள்ளச் செய்த பாவலன் பாவேந்தல் பாலமுனை பாறூக்கின் பொன்விழா மலருக்கு குறிப்பொன்றினை வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு ஒரு இலக்கியம் விரும்பியாகவும், பட்டாம்பூச்சிகள் பரண் நிறுவுநர் என்ற வகையிலும் மிகுந்த சந்தோஷங்களை அடைந்துகொள்கிறேன்.

பாலமுனை என்றதுமே எழுதப்படாமல் உச்சரிக்கும் நாமம்தான் பாறூக். ஈழத்து இலக்கியத்தில் தனக்கென்றொரு சிம்மாசனத்தை இளசுகள் மனங்களிலும் போட்டமர்ந்து கொண்டிருக்கும் பண்புநிறை பாவலன். காவியத் தேரோட்டி இலக்கிய இளவல்களின் வழிகாட்டி என்றால் அது மிகைப்படுத்தப்பட்ட வார்த்தையல்ல.

பாவேந்தல் பாலமுனை பாறூக் எனும் நாமம் நமது வாசிப்பில் நன்கு பரிச்சயமாக இருந்தாலும் நேசிப்பின் அருகாமைக்கு என்னை கொண்டுவந்தது முகநூலொன்றுதான். அதன் பின்னரான இலக்கிய விழாக்கள், வெளியீடுகள், கவியரங்கங்கள், ஒன்றுகூடல்கள், சந்திப்புக்களென அத்தனை செயற்பாடுகளிலும் அலுப்பின்றிய ஒரு இளைஞனாகவே நான் அவரை காண்கின்றேன். இளம் எத்தாளர்களுக்கு சிறந்தவொரு வழிகாட்டியாக இருப்பவர். இன்றுவரை இலக்கிய இயங்கு தளத்தில் உயிர்ப்புடன் இருக்கும் பாவேந்தல் அவர்கள் இன்னும் நீடித்த ஆயுளுடன் இலக்கியப் பணியாற்ற வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

தென்கிழக்கு தந்த இலக்கிய முதுசங்களுள் பாவேந்தல் பாறூக் அவர்களின் இலக்கியப் பணி என்றும் போற்றுதலுக்குரியது. அவர் தலைமையில் கவிபாடும் சந்தர்ப்பங்களமைந்தது மட்டுமல்லாமல் அவரின் குறும்பாக்களில் வசியப்பட்டு ஒருமுறை குறும்புகள் செய்யும் “குறும்பா” பற்றி கேட்டபோது சொல்லித் தந்தது மட்டுமல்லாமல் தனது முகநூற் குறிப்பொன்றிலும் குறும்பாக்கள் எழுதிக்கொண்டிருப்பவர்கள் என சிலரை வரிசைப்படுத்தியதில் இந்த சின்னவனையும் சேர்த்துக்கொண்டது அவரின் பெருந்தன்மையையும் நேர்மையையும் எடுத்துச்சொல்ல போதுமானது என்பேன். இலக்கிய உலகில் தத்தித் தவழும் ஆர்வமிகு இளையவர்களை வளரவிடாது நாங்களே ஜாம்ப வான்கள் என மமதைகொண்டிருக்கும் எழுத்தாளர்களிடையே தட்டிக்கொடுத்து இளைஞர்களோடு ஒரு இளைஞனாய் தன்னையும் இணைத்துக்கொண்டு பயணிக்கும் ஒரு மூத்த எழுத்தாளனாக பாலமுனை பாறூக் அவர்களை காண்கின்றேன்.

பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் பொன்விழா மலரில் இச்சிறு குறிப்பொன்றினை எழுதக் கிடைத்தமையையிட்டு “பட்டாம்பூச்சிகள் பரண்” அமைப்பின் நிறுவுநர் என்ற வகையில் பெருமிதமடைகின்றேன். இலக்கியப் பணியில் ஐம்பது ஆண்டுகளை நிறைவுசெய்திருக்கும் இந்த பொன்விழா நாயகனுக்கு பட்டாம்பூச்சிகள் பரண் உறவுகள் சார்பாகவும் தேசம்போற்றும் இலக்கியம் ஆக்கியவர்களை பெற்ற மண்சார்பாகவும் வாழ்த்துக் களை தெரிவித்துக்கொள்வதில் பெருமிதமடைகின்றேன்.

கிராமத்தான் கலீபா

நிறுவுநர்,
பட்டாம்பூச்சிகள் பரண்,
பொத்துவில்.

ஹில்ப் சமூக சேவை மன்றம் சார்பான வாழ்த்துச் செய்தி

பாலமுனை மண்ணை பாரினில் அறியச் செய்த அல்ஹாஜ். பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களுக்கு பொன்விழா காணும் நேரத்தில் வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கை வங்கியின் இலிகிதராய் தொழிலை ஆரம்பித்து முகாமையாளராய் பதவி உயர்வு பெற்று ஓய்வு பெற்றவர். தொழிலோடு மட்டும் நின்றுவிடாமல் ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகில் பிறந்தமைக்கு அர்த்தம் வேண்டும் என்ற வகையில் தான் பிறந்த ஊரை தனது கலைப்படைப்பினால் ஐந்து தசாப்தங்களுக்கு மேல் உலகறியச் செய்ததோடு தன்னைப் போன்றுபலர் உருவாகவேண்டும் என்ற நன்நோக்கில் படைப்பாளர்கள் பலரை ஊக்கப்படுத்திய வித்தகர்.

தொழிலோடும், கலையோடும் நின்றுவிடாமல் சமூக மேன்பாட்டுக்காகவும் பல அமைப்புக்களை வழிப்படுத்தி நெறிப்படுத்தி பற்பலசேவைகள் செய்தவர் இன்னும் செய்துகொண்டிருப்பவர். எமது அமைப்புக்கும் பல ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கிய சேவகர்.

மேலும், பல சிறப்புக்களைக் கொண்ட பெருந்தகை பொன் விழாக்கண்டு மகுடம் சூடும் இந்நாளில் ஹில்ப் சமூகசேவை மன்றம் சார்பாகவும் தனிப்பட்ட ரீதியிலும் வாழ்த்திப் போற்றி எமது ஊருக்கு இன்னும் பலசேவையாற்ற உடல், உளரீதியான வலிமையினை வாரிவழங்க எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

எம்.ஜே. முஹம்மது றிஸ்வான் (EDO),
தலைவர்,
ஹில்ப் சமூகசேவைமன்றம்,
பாலமுனை.

பொன் விழாக் காணும் பொக்கிஷம் பாவேந்தல் பாலமுனை பாறூக்.

ஈழத்து இலக்கியப் பரப்பில் மட்டுமல்லாமல், சர்வதேச அரங்கிலும் கவிதைத் துறையில் தனக்கென தனி இடத்தினை எப்போதுமே தக்கவைத்துக் கொண்டு சதாவும் இலக்கிய சிந்தனையோடு மரதன் ஓடிக் கொண்டிருப்பவர்தான் பாவேந்தல் பாலமுனைபாறூக்.

இப்போதெல்லாம் மூத்தோருக்கும், இளையோருக்குமான இலக்கியத் தொடர்புகள் அறுந்து போயுள்ள சூழலில் பாவேந்தல் பாலமுனை பாறூக்கினுடைய இலக்கியத் தொடர்புகள் இளம் தலைமுறையினை அல்லது வளர்ந்து வருகின்ற படைப்பாளி களைத் தட்டிக் கொடுப்பதிலும், வளர்த்து விடுவதிலும் முன் நின்று செயற்படுவதானது மெச்சத்தக்கதொரு பங்களிப்பாகும்.

எப்போதுமே எல்லோரிடத்திலும் சிரித்தமுகத்தோடு கலகலப்பாகப் பேசுகின்ற வஞ்சகமில்லாத குறும்பா நாயகன் பாவேந்தல் பாலமுனை பாறூக் எந்த நிகழ்வுக்கு அழைத்தாலும் மறுப்பேதுமில்லாமல் நிகழ்வில் அமர்ந்து யாதையும் ரசிக்கக் கூடிய கருத்துக்கள் பரிமாறக்கூடிய ஆசான்.

அதுமாத்திரமல்லாமல் பிடிப்பில்லாமல் கிடந்த கவியரங்கு களுக்கு புத்துயிர் கொடுத்து உயிரோட்டமாய் இழுத்துச் சென்று, தலைமை தாங்கி, நகைச்சுவை உணர்வோடு பார்த்திருப்போரை சிரிப்பூட்டி, சிந்தனைகளைத் தூண்டி சமூகத்தின் அநீதிகள், அட்டூழியங்களை அப்படியே சொல்லிவைப்பவர் கம்பீரக் குரலால்.

நவீன சாதனங்களின் ஆக்கிரமிப்பை தனது முயற்சியால் வென்று சமகாலப் பொக்கிஷமாக மின்னிக் கொண்டிருக்கும் தென்கிழக்கின் பெரியதொரு இலக்கிய முதுசமும், அறிவுப் பெட்டகமும்தான் பாவேந்தல் பாலமுனைபாறூக்.

இவர் எழுத்தில் பொன்விழா காண்பதும், இவரைத் தூக்கிப் பிடித்து கொண்டாடுவதும், அவர் வாழுகின்ற சூழலில் பொன் விழா எடுப்பதும் வாழுகின்றபோதே நடந்தேறுவது வரவேற்கத் தக்கதாகும்.

பல நூல்களுக்கும், இலக்கியவிருதுகளுக்கும் சொந்தக்காரனான பாவேந்தல் பாலமுனை பாறூக் தென்கிழக்கின் இலக்கியப் பரப்பில் மூலவேராக இருந்து புதிதாக முளைக்கின்ற இளசுகளைத் தட்டிக்கொடுக்கவேண்டுமெனவும், இன்னும் பல நூல்களைத் தந்து இலக்கிய உலகில் வீறுநடைபோட வேண்டுமெனவும் மனதார வாழ்த்துகிறேன்.

எம்.ரி.எம். யூனுஸ் காத்தநகரான்

ஒத்தாப்பு கலை இலக்கிய பெருவெளி
(பிரதான செயற்பாட்டாளர்)
காத்தான்குடி.

பாவேந்தல் இலக்கிய பனித்தூவல் !

தெவிட்டாத தென்கிழக்கின் இலக்கிய முதுசம் பாவேந்தல் பாலமுனை பாறுக் அவர்களின் இலக்கியப் பொன் விழா மலரில் எனதான மானசீக வாழ்த்தினையும் பதிவு செய்வதில் மிக்க மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகிறேன்.

கனதியான சவால்கள் நிறைந்த கலை இலக்கிய பரப்பில் தனி ரகமாய் தன் பெயரை நிலைநாட்டி, ஆன்மாவை வருடும் ஆதர்சன கவிகள் தந்து, தமிழின்ப தனித்துவ நூல்களை உவந்தளித்து, இன்றளவிலும் இலக்கிய இயங்கு தளத்தில் சிந்தாமல் சிதறாமல் சீர்மையாய் பயணிக்கும் ஓர் உன்னத எழுத்துலக சிற்பியாக நான் பாவேந்தலைப் பார்க்கிறேன்.

இலங்கையின் தமிழ் இலக்கிய சரிதங்களில் அரை நூற்றாண்டுகளாய் ஆதிக்கம் செலுத்தும் பாவேந்தல் பாறுக் அவர்களுடன் நான் கொண்ட அன்பும் நட்பும் அலாதியானது. குறுகிய காலப்பகுதியில் மனசுக்கு நெருக்கமான நினைவுகளின் தொடர்ச்சியான இலக்கிய சந்திப்புகளில் பாவேந்தலுடன் இணைந்து பயணித்த ஆத்மார்த்தமான சந்தோஷம் இன்னும் என்னை புளகாங்கிதமடையச் செய்கிறது.

இளம் எழுத்தாளர்களை,இலக்கிய செயற்பாட்டாளர்களை, கவிஞர்களை மட்டம் தட்டாமல் தட்டிக் கொடுத்து அரவணைக்கும் உன்னத பண்பு வாய்க்கப்பெற்றவர் பாவேந்தல் என்பேன்.

நானறிந்த வகையில் இலக்கிய சிரேஷ்டம், மூத்த கவி எனும் தன் முனைப்பான செருக்கினை, மமதையை இவர் தனது சிரசினில் சுமந்ததில்லை. தான் கொண்டாடும் மனிதத்தை தன் எழுத்துக்களிலும், செயலிலும் வெளிப்படுத்துகின்றவர்.

இத்தனைக்கும் முத்தாய்ப்பாக, பாவேந்தலின் கரும்புகள் இனிக்கும் குறும்புகள் நிறைந்த குறும்பாக்களை மொய்க்க ஊர்ந்து வருகிற கவி பருகும் ஆயிரமாயிரம் எறும்புகளில் அடியேனும் ஒருவன்.

பாலமுனை எனும் பசுமையான ஊருக்கு செழுமை சேர்த்த பொன் விழாப் பொக்கிஷம், பெரும் கவியூற்று பாவேந்தல் பாறுக் அவர்களின் இலக்கிய பங்களிப்பும், மானுடம் போற்றும் பாங்கும் இவ்வையகம் உள்ளவரை பேசப்படும்.

பாவேந்தல் பாலமுனை பாறுக் உடல், உள உற்சாகத்திற்கும் நீண்ட ஆயுளுக்கும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து விடைபெறுகிறேன்.

என்றும் பிரியங்களுடன்,

எஸ். ஜனூஸ்

கரவாகு கலை இலக்கிய சந்தி,

சாய்ந்தமருது.

கவி ஈரங்கொள்ளும் மணலாறு

கவிஞர் மருதமுனை விஜிலி

படிமத்தை உயர்த்திக் குடித்து
எழுத்துக்களில் வீரநடையாய் உரசி
உரசியே கவிதா உத்திகளை
அரவணைத்து ஏணியாய் உயர்ந்தது உன் காலம்.

களியோடை ஊடறுத்து
கவி ஈரங்கொள்ளும் மணலாறு கண் சிமிட்டி
எட்டிப் பார்க்கும் ஒருஊரில்
உன் கவிதைகள் எழுந்து நடந்தனவே,!

குறுந்தாடி புன்னகை வதனம் ஒன்றாய்
“பதம்”ஏட்டில்
கற் தூண்களை கவித்துவ செருக்கில்
நாட்டியே அழகு பார்த்தாய்..

“தோட்டுப்பாய்”மூத்தம்மாவுக்குள்
கிராமியம் போர்த்திய பின்னலாய்..
அழகுசொற்கள் அடுக்கியே உறையவைத்து
நெடுநாளாய் கவிநடையில் உறங்கவைத்தாய்..

“பாலமுனைபாறூக்.”
நல் இடைவெளிக்குள் பாவேந்தலாய்
பல்கலையும் உனக்குள் ஊறியே
விருதுகளோடுபெறுமானங் கண்டீர்..!

கவியரங்குகள்..குரலாய் இதமாய்,.அதிருமே..
புதிராய் அதுவரமே..

பொன் விழா இன்று
அதுஎன்றும் விழா..
நின் குறுந்தாடி புன்னகை வதனம்
நன்றாய் வாழியவே..

■

பாலமுனை மண்ணின் முகவரி

இலக்கிய உலகில் ஐம்பது வருடங்கள் தடம்பதித்த இலக்கிய முதுசொம் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களுக்கு எடுக்கப்படும் பொன்விழாவினை முன்னிட்டு வெளியீடு செய்யப்படவுள்ள சிறப்பு மலருக்கு எஸ். ஆர். சி யின் தலைவர் என்ற வகையில் வாழ்த்துரை வழங்குவதையிட்டு பெருமிதமடைகின்றேன். அல்-ஹம்துலில்லாஹ்.

பாலமுனை கிராமத்தின் முகவரியாகத் திகழும் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள் இக்கிராமத்தின் காலத்தால் அழியாத பொக்கிசமாவார். இதனை அவர்களது படைப்புக்களும் நிகழ்வுகளின் பாத்திரங்களும் பறைசாற்றுகின்றது. இக்கிராமத்தில் பல நற்பணி அமைப்புக்களில் அங்கத்துவமாகி, சில மன்றங்களை உருவாக்கி, அதனை வழிப்படுத்தி அரும்பணி புகட்டிய இவர்கள், பாலமுனை எஸ்.ஆர்.சி அமைப்பின் கௌரவ ஆலோசகராகவும் இன்றுவரை செயற்பட்டு வருகின்றார். இவர்கள் எங்களுடன் இணைந்து பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள ஒத்துழைத்துள்ளார். மேலும் இவர்கள் ஆலோசனை வழங்கி எங்கள் அமைப்பினை வழிப்படுத்தி செம்மைப்படுத்தியுள்ளார். எமது கிராமத்திற்குப் பெருமை சேர்த்த பொன்விழா காணும் அல்-ஹாஜ் பாலமுனை பாறூக் அவர்களைக் கௌரவப்படுத்தி, வெளியீடு செய்யப்படுகின்ற இச்சிறப்பு மலரானது இக்கிராமம் செய்யும் மிகப் பெரிய நன்றிக்கடனாக மிளிரும் என நினைக்கின்றேன். இவர்களது எதிர்கால வாழ்வு ஒளிமயமானதாக அமைய பாலமுனை எஸ்.ஆர்.சியின் சார்பாக பிரார்த்தனைகளை தெரிவிக்கின்றேன்.

மேலும் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களைப் பாராட்டவும் கௌரவப்படுத்தவும் முன் வந்த அனைத்து நல்லுள்ளங்களையும் வாழ்த்துவதில் அகமகிழ்கின்றேன்.

என்றும் சமூகப் பணியில்,

எம்.எஸ்.எம். அன்ஸார் JP,BA, MA (Hons), EDO

தலைவர் - SRC

பாலமுனை.

பரவசம் தரும் பொன்விழா !

பாவேந்தல் பாலமுனை பாறூக் எனும் பெயரில் இலக்கிய உலகில் தனிப் பெரும் அடையாளமாக ஐம்பது ஆண்டுகள் தாண்டியும் இன்றும் இளமையுடன் இயங்கிவரும் ஈழத்து இலக்கிய முதுசம் கலாபூசணம் “பாலமுனை பாறூக்” அவர்கள். குறிப்பாக கவிதை உலகம் இன்று மரபை கடந்து அல்லது மறந்து நவீனம், பின்நவீனம் என்று இசங்களை தலையில் வைத்துக் கொண்டு மரதன் ஓடிக் கொண்டிருக்கும் போது இலக்கிய உலகின் புதிய போக்குகளையும் தத்துவங்களையும் உள்வாங்கி மரபை இன்றும் உயிர்ப்புடன் “பா” வடிவில் இலங்கச் செய்து அடுத்தடுத்த தலைமுறைகளையும் அதில் ஈடுபடச் செய்யும் ஆளுமை இவர்.

இவரது குறும்பாக்களை வாசிக்கும் இளைய சமூகம் தம்மை அறியாமலே மரபின் மீது ஆர்வத்தை மேலெழச் செய்து, மரபு தொடர்பில் கற்க தேடலில் இறங்கி விடுவதுமுண்டு.

மூப்பின் பெயரில் புதிய தலைமுறை இலக்கியவாதிகளை அல்லது படைப்பாளிகளை அங்கீகரிக்காமலும் தங்கள் பக்கமே அண்டவிடாமலும் பார்த்துக் கொள்ளும் வித்தியா கர்வம் எனும் பெயரில் புகழ் தலைக்கேறிய பல மூத்த மேதாவிகளுக்கு மத்தியில் வயதைப் பாராது திறமைகளையும் ஈடுபாட்டையும் பார்த்து இளையவர்களுக்கும் ஆக்கமும் ஊக்கமுமளித்து பரந்து விரிந்து கிடக்கும் இலக்கிய உலகில் கை பிடித்து தன்னோடு உலாக் கொண்டுவரும் பெருந்தகையாகவே அகர ஆயுதம் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களைப் பார்க்கிறது.

அவ்வாறுதான் அகர ஆயுதம் எனும் கலை, இலக்கிய மற்றும் சமூக செயற்பாடுகளுக்கான தளத்திற்கும் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களுக்கும் இடையிலான உறவும் காணப்படுகிறது.

எங்கள் அமைப்பினதும் அமைப்பின் செயற்பாட்டாளர் களினதும் கலை, இலக்கியமற்றும் சமூக இயங்குதலுக்கு

பலவகையிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர். அகர ஆயுதத்தின் ஆரம்ப காலங்கள் தொட்டு அதுநடாத்திய கலை, இலக்கிய சந்திப்பிற்கும் உரையாடலுக்குமான பொதுவெளி நிகழ்ச்சித் திட்டங்கள் பலவற்றைத் தலைமையேற்று சிறப்புற நடாத்தித் தந்தவர். தனது கடந்தகால அனுபவங்களைக் கொண்டு எங்கள் அமைப்பினதும் அமைப்பின் செயற்பாட் டாளர்களினதும் எதிர்காலம் சிறப்புற்று இலங்க நெறிப்படுத்தி வழிப்படுத்தியவர். எனவே அந்தவகையில் கலாபூசணம் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் பொன்விழாவை யொட்டி எங்களது வாழ்த்துக்களை பதிவுசெய்வதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறோம்.

இலக்கியன் முர்ஷித்

பிரதம செயற்பாட்டாளர்,
அகர ஆயுதம்
(கலை, இலக்கிய மற்றும் சமூக செயற்பாட்டுத்தளம்)
நிந்தவூர்.

கலை உலகில் பொன்விழாக் காணும் பாலமுனையின் இலக்கிய முதுசம் ‘பாவேந்தர் பாலமுனை பாறூக் ’

பாலமுனை முபீத்

2011 ஆம் ஆண்டு பாவேந்தர் பாலமுனை பாறூக் அவர்களால் வெளியிடப் பட்ட “தோட்டுப் பாய் மூத்தம்மா” எனும் குறுங்காவியமே பாலமுனை பாறூக் என்ற அடையாளத்தை எனக்குள் அறிய வைத்தது. அவ்வாண்டு, பாலமுனை கலாசார அபிவிருத்தி மையம் எனும் சமூக சேவை அமைப்பே அந்நூலை வெளியீடு செய்தது. அப்போது அவ்வமைப்பின் செயலாளராக நான் இருந்து வந்தேன்.

மூத்த உள்ளூர் படைப்பாளர் ஒருவரினால் வெளியிடப்பட்டதாக அறியப் பட்டதும், முதன் முதலாக என்னால் வாசிக்கப்பட்ட இலக்கிய நூலுமாக நான் “தோட்டுப்பாய் மூத்தம்மா” எனும் குறுங்காவியத்தையே பிரகடனப்படுத்துகிறேன்.

அதன் பிற்பாடு 2013 இல் நானும் ஒரு கவிதைத் தொகுதியை வெளியிட்டு நேரடியான இலக்கியப் பயணத்தை ஆரம்பித்ததிலிருந்து இன்று வரையான பாவேந்தருடனான உறவு, மிகப் பெரிய அனுபவத்தையும், படிப்பினைகளையும் கற்றுத் தந்தது. அவரோடான இலக்கியப் பயணத் தொடர் எனது அடுத்தடுத்த படைப்புகளுக்கான உந்து சக்தியாகவும் இருந்து வந்ததை ஞாபகப்படுத்தியே ஆக வேண்டும்.

“தோட்டுப் பாய் மூத்தம்மா” வின் வாசிப்பில் தொடங்கி அவருடைய முதல் தொகுதியான ‘பதம் - 1987’ லிருந்து குறுங்காவியங்கள், குறும்பாக்கள், அவர்

தலைமையிலான கவியரங்கங்கள், இலக்கிய கூட்டங்களில் மேடைப் பேச்சுக்கள் மற்றும் நூல் ஆய்வுகள் போன்ற வரிசையான பகிர்வுகள் பெறுமதியான இலக்கிய சொத்தாக எனது தலைமுறைக்கு அடையாளப்படுத்தியது. நானும் பாலமுனை மண்ணின் பிறப்பு என்பதில் பெருமிதமடைகிறேன். (அல்ஹம்துலில்லாஹ்)

என்னைப் போன்ற இளைய தலைமுறையினருக்கு தென்கிழக்கு தாண்டி உலக இலக்கியப் பரப்பில் பேசப்படும் பெயராக பாலமுனை பாறூக் என்ற நாமம் உச்சரிக்கப்படுவது பெருமையாகவும், படிப்பினையாகவும் இருந்து வருவது மறக்க முடியாதது.

“மற்றவர்களை சிரிக்க வையுங்கள், அவர்களை அழ வையுங்கள், அவர்களை காத்திருக்கும் படி செய்யுங்கள்” என்ற ஓர் இளம் எழுத்தாளருக்கு நாவலாசிரியர் சார்லஸ் ரீட் (Charles Reade) வழங்கிய அறிவுரைக்கேற்ப எமது பாலமுனை மண்ணின் இலக்கிய சொத்து மூத்த தலைமுறைக் கவிஞர் பாலமுனை பாறூக் அவர்கள் நாவலாசிரியர் சார்ல்ஸ் ரீட் சொன்னது போன்று இலக்கியப் பணி செய்திருக்கிறார் என்ற மன நிறைவு எனக்குள் இருக்கிறது.

பாவேந்தர் பாலமுனை பாறூக் அவர்களின் தலைமையில் கவிதைகள் பாடிய சந்தர்ப்பங்களிலும் சரி, அவருடைய நூல்வெளியீடுகளிலும் சரி, அவருடைய இலக்கிய மேடைப் பேச்சுகளிலும் சரி பெறுமதியான தென்கிழக்கின் இலக்கிய சொத்து என எல்லோராலும் வர்ணிக்கப்படும் எமது பாலமுனை மண்ணின் அடையாளம் என்பது எப்போதும் எனக்கும் பெருமையாகவே இருக்கும். அவருக்கான பொன் விழா பாலமுனை மண்ணிலே ஏற்பாடாகியிருப்பது இலக்கிய உலகத்தின் தாகத்தைத் தீர்த்து வைக்கிறது.

தன்னைப் போன்ற இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாகவும் வாழும் வரலாறாகவும் இருக்கின்ற பல விருதுகளுக்கும், ஆய்வு நூல்களுக்கும் கதாநாயகனாக இருந்து வருகின்ற பாலமுனை மண்ணின் இலக்கிய அடையாளம், காவிய நாயகன் பாவேந்தர் பாலமுனை பாறூக் என்பதை தைரியமாகச் சொல்ல முடிகின்றது.

கலை உலகில் பொன் விழாக் காணும் தென்கிழக்கின் இலக்கிய சொத்து பாலமுனை மண்ணின் அடையாளமான பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களுக்கான இப்பொன் விழாப் பணி சிறப்பாக நடைபெறவும், இன்னும் எனது தலைமுறைக் கவிஞர்களுக்கு வழிகாட்டியாகவும் வரலாறாகவும் விளங்க இறைவனைப் பிரார்த்தனை செய்கிறேன். அவருக்கு என்னுடைய பாராட்டுக்களுடனான வாழ்த்துகளும் நன்றிகளும்.

■

பாவுலகின் பார் வேந்தல்

மூத்த எழுத்தாளர்களில் கவிஞர்களில் பிரபலமான ஒருவர் எங்கள் அன்புக்கும் பண்புக்கும் உரிய பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள். அவருடைய குறும்பாக்கள் அவருக்கே உரித்தான தனிச் சிறப்பைக் கொண்டவை.

எழுத்தாளர் மையம் மருதமுனை உலகளாவிய ரீதியில் நடாத்திய கவிதைப் போட்டி பரிசளிப்புக் கவியரங்கு களுக்கு தலைமை தாங்கி சிறப்பித்தவர்.

இலக்கிய நிகழ்வுகளுக்கு மிக மத்திப்பளித்து நேரம் தவறாமல் சமுகம் தந்து ஏற்பாட்டாளர்களை கௌரவப் படுத்துவது இவருடைய உயர் பண்புகளில் ஒன்று.

கலை இலக்கிய ஆர்வலர்களை உற்சாகமாக வாழ்த்தி தட்டிக் கொடுப்பவர்.

அத்தகைய உயர் பண்புகளைக் கொண்ட பாவேந்தல் பாலமுனை பாறுக் அவர்களின் பொன்விழா நிகழ்வு சிறப்பாக நடைபெற ஆத்மார்த்தமான பிரார்த்தனைகள்.

நீலாவணையூர் அல்ஜ்

எழுத்தாளர் மையம்,

மருதமுனை.

கிரீடம் மகிழ்கின்றது

ஓலுவில் எஸ்.முஸம்மில்

இலகுதமிழ் எழுத்துக்களால்...
இலக்கியத்தை நனைத்து
மண்வாசச் சொற்களால்
மனம் மணக்கச் செய்தவர்.

வாழநல்ல வழி வேண்டும்
வாழ்த்த நல்லமனம் வேண்டும்.
இரண்டிலும் சிகரம் தொட்ட
இலக்கியக் 'கோ' இவர்.

குறும்பாக்களைக் கரும்பாய்க்
குறைவற்ற சுவையோடு
வெறும் வாயும் மெல்லும்
விருந்தாய்த் தந்தவர்.

பாலமுனை மண்ணின்
பாசத் தாய் பெற்றமன்னன்
நேசிப்போர் நெஞ்சமெல்லாம்
நெகிழச் செய்யும் கண்ணன்.

நாவல்களை நாவினிக்க
நவரசமும் சேர்ந்திருக்கத்
தோட்டுப்பாய் மூத்தம்மாவைத்
தோடிட்டு அழகுபடுத்தியவர்.

எதுவுமில்லைஎம் வாழ்வில்
எஞ்சியிருக்கும் பிரார்த்தனைகளில்
எல்லாமும் உள்ளடக்கி
எம்மையும் இணைத்தவர்.

யாரிந்த மனிதரென்று
யாரும் கேட்கவேண்டாம்.
ஊரறிந்த உலகறிந்த
உயர்ந்த உள்ளம் கொண்டவரே.

பாலமுனைபாறூக் பாவேந்தல் என்றால்
பாலையிலும் ஈரம் சொட்டும்
சோலையிலும் சொற்கள் மணக்கும்
காலையிலே கவி வாழ்த்துவரும்.

கலையுலகம் நிலைபெறவும்
கவியழகு நடைபழகும்
புவியதனில் புகழ் சேர்க்கும் - அவர்
கவியரங்கு இதம் கோர்க்கும்.

வாழும் போதே வாழ்த்துவோம்.

வாழ்த்துக்கள்.

பொன்விழாக் காணும் பாவேந்தலுக்கு நுட்பம் குழுமத்தின் வாழ்த்துகள் !

சிறந்த ஆளுமையும் இளம் படைப்பாளிகளுக்கு வழிகாட்டியுமான பாலமுனை பாறூக் ஐயா அவர்களை வாழ்த்துவதில் பெரும் மகிழ்வடைகின்றேன். நுட்பக்குழு நிறுவனராக பொன்விழா மலரில் அவரை வாழ்த்தக் கிடைத்த வாய்ப்பு எனக்குக் கிடைத்த பேறாகும். அதற்காக பொன்விழாக் குழுவினருக்கு எனது இதய பூர்வமான நன்றிகள்.

பாவேந்தல் அவர்கள், நுட்பக் குழுமத்தின் வளர்ச்சிக்காகப் பல்வேறு வகையில் துணை புரிந்தவர். இந்தியாவில் முகநூல் குழுமங்கள் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து ஆண்டு விழாக்களை நடத்திய போது அதில் கலந்து கொண்டு திரும்பிய நான், இவ்வாறான குழுமமொன்றை இங்கும் அமைக்க விரும்பினேன். அதற்கான ஆதரவினையும் ஆலோசனைகளையும் நல்கியவர் பாவேந்தல் அவர்கள். நமது விழாக்களில் கலந்து கொண்டும், நடுவராகக் கடமையாற்றியும் ஆதரவு வழங்கினார்.

அவருடைய காலை வாழ்த்து முதல் பல்வேறு வடிவங்களோடு அமைந்து வரும் பாக்களைப் படித்து இரசித்து கவிதை உலகில் வளர்ந்து வருபவள் நான். நவீன காவியங்கள், குறும்பா, ஹைக்கூ தன்முனைப்பா போன்ற புதிய வடிவங்களில் ஆர்வம் செலுத்துவதோடு, அவற்றில் புதியவர்களையும் ஆற்றுப்படுத்துபவர். அணிந்துரை, மதிப்புரை போன்றவற்றை எழுதுவதன் மூலமும் புதிய தலைமுறையையும் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்துபவர்.

குழுமம் சார்ந்தும் தனிப்பட்ட வகையிலும் எனது இலக்கிய முயற்சிகளில் உற்சாகமூட்டிய அவர், உள்ளூராட்சி அரசியலில் நான் ஈடுபட விரும்பிய போதும் தைரியம் தந்தார்.

ஆற்றல் மிகுந்த-புதியவர்களை வளர்த்துவிடுவதில் அக்கறை செலுத்துகின்ற பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களை நுட்பக் குழுமம் சார்பாக வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன். இன்னும் பல்லாண்டு தேக நலத்துடன் வாழப் பிரார்த்திக்கின்றேன். நன்றி.

கவிமணி கவிநுட்பம்,

நிறுவுனர்,
நுட்பக் குழுமம்,
ஓட்டமாவடி.

ஒரு சிறந்த படைப்பாளன்

கலைவளமும் கவிவளமும் கைகூடி நிற்கும் இலங்கையின் தென்கிழக்கில் பாலமுனை பகுதியில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் "பாவேந்தல் பாலமுனை பாறூக்" தன் இலக்கியப் படைப்புக்களுக்கு தான் பிறந்த பகுதியின் நாமத்தை இணைத்து "பாலமுனை பாறூக்" என பிரகடனப் படுத்தியிருப்பது பிறந்த மண்ணை நேசிக்கும் பெருமையினை பறைசாற்றி நிற்கிறது.

தமிழ்கூறும் நல்லுலகின் இலக்கியப்பரப்பில் தோன்றிய படைப்பாளர் வரிசையில் பாவேந்தல் பாலமுனை பாறூக் ஒரு தனியிடத்தை வகித்து நிற்கின்றார். ஐம்பது ஆண்டுகளாக படைப்பிலக்கியத் துறையில் ஒரு கவிஞனாக தன்னை இணைத்துக் கொண்ட அவர் ஓய்வு ஒழிச்சலின்றி எழுதிக் கொண்டே இருக்கின்றார். வங்கித் தொழிலின் பழுவுக்கு மத்தியிலும், அடிக்கடி தொல்லைதரும் உடல் உபாதைகளின் உறுத்தலுக்கு மத்தியிலும் தங்குதடையின்றி தன் எழுத்துக்களை நடமாட விட்டுள்ளார்.

"புதிய பறவையாக" சிறகடித்துப் பறக்கத் தொடங்கிய கவிஞர் பாலமுனை பாறூக் கவிதைத்துறைக்கு காத்திரமான பங்களிப்பை நல்கியதுடன் பாப்புனைவின் பல்கோணங்களிலும் தன் எழுதுகோலை நகர்த்தி சாதனைகள் புரிந்துள்ளார். 1987களில் 'பதம்' என்ற கவிதைப் பிரதியை நம் கைகளுக்கு தந்த பாறூக் இரு தசாப்தங்களுக்கு மேலாக தான் காத்துவந்த மௌனவிரதத்தை 2009 இல் முடித்து வைத்தார்.

இப்போது பாவேந்தல் பாலமுனை பாறூக்கின் பார்வை பலதரப்பட்ட கவிதைப் புனைவுகளில் பற்றி நிற்கிறது. அதன் பெறுபேறாக 'சந்தனப்பொய்கை' எனும் கவிதைகளின் நந்தவனம் 2009 இல் வெளியானது. அப்பிரதியை தொடர்ந்து குறுங்காவியங்களான 'கொந்தளிப்பு', 'தோட்டுப்பாய் மூத்தம்மா', 'எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு' எனும் நூல்களின் ஊர்வலத்தை 2010, 2011, 2012 களிலும் 'பாலமுனை பாறூக்கின் குறும்பாக்கள்' எனும் அங்கதக் கவிதைகளின் அணிவகுப்பை 2013 இலும் அவர் நிகழ்த்தி சிந்தைக்கு விருந்து வைத்தார். முகநூல் கவிதைகளை ஒன்று திரட்டி 'வலைக்குள் மலர்ந்த வனப்பு' எனும் மகுடத்தில்

பிரதி ஒன்றைக் கொணர்ந்து 2018 இல் தனது படைப்பாற்றலின் பரிமாணங்களை அவர் வெளிப்படுத்தினார்.

பாவேந்தல் கவியரங்க மேடைகளில் தன் கைவண்ணங்களைக் காட்டி பரவசப்படுத்தியுள்ளார். அவருடன் நானும் பல அரங்குகளில் பங்குபற்றியுள்ளேன். இவர் பழகுவதற்கு இனியவர். சிறந்த பண்பாளர். திறந்த உள்ளமும் தெளிவான சிந்தனையும் வாய்க்கப் பெற்றவர். அழகான உபசரணைக் குணமும், அகந்தையற்ற உறவாடும் உளமும், அன்பொழுக பேசும் திறமும் இவரை உயர்த்தி நிற்கின்றன. சமகாலத்திலும் முகப்புத்தகத்திலும் காலை வாழ்த்துக்களை கவிநயம் சொட்ட தந்து கொண்டிருக்கிறார்.

கவிதையை மூச்சாகவும் பேச்சாகவும் நேசிக்கும் பாவேந்தல் இன்னுமின்னும் எழுத வேண்டும். நோய்நொடியற்ற உடல் நலத்துடன் அவரும் அவரின் குடும்ப உறுப்பினர்களும் சிறந்து விளங்க வேண்டும். பொன்விழா கொண்டாடும் நாயகனாம் நண்பன் பாலமுனை பாறூக்கிற்கு இறைவன் அருளப் பிரார்த்திக்கிறேன்.

கவிமணி, கலாபூஷணம் கலையன்பன் அப்துல் அஸீஸ்

அக்கரைப்பற்று.

காற்றுள்ளவரை வாழும் கவி !

கவிமாமணி ரீ.எல். ஜவ்பர்கான்

ஈழமணித் திருநாட்டின் தென்னகமாய்
இலங்குகிற தென்கிழக்கு பூமிதன்னின்
சோழரெனப் போற்றுகிற எங்கள் பாறூக்
சோனகராய்ப் பிறந்திட்ட கண்ணதாசன்!
ஏழைமுதல் ஏந்தல்வரை பேனாவுக்குள்
ஏற்றி இவன் படைத்திட்ட படைப்புகாண
நாளையொரு புதிய படைஎழுதல் வேண்டும்
நாயகனாம் பாலமுனை பாவே வாழ்க!

பாலமுனை என்கின்ற பதியின் நாமம்
பாரெல்லாம் ஒலித்துவிட பாறூக் என்ற
ஆலமர நாமமதே கருவாய் ஆச்சி
ஆகையினால் இவன் வெற்றி நாயகன்தான்!
கோலமதுள் ஒழிந்துள்ள அரிசியாக
கோபத்துள் தெரிகின்ற முறுவல்போல
ஞாலத்தில் இவன்படையல் யதார்த்தமாகும்
ஞாபகத்துள் இருப்பதெல்லாம் பதார்த்தமாகும்!

ஏலத்தில் விற்கின்ற சரக்கைப் போல
எழில் தமிழன் கவிதைகள் மாறிப்போன
காலத்தில் இவன்கவிதை கவிதையாகும்
காசினியில் பேசுகின்ற காதையாகும்!
பாலத்தை தாங்குகிற தூண்களாக
பாறூக்கின் படையல்கள் இருப்பதால்தான்
மேளத்தின் தோலாக என்றுமிங்கே
மெருகுடனே மிளிர்கிறது வாழ்க பாறூக்

பாலமுனை பாறூக்கின் பொன்விழாவில்
பாராட்டக் கிடைத்துமே பாக்கியந்தான்
தாளமுடன் சேர்ந்துள்ள ராகம்போல

தமிழ்பாவாம் ‘பா’றூக்குள் பாவே உண்டு!
வாழுகின்ற காலத்தினுள் வாழ்த்துக் காணும்
வானுயுர்ந்த விருதுகளை வென்றாய் நீயோ!
ஆலமிதல் காற்றிருக்கும் வரையும் உந்தன்
ஆளுமைகள் மறையாது வாழுமீங்கு!

பாவேந்தேலுக்கு எழுத்தால் ஒரு பொன்னூஞ்சல்

சிராஜ் மஸ்ஹூர்

மூத்த எழுத்தாளர் பாவேந்தல் பாலமுனை பாறூக், பெருகும் அன்பிற்கு ஓர் அடையாளம். சிறந்த பண்பாளர். மென்மையாய்ப் பேசியே நம் உள்ளத்தோடு நெருக்கமாகி விடும் இயல்பிற்குச் சொந்தக்காரர்.

அவர்
எழுத்துலகில் பிரவேசித்து ஐம்பது ஆண்டுகள் நிறைவுறும் தருணம் இது.

1970 களில் அவர் எழுத்துலகில் பிரவேசித்தபோது, மரபின் வேர்களோடு வளர்ந்த கவிதைப் போக்கில் காலடி எடுத்து வைத்தார்.

பாலமுனை பாறூக் என்றால் “பதம்” தான் நினைவுக்கு வருகிறது. அப்போதே படித்த புத்தகம்.

”வானக் கடலில் பிறைத் தோணி மிதந்தது.
ஞானத் திற்கெலாம் ஞானமான நம்
நாயன் அதனை மிதக்கவிட் டிருக்கிறான்.
ஆனதால் இன்று பொழுது விடிகையில்
அதுவோர் பெரு நாளாய் விடிந்தது”

என்று பத வரிகள் பேசும்.

தென்கிழக்கு மண்ணின் நீண்ட கவிவளம், பாலமுனை பாறூக்கின் எழுத்துக்களால் மெருகேறியது என்று சொல்வதில் தப்பில்லை.

கவியரங்கக் கவிதைகளை அவரது கம்பீரமான குரலில் கேட்க வேண்டும். ஒலி தெறித்தோடி விளையாடும் அழகு அதில் இழை பின்னியிருக்கும்.

மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் படிக்கும்போதே விவாதப் போட்டிகளில் கலந்து கொண்டிருக்கிறார். பிறின்ஸ் காசிநாதரின் கீழ் புடம் போடப் பட்டோருள் இவரும் ஒருவர். அங்கு ஆசிரியராக இருந்த அக்கரைப்பற்றைச் சேர்ந்த மாக்கான் மாஸ்டரின் ஏற்பாட்டில் இங்கும் நாடகம் நடித்துள்ளார்.

தினபதி கவிதா மண்டலத்தில் எழுதத் தொடங்கியிருக்கிறார். அப்போது "நாளுக்கொரு கவிஞன்" என்று பிரசுரித்திருக்கிறார்கள். பிரசுரம் காண வேண்டுமாயின், இன்னொரு மூத்த கவிஞனின் சிபார்சுக் கடிதம் வேண்டுமாம்.

மூத்த பத்திரிகையாளர் எஸ்.டி.சிவநாயகம், இவரது "சிவப்புக் கோடு" கவிதையைப் பாராட்டி சிந்தாமணியில் மறுபிரசுரம் செய்துள்ளார்.

சண்முகம் சிவலிங்கம், எம்.ஏ.நுஃமான், மருதூர்க் கொத்தன், மருதூர்க் கனி போன்றோர் இணைந்து இயங்கிய கல்முனை எழுத்தாளர் சங்கத்தில் பாலமுனை பாறூக்கும் ஓர் அங்கத்தவர்.

மார்க்சிய இலக்கியம் பற்றி வாசித்து அறிந்ததை விட, அந்நாட்களில் கல்முனை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய. கருத்தரங்குகளிலும் கயியரங்குகளிலும் கேட்டறிந்ததே அதிகம் என்கிறார்.

மரபு வழி வந்தவர், "மானுடம் பாடும் வானம்பாடிகளால்" ஈர்க்கப்பட்டு நவீன கவிதைகளை எழுதத் தொடங்கினார்.

"புதிய பறவை கவிதா மண்டலம்" மூலம் புதுக்கவிதைச் சிறகசைத்தார். கல்முனை பூபால் (நீலாபாலன்), முல்லை வீரக்குட்டி, அன்புடீன், முன்னாள் நீதிபதி பாண்டியூர் தட்சணாமூர்த்தி போன்றோர் இதன் சக பயணிகள்.

1987 ஆம் ஆண்டு இவருடைய "பதம்" கவிதைத் தொகுதியை, அம்பாரை மாவட்ட மக்கள் கொங்ரஸ் வெளியிட்டது.

அந்நாட்களில் புத்தகம் வெளியிடுவதில் இங்குள்ள மூத்த எழுத்தாளர்கள் கூட பெரிதும் ஆர்வம் காட்டியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எழுத்தாளர் என்றால் எழுதுவதுதான் முதன்மைப் பணி. புத்தகம் போட்டு விற்பது தம் பணியல்ல என்பது போன்ற ஒரு மனநிலை அப்போது காணப்பட்டது.

மூத்த எழுத்தாளர் அ.ஸ.அப்துஸ் ஸமது, மட்டக்களப்பு தெற்கு எழுத்தாளர் சங்கத்தை நடத்தியபோது, அவரோடு பாலமுனை பாறூக்கும் அன்புடீனும் நெருக்கமாக இணைந்து செயற்பட்டனர்.

கலை கலைக்காவவே என்று பேசப்பட்டபோது, முற்போக்குக்காரர்கள் கலை மக்களுக்காகவே என்று எழுதியும் பேசியும் வந்தனர். மக்களது பிரச்சினைகளைப் பேசுவது மட்டும் போதாது. இலக்கியங்கள் அதற்குத் தீர்வும் சொல்ல வேண்டும் என்ற நிலைப்பாடே தூக்கலாக இருந்தது.

இந்தக் காலத்தில் எழுத வந்த பாறூக், முற்போக்கு அம்சங்களோடு, இஸ்லாமிய சமய மற்றும் ஆன்மீக அம்சங்களை இணைத்து எழுதினார். இஸ்லாமிய வரலாற்றுச் சம்பவங்கள் ஹதீஸ்களைக் கவிதையாக்கியதில் இவரது தனித்துவம் மிக அழகாக வெளிப்படுகிறது.

கவிஞர் பற்றி பேராசிரியர் எம்.ஏ.நுஃமான், “எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு” தொகுதிக்கு எழுதியிருக்கும் முன்னுரையில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்:

”கல்முனைப் பிரதேசத்தின் முன்னணிக் கவிஞர்களுள் பாலமுனை பாறூக்கும் ஒருவர். கல்முனைக்குத் தெற்கே அமைந்துள்ள பாலமுனைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தன் கிராமத்தின் பெயரைத் தன் பெயருக்கு அடையாகக் கொண்டதன் மூலம், தன் கிராமத்துக்கும் ஓர் இலக்கிய இருப்பை வழங்கியவர்.

”பாலமுனை பாறூக் 1970 களின் தொடக்கத்தில் கவிதைத் துறையில் காலடி வைத்தவர். இலங்கை இலக்கிய உலகில், முற்போக்குச் சிந்தனை முனைப்பாக இருந்த காலகட்டம் அது. பாலமுனை பாறூக்கும் அச்சிந்தனையால் ஈர்க்கப்பட்டவர் என்பதில் ஐயம் இல்லை”

இஸ்லாமியப் பற்றும், சமூக உணர்வும் மிக்க ஓர் இடதுசாரியாக நாம் இவரை அடையாளங் காணலாம். பதம் (1987), சந்தனப் பொய்கை (2009) ஆகிய இவரது முதல் இரு கவிதைத் தொகுதிகளும் இதற்குச் சான்று.

“மத விழுமியங்களுக்கும் சமூக நடைமுறைகளுக்கும் இடையில் உள்ள முரண் பாடுகள் இவருடைய “பதம்” தொகுப்பிலுள்ள கவிதைகளில் வெளிப்படுகின்றன. குறிப்பாக வறுமைப்பட்ட பெண்களின் சமூக நிலை இவரது பல கவிதைகளில் பேசப்படுகின்றது. பாலையில் ஓர் நீர்ச்சுனை, மச்சானுக்கு ஓர் மடல், பெண்ணே மறந்துவிடு, கண்ணீரைத் துடைத்துவிடு, பாதை மாறிய பாவை, களைகள்

அகற்ற முதலிய கவிதைகள் இத்தகையன. இவருடைய சந்தனப் பொய்கையில் உள்ள கவிதைகள் பெரிதும் மத ஆன்மீகம் சார்ந்தவை.”

பாலமுனை பாறூக்கின் ஆக்க இலக்கியங்களுள் அதிக கவனம் பெற்றது “கொந்தளிப்பு” எனும் குறுங்காவியம். அத்தோடு தோட்டுப் பாய் மூத்தம்மா, எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு ஆகிய குறுங்காவியங்களும் முக்கிய மானவையே.

“பாலமுனை பாறூக்கின் மூன்று நவீன காவியங்கள்” என்ற தலைப்பில் இம்மூன்று குறுங்காவியங்களும், பொன்விழா நிகழ்வையொட்டி தனியொரு நூலாகவும் வெளிவந்திருக்கிறது.

ஆழிப் பேரலை அனர்த்தம், ஒலுவில் துறைமுகம் - இரண்டுமே இப்பிரதேச மக்களதும் மீனவர்களதும் வாழ்வில் பேரிடியாய் வந்து விழுந்ததை ஆதங் காக்காவின் ஏக்கங்களூடாக கவிஞர் அற்புதமாக விளக்கியுள்ளார்.

”பூரணை நிலவில் ஆடவர் பெண்டிர் அருகருகு இருந்து
கூடிக் களிக்கவும் உண்ணவும் பருகவும்
ஒளியில் நனையவும் எத்தனையோ பேர் கடற்கரை வருகிறார்”

என்று சொல்லி முழுநிலவில் இன்பம் காணும் இப்பிரதேச மக்களின் வாழ்வியலை வரிகளுள் வசப்படுத்துகிறார்.

தோணிகள் கரை சேரும் காலைப்பொழுதில் கரைவலையும் சனமுமாய் கடற்கரை நிறைந்திருக்கும் காட்சியை அவர் இப்படிச் சித்தரிக்கிறார்:

“ஊரே திரண்டு நிற்பதைப் போல
காலை வேளையில் கடற்கரை இருக்கும்!
கந்தூரிகள் கொடுக்கும் பள்ளிகள் போல
காட்சி தருமே கடற்கரை அன்று”

இது ஆதம் காக்காவின் கழிவிரக்கக் கதை மட்டுமல்ல. துறைமுகத்தின் வருகையால் வாழ்விழந்தோரின் ஏக்கமும்தான்.

“ஆழிக்கடலெனும் அழகுப் பெண்ணாள்
நீலச்சேலை
அணிந்தே இருந்தாள்...!

வெள்ளைக் கரையோடு
வண்ணச் சேலை
கொள்ளை அழகு கொள்ளை அழகு!
.....
......

இந்தப் பூனையும் குடிக்குமோ பால் என
எண்ணும் படியாய்
இருந்தது கடலும்!

கொந்தளிப்பென்று
கொடூரம் புரிந்த
அந்தக் கடல்தான் இந்தக் கடலா?"

இறுதி வரியான "அந்தக் கடல்தான் இந்தக் கடலா?" என்ற கேள்வி நம் எல்லோருக்கும் இருக்கும் அதே கேள்விதான்.

பாலமுனை பாறூக் நுண் உணர்வு மிக்க கவிஞர். ஆழமான சமூக விமர்சனம், அரசியல் விமர்சனங்களை அவரது கவிதைகள் ஊடே தரிசிக்கலாம்.

தொழிலாளர்கள் முதலாளிகளாலும் செல்வாக்கு மிக்கோராலும் சுரண்டப்படுவதை கொந்தளிப்பின் வரிகள் இப்படிப் பேசும்:

"முழுப்பங் கென்றும் அரைப்பங் கென்றும்
முதலாளிக் கென
விசேட பங்கும்
தண்டயல் முகாமை கணக்கர் பங்கும்
கழித்தே எடுத்து
இருப்பும் வைத்தபின்
இருக்கும் பங்கையே
இழுத்தவர் பெறுவார்!

பங்குப் பிரிப்பில்
சங்கடம் அங்கும்!
எங்குதான் இல்லை
எனினும் காக்கா

நொந்தவ ரானார்
நினைவும் வரவே..!

இப்படி ஒடுக்கப்பட்டோரின் அவலங்களை தன் கவி வரிகளூடாக வெளிப் படுத்தியவர், "தங்க சுனாமி" யின் கதைகளையும் தன் காவியத்துள் இழுத்துப் பேசும் விதம் சுவையானது.

இது கடல் கொந்தளிப்பு மட்டுமல்ல, மக்களின் மனக் கொந்தளிப்பும்தான்.

துறைமுகத்தின் வருகையால் இழந்த கடல் தொழிலின் கதை இது.

இதில் கவிஞர் பயன்படுத்தியிருக்கும் அருஞ் சொற்கள் சிலாகித்துச் சொல்லத் தக்கவை. விவசாய- மீனவப் பண்பாட்டில் ஊறித் திளைத்த மக்கள் கண்டு பிடித்த சொற்கள். உதாரணமாக சாக்கை "பெருவகுறன்" என்றும் தண்ணீரை "வெள்ளம்" என்றும் (மலையாளச் சொல்), மண்வெட்டியை "வெட்டுவாயன்" என்றும் சொல்வதன் மூலம் ஒரு பண்பாட்டுக் காவியாகவும் கவிஞர் வெளிப்படுகிறார்.

பாரதியின் பாஞ்சாலி சபதம் போன்ற நவீன காவிய வடிவிலேயே இதை எழுதியுள்ளார். இவை நெடுங்கவிதை என்போரும் நவீன காவியம் என்போரும் சந்திக்கும் புள்ளியாக பாலமுனை பாறூக் திகழ்கிறார்.

"தோட்டுப் பாய் மூத்தம்மா" நமது பண்பாட்டு வெளியின் குறுக்குவெட்டு முகத்தை அழகுற இலக்கியப் பிரதியாக மாற்றி விடுகிறது. கவிஞர் அப்துல் காதர் லெப்பை காட்டும் செய்னம்பு நாச்சியார் மான்மியத்தில் அங்கதச் சுவை மிகுந்த சமூக விமர்சனம் வெளிப்படுகிறது.

பாவேந்தல் பாலமுனை பாறூக், தோட்டுப் பாய் மூத்தம்மாவில் உருவகிக்கும் செய்னம்பு மூலம் ஒரு வலிமையான பெண் பாத்திரத்தை - பெண்ணின் சமூக வகிபாகத்தை உரத்துப் பேசுகிறார் பதிவு செய்கிறார்.

"இக்காவியம் "செய்னம்பு"வை முதல்நிலைப் பாத்திரமாகக் கொண்ட கதையம்சத்தோடு, இப்பிரதேச முஸ்லிம் மக்களின் பேச்சுமொழி, பழமை, பழக்கவழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் என்பவற்றைப் பதிவு செய்யும் படைப்பாகவும் அமைந்திருப்பது எனக்குத் திருப்தியினைத் தருகிறது" என்று நூலாசிரியரே சொல்கிறார்.

முன்னைய காவியங்களில் கையாண்டிருக்கும் மரபுக் கவிதை வடிவங்களையோ அல்லது புதுக்கவிதை வடிவங்களையோ அல்லாது, இன்னொரு விதத்திலான கவிதை வடிவத்தைக் கையாண்டிருப்பதை பேராசிரியர் செ.யோகராசா சுட்டிக் காட்டுகிறார். மரபுக் கவிதையின் நெகிழ்ச்சி பெற்ற கவிதை வடிவம் என்றும் அவர் அதை அடையாளம் காட்டுகிறார்.

"ஈழத்து நவீன காவிய கவிஞர் வரிசையில், "கொந்தளிப்பு" ஊடாக தன்னை இணைத்துக் கொண்ட பாலமுனை பாறூக் இக்காவியத்தினூடாக (தோட்டுப்பாய் மூத்தம்மா) தனது இருப்பை மேலும் உறுதி செய்துள்ளார் என்று துணிந்து கூறலாம்" என்கிறார் பேராசிரியர் செ.யோகராசா.

"நவீன மற்றும் பின் நவீன சூழல்களில் பெண்ணியம் பற்றிய கதையாடல்கள் விரிவான தளத்தைப் பெற்றிருந்தாலும், அதற்குப் பல தசாப்தங்களுக்கு முந்தியே தன்னாற்றலின் மூலமும், சுய பலத்தின் மூலமும், நமது பண்பாட்டில் பெண்கள் முற்போக்கான முடிவுகளை எடுத்து, தமது வாழ்வை தாமே நிர்ணயம் செய்யக் கூடிய ஆற்றலுடன் செயற்பட்டுள்ளனர் என்பதை இக் காவியம் காட்டுகின்றது" என்கிறார் ஏ.பீஎம்.இத்ரீஸ்.

அந்த வகையில் செவ்வியல் அந்தஸ்தைப் பெறும் சிறப்புகள் கொண்ட பிரதியாக அவர் இதை இனம் காண்கிறார்.

"தோட்டுப் பாய் மூத்தம்மா"பல வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர இவை போதுமானதாகும்.

"ஆயினும் அவரை
குடும்பம் எதிர்த்தது
குடிவழி தடுத்தது!"

"போடியார் மகளுக்குக்
கூலிக்காரனோ?
காழியார் மகளுக்கு
ஏர்வை வண்டியோ?"
கூடிக் கூடிக்
கேட்டது குடும்பம்!"
...
"செய்னம்பு நாச்சியார்
கல்விச் சகாய நிதி"

விண்ணில் படர் இருளும்
விலகீற்று!
விண்மீன்கள் புடை சூழ
நிலவு மகள் உலா வந்தாள்!

குளிர் நிலவின்
ஒளி மழையில்
நானைந்திற்றே ஊரெல்லாம்!

நிலவுக்கு ஒளி முகமாய்
நிறைந்தாளோ செய்னம்பூ.

செய்னம்பூவாய் அவள் காலப் பெட்டகத்தில் பூத்திருப்பது போல இந்நவீன காவியம் நிறைவடைகிறது.

“ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் பாலமுனை பாறூக்கின் சில தடங்கள்” என்றொரு விரிவான கட்டுரையை பேராசிரியர் செ.யோகராசா எழுதியுள்ளார்.

பாலமுனை பாறூக்கின் எழுத்துகள் தொடர்பாக பல்வேறு ஆய்வுகளும் செய்யப்பட்டுள்ளன. “பாலமுனை பாறூக்கின் குறுங்காவியங்கள் - ஓர் ஆய்வு என்ற தலைப்பில் க.சேகர், சென்னை புதுக் கல்லூரியில் முனைவர் மு.இ.அகமது மரைக்காரின் நெறிப்படுத்தலில் ஆராய்ந்து எம்.ஃபில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்துள்ளார்.

“எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு” தமிழ் - முஸ்லிம் உறவில் ஏற்பட்ட விரிசல்களைக் கவலையுடன் எடுத்தாள்கிறது. இந்திய அமைதிப் படை கால நெருக்கடிகளைக் கவித்துவமாகப் பதிவு செய்கிறது.

முதியோர் பிரச்சினையை நமது இலக்கியங்கள் பாடுபொருளாக எடுத்தது குறைவு. வயது போன தாயை ஒரு பிள்ளையும் தந்தையை மற்றொரு பிள்ளையும் அழைத்துச் செல்கின்றனர். அப்போது தாயும் தந்தையும் பிரிந்து வாழ வேண்டிய அவலம் நிகழ்கிறது. இந்தத் துயரத்தை கவிஞர் வெளிக்கொணரும் விதம் மிகச் சிறப்பாக உள்ளது.

வாழ்த்துகிறோம் !

கவிமாமணி நீலாபாலன்

பாலமுனை பாறூக் கவிதை உலகில்
பேசப் படுகின்ற பெயர்
பற்பல பற்பல முத்துக்கள் அகழ்ந்த
விற்பனர் அவர் இது மெய்
ஆழ அகல மறிந்து சமூக
அவல மழித்திட நற்
பாவகழ்ந் தளிக்கும் பாவேந் தலுக்கெம்
வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

பாலமுனை பாறூக் பாவல்லவர் - நன்கு
பழக்கமுள்ள வார்த்தைகளால் வாழ்வைச் சொல்பவர் !
நாளை நாளை என்று உணர்வைக் கிள்ளித் தள்ளியே - எதை
நாடி ஓட வேண்டுமென்று வழிகள் சொல்பவர்!

அதிகமதிகம் கவிதைகளை அகழ்ந்து தந்துள்ளார் - நூல்கள்
ஆக்கி அதையும் கோர்த்துச் சேர்த்து பதிவு செய்துள்ளார்
எதையும் விடாது அயலின் இயலை எழுத்து ஆக்கியே -
வாழும்
இலக்கியங்கள் தந்தகவிதை ஏந்தல் பாறூக் ஆம் !

புதிய பறவை யாகஎன்றும் சிறந்து விளங்கிடும் - பாறூக்
புதிதுபுதிதாய் இன்னுமின்னும் கவிதைகள் தந்து
எதிலும் வெற்றி எங்கும் வெற்றி பெற்றுயர்ந்திட
இதயபூர்வ வாழ்த்துக்களைச் சொல்லுவோம் சேர்ந்து!

அள்ளியள்ளி வாழ்த்துக்களைச் சொல்கிறோம் பாறூக் -
இன்னும்
அகழ்ந்தகழ்ந்து கவிதைமுத்தாய்த் தாரும் நண்பனே!
வெள்ளனையில் கிழக்கிலெழும் கதிரவன்போல் - நீங்கள்
விளங்கவேண்டும் எழுத்தில் இன்னும் புதிது தாருங்கள்

ஆற்றலோடு ஆளுமையும் கூட்டுச் சேர்ந்திடின் - நல்ல
அகழ்வுகளாய் வரலாற்றிலே பதிவு செய்யலாம்!
ஊக்கம் முயற்சி எல்லாம் உண்டு பாவில், இன்னும்
உழுதுழுது நல்லதேட்டம் தாருங்கள் மீண்டும்

பாலமுனை மண்தந்த படைப்பாளி பாவேந்தல் பாறூக்

ஒரு படைப்பாளி தான் கண்டுணர்ந்த அல்லது கேட்டறிந்த ஒரு சமுதாய நிகழ்ச்சியையோ அல்லது சூழலையோ கதையாகவோ அல்லது கவிதையாகவோ அல்லது பாடலாகவோ படைக்கும் வழக்கம் தற்போது உருவாகி இருக்கின்றது.

கவிதை, புதினம், நாடகம், நாவல், சிறுகதை எதுவானாலும் மக்களின் மனப்போக்கை தழுவியோ அல்லது அதன் ஆசிரியரின் சமுதாயப் பார்வையைத் தழுவியோ அமைந்தால் அது பேசப்படும் படைப்பாகிவிடும்.

அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தில் பாலமுனை என்ற அழகிய கிராமத்தில் இருந்து தமிழ் இலக்கிய உலகில் தடம் பதித்தவர்தான் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள். இவர் எழுபதுகளின் தொடக்கத்தில் இருந்தே எழுத்துலகில் பிரவேசித்து இன்றுவரை தொடர்ந்து தனது படைப்புகளை கவிதைகளாகவும், குறும்பாக்களாகவும்,காவியங்களாகவும், சிறு கதைகளாகவும், பாடல்களாகவும், படைத்துவருகின்றார். இவர் எழுத்து துறையில் பிரவேசித்து ஐம்பது ஆண்டுகள் நிறைவடைவதை கொண்டாட இலக்கிய நண்பர்கள் இவருக்கு பொன் விழா எடுப்பதையிட்டு . நான் மிகவும் மகிழச்சி அடைகின்றேன்.

ஒரு கலைஞன், ஒரு படைப்பாளி அவன் வாழும்போதே மதிப்பளிக்கப்பட்டு, கௌரவிக்கப்பட வேண்டிய அவசியத்தை இன்று நம் மத்தியில் வாழும்பலரும் புரிந்து கொண்டுள்ளார்கள். அந்த வகையில் கவிஞர் பாலமுனை பாறூக் அவர்களுக்குபொன் விழா எடுக்கும் குழுவினருக்கு என் பாராட்டுக்கள்.

கவிஞர் அண்மையில் என்னுடன் நெருங்கிய தொடர்பில் இருக்கின்றார். அதற்கு கொரோனாவுக்கு நன்றி. ஏனென்றால்

அதனால்தான் எல்லோரும் வீட்டில் இருக்க வேண்டிவந்துவிட்டது. இல்லையென்றால் நேரம் கிடைப்பது அபூர்வம். நானும் உலகம் முழுதும் பயணிப்பவன். ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக வீட்டில் முடங்கி கிடப்பதால் பல சமூக ஊடகங்கள் வழியாக பல படைப்புகளை வெளிக்கொண்டுவர முடிகின்றது. அந்த வகையில் கவிஞர் பல பாடல்களை எனக்குப் புலனம் வழியாக அனுப்பி வைப்பார் அவற்றை நான் இசையமைத்து பாடி அவருக்கு அனுப்புவேன். அவர் தனது முகநூல் பக்கத்தில் அவற்றைபதிவு செய்வதை பார்க்க முடிகின்றது. இதனால் இருவருக்கும் ஒரு திருப்தி ஏற்படுகின்றது.

அவர் தொடர்ந்தும் தனது படைப்புகளை வெளிக்கொண்டு வரவேண்டும். அதற்கு அளவற்ற அருளாளன் அல்லாஹ் அவருக்கு அருளையும், ஆரோக்கியத்தையும் கொடுப்பான். இன்ஷா அல்லாஹ் கவிஞரின் பொன்விழா சிறப்பாக நடைபெற எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்.

கோவிலூர் செல்வராஜன்
இலண்டன்
ஐக்கிய ராஜ்ஜியம்.

பாட்டுக்குள் வாழ்ந்துவரும் பாவலன் !

கலாபூஷணம் ஏ.எம்.எம். அலி
கிண்ணியா

பாட்டுக்குள் வாழ்ந்துவரும் பாவலன்தான்
பாவேந்தல் பாலமுனை பாறூக் என்பேன்!
நாட்டுக்குள் மட்டுமல்ல தன்நாமத்தை
நாட்டுக்கு அப்பாலும் கொண்டு
சென்றான் !
சாட்டுக்குப் பாவெழுத வந்தோன்
அல்லன்!
சந்ததமும் பாப்புனைந்தான்! ஏழு நூற்கள்
போட்டுப் பார்த்துவந்திட்டான்! அந்நூலெல்லாம்
புதுவண்ணத் தமிழ் குழைத்துத்
தமிழ் குழைத்தே!

ஐபத்து வற்சரங்கள் கழிந்து போச்சு
அவனுண்ட பாச்சுவையும் மிகுந்து போச்சு!
கண்வைத்தபொருளெல்லாம் கவிதையாச்சு!
காலத்தால் அழியாத நூலு மாச்சு!
மெய்வருந்தக் கூலிதரும் விருப்பினோடு
பாவேந்தல் பாவிசைத்தான்!முகநூலூடும்
மெய்ப்பித்தான் தன்திறனை !மெச்சவைத்தான்!

படைத்தளித்தான் நூலேழு "பதமென்" கின்ற
பானூலை முதன் முதலாய்ப் படைத்தளித்தான்
அடுத்தளித்தான் மணக்கும்நூல்
"சந்தனப் பொய்கை "
அதற்கடுத்து எழுந்ததுவே "கொந்தளிப்பு !
இதற்கடுத்துப் புனைந்த எழிற் காவியந்தான்
"தோட்டுப்பாய் மூத்தம்மா" படித்திருப்போம்!

எழுத்துருவில் இவன்வடித்த போர்க்காலத்து
நிகழ்வுகளே " எஞ்சிருந்தபிரார்த்தனையோடு"
குறும்பாவும் புனைந்தளித்தான் !
குறும்பாவென்னும்
கரும்பெடுத்தான்! துண்டுதுண்டாய் வெட்டிச் சீவிக்
கரங்களிலே வைத்திட்டான்! "
"பாலமுனைபாறூக்
குறும்பாக்கள்" என்றுபெயர் அந்நூற்கிட்டான்!
பெரும்பாலும் அவன்படைத்த பாநூற்குள்ளே
கடைநூற்தான் "வலைக்குள்ளே மலர்ந்த வனப்பு"

எப்போதும் எப்பாவும் எழுத வல்லோன்!
எவருக்கும் பிடிக்கின்ற மனமே உள்ளோன்!
தப்பாது இலக்கணமுங் கற்றுத் தேர்ந்தான்!
தமிழ்மொழியின் மீதாசை உற்றுணர்ந்தான்!
மூப்பேது கவிஞனுக்கு? இளமையோடு
முப்பொழுதும் எழுதிவரும் கவிஞன் என்பேன்!

பாவேந்தல் பாலமுனை பாறூக்கிந்த
படைப்புலகில் கால்வைத்து ஐம்பதாண்டு!
கோலமிகும் பொன்விழாவைக்
காணும் நாளில்
நானும் என் நண்பனுக்கு வாழ்த்துச்
சொன்னேன்!

வாழ்க! வாழ்க! வாழ்கவே!!

பாலமுனை பாறூக் :
நமது மண்ணின் இலக்கிய அடையாளம்

எம். அப்துல் றஸாக்

நமது மண்ணின் கவிதை அனுபவம் கவிஞர்கள் பலரின் தனித்துவத்தினால் செழித்தோங்கியிருக்கிறது எனக்கொண்டால் அதில் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களுக்கு முக்கியமானதோர் இடமுண்டு. 'இலக்கியக்காரனாக இருப்பதற்கு முன்பு மனிதனாக இருக்க வேண்டும்' என்ற மக்கள் நலக் கொள்கை பூண்டிருக்கும் பாலமுனை பாறூக் அவர்கள், தொடர்ச்சியாக ஐம்பதாண்டுகள் இலக்கிய அடையாளத்தை சுமந்துகொண்டு பயணிப்பதும், மாறுபட்ட கவிதை அனுபவங்களைக் கொண்டியங்கி வருவதும் எப்போதும் வியப்புக்குரியன.

மரபார்ந்த கவிதையியலை முறையாகக் கற்ற ஒருவராகவே பாலமுனை பாறூக் கவிதைத் துறைக்குள் நுழைந்திருக்கின்றார் என்பதை அவரது ஆரம்ப காலக் கவிதைகளை வாசித்தவர்கள் புரிந்து கொள்வர். அதற்குள் அமைந்திருக்கும் கருத்தொழுங்கு, சொல்நேர்த்தி, ஓசை, வடிவக் கட்டமைப்பு என்பன அவரை மற்றவர்களிடமிருந்து தனித்துவமாக நோக்கச் செய்தன. மனித மன உணர்வு, சமூக நோக்கு, ஆன்மீகத் தேடல் போன்ற பொருண்மைகள் இவரது கவிதைகளை ஆக்கிரமித்து நின்றன.

இத்தகைய பொருள் மரபை காலத்திற்கேற்றவாறு வடிவமாற்றம் செய்தும், கவிதைச் சுவையினை பரிசோதனைக்குட்படுத்தியும்

வளர்ச்சியடைந்தனவே அவரது பிற்காலக் கவிதைகளாகும். இந்த மாற்றம் தென்கிழக்கின் பிற கவிஞர்களிடம் அவதானிக்கப் படாத ஒன்றாகும். ஒரு பக்கம் சீரியஸான சமூக நோக்கை இவரது கவிதைகள் பேசிக்கொண்டு இன்னொரு பக்கத்திற்கு வாழ்வை, அதன் போலிகளை கேலியாகவும் கிண்டலாகவும் இரசித்துக் கொண்டுமிருந்தன. இதனால் மூத்த தலைமுறை தொடக்கம் இளந்தலைமுறை வரை இவரது கவிதைகள் பேசப்படுவதற்கான சூழல் ஏற்பட்டது.

இவ்வளர்ச்சியை மரபுக்கவிதை, நவீன கவிதை, மணிக்கவிதை, கவியரங்கக் கவிதை, குறும்பா, தொடர் குறும்பா, குறுங்காவியம் என்ற வகையில் பல்வேறு வடிவப் பிரக்ஞை கொண்டதாக பகுத்தாராய முடியும்.

இவரது பிற்கால கவிதை வடிவங்கள் அதிக உழைப்பை வேண்டி நிற்பனவையாகும். எழுந்தமானமாக எழுதுவதிலும் பார்க்க சமூக, அரசியல், இலக்கியப் பின்புலத்தில் தனக்கேயுரிய நகைச்சுவைப் பாணியைக் கலந்து இவர் கவிதைகள் யாக்க முனைந்திருப்பது இவரது ‘எமக்குத் தொழில் கவிதை’ என்கின்ற பாரதியின் கூற்றை ஞாபகம் கொள்ளச் செய்வதொன்றாகும்.

கவிதையை பயன்மிக்கதாகப் பார்க்கும் அதேவேளை அதன் கலையினை நுகரவும், இன்புறவும் வேண்டும் என்பது பாலமுனை பாறூக்கின் இலக்கியக் கொள்கைகளுள் ஒன்றாக இருக்க வேண்டும். இவரது மேடைக் கவிதைகள், கவியரங்கக் கவிதைகள் என்பன இவ்வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

கவிதை எழுதும் எல்லோரும் அதனை அழகுற மொழிந்து விடுவதில்லை. அது மனனமாகி அவர்களுக்குள் ஊற்றெடுத்துப் பெருகுவதுமில்லை. இதற்கு பாலமுனை பாறூக் விதிவிலக் கென்றே சொல்ல வேண்டும். ஒருமுறை நானும் அவரும் இணைந்து ஓர் கவியரங்கை தொகுத்து வழங்கினோம். எனக்கு முற்றிலும் அது புதிய அனுபவமாக இருந்தது. அவரது மொழிதல் பாணியைக் கண்டு நான் வியந்துபோனேன். ஒரு கட்டத்தில் அவர் வழியில் அந்நிகழ்வை நடாத்திச் செல்வதே உசிதம் என்றுகூடப் பட்டது.

கவியரங்குகள் இன்று செல்வாக்கிழந்து போனாலும்

பெருநாட்கள், பெருவிழாக்கள் என்பனவற்றில் கம்பீரமாய் ஒலிக்கும் குரல்களில் பாலமுனை பாறூக் அவர்களுடையதும் உண்டு எனும்போது மகிழ்ச்சியே கிளர்கின்றது.

மஹாகவியால் தமிழில் அறிமுகப்படுத்தப்பட்ட குறும்பாவினை மிகச் சிறப்பாகக் கையாண்டவர்களில் இவரும் ஒருவர். தனது நகைச்சுவை ஆற்றல் முழுவதையும் இவர் குறும்பாவுக்குள் உள்ளடக்கி இருப்பதனை “பாலமுனை பாறூக் குறும்பாக்கள்” (2013) தொகுப்பினை வாசித்தவர்கள் இலகுவாகப் புரிந்து கொள்வர்.

குறும்பாக்களை எழுதுவதோடல்லாமல் அவை பற்றிய தேடலிலும் பாலமுனை பாறூக் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றார். இவ்வகையில் “குறும்பா விருந்து வைத்து” என்ற தலைப்பில் தனது நூலுக்கு இவர் எழுதிய முன்னுரை கனதியானதாகும். மாத்திரமன்றி குறும்பாக்கள் பற்றிய உரைகள் பலவற்றையும் ஆங்காங்கே நிகழ்த்தி வருகின்றார். இவ்விதத்தில் குறும்பாக்களை உணர்வு ரீதியாக எழுதிய அதற்கு அறிவு ரீதியாக விளக்கம் தரும் ஒருவராகவும் இவரை நாம் தரிசிக்கலாம்.

இவர் எழுதியுள்ள சில தொடர் குறும்பாக்கள் கதையொன்றைக் கவிதையாக்கும் வல்லபத்தின் ஆரம்ப முயற்சிகளாகப் பார்க்கப்படவேண்டியவையாகும். இந்த உந்துதல்தான் பிற்காலத்தில் இவர் சிறந்த கதையம்சங்களுடன் கூடிய குறுங்காவியங்களை இயற்றுவதற்கு துணைபோயிருக்க வேண்டும்.

நவீன காவியங்களுக்கான தேவையுடையதாக நமது இலக்கியப் பாரம்பரியம் காணப்பட்டபோது அதனை மிகச்சரியான தருணத்தில் ஈடுசெய்த ஒருவராக பாலமுனை பாறூக்கை நோக்கலாம். கதையாகச் சொல்வதிலும் பார்க்க சிறந்த கவிதை சொல்லியாக அடையாளம் காணப்பட்டிருக்கும் இவருக்குள் பெருக்கெடுத்த கதைகள் நெடுங்கவிதைகளாக - நவீன காவியங்களாக உருப்பெற்றிருக்கின்றன.

தொன்மம், பண்பாடு, கிராமியம், சமூக விழுமியங்கள், பிரதேச வாழ்வியல் கூறுகள் என்றவாறாக விரிவுபெறும் இவரது காவியங்களின் கவிதை மொழி மிகவும் லாவகமாக உருப்

பெறுகின்றது. கதைக்கேற்ற உணர்நிலைகளை கவிதைகள் குறையின்றி வெளிப்படுத்துகின்றன. ஏனைய மணிக்கவிதை, குறும்பா போன்றவற்றில் இவர் கையாளும் அங்கதம், கேலி, கிண்டல் என்பன இவற்றுக்குள் மிகக் குறைவாகவே இடம்பெறுகின்றன. இவ்வகையில் நவீன காவியங்களை தூரநோக்குடைய சமூகப் பிரக்ஞையோடு இவர் இயற்றிய தாகவே கொள்ள முடிகின்றது.

புதிய தொழில்நுட்ப உலகத்தை புரிந்து அதன்மூலம் தன் கவிதைப் பயணத்தை பாலமுனை பாறூக் தொடர்ந்து வருவது இவர் பற்றிய நம்பிக்கையை மேலும் அதிகரிப்பதொன்றாகும். முகப்புத்தகம் வழியான இவரது தரிசனம் முக்கியமானதொன்று. இதில் இவர் மேற்கொள்ளும் பரிசோதனை முயற்சிகளும் தனியே குறிப்பிடத்தக்கவையாகும். இவ்வகையில் காலைக் கவிதை என்றதொரு மரபை அவர் தொடங்கி வைத்திருக்கின்றார். பிரபலமான கவிஞர்களோடிணைந்து பதில் கவிதைக் கலாசாரம் ஒன்றை ஏற்படுத்தி வருகின்றார். புகைப்படங்களுக்கு கவிதை எழுதும் முறையை ஆராய்ந்து வருகின்றார். இவரது “வலைக்குள் மலர்ந்த வனப்பு” (2017) கவிதைத் தொகுதி இதற்கான சான்றுகளை உட்பொதிந்து வைத்துள்ளது.

கவிதைக் கலையின் மூலைமுடுக்குகளை ஆய்ந்தோய்ந்து இயக்கம் கொண்டிருக்கும் பாலமுனை பாறூக் இன்றும் பலருக்கு ஆதர்சமாக விளங்குகின்றார். இளையவர்களை எழுதத் தூண்டுகின்றார். அவர்களுக்கு மதிப்புரைகள் வழங்குகின்றார். அவரது ஊக்கமும் உள்வலிமையும் பலரை எழுதவும் சிந்திக்கவும் தூண்டியிருக்கின்றது.

இன்று இவரது நூல்கள் பல்வேறு மட்டங்களிலும் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. ஒரு மூத்த தலைமுறையின் அனுபவப் பகிர்வை பின்னுள்ள இளைய தலைமுறைக்கு ஊடுகடத்தும் முயற்சியாக இவ்வாய்வுகள் அமைந்து காணப்படுவது மென்மேலும் மகிழ்ச்சியளிக்கின்றது.

நமது மண்ணின் இலக்கியம் அடையாளங்களில் பாலமுனை பாறூக் அவர்களுக்கும் ஒரு முக்கிய இடமுண்டு என்பதில் எமக்கும் நிறைந்த பெருமிதமே உண்டு. ■

உனக்கான எனது மழை

ராஜகவி ராகில்
பணிப்பாளர் ஆர் கேமீடியா
நிந்தவூர் - 1

தன் கிராமத்தைத் தமிழாக்கி கடல்கள் கடந்து சிறகுவிரித்த
கவிதைப் பறவைக்கு எனது புன்னகை வரிகளால்
பன்னீர் செய்து தெளிக்கிறேன்

நீ கவிதைச் செல்வந்தன் உனது சொற்களுக்கு
விதைகள் அந்தஸ்து உள்ளன
தென்கிழக்கை சர்வதேசம் பார்ப்பதற்கு
கண்கள் கொடுத்திருக்கிறாய்

இஸ்லாமியத் தமிழுக்கு உயிர் கொடுத்தவர்களில் உனதுபெயரும்
தடித்த எழுத்துக்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது

உனது எழுத்துக்கள் இலக்கியம் சொல்லச் சொல்ல
உன்னை அவை அழைத்துச் சென்று
மக்கள் மனங்களில் குடியிருக்கச் செய்தன

உனது கவிமணிகளை நெல் மணிகளென்று
குருவி கிளிகள் காக்கைகள்
கொத்தி உண்ணலாம்

பூக்காத மரங்கள் உனது கவிதைகளையே
பூக்களென்று எண்ணி மகிழ்ச்சி கொள்ளும்

தென்கிழக்கு இலக்கியத்தின் இதயம்
உனது தமிழும் எழுத்தும் என்றுதான்
இலக்கிய ஆய்வுகள் எழுதி நிரூபிக்கும்

உனது குறுங்காவியங்கள் தென் கிழக்கு மண்ணின் நறுமணத்தை
உலகின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு சென்றன

பாலமுனை ஓர் ஊர்
சர்வதேசம் அறியவைத்த தமிழ் ஒளி நீ
அதையும் தாண்டி ஊருக்கே இலக்கிய
முடிசூடிய வேந்தன் நீதான்
உனது மண்ணுக்கே உயிரூட்டிய பாவேந்தல் நீ
உன் பொன் விழா தமிழுக்குப் புகழ்
ஊர் கூடி இழுக்கும் பொன் தேர்
வானத்தையே வசப்படுத்திய உனது எழுதுகோல் வாழ்க

சாகித்தியவிருதும் கலாபூசணவிருதும்
உனது இலக்கிய இறக்கைகள்
நீஅடுத்த கிரகம்வரை சென்று
இலக்கியம் படைக்க
அரசாங்கம் தந்த அடையாள அட்டைகள்

பொன் விழாகடந்தும் உனது இலக்கியப் பயணம்
சீராகச் செல்ல
எனது வாழ்த்து மழை பொழிகிறது

பாவேந்தலே
பாலமுனைபாரூக் அவர்களே
உடைக்கப்படாத கல்லில்
அழிக்கப்படாதவாறு உனதுபெயர் செதுக்கப்படும்

எனது இதயம் நிறைந்த இனியவாழ்த்துகள்

பாவேந்தல் படைப்புகள் :

பார்வைச் சுருக்கம்

பாவேந்தல் நூல்களுக்கு உவந்தளிக்கப்பட்ட அணிந்துரைகள்

பதம்
(1987)
(கவிதை தொகுதி)

மருதூர்க் கொத்தன்

“‘பாரதியையும் பாரதிதாசனையும் ஒரு கோணத்தில் வைத்தால் நுஃமானை மறு கோணத்தில் வைப்பேன். மஹாகவியும் நுஃமானுக்கு கிட்ட நிற்பார்’ என்று முருகையன் குறிப்பிட்டுள்ளார். இந்தக்கூற்றை முழுமையாக ஏற்றுக் கொண்டு நவீன தமிழ்க்கவிதை என்கின்ற பல்கோணியின் மற்றொரு கோணத்தில் பஸீல் காரியப்பரையும் இன்னொரு கோணத்தில் பாலமுனை பாறூக்கையும் நிறுத்தலாம் என்பது என்துணிவு. தமிழ்க் கவிதையின் புதிய வடிவமாற்றத்தை இவ்விருவரும் இருவேறு பாணியில் அமைத்துச் செல்கிறார்கள் என்பதே என் துணிவுக்கு காரணமாகும்”

சந்தனப் பொய்கை
(2009)
(கவிதை தொகுதி)

காப்பியக்கோ டாக்டர்
ஜின்னா ஷரிபுத்தீன்

“மரபை மீறுவதாக சொற்கோக்கும் இன்றைய நவீன படையலர்களில் நின்றும் கவிஞர் பாறூக் தன்னை விடுவித்துக் கொண்டவர். இறுக்கமான யாப்புக்குள் நின்று கவிதை சொல்லும் ஆற்றலும் அறிவும் கொண்டிருந்தும் அதனில் நின்று சற்று விலகி ஓசைக்குள் அடங்கும் நவீன கவிதைகளைப் படைப்பதில் கவிஞர் பாறூக் திறமைமிக்கவர். விருத்தம் இவருக்குக் கைவரப் பெற்ற பா வடிவமாகும்”

சந்தனப் பொய்கை
(2009)
(கவிதை தொகுதி)

பேராசிரியர்
எம்.எம். தீன் முகம்மது

“கவியரங்குகளில் உயிரோட்டமாக கவிதைகளைச் சொல்லும் வல்லமை உடையவர் பாலமுனை பாறூக். பணிவு, அடக்கம், அறிய வேண்டும் என்ற ஆவல், பெரியோர்களை மதிக்கும் பண்பு, ஆத்மீக தேடல் ஆகிய அனைத்தும் பாலமுனை பாறூக்கில் என்னைக் கவர்ந்த பண்புகளாகும்”

கொந்தளிப்பு

(2010)

(குறுங்காவியம்)

கவிஞர்

மு. சடாட்சரன்

“தாயக மண்ணை நேசித்து, அம்மண்ணிலே வாழும் மக்களின் வாழ்வியலை தனது அனுபவ வெளிப்பாடாகக் காவியம் படைத்துள்ள பாறூக் மரபுக் கவிதைகளோடு மரபை மீறிய புதுக்கவிதைகளையும், சந்தம் தழுவிய கவிதை களையும் எழுதி இலக்கிய உலகில் பேசப் படுகின்ற கவிஞராக விளங்குகின்றார். இவரின் ‘கொந்தளிப்பு’ என்னும் குறுங்காவியம் காலத்தோடு ஒட்டி வெளிவந்திருப்பது மகிழ்ச் சிக்குரிய விடயமாகும்”

●●●

கொந்தளிப்பு

(2010)

(குறுங்காவியம்)

பேராசிரியர்

றமீஸ் அப்துல்லா

“தென்கிழக்குப் பிரதேச முஸ்லிம்களின் வாழ்வினைப் புலப்படுத்தும் குறிப்பிடத்தக்க தொரு படைப்பாக பாலமுனை பாறூக்கின் கொந்தளிப்பு அமைந்துள்ளது. துணிச்சலுடன் கவிஞர் எடுத்துரைக்கும் அரசியல், சமூக, சுரண்டலுக்கு எதிரான கருத்துக்கள் வரவேற்கத் தக்கன. கலைநயத்துடன் கவிதை சொல்லும் பாங்கும் நயந்துரைக்கத்தக்கது. இலக்கியத்தின் ஒட்டுமொத்தப் பணியினை தன்படைப்பு மூலம் பாறூக் வெளிப்படுத்தியுள்ளார்”

●●●

தோட்டுப்பாய் மூத்தம்மா

(2011)

(குறுங்காவியம்)

பேராசிரியர்

செ. யோகராசா

“‘தோட்டுப்பாய் மூத்தம்மா’ எனும் இக்காவியம், ‘கொந்தளிப்பு’ வழியில் செல்லாது வேறு சில புதிய உலகங்களை சிருஷ்டித் துள்ளது. இக்கவிஞரது நோக்கு குடும்பப் பிரச்சினைகளிலொன்றினைப் பற்றிப் பேசுவது மட்டுமன்றி முஸ்லீம் மக்களது பண்பாட்டுக் கோலங்களை பதிவு செய்வதாகவும் காணப்படு கின்றமை கவனத்திற்குரியது. ஈழத்து நவீன காவிய கவிஞர் வரிசையில் ‘கொந்தளிப்பு’ ஊடாக தன்னை இணைத்துக் கொண்ட பாலமுனை பாறூக் இக்காவியத்தினூடாக தனது இருப்பை மேலும் உறுதி செய்துள்ளார் என்று துணிந்து கூறலாம்”

●●●

தோட்டுப்பாய் மூத்தம்மா
(2011)
(குறுங்காவியம்)

பன்னூலாசிரியர்
ஏ.பி.எம். இத்ரீஸ்

“சுமார் நூறுவருடங்களுக்கு முந்திய அதற்கு முன் பல நூறு வருடங்களாக உருவாகிவந்த நமது சோனகப் பண்பாட்டின் வாழ்வியலை, அதில் பெண் பெற்றிருந்த வகிபாகத்தை, அவள் அடைந்த வெற்றி தோல்விகளை இக்குறுங் காவியம் பதிவு செய்கின்றது. செவ்வியல் பிரதித் தன்மையை பெறுவதற்கான அந்தஸ்த்தை இக்குறுங்காவியம் பெறுகின்றது.”

❤❤❤

“ஈழத்தமிழ்க் கவிஞர்களுள் சுட்டிச் சொல்லத் தக்க படைப்பாக்கத் திறனாளராக அறியப் பெறுபவர் பாலமுனை பாறுக். கவிதைத் துறையில் நாற்பதாண்டுக் கால அனுபவ முதிர்ச்சியும் அரிய பயிற்சியும் உடைய பாறுக் அண்மைக்காலத்தில் திறனாய்வாளர்களால் அதிகம் பேசப்படக்கூடிய படைப்பாளர்களுள் ஒருவராக ஆகியுள்ளார்.

நெய்திறம் மிக்க நெசவாளர் செய்த நேரிய நூலாகிய இந்நூல் இலக்கியச்சுவைஞர்களின் உள்ளங்களில் உயரிடம் பிடிக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்”

பாலமுனை பாறூக் குறும்பாக்கள்
(2013)
(குறுங்காவியம்)

பேராசியர் முனைவர்
மு.இ. அஹமது மரைக்காயர்

❤❤❤

பாலமுனை பாறூக் குறும்பாக்கள்
(2013)
(குறுங்காவியம்)

முதுநிலைப் பேராசிரியர்
சி. மௌனகுரு

“பாலமுனை பாறூக்கின் குறும்பாக்களிலே சமூகக் கிண்டல் நன்றாக வந்துள்ளது. நம்மை அண்மைக்காலமாக தாக்கிய பல விடயங்கள் அவரின் குறும்பாவின் பாடுபொருளாய் உள்ளன.

பாறூக்குக்கு தமிழ்ச் சொற்கள் நன்கு கைகொடுக்கின்றன. தமிழ்மீது உள்ள பாண்டித்தியம் புலனாகிறது.

பாறூக்குக்கு எனது வாழ்த்துக்கள்.”

***

மீளப் பறக்கும் நங்கனாங்கள்
(2020)
(நவீனகாவியம்)

கலாநிதி
த. கலாமணி

கவிஞர் பாறூக் அவர்கள் கவிதா உலகினுள் பிரவேசித்து ஐம்பதாண்டுகள் ஆகின்றன. அவர் இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டு பேசப்படும் கவிஞராக விளங்குகின்றார். இதற்குக் காரணம் இவர் படைத்தளித்த குறுங்காவியங்களாகும். கொந்தளிப்பு, தோட்டுப்பாய் மூத்தம்மா, எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு.. என இவை தொடர்ந்து வெளிவந்து, ஈழத்தில் குறுங்காவியங்களைப் படைத்தளித்த முன்னணிக் கவிஞர்களில் ஒருவராக இவரை அடையாளங் காண வைத்திருக்கின்றன. இத்தொடர் வரிசையிலேயே நான்காவது குறுங்காவியமாக மீளப் பறக்கும் நங்கணங்கள் வெளிவருகின்றது.

மஹாகவி உருத்திரமூர்த்தி சாதாரணர்களின் வாழ்வியலை அவர்களின் எளிய மொழியில் பாடி நவீன குறுங்காவியம் படைக்கும் மரபில் புதுமையைப் புகுத்தியவர். இதே மரபில் கவிஞர் பாறூக் அவர்களும் நவீன குறுங்காவியங்களைப் படைத்திருப்பதனாலேயே அவரின் “கவிதா விலாசம்” இன்று பேசப்பட்டு வருகின்றது.

***

வலைக்குள் மலர்ந்த வனப்பு

(2017)

(கவிதைத் தொகுதி)

ஜவாத் மரைக்கார்

இலக்கியச் செயற்பாடுகளுக்காக இணையத் தையும் பயன்படுத்திக் கொண்டிருப்போரில் கவிஞர் பாலமுனை பாறூக் குறிப்பிடத் தக்கவர். இலக்கியச் செயற்பாடுகளில் அரை நூற்றாண்டு அனுபவம் கொண்டவர். அவரின் பல்வகையான ஆக்கங்களை உதிரி களாகவும் நூல்களாகவும் படித்துள்ளோம். பிற ஊடகங் களைப் பயன்படுத்திக் கொண்டது போன்றே முகநூலையும் ஏற்ற வகையில் அவர் பயன்படுத்தி வருகின்றார். அவர் முக நூலில் எழுதிய கவிதைகள் இப்போது நூல்முகம் காட்டுகின்றன. யாப்பிலக்கணம் தழுவியும் தழுவாமலும் பல்வேறு வடிவங்களில் கவியாக் கும் ஆற்றல் கொண்ட பாலமுனை பாறூக் முக நூலிலும் அவ்வாறே பல்வேறுபட்ட கவிதை களைத் தந்துள்ளார். சமூகம், சமயம், அரசியல், அழகியல் எனப் பல்வகை சார்ந்த சிறிதும் சற்றுப் பெரிதுமான கவிதைகள் வெண்பா, குறும்பா,சிந்து, கும்மி, புதுக்கவிதை போன்ற வடிவங்களில் அமைந்துள்ளன. ஒரே கருப் பொருளை பல்வேறு வடிவங்களில் எழுதிருப் பது யாப்பியலில் அவருக்குள்ள பயிற்சியையும் தேர்ச்சியையும் காட்டுகின்றது.

குறும்பாவில் பாவேந்தல் பங்களிப்பு தொடர்பாக இலங்கையின் முன்னணிக் கவிஞர்கள் சிலரின் குறிப்புகள்:

குறும்பா நல்ல கவிதை ஊடகம். அதை வளர்த்தெடுக்கக் கவிஞர்கள் முன்வரவில்லை என்பது எனது ஆதங்கமாக இருந்தது. ஆனாலும் தீரன், குறிஞ்சித் தென்னவன், கும்பலங்கையிலிருந்து ஒரு பெண் கவிஞர் போன்றோர் 1983 - 1990 அளவில் முகிழ்த்தார்கள். பாலமுனை பாறூக் அவர்கள் அனைவரையும் மிகைத்து இன்று அதில் உணர்வுரீதியாக முன் நிற்கிறார். இப்போது கவிஞர் அஷ்ரஃபா இணைந்துள்ளமை மகிழ்ச்சியைத் தருகிறது. மகாகவிக்கு அஞ்சலிகள்.

கவிமாமணி அல் அசூமத்
29-10-2020

பாலமுனை பாறூக் எனும் சீமான்
பாப்புனைந்து வழங்குவதில் கோமான்
பா வடிவாம் குறும் பாவை
பால் வடியும் நறும் பாவாய்
பாரெங்கும் எத்திவைத்த பூமான்

கலைவாதி கலீல்
13-12-2020.

பாலமுனை பாறூக்கின் பாக்கள்
பலதடவை படித்தாலும் தூக்கல்
சூலமெனக் குத்துகின்ற
சீலமிகு பாப்பகன்ற
தோழன்கைக் கீந்துவிட்டேன் பூக்கள்

கவிஞர் ஜவாத் மரைக்கார்

பாலமுனை பாறூக்கின் குறும்பா
பால்பழம்தேன்: சாறுநிறை கரும்பா?
நாளுமினி என்நயனம்
நித்தமிதை நாடாமல்
நூலறையில் வேறுபுக்ஸில் திரும்பா!

கவிஞர் கிண்ணியா அமீர்அலி

பாலமுனை பாறூக் மணிக்கவிதை....

அழைப்பிதழில் இருந்த
அனைத்துப் பக்கமும்
அதிதிகள் நாமம்!
பிரதம, விசேட
கௌரவ, சிறப்பு
முன்னணி, நடுநிலை
இலக்கிய, கலக்கிய
நிலவு, நட்சத்திர
அதிதிகள்...அதிதிகள்...!
நீளம் நீ...ள...மா...ய்
பட்டங்கள்... பதவிகள்!
ஆள் பிடிக்கத் தான்
ஆம்...இந்த நூல் வெளியீடு!

பாவேந்தல் :

அறிமுகமும் – படைப்புலகும்...

பொன்விழா நாயகன் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள் பற்றிய அறிமுகம்

இலக்கிய உலகில் சுமார் அரை நூற்றுகளாக காலூன்றி கொடி கட்டிப் பறக்கும் சிரேஷ்ட இயக்கியவாதி 'பாலமுனை பாறூக்' அவர்கள்.

அம்பாரை மாவட்டத்தின் பாலமுனையில் மீராலெவ்வை மரைக்காயர் முகம்மதுலெவ்வை மற்றும் ஆதம்லெவ்வை முஹல்லம் அலிமானாச்சி தம்பதியினருக்கு மகனாக 1954.01.01 ஆம் திகதி முகம்மது பாறூக் பிறந்தார்.

தரம் 01 முதல் 05 வரையான தனது ஆரம்பக்கல்வியை பாலமுனை உரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும் (தற்போதைய அல்ஹிதாயா மகளிர் கல்லூரி) தரம் 06 முதல் சாதாரண தரம் வரை மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும், உயர் தரத்தை கல்முனை சாஹிரா கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

அத்துடன் *Charted Institute of Bankers of Srilanka* வில் *A.I.B part-1* சித்தி பெற்ற இவர் *Diploma in Business Management* கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1977 களில் இலங்கை வங்கியில் கனிஷ்ட இலிகிதர் உதவிக் காசாளராக நியமனம் பெற்று பாலமுனையின் முதலாவது அரச வங்கிச் சேவை உத்தியோகத்தராக அடையாளம் காணப்பட்டார். நாளடைவில் வங்கிச் சேவையில் பல பதவிகளை வகித்து பிரதி முகாமையாளர் வரை சேவை புரிந்தார்.

1977 முதல் 2013 வரையில் சுமார் 36 வருடங்கள் வங்கிச் சேவை புரிந்து ஓய்வு பெற்றார்.

சிறு வயது முதல் கலைத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்த இவர் மேடை அறிவிப்பாளராகவும், நாடகக் கலைஞராகவும்

அறிமுகம் பெற்றிருந்தார். 1970 களில் வெளிவந்த தினபதி பத்திரிகையின் ஞாயிறு பதிப்பான சிந்தாமணி சஞ்சிகைக்கு நகைச்சுவைகள் எழுதி எழுத்துலகிற்குள் நுழைந்தார்.

தொடர்ந்து இவரது கவிதைகள் இன்று வரையில் பத்திரிகைகளில் பிரசுரமாகி வருகின்றன. அத்தோடு பாவேந்தல் பாலமுனை பாறுக் எனும் முகநூல் சமகால இலக்கிய தடயமாக இருந்து வருகிறது.

பதம் (1987), சந்தனப்பொய்கை (2009) ஆகிய கவிதை தொகுதிகளும், கொந்தளிப்பு (2010), தோட்டுப்பாய் மூத்தம்மா (2011), எஞ்சியிருந்த பிரார்த்தனைகளோடு (2012) ஆகியன தொடராக வெளியான குறுங்காவியங்களுடன் பாலமுனை பாறூக் குறும்பாக்கள், வலைக்குள் மலர்ந்த வனப்பு, பாலமுனை பாறூக்கின் மூன்று நவீன காவியங்கள், மீளப் பறக்கும் நங்கணங்கள் என ஒன்பது நூல்களின் உரிமையாளராக திகழ்கின்றார்.

இவரது கொந்தளிப்பு குறுங்காவியம் அரச தேசிய சாஹித்ய சான்றிதழையும், தோட்டுப்பாய் மூத்தம்மா குறுங்காவியம் அரச தேசிய சாஹித்ய பரிசையும், கொடகே மகாகவி உருத்திரமூர்த்தி விருதையும், யாழ்ப்பாணம் இலங்கை இலக்கியப் பேரவை சான்றிதழையும் பெற்றுக்கொண்டது.

கலாபூஷணம், கிழக்கு மாகாண வித்தகர் விருது, சுவதம் உட்பட அரச இலக்கிய உயர் விருதுகளையும் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் சிரேஷ்ட கவிஞருக்கான விருதையும், பாவேந்தல், இலக்கியத் திலகம் உட்பட பல பட்டங்களையும் இவர் தனது எழுத்துப் பணிக்காகப் பெற்றிருக்கின்றார்.

புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் நினைவாக நடைபெற்ற சர்வதேச கவிதைப் போட்டியில் முதலாம் பரிசு இவருக்குக் கிடைத்தது. ஞானம், தென்றல், ஒளி அரசி, தமிழ் நெஞ்சம் போன்ற சஞ்சிகைகள் அட்டைப்பட அதிதியாக இவரைக் கௌரவித்துள்ளன.

சுடர் ஒளி குழுமம் இவரது 'வாசிப்பு விழிப்புணர்வு' கவிதையைப் பதாகையாக அச்சிட்டு இலங்கையிலுள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகளின் வகுப்பறைகளுக்கு இலவசமாக வழங்கியது. தொடர்ந்தும் எழுத்துத் துறையில் சிறந்து விளங்கும் இவர், மேடை, வானொலி, தொலைக்காட்சி கவியரங்குகளின் தலைமை தாங்கி நடாத்தி வருவதோடு சமூக நலப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார். அகில இலங்கை சமாதான நீதிபதியாகவும், பிரதேச மத்தியஸ்த சபை உறுப்பினராகவும் இவர் பணி தொடர்கின்றது.

அலி உதுமாலெப்பை நூறுல் லரீபா என்பவரைத் திருமணம் செய்த இவருக்கு பர்ஷானா, பர்ஷாத், பர்ஹான், பர்ஹானா, பர்ஹாத் என்போர் பிள்ளைகளாவர்.

பாலமுனை பாறூக் என்றும் இலக்கியப் பணிபுரிய இறைவன் தேகாரோக்கியத்தை வழங்கப் பிரார்த்திப்போம்.

■

பள்ளிக் காவின்

இரண்டு மூன்று “ஸப்போடு” நிறைவேறும் அஸர்த் தொழுகை இன்று ஜமாஅத்தாரால் நிறைந்து வழிந்தது. ஐவேளைத் தொழுகைக்கு ஒழுங்காகப் பள்ளிக்கு வரும் அகமது மாஸ்டருக்கு இது ஆச்சிரியம்.

அஸர்த் தொழுகை முடிந்த கையோடு பள்ளியில் காவின் எழுதும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததை அவர் அறிந்திருக்க வில்லை

கோட் சூட்டோடு மாப்பிள்ளை வந்திருந்தார்.

“தொப்பி போடாமலா பள்ளிக்கு வாற” ஓடிவந்த ஒருவர் சிவப்பு நிறத் தொப்பியொன்றை மாப்பிள்ளையின் தலையில் மாட்டி விட்டார்.

அத்தர் மணம்,சென்ற் வாசனை இவை தவிர ஒரு வித்தியாசமான நெடியும் வந்தது. சில இளசுகள் “குஷித் தண்ணியும்” போட்டிருப்பதாக ஒருவர் புறு புறுத்துக் கொண்டார்.

“ஆடம்பரமில்லாம இப்புடி சிம்பிளான அமைப்பில கல்யாணம் முடிக்கிறத்தான் இஸ்லாம் விரும்புது. மஹர்

கொடுத்து ““ஆண் மகன்” பெண்ண எடுத்துக் கொள்ளணும் குத்பா ஓதிய மௌலவி “ஆண் மகனை” அழுத்திக் கொண்டார்.

“மஹர் எவ்வளவு கொடுக்கிற?” லெப்பை கேட்டார் “ஒரு லெச்சம் பெறுமதியான தங்கத் தாலி” மாப்பிள்ளை பதில் சொன்னார்.

அது காவினில் பதிந்து கொள்ளப்பட்டது.

சபையோர் சாஹிதாக நீங்கள் தந்த மஹருக்கு றைஹானா பீவியை ஹலால் மனைவியாக ஆக்கித் தந்தோம் ஏற்றுக் கொண்டீர்களா? “கபில்து... கபில்து... கபில்து...” மாப்பிள்ளையின் கைவிரலில் வெள்ளி மோதிர மொன்றை அணிந்து வைத்த பெண்ணின் சகோதரரை அகமது மாஸ்டர் கண்டு கொண்டார்.

அகமது மாஸ்டருக்கு தெரிந்தவர் அவர் வாப்பா காலமாகிய பின்னர் சவுதிக்குப் போய் ஐந்து வருடங்களாக நின்று உழைத்து நல்ல வீடொன்றை கட்டி முடித்திருக்கின்றார். ஒரு மாதத்திற்கு முன்புதான் சவூதியில் இருந்து வந்தார் தங்கைக்கு மாப்பிள்ளை கேட்டிருப்பதாகவும் மாப்பிள்ளை வீட்டார், “நாங்க சீதனம் ஒண்டும் கேக்கல்ல எங்களுக்கு வேணா நீங்க ஒங்குட தங்கச்சிக்கு கட்டிரிக்கிற புது வீட்டயும் காசி இருபது லச்சமும் கொடுங்க கலியாணத்த சிம்பிளா நடத்துவம்” என்று சொன்னதாகவும் அகமது மாஸ்டரிடம் சொல்லியிருக்கிறார்.

பள்ளியில் சிம்பிளா நிறைவேறிய காவினுக்கு துஆப் பிரார்த்தனை இடம் பெற்றது அகமது மாஸ்டர் துஆவுக்கு கையேந்த நிற்கவில்லை அவசரமாக வெளியேறினார்.

பாலமுனைத் தாய்

உன்னைநான் என்றென்றும் மறவேனம்மா-என்
உணர்வோடு கலந்திட்ட உயிர் நீயம்மா
மண்ணேதான் ஆனாலும் மடி நீயம்மா
உன்னைநான் ஒருபோதும் மறவேனம்மா!

பால்பொங்கி வளம்பெற்ற தாய் நீயம்மா
பாலமுனைப் பெயர்பெற்ற பதி நீயம்மா

வயல் வளமும் கடல் வளமும் நீ பெற்றவள்
வனப்போடு இயற்கை வளம்
தான் பெற்றவள்
அன்பான மக்களினை நீ பெற்றவள்
வந்தாரை வரவேற்று மலர்வுற்றவள்

பால்பொங்கி வளம்பெற்ற தாய் நீயம்மா
பாலமுனைப் பெயர்பெற்ற பதி நீயம்மா!

உன்னைநான் ஒருபோதும் மறவேனம்மா
மண்ணே நீ ஆனாலும் என் மடி நீயம்மா

கல்புகளில் குர்ஆனைச் சுமந்திட்டவர்
கற்றதனால் இனபேதம் களைந்திட்டவர்
கலாசாரம் பண்பாட்டில் மிளிர் கின்றவர்
உன்மக்கள் தாயே நீ உயர்ந்திட்டவள்

உன்னைநான் ஒருபோதும் மறவேனம்மா-என்
உணர்வோடு கலந்திட்ட உயிர் நீயம்மா!

பால்பொங்கி வளம்பெற்ற தாய் நீயம்மா
பாலமுனைப் பெயர்பெற்ற பதி நீயம்மா!

■

ஒரு குறும்பா
இரண்டு மொழி பெயர்ப்புகள்

பாராளு மன்றத்தைப் பாரு
பதவிக்காய் அடிபிடிகள், போரு!
பாரினிலே நம்நிலையை
படியுயர்த்த வேவந்த
“பேராளர்” தான்இவரா கூறு?

பெறுமதியும் பெருமைகளும் எங்கே?
பெறுமதியே குறைகிறதே இங்கே!
வறுமைக்குள் நம்மாதா
வாடியிங்கு நலிகின்றாள்
“பெருமக்கள்” புரிவதென்ன அங்கே!

எலும்பாகிப் போகிறது நோட்டு
இதுக்காகத் தானாஎம் வோட்டு?
பழுதென்ன, நாமேதான்
பழுதாக்கி விட்டோமா
பிழையாகப் புள்ளடியைப் போட்டு

(இக்குறும்பா இரண்டு மொழிபெயர்ப்பாளர்களினால் ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளமையை அடுத்த பக்கத்தில் காணலாம்)

LEMERIC

Look at the Srilanka parliament
Fighting each other like battle front
Honourable are worried for their post and positions
Are they all our representatives we selected?
To uplift our slandered of living attended

Where are the value and pride drops and gone out of sight
Our mother land in poverty everywhere is a spotlight
What are these honourable members doing in parliament?
They are very arrogant and confront

Our rupee and currency notes became valueless
Like bone without flesh and dullness
This is what we have voted for them definitely
We made spoilt our votes by selecting the wrong person

Transliterated by : Alhaj Mha Samad

"Look at the House that legislates
Full of bickering and brandishing for posts
These are the Heroes we chose to promote
Citizens of Mother Lanka on our Planet Earth;

Currency has no transparency
So, values see high discrepancy
Poverty stalks every residenc(e)y
Parliament has become a redundancy;

Spoilt are the votes
Cast for them with much hope
Lost are the days
Until they part our ways."

Transliterated by : Mr. YLS Hameed

குறும்பாவில் நீட்சி - விரிவு கருதிய வடிவ மாற்றங்கள்

குறுகியதும் குறும்பு தருவதுமான பா குறும்பா. *Edward lier* ஐ தந்தையாகக் கொண்ட, அயர்லாந்து நாட்டுக்குரியதாகக் கொள்ளப்படுகின்ற *Limerick* என்ற பாவடிவமே மஹாகவி து.உருத்திரமூர்த்தி அவர்களால் தமிழுக்கு குறும்பா வாக அறிமுகம் செய்யப்பட்டது.

Limerick ஆரம்பத்தில், கிண்டல்,கேலி, நக்கல் பாலியல் சேஷ்டைகள் என்பவற்றை நண்பர்களுக்கு இடையே பரிமாறிக்கொள்ளும் பாவடிவமாக அமைந்திருந்தது. இப்போது குறும்பாவாக அதன்பணி, சமூகச் சீர்கேடுகளைக் குத்திக்காட்டுவதாக வளர்ந்து நிற்பதை முறையாக ஆய்வு செய்வோர் அவதானிக்கலாம்.

மஹாகவி தமிழுக்கு கொண்டு வந்த குறும்பா வடிவத்தைப் பின்பற்றிச் சிலர் குறும்பாக்களை எழுதினர். ஆயினும், அவர்களில் ஒரு சிலரைத் தவிர, அனைவரும் அவர் தந்த வரைபுச்சட்டகத்தை முழுமையாகப் பின்பற்ற வில்லை.ஒருவாறு ஓசை வருமாறு முயன்றனரெனலாம்.

குறும்பு இன்றி குறுகிய பாக்களாக மாத்திரமாகவே அமைந்து விடும் பாக்களும் குறும்பா என்ற வகையறாவுக்குள் வந்து விடுவது, நமது துரதிஷ்டம்.

எவ்வாறாயினும், குறும்பா முயற்சியில் ஈடுபடுவோர் மிகச் சிலரே. செழுமையான குறும்பாக்களைத் தருபவர்களும் மிகக் குறைவே. குறும்பா நூல்களும் அதிகம் வரவில்லை. (இலங்கையில் 10க்கும் உட்பட்ட நூல்களே இற்றைவரை வெளிவந்துள்ளன)

காய் காய் தேமா
காய் காய் தேமா
காய் காய்
காய் காய்
காய் காய் தேமா

என்பதே மஹாகவி காட்டிய குறும் பா வரைபுச் சட்டகம். எடுத்துக் காட்டாக அவ்வரைபுச் சட்டகத்தில் 13 சீர்களில் அமைந்த ஒரு குறும்பா இது.

முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்
முன்னாலே வந்துநின்றான் காலன்
சத்தமின்றி, வந்தவனின்
கைத்தலத்தில் பத்துமுத்தைப்
பொத்திவைத்தான் போனான்முச் சூலன்!
(மஹாகவி)

இக்குறும்பாவில், அடிகளின் முதற்சீர்களில் எதுகை மோனை பேணப் பட்டிருப்பதையும் முதலாம் இரண்டாம் ஐந்தாம் வரிகளில் இயைபுத் தொடை சீலன், காலன் சூலனென அமைந்து வந்திருப்பதையும் காணலாம்.

இதேவரைபுச்சட்டகத்தில் இன்னுமொரு குறும்பா.

பிள்ளைகளில் அவர்க்கதிகம் பற்று
பெருமளவில் சேர்த்தாராம் சொத்து
பிள்ளைகளோ சண்டையிட்டுப்
பிரித்தனராம் தனித்தனியாய்
உள்ளதெலாம் வேறாக்கி விற்று!
(பாலமுனை பாறூக்)

லிமரிக் என்ற ஆங்கில வடிவத்தில் குறும்பாவின் 3 ஆம் 4 ஆம் வரிகளிலும் இயைபுத் தொடை பேணப்படும். அப்படி அமைந்த குறும் பா இது.

காதலனைக் கன்னியெதிர் பார்த்து
கால்கடுக்க நின்றிருந்தாள் காத்து
காதலனோ லேற்று
காலமதோ வேஸ்ற்று
சென்றுவிட்டாள் நின்றவன்கை கோத்து!
(பாலமுனை பாறூக்)

இவ்வாறு அமையும் போது 3 ஆம், 4 ஆம் வரிகள் காய் காய் காய் காய் என்றில்லாமல் காய் மா காய் மா என்றமையும்

குறும்பா அதிகம் எழுதப்படாமல் இருப்பதற்கு அதன் வரைபுச் சட்டக இறுக்கம் காரணமாக இருக்கலாமென்ற எண்ணத்தில் குறும் பாவின் நீட்சி - விரிவு கருதிய முயற்சிகளும் நடைபெறுகின்றன.

காய் காய் தேமா என்றில்லாமல் புளிமாவிலும் எழுதுவது. இயைபுத் தொடைக்காக பரிச்சயமான பிறமொழிச் சொற்களையும் அங்கீகரிப்பது. தொடர் குறும்பாக்கள் எழுதுவது. என்று அவை தொடர்கின்றன. கவிஞர் அல் அசூமத் அவர்கள் யாப்பியலுரை என்ற தனது 524 பக்க நூலில் குறும்பா பற்றி ஒரு அதிகாரத்தையும் சேர்த்துள்ளார்.

குறும்பாவின் நீட்சி விரிவு பற்றிய குறிப்புக்களும் அவ்வதிகாரத்தில் இடம்பெற்றுள்ளன. எனது "பாலமுனை பாறூக் குறும்பாக்கள்" (2013) நூலிலும் மகாகவி காட்டித் தந்த வரைபுச் சட்டகத்துக்கு உட்பட்ட குறும்பாக்களோடு, குறும் பாவின் நீட்சி விரிவு கருதி சட்டகத்தில் மாற்றம் செய்த குறும்பாக்களும் இடம் பெற்றுள்ளன. அவ்வாறான முயற்சிகள் தொடர்கின்றன.

காய் காய் புளிமா வில் ஒரு குறும்பா இது:-

பள்ளியிலே அவளழகு மயிலாம்
பழகுவதில் தனிப்பாணி ஒயிலாம்
கல்வியிலே முன்னேறிக்
கடந்துவிட்டாள் ஏஎல்லும்
பின்னாலே திரிந்தவர்கள் பெயிலாம்!
(பாலமுனை பாறூக்)

இயைபுத் தொடைக்காக பரிச்சயமான பிறமொழிச் சொற்கள் சேர்ந்து வந்த குறும்பா இது:-

ஐம்பதிலே பெண்ணெடுத்தார் சிங்கர் (singer)
அவளவரின் அரைவயது யங்கர் (younger)
இந்தமணம் பொருந்தாமல்
ஈடுதர இயலாமல்
நொந்துவிட்டார் இன்றவரோ ரிங்கர்!(drinker)
(பாலமுனை பாறூக்)

இடைச் சொற்கள் சேர்த்து நீட்சி பெற்றிருக்கின்ற குறும்பா இது

நோய்வந்து நடிகையவள் இறக்க- வளர்த்த
நாய்நின்று அழுதழுது குரைக்க- மணந்த
நாயகனோ வந்தான்
நாலுகாலில் பறக்க

வாயெல்லாம் சாராயம் நுரைக்க!
(பாலமுனை பாறூக்)

இப் பா,

காய் காய் மா
காய் காய் மா
காய் மா
காய் மா
காய் காய் மா

என்று குறும்பாவுக்குரிய வடிவத்தில் அமைந்திருப்பதோடு வளர்த்த, மணந்த என்று இரண்டு இடைச் சொற்களைப் பெற்று, (15 சீர்களாக) நீட்சி பெற்றிருப்பதை அவதானிக்கலாம்.

இப்போது குறும்பாவில் பரிசோதனை முயற்சிகளும் நடைபெறுகின்றன.

காய் காய் மா
காய் காய் மா
காய் மா
காய் மா
காய் மா
காய் மா
காய் மா
காய் மா
காய் காய் மா

என்று அமைந்த வரைபுச்சட்டகத்தில் 21 சீர்களில் அமைந்த குறும்பா கீழே அமையப் பெற்றுள்ளது

அடிகளில் முதற் சீர்களில் எதுகை மோனை பேணப்படுவதையும் 1ஆம் 2ஆம் 9 ஆம் அடிகளில் ஒருவிதமான இயைபுத் தொடையும் ஏனையைஅடிகளில் வேறுவித இயைபுத் தொடையும் அமைந்து வந்திருப்பதையும் அவதானிக்கலாம்

இனவாத விதைகளினைத் தூவி
இழிசெயலே புரிகின்றான் மேவி

உணவுண்ணா திருப்பு
உரைகளிலே நெருப்பு
தினமிவனின் போக்கு

தேடிடவாம் வாக்கு
பிணவாடை வீசும்
பிரிவினையே பேசும்

மனமொடுங்கி, தீங்கிழைக்கும் பாவி!
(பாலமுனை பாறூக்)

ஆங்கிலக் கவிதை வடிவமான *Limerick* மகாகவி து.ருத்திரமூர்த்தி அவர்களால் தமிழில் குறும்பாவாக மலர்ந்திருக்கின்றது. காலத்திற்கேற்றவாறும், பொருத்தமான மாற்றங்களோடும் அதனை வளர்த்தெடுப்பது கவிதைப் பிரியர்களுக்கு மகிழ்ச்சி தருவதாக அமையும்.

(ஞானம் இதழ்)

■

பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களுடன்...

“தமிழ்நெஞ்சம்” இதழில் இடம்பெற்ற நேர்காணல்

1) இலங்கையின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர், சிறந்த எழுத்தாளர், சிந்தனையாளர் என பல சிறப்புகளும் பன்முகத் திறமையும் கொண்ட இலக்கியவாதி நீங்கள். உங்களைப் பற்றிய சிறு அறிமுகத்துடன் ஆரம்பியுங்கள்!

இலங்கை அம்பாறை மாவட்டத்தில் -பாலமுனையில் மீராலெவ்வை மரைக்கார் முஹம்மது லெவ்வை, ஆதம்லெவ்வை முஹல்லம் அலிமாநாச்சி தம்பதியினரின் புதல்வன்.

பாலமுனை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, மட் / மெதடிஸ்த மத்திய கல்லூரி, கல்முனை ஸாஹிறா கல்லூரி என்பவற்றின் பழைய மாணவன்.

இலங்கை வங்கியில் 1977 ஆம் ஆண்டில் கனிஷ்ட இலிகிதர் / உதவிக் காசாளராகச் சேர்ந்து 2013 ஆம் ஆண்டில் முகாமையாளர் தரத்தில் பணி ஓய்வு பெற்றவன்.

கலை இலக்கிய முயற்சிகளில் நகைச்சுவை, மேடை அறிவிப்பு என ஆரம்பித்து, கலை இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக இயங்கி வருபவன்.

தந்தையின் வழியில், சமூக நலன் சார்ந்த நடவடிக்கைகளில் பள்ளி வாசல் தலைவராக, கிராமோதய சபைத் தலைவராக, மத்தியஸ்த சபை உறுப்பினராக, அகில இலங்கை சமாதான நீதிபதியாக என்று பல தளங்களில் இயங்குபவன் என்று குறித்துக் கொண்டு தொடரலாம்.

2) ஆரம்பத்தில் வங்கியில் பணியாற்றிய அனுபவத்தைப் பகிருங்களேன்!

இலங்கை வங்கியில் நான் சேர்ந்த 1977 காலப்பகுதியில் கணினி வசதிகள் இருக்வில்லை. பேரேடுகள் இருந்தன. அதனை தூக்கி எடுத்துவைத்துப் பதிவதே சிரமமாக இருக்கும். பதிவேடுகளைப் பதிவது, பரீட்சை மீதிகள் தயாரிப்பது, சமப்படுத்துவது, அறிக்கைகள் தயாரிப்பது என்பன அப்பொழுது கஷ்டமான பணியாகவே இருந்தது.

இப்போது கணினி அப்பணிகளை மிக இலகுவாக்கி இருக்கின்றது.

வங்கியில் சேர்ந்த புதிதில், விவசாயக் கடன்களை அறவிடும் வெளிக்கள உத்தியோகத்தராகவும் நான் நியமிக்கப்பட்டிருந்தேன். வீடு,வீடாகச் சென்று கடன்களை அறவிட வேண்டிய கடமைப் பொறுப்பும் எனக்கிருந்தது. சூறாவளி கோரத் தாண்டவமாடி ஓய்ந்திருந்த சில மாதங்களின் பின், கடனை அறவீடு செய்வதற்காக நான் சென்ற பொழுது கண்ட காட்சி கதி கலங்க வைத்தது. கடனைக் கட்ட முடியாமல் இருப்பதற்கான காரணங்களைக் கேட்டபோது நெஞ்சம் நெகிழ்ந்தது. அப்போது அது ஒரு கவிதையாக நெஞ்சுக்குள் ஊற்றெடுத்தது. இன்னும் என் நினைவில் நிற்கும் அக்கவிதை இது…

“இன்னும் கடனை ஏன்தீர்க்க வில்லை” யென
உன்னி டத்தில் கேட்டேன் நான் ஓ..!ஏன் அழுதாயோ?
எல்லோ ரிடத்தும் இயம்புதலைப் போலேதான்
சொல்லி வைத்தேன் உன்னிடத்தும்
சோகமேன் கொண்டாய் நீ?

சூறாவளி வந்து சுழன்றடித்து உங்களது
கூரையினைப் பிய்த்து குடிசைகளைச் சீரழித்துப்
பேராபத்தைத் தந்த பெருங் கஷ்டம்
சொன்னாய் நீ!
தீராப் பிரச்சினைகள் சொல்லி யழுதுநின்றாய்!

“அப்பா இறந்து விட்டார் அண்மையிலே” என்றுரைத்தாய்
அப்படியே பயிர்களதும் அதைத் தொடர்ந்த வெள்ளத்தால்
செத்து மடிந்து சீரழிந்து போனகதை
செப்பி யழுதேநீ சிந்தை கலங்கி நின்றாய்!

உன்னை நான் நோவிக்க ஒருபோதும் எண்ணவில்லை
என்றன் கடமையிது இதனால் உனைக் கேட்டேன்.
என்னைநீ தவறாக ஏதும் நினைத் திருந்தால்
பெண்ணே மறந்துவிடு பிழை செய்ய வில்லை நான்!

3) இலக்கியத்துடன் உங்கள் வாழ்வை இணைத்துக் கொண்டது எப்போது? எப்படி?

பாடசாலைக் காலத்தில் இருந்தே பேச்சு,விவாதம்,நாடகம் போன்ற துறைகளில் ஆசிரியர்களின் ஒத்துழைப்போடு ஈடுபாடு காட்டி வந்தேன். மட் / மெதடிஸ்த கல்லூரியில் படிக்கும் போது எனது "ஹோல்டம்" இல்லத்திற்காக விவாத, பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றி பரிசுகள் சான்றிதழ்களைப் பெற்றிருக்கின்றேன்.

அதன் தொடர்ச்சியாகவே எழுத்துலக முயற்சிகள் அமைந்து வந்திருக்கின்றன. எழுபதுகளில், "சிந்தாமணி" யில் நகைச்சுவை எழுதிப் பரிசு பெற்று, அதன்பின் "தினபதி" யில் கிடைத்த கவிதா மண்டலம் பகுதியைப் பயன்படுத்தி அறிமுகம் பெற்றதனூடாக எனது படைப்பாக்க முயற்சிகள் தொடர்கின்றன.

4) எழுத்துலகில் பேசப்படும் ஒருவராகத் திகழ்கிறீர்கள். ஆரம்பத்தில் உங்கள் எழுத்துக்களுக்கு கிடைத்த வரவேற்பு எப்படி இருந்தது?

இப்போது போல அப்போது பிரசுர வசதிகள் நிறைந்திருக்க வில்லை. இலங்கையில் வெளிவந்த சில தினசரிப் பத்திரிகைகள், அவற்றின் வார வெளியீடுகள், சில சஞ்சிகைகள் இலங்கை வானொலி என்பவற்றையே நமது படைப்புகளை வெளியிடுவதற்கு நம்பியிருக்க வேண்டிய நிலை இருந்தது.

என்ற போதிலும், எனது படைப்புகள் இலங்கையில் வெளியான பெரும்பாலான பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இடம் பெற்றிருக்கின்றன. பத்திரிகை சஞ்சிகைகளில் ஆசிரியர்களாக இருந்தவர்கள், பிரபலம்பெற்ற எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும் இருந்தார்கள். தரமான படைப்புகளும் வெளிவந்தன.

எனது படைப்புகளுக்கும் சிறந்த வரவேற்புக்கள் கிடைத்தன. பத்திரிகை

ஜாம்பவான் எனப் புகழ் பெற்றிருந்த தினபதி, சிந்தாமணி ஆசிரியர் எஸ். டீ. சிவநாயகம் ஐயா அவர்கள், சிந்தாமணி வாரப்பத்திரிகையில் எனது “சிவப்புக் கோடு” என்ற கவிதையைப் பிரசுரித்துப் பாராட்டி இருந்தார். அவருடைய காத்திரமான குறிப்பும் பாராட்டும் என்னை எழுத்துத் துறையில் ஊக்குவித்தது. அந்தக் கவிதை, அன்றைய இக்கட்டான பயங்கரவாத சூழல் குறித்து நானெழுதிய கவிதை. கவிதை இதுதான்..

விடிந்து விட்டது
வெளிக்கிட வேண்டுமே!

இல்லத் தரசியே இங்குவா, இப்படி
பிள்ளையைக் கொண்டு வா
முத்தம் கொடுத்திட..!

கன்னம் இங்கே காத்திருக் கின்றது
இன்னுமோர் முத்தம்
எனக்கிடு இச்சென..!

வேலைக்கென்று நான் வெளிக்கிடப் போகிறேன்
போருக் கென்று புறப்படல் போலது!

அடையாள அட்டை
அதனையும் கொண்டுவா
தடைகள் பற்பல
தாண்டிட வேண்டுமே!

கொண்டுவா இப்படி
கோப்பியைக் குடிக்கிறேன்
சென்று முடிக்குமோ
செல்கிற வாகனம்..?

செல்லும் வழியில்
அதிரடி, எதிரடி
எதிரெதிர் கொள்ளுமோ?
அதிலெதில் பட்டுநான்
இறையடி செல்வதோ?

சாதனை புரிந்த வீரனாய் நானும்
காரியாலயம் போய் அடைவேனோ?
காரியாலயப் படிகளைத் தாண்ட
நேரம் ஒன்பதைத் தாண்டி அங்கும்
“சிவப்புக் கோடு” சிக்னல் செய்யுமோ?

5) காவியங்கள் படைப்பவர்களை மிக அரிதாகவே இப்போது காணக்கூடியதாக உள்ளது. அப்படி இருக்கையில், உங்களுக்கு காவியங்கள் எழுத தூண்டு கோலாய் அமைந்தது எது?

காவியம் எழுதுவது என்பது கடினமான முயற்சி யென்று சொல்வர். கற்பனை வளம், மொழியறிவு, தொடர்ந்து தொய்வுபெறாமல் கதையை நகர்த்திச்செல்லும் ஆற்றல் என்பன வாய்க்கப் பெற வேண்டும். இலங்கையில் வரன் முறையான காவியங்களை காப்பியக்கோ ஜின்னா படைத்து வருகின்றார். எனது காவியங்கள் மக்களின் வாழ்வியலை - அவர்களின் பிரச்சினைகளை எடுத்துச் சொல்கின்ற நவீன காவியங்கள். நவீன கவிதை,காவிய முன்னோடியாகப் பார்க்கப்படுபவர் பாரதியாரே. அவருடைய குயிற்பாட்டு, பாஞ்சாலி சபதம் என்பன நவீன காவியத்திற்கு முன்னுதாரணமான படைப்புகள் . இலங்கையில், மஹாகவி, முருகையன், நீலாவணன், அப்துல்காதர் லெவ்வை, எம்.ஏ. நுஃமான் உட்பட இன்னும் சிலர் நவீன காவியங்களைப் படைத்தனர். பெரிய காண்டங்களாக அமைந்து விடாமல் சிறிய இயல்களாக அமைந்து மக்களுடைய வாழ்வியலை எளிமையாய், இயல்பாய் சொல்லக் கூடியவாறு அமைந்த நவீன காவிய வடிவம் எனக்குப் பிடித்திருந்தது.

மஹாகவி இலங்கையில் நவீன காவிய முன்னோடியாக இருந்தார். அவருடைய நவீன காவியங்களோடு, இலங்கையில் இருந்து வெளிவந்த நுஃமான், அப்துல்காதர் லெவ்வை, முருகையன், போன்றோரினதும் ஏனையோரினதும் பல நவீன காவிய நூல்களையும் நான் படித்திருக்கின்றேன். இவற்றைப் படித்ததனால் ஏற்பட்ட உந்துதலும் நவீன காவிய முயற்சியில் நான் ஈடுபடக் காரணமாக அமைந்திருக்கலாம். இப்போது இலங்கையில், நவீன காவிய வடிவத்தில் தொடர்ந்து இயங்குபவனாக நானே இருப்பதாக விமர்சகர்களால் நான் அடையாளப்படுத்தப்படுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. எனது நான்காவது நவீன காவியமும் (மீளப் பறக்கும் நங்கணங்கள்) அண்மையில் வெளிவந்திருக்கின்றது.

6) இதுவரை நீங்கள் எழுதிய நூல்கள் பற்றியும், அவைகளுக்கு கிடைத்த வரவேற்பு, விருதுகள் பற்றியும் குறிப்பிடலாமே!

எனது முதலாவது கவிதைத் தொகுதி “பதம்” என்ற பெயரில் 1987 இல் வெளிவந்தது எனது தனிப்பட்ட கவிதைகளின் தொகுப்பு அது. மருதூர்க் கொத்தனின் கனதியான அணிந்துரை அதற்கு அழகு சேர்த்தது.

அண்மையில், “ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் பாலமுனை பாறூக்கின் சில தடங்கள்” எனும் தலைப்பில் பேராசிரியர் செ.யோகராசா அவர்கள் அந்நூலை முழுமையாக ஆய்வு செய்திருந்தார்.

சந்தனப் பொய்கை 2009 இல் வெளிவந்த எனது 2வது கவிதை நூல். மத ஆன்மீகம் சார்ந்த கவிதைகள் அதில் இடம்பெற்றன. காப்பியக்கோ டாக்டர் ஜின்னா ஷெரிபுத்தீன், பேராசிரியர் கலாநிதி தீன்முஹம்மது ஆகியோர் அந்நூலுக்கு அணிந்துரைகளைத் தந்திருந்தனர்.

கொந்தளிப்பு 2010ல் வெளியான எனது முதலாவது நவீன காவிய நூல் . சுனாமிப் பேரவலம், அதன் பின்னரான எமது தென்கிழக்கு முஸ்லிம் பிரதேசத்தாரின் வாழ்வியல், அரசியல், இருப்பு என்பன பற்றிப் பேசிய நவீன காவியம். வயல் பிரதேசத்தின் குழுக் குறியீட்டுச் சொற்களையும் இந்நூல் பிரதிபலித்தது. கவிஞர் மு சடாட்சரன், பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் ஆகியோரின் அணிந்துரையோடு இந்நூல் வெளிவந்தது. இந்நூல் இலங்கை சாஹித்ய மண்டலத்தின் இறுதிச் சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் சான்றிதழைப் பெற்றுக்கொண்டது.

2011 இல் எனது 2வது நவீன காவியம் தோட்டுப்பாய் மூத்தம்மா வெளிவந்தது. செய்னம்பு என்ற பெண்ணை முதல்நிலைப் பாத்திரமாகக் கொண்ட கதையம்சத்தோடு வெளிவந்த அக்காவியம் முஸ்லிம் மக்களின் பேச்சுமொழி,பழமை,பழக்க வழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், என்பவற்றைப் பதிவுசெய்யும் படைப்பாகவும் இருந்தது. பேரா. .செ.யோகராசா, ஏபிஎம் இத்ரீஸ் என்பாரின் அணிந்துரையோடு வெளிவந்த இந்நூலுக்கு இலங்கை அரச சாஹித்ய மண்டல விருது, கொடகே நிறுவன சாஹித்ய மண்டல விருது, இலங்கை இலக்கியப் பேரவை சான்று என்பன கிடைத்தன.

2012 இல் எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு என்ற எனது 3 வது காவிய நூல் வெளிவந்தது.இந்திய அமைதி காக்கும்படை இலங்கையில் இருந்த

காலகட்ட யுத்த சூழல், கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையே ஏற்பட்ட இனவிரிசல் என்பனவற்றை அந்நூல் பேசியது. பேரா. எம்.ஏ. நுஃமான் அவர்களின் எனது கவிதைகள்,காவியங்கள் பற்றிய விரிவான பார்வை “பாலமுனை பாறூக்:கவிதைகளும் காவியங்களும்” எனும் தலைப்பில் அந்நூலில் இடம் பெற்றது.

2013 இல் “பாலமுனை பாறூக் குறும்பாக்கள் ” எனும் தலைப்பில் எனது 100 குறும்பாக்களின் தொகுதி வெளியாகிற்று.ஆங்கிலக் கவிதை வடிவமான Limerick ஐ தமிழுக்கு இலங்கைக் கவிஞர் மஹாகவி அவர்கள் கொண்டுவந்து குறும்பா என்று பெயரிட்டார். குறுமையும் குறும்பும் சேர்ந்த அந்த வடிவம் என்னைக் கவர்ந்தது.

இலங்கையில் குறும்பா வடிவத்தைக் கையாளுபவர்கள் மிகச் சிலரே தற்போது, அவ்வடிவத்தை இலக்கியச் செழுமையோடு, பல்வேறு பரசோதனை முயற்சிளையும் செய்து விரிவுபடுத்தி அடையாளப்படுத்தி வருகின்றேன். எனது குறும்பாக்களுக்கு நல்ல வரவேற்பிருப்பதை விமர்சகர்கள்,ஆய்வாளர்களின் குறிப்புகளினால் உணர முடிகின்றது.

எனது அந்த நூலுக்கு பேரா.சி. மௌனகுரு, புதுக்கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர், முனைவர் மு.இ. அகமது மரைக்காயர், கவிஞர் ஏ .எம்.எம். அலி ஆகியோர் அணிந்துரை வழங்கி இருந்தனர்.

எனது “வலைக்குள் மலர்ந்த வனப்பு” (2017) முக நூலில் வெளிவந்த கவிதைகளின் தொகுப்பு. தமிழ்நெஞ்சம் ஆசிரியர் அமின் அவர்களின் முயற்சியினால் வெளிவந்த நூல் அது. எனது முகநூல் லிங்கை மாத்திரம் பெற்றுக் கொண்டு அதனை அவர் நூலாக்கம் செய்து உதவியிருந்தார்.

கவிஞர் ஜவாத் மரைக்காரின் அணிந்துரை, இசைவாசி க.சிவராஜின் சிறப்புரை, தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் மகிழ்ந்துரை என்பன நூலை அலங்கரித்தன.

”பாலமுனை பாறூக்கின் மூன்று நவீன காவியங்கள்” எனது முந்தைய மூன்று நவீன காவியங்களின் தொகுப்பு இது.2020ல் ஜீவநதி வெளியீடாக வெளிவந்திருக்கின்றது.

எனது மூன்று காவியங்களையும் ஆய்வு செய்து சென்னை புதுக்கல்லூரியில் திரு. சேகர் என்பவர் எம்.பில் பட்டம் பெற்றுள்ளார். இதனால்

இக்காவியங்களை ஒருசேரப் பார்க்க வேண்டிய அவசியம் உணரப்பட்டது.

மீளப்பறக்கும் நங்கணங்கள் 2020 இல் வெளிவந்த எனது நான்காவது நவீன காவியம். தள்ளாத வயதில் பெற்றோர் பிரித்து வைக்கப்படுவதால் ஏற்படும் உடல் உளநோய்கள் குறித்தும், உளவியல் ரீதியான பாதிப்புகள் குறித்தும் பேசுகின்ற நூல். பேராசிரியர் செ.யோகராசா, கலாநிதி த.கலாமணி ஆகியோரின் அணிந்துரையோடு வெளிவந்திருக்கின்றது.

7) இலக்கியத்துறையில் முழு ஈடுபாட்டோடு இயங்கி வரும் நீங்கள், இலங்கை வானொலி நிகழ்ச்சிகள், கவியரங்கங்கள் போன்றவைகளிலும் கலந்து சிறப்பிப்பதை காணக் கிடைக்கிறது. இது எப்படி சாத்தியமாகிறது?

வானொலிக் கவியரங்குகள், நிகழ்ச்சிகள் என்பவற்றில் முடியுமானவரைப் பங்கேற்கிறேன். வானொலி, சமுக வலைத்தள தொலைக்காட்சிகளில் இடம்பெற்று வருகின்ற கவியரங்க நிகழ்ச்சிகளுக்கு தலைமை தாங்கி நடத்தி வருகின்றேன். இலக்கியத்தில் இருக்கின்ற ஈடுபாடு, அவ்வாறான நிகழ்ச்சிகளை தொடர்ந்து செய்யவேண்டுமென ஆர்வம் காட்டிவரும் நிறுவனங்களின் வரவேற்பு, நண்பர்களின் ஆதரவு என்பன எனது இவ்வாறான பங்களிப்பினைச் சாத்தியமாக்குகின்றன என்று நினைக்கின்றேன்.

8) இதுவரை நூற்றுக்கணக்கான இலக்கிய நிகழ்வுகளில் கலந்து கொண்ட உங்களால் மறக்கவே முடியாத நிகழ்வுகளாகப் பார்க்கப்படுபவை?

இலக்கிய நிகழ்வுகள் ஒவ்வொன்றுமே என்னைப் பொறுத்தவரை மறக்க முடியாதவையும் மனதிற்கு இன்பமளிப்பவையுமே. அப்படி எனது ஒவ்வொரு நூல் வெளியீட்டு நிகழ்வுகளும் மறக்க முடியாதவை.

உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகளில் - மலேசியா, இந்தியா போன்ற நாடுகளில் பங்கேற்கக் கிடைத்தமை, இந்திய மாநாட்டில் “ஊடகம்” என்ற தலைப்பில் கவிபாடிக் கவனத்தைப் பெற்றமை, யோ. புரட்சி யாழ்ப்பாணத்தில் நடத்திய 1000 கவிஞர்களின் பெருநூல் வெளியீட்டிலும் பெருவிழாவிலும் அதிதியாக கலந்து கொண்டு கௌரவம் பெற்றமை, கல்முனையில் இலங்கை - இந்திய எழுத்தாளர்களின் உறவுப்பாலமாக அமைந்த கரவாகு இலக்கியச் சந்தி நிகழ்ச்சியினை தலைமை தாங்கி

நடத்தியமை என்பன இன்றும் மகிழ்ச்சியைத் தருகின்ற வித்தியாசமான இன்ப ரசத்தை ஏற்படுத்திய மறக்க முடியாத நிகழ்ச்சிகள்.

09) உங்களுக்கு கிடைத்த விருதுகள், கௌரவிப்புகள் பற்றி பகிர்ந்து கொள்ள முடியுமா?

இலங்கை அரசின் கலை, இலக்கியம் தொடர்பான உயர் விருதான ”கலாபூஷணம்“”

கிழக்கு மாகாண கலாசார பண்பாட்டமைச்சு வழங்கும் உயர் விருதான, “வித்தகர் விருது”

அரச சாஹித்ய மண்டலத்தின் நூலுக்கான விருது.

கொடகே நிறுவனத்தின் நூலுக்கான “மஹாகவி உருத்திர மூர்த்தி விருது” கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் “சிரேஷ்ட கவிஞர்” விருது

புகவத்தின் “பாவேந்தல்” பட்டம்

காத்தான்குடி நவ இலக்கிய மன்றம் வழங்கிய இலக்கிய வாரிதி ”விருதும் கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றமைக்கான பணப் பரிசும்

புலவர் மணி ஆமு.ஷரிபுத்தீன் அவர்கள் நினைவாக இடம்பெற்ற சர்வதேசக் கவிதைப் போட்டியில் முதற் பரிசு.

இலங்கை கலாசார அமைச்சு வழங்கிய “சுவதம்” விருது.

இவற்றினோடு, கவிப்புனல், கவிஞர் திலகம்,சிராஜூல் புனூன் என்று பல்வேறு அமைப்புகளாலும் வழங்கப்பட்டுள்ள பட்டங்களையும் ஞாபகப்படுத்தலாம்.

10) இலங்கையில் இலக்கியத்துறையின் வளர்ச்சி தற்போது எந்த நிலையில் உள்ளது?

இலங்கையின் இலக்கியத் துறையின் வளர்ச்சி காலகட்டங்களாகப் பிரித்து நோக்கப்படுகின்றது. நூல்வெளியீடுகள், எழுத்தாளர் சங்கங்களின் தோற்றம்

அவற்றின் செயற்பாடுகள், சஞ்சிகைகளின் வரவு என்பவற்றை அடிப்படையாக வைத்தே இலக்கிய வளர்ச்சி நோக்கப்பட்டு வந்திருப்பதை அவதானிக்க முடியும்.

இலங்கையில் புதிய இலக்கிய முயற்சிகள் பெருகியிருக்கின்றன. புதிய இலக்கிய வடிவங்களில் (ஹைக்கூ, லிமரிக்ஸ்) இளைஞர்கள் காட்டி வருகின்ற அக்கறை, பிரசுர வசதிகள், இலத்திரனியல் ஊடகங்களினால் ஏற்பட்டுள்ள பன்னாட்டு இலக்கியத் தொடர்பு, இலக்கியக் குழுமங்கள் நடத்திவருகின்ற துறைசார் இலக்கியப் பயிற்சி வகுப்புகள், என்பன அவ்வாறான வளர்ச்சியை சாத்தியப் படுத்துகின்றன என்று சொல்ல முடியும்.

யுத்தநிலைமையில் எம்மவர்கள் புலம் பெயர்ந்த நிலையில், புலம்பெயர்ந்த வர்களின் இலக்கிய முயற்சிகளும் இலங்கையின் இலக்கியத்தின் புது வகையான திருப்பத்தை ஏற்படுத்தி இருப்பதைக் குறிப்பிட முடியும்.

11) இலங்கையைப் பொறுத்தமட்டில் இலக்கியம் சார்ந்த விருதுகளுக்காகத் தகுதியான வர்கள் உள்வாங்கப் படுகிறார்கள் என நினைக்கிறீர்களா?

இலக்கியம் சார்ந்த விருதுகளை,இலங்கையில் அரசாங்க கலாசார அமைப்புகள், அரச மாகாண அமைப்புகள், தனியார் நிறுவனங்கள், குழுமங்கள் என்பன வழங்கி வருகின்றன.

இவ்விருதுகளுக்குத் தகுதியானவர்கள் உள் வாங்கப்படுகின்ற போதிலும் சில வேளைகளில் சில தவறுகள் நடந்து விடுவதை அவதானிக்க முடியும். இத்தவறுகள் பின்வரும் சில காரணங்களினால் ஏற்படுவதாகச் சொல்லப் படுகின்றது.

1. விருதுக்காக விண்ணப்பிக்க வேண்டியிருப்பது (தகுதியான சிலர் விண்ணப்பித்து விருது பரிசுபெறுவதை விரும்புவதில்லை)

2. வயதுக் கட்டுப்பாடு. (இலக்கியத்தில் தொடர்ந்துஈடுபட்டு வந்தாலும் குறிப்பிட்ட வயதை அடையாவிட்டால் விருது கிடையாமலிருப்பது. அதேவேளை மிகக் குறைந்த கால ஈடுபாட்டோடு குறிப்பிட்ட வயதை அடைந்து விட்ட வருக்கு விருது பெறும் வாய்ப்புக் கிடைப்பது)

3. சில தனியார் நிறுவனங்கள், குழுமங்கள் உறுப்பினர்களுக்கே விருது களை வழங்குவது - பட்டங்களை அள்ளி இறைப்பது.

4. உறுப்பினர்களிடம் பணம் வசூலித்து விருது வழங்குவது.

5. போட்டி விதிமுறைகளில் உள்ள குறைபாடு,புள்ளி வழங்கும் முறையில் உள்ள குறைபாடு .

இப்படி ...பல.

12) ஒரு சமூகத்தின் கட்டமைப்புக்கு இலக்கியத்தின் பங்களிப்பு எந்தவகையில் வழிகோலுகிறது?

இலக்கியம் என்பது சமூகத்தின் கட்டமைப்புக்கு பல வழிகளில் பங்களிப்புச் செய்கின்றது. ஒழுக்க விழுமியங்களை, அற நெறிக்கருத்துகளை சமுகத்திற்கு எடுத்துச் சொல்வதிலே இலக்கியம் பங்காற்றுகின்றது. நமது பண்பாடு,மரபு என்பவற்றை புதிய தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதிலும் அதன் பங்கு இருக்கின்றது.

மேலும், புதிய சிந்தனைகளை விதைப்பதிலும், சமூகத்தைத் தடம் புரளாமல் கட்டிக் காப்பதிலும், மனதை இரம்மியப்படுத்தி சுகானுபவத்தைத் தருவதிலும் இலக்கியம் பங்களிப்புச் செய்து வருவதனையும் இங்கு குறிப்பிடலாம்.

13) இந்த சமுதாயத்தில் ஒரு கவிஞனாக, கலைஞனாக ஒரு சிறந்த இலக்கியவாதியாக தம்மை நிலைநிறுத்திக் கொள்ள வளர்ந்து வரும் இளம் தலைமுறைக்கு நீங்கள் சொல்லக்கூடிய அறிவுரை என்ன?

எழுத ஆரம்பித்த பின்பும் ஒரு நல்ல வாசகனாக - கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆவலோடு செயற்படுவது,

குழுநிலைப்பட்ட எண்ணத்தால் பிரிந்து விடாமல் பல தரப்பட்ட இலக்கிய வாதிகளையும் வாசிப்பது,

புதிது - பழசு என்ற விதத்தில் பிரிந்துவிடாமல் பழந்தமிழ் இலக்கிய நூல்களை கற்பதிலும், புதிய இலக்கிய வடிவங்களை தேடிக் கற்பதிலும் ஆர்வம் செலுத்துவது,

விருதுகள், பரிசுகள் என்பவற்றை ஒரு பொருட்டாகக் கருதாமல் எழுதிக் கொண்டே இருப்பது. இவை ஒரு நல்ல படைப்பாளியாக நிலை நிறுத்த உதவக் கூடியன என்று நான் கருதுகின்றேன்.

14) நம் தமிழ்நெஞ்சம் இதழின் இலங்கைப் பிரதிநிதியாக ஆசிரியர் குழுவில் பயணிக்கும் தாங்கள் தமிழ்நெஞ்சம் பற்றிய கருத்து என்ன?

தமிழ்நெஞ்சத்தின் இலங்கைப் பிரதிநிதியாக ஆசிரியர் குழுவில் எனக்கு இடமளிக்கப்பட்டிருப்பதனை ஒரு உயர் கௌரவமாகவே நான் பார்க்கின்றேன்.

தமிழ் நெஞ்சம், தமிழ்கூறும் நல்லுலகெங்கும் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக தன் மொழி அழகால், இலக்கியச் செயற்பாட்டால், எழுத்தூழியத்தால் பெயர் பதித்திருக்கின்ற இதழ். மூத்த இலக்கிய வாதிகளையும் புதியவர்களையும் ஒருசேரக் கவர்ந்திருக்கின்ற இதழ் இது.

பழந்தமிழ் இலக்கிய வடிவங்களோடு, புதிய வடிவங்களை அறிமுகப் படுத்துவதில் அக்கறை செலுத்துகின்ற இதழ். கலை இலக்கியத்தின் பல்வேறு அமசங்களையும் உள்ளடக்கி அழகான வடிவமைப்பில் வெளி வருகின்றது.

உண்மையில் மொழிப் பற்றோடு, ஐம்பது வருடமாகத் தொடர்ந்து, இப்படி ஒரு நல்ல இதழை நமக்குத் தருகின்ற தமிழ்நெஞ்சத்தின் ஆசிரியர் அமின் அவர்கள் பாராட்டப்படவேண்டியவர்.

அவரின் தேக நலனுக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

நான்

மாடிமனை கட்டி யதில்
வாழ்ந்தவனும் "நானே"
கோடிபணம் சேர்த் தங்கே
குவித்தவனும் "நானே"

நாத்திகனாய்க் கதை பேசி
வென்றவனும் "நானே"
கூத்திகளோ டிரவு பகல்
கொஞ்சியவன் "நானே"

சொத்து சுகம் சொந்த பந்தம்
என்றிவைகள் தானே
இத்தரையில் சேர்த்து வைத்தேன்
எல்லாமும் வீணே!

மக்கி மடிந் தழிகின்றேன்
மண்ணறைக்குள் நானே
இற்றிறந்து போனேனா
எலும்பேதான் நானா?

இதை விடவும் இதை விடவும்
இன்னும் அழிவேனா?
இதுவரையில் வாழ்ந்ததெது
கனவுலகம் தானா?

பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களால் எழுதப்பட்ட “நான்” என்கின்ற கவிதையை அல்ஹாஜ் எம்.எச்.ஏ. சமத் அவர்கள் ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்துள்ளார்.

I am

It is I who build several double storey houses
And lived there with many spouses
I am the one who accumulated the wealth
And saved several million cash for my health
I am a successful debater and atheist
Who spoke against the believers of god
It is I who was kissing prostitutes in the day and night
Enjoyed the life with much delight

Property wealth and many relatives
I saved in this world collective
Everything had gone in vein
I am dying and decaying to obtain
A skeleton born from my body
I will be destroying more and more
The life I lived not real but in the dream world

Translated by : Alhaj M.H.A. Samad

கலாபூசண விருதை அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் அவர்களிடமிருந்து பெற்றபோது

கொழும்பில் நடைபெற்ற மௌலவி காத்தான்குடி பௌஸ் அவர்களின் ஈராயிரம் நூல்களை ஆய்ந்த பேராசிரியர் அல்லாமா உவைஸ் நூல் வெளியீட்டில் அதிதியாகக் கலந்து நூல்களைப் பெற்றபோது



கொழும்பு பிரியநிலா கவிதை வட்டம் கவிஞர் திலகம் பட்டமளித்து கௌரவித்தபோது முஸ்லிம் காங்கிரஸ் மா தலைவர் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரஃப், அமைச்சர் அலவி மௌலானா ஆகியோருடன்

அரச இலக்கிய விருதினை தோட்டுப்பாய் மூத்தம்மாவுக்காகப் பெற்ற போது

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் மாநாட்டில்
அம்பாறை மாவட்டத் தலைவராக தலைமை வகித்தபோது

தோட்டுப்பாய் மூத்தம்மாவுக்காக யாழ் இலக்கியப் பேரவை சான்று
பெற்றபோது. வழங்குபவர் டாண் குழும பணிப்பாளர்.

பாலமுனை உபகார நிலையம் எனது முப்பது வருட கலைப் பயணத்தை கௌரவித்த விழாவில் அ.ஸ. அப்துல் ஸமது அவர்கள் பொன்னாடை போர்த்துகின்றார். அதிபர் எஸ்.எம்.எம். ஹனிபா அவர்கள் அருகில்.

எனது பதம் தொகுதியின் சில பிரதிகளை இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம் பெற்றுக்கொண்டபோது எம்.ஏ. உதுமாலெவ்பை, எஸ்.எஸ்.எம். ஜெமீல், அ.ஸ. அப்துல் ஸமது, அன்பு முகையதீன் ஆகியோருடன்



கொடகே சாஹித்திய மகாகவி உருத்திரமூர்த்தி விருதை திறனாய்வாளர் கே.எஸ். சிவகுமாரன் அவர்களிடமிருந்து பெற்றபோது

சிரேஷ்ட கவிஞருக்கான கௌரவம் றவூப் ஹக்கீம் பா.உ வழங்கி வைக்கின்றார். பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் அவர்களும் அருகில்.



எழுத்தாளர்கள் அ.ஸ. அஹமட் கியாஸ், எஸ்.எல்.எம். ஹனீபா, அக்கரையூரான் ஆகியோருடன்

திக்குவெல்லை கமால் அவர்களுக்கு எனது நூலை வழங்கி வைத்த போது

மின்னல் வெளியீட்டுப் பணியகத்தின் கீறல் சஞ்சிகை வெளியீட்டின் போது
அம்ரிதா ஏயெம், அஸீஸ் எம். பாயிஸ் ஆகியோரோடு

ஏறாவூர் தேனீ இலக்கிய வட்டத்தின் விழாவில் கௌரவம் பெற்றபோது

'பதம்' கவிதைத் தொகுதி வெளியீட்டின் போது. பா.உ. எம்.ஐ. உதுமாலெப்பை உரை நிகழ்த்த அ.ஸ. அப்துல் ஸமது முதலியோர் மேடையில் அமர்ந்திருக்கின்றனர்.

அக்கரைப்பற்று முஸ்லிம் லீக் எனது தலைமையில் மாதாந்தம் கவியரங்கை நடத்தியது. அதில் ஒரு அரங்கில் கவிஞர் ஏ.இக்பால் அவர்கள் கலந்து கொண்டபோது

டாக்டர் பி. அருணகுலசிங்கம் அவர்களின் பொன்விழாவில் கௌரவம் பெற்றபோது

தமிழா ஊடக வலையமைப்பு கௌரவித்தபோது

கவிஞர் மு. மேத்தா அவர்களை கொழும்பு சாந்தி விஹார் ஹோட்டலில் தென்கிழக்கு கலாசார பேரவை கௌரவித்தபோது. எம்.எச்.எம். அஷ்ரஃப், எஸ். முத்துமீரான், அன்புடீன், இனியவன் இசார்தீன் ஆகியோரும் படத்தில்

நுட்பக் குழுமம் வலைக்குள் மலர்ந்த வனப்பு நூலுக்காக விருது வழங்கிய போது

அட்டாளைச்சேனையில் இடம்பெற்ற பெருவிழாவில் முன்னாள் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரிடமிருந்து கௌரவம் பெற்றபோது

இலங்கை இந்திய படைப்பாளர்கள் பங்கு கொண்ட கரவாகு சந்தியின் முப்பெரும் விழாவிற்கு தலைமை வகித்தபோது கிடைத்த கௌரவம்

நுட்பக் குழும விழாவின்போது கவிச்சுடர் க.நா. கல்யாண சுந்தரம் (இந்தியா), தமிழ் நெஞ்சம் ஆசிரியர் அமின் (பிரான்ஸ்) பேராசிரியர் செ. யோகராசா ஆகியோரோடு

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 1000 கவிதைகள் பெருநூல் வெளியீட்டில் அதிதியாக கௌரவம் பெற்றபோது

இந்தியா காயல் பட்டிணத்தில் இடம்பெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் தமிழன்பன் தலைமையில் ஊடகம் எனும் தலைப்பில் இடம்பெற்ற கவியரங்கில் பங்கேற்றபோது

புத்தகப் பண்பாட்டுக்குப் பங்களித்த பேராளர்கள் வரிசையில் அக்கரைப்பற்றுப் புத்தக கண்காட்சியில் கௌரவம் பெற்றபோது

நன்றிக்குரியவர்கள் :

01. எழுத்தாளர் மையம்,
மருதமுனை.

02. தேடல் கலை இலக்கிய வட்டம்.
திருகோணமலை.

03. நுட்பம் குழுமம்,
ஓட்டமாவடி

04. தேனீ கலை இலக்கிய மன்றம்,
ஏறாவூர்.

05. புத்தொளி கலை இலக்கிய பண்பாட்டுக் குழுமம்,
ஏறாவூர்.

06. வெள்ளி வெளிச்சம் ஊடக வலையமைப்பு,
காத்தான்குடி.

07. சங்கே முழங்கு கவிதைக் குழுமம்,
மருதமுனை.

08. நாணல் கலை இலக்கிய வட்டம்,
மருதமுனை.

09. கரவாகு கலை இலக்கியச் சந்தி,
சாய்ந்தமருது.

10. கலை இலக்கியப் பேரவை,
நிந்தவூர்

11. மின்னல் வெளியீட்டகம்,
ஒலுவில்.

12. கலாசார அபிவிருத்தி மையம்,
பாலமுனை.

13, SRC எஸ் ஆர் சி,
பாலமுனை.

14. Youths Tv ஊடக வலையமைப்பு,
அக்கரைப்பற்று.

15. பட்டாம்பூச்சிகள் கலை இலக்கியப் பரண்,
பொத்துவில்.

16. ஒத்தாப்பு கலை இலக்கிய பெருவெளி,
காத்தான்குடி.

17. கவியுவன் கலை இலக்கிய மன்றம்,
பொத்துவில்.

18. கடல் பறவைகள் கலை இலக்கிய மன்றம்,
அம்பாறை மாவட்டம்.

19. இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கம்,
அம்பாரை மாவட்டம்.

20. பேஜஸ் புத்தக இல்லம்
அக்கரைப்பற்று

21. மத்தியஸ்த சபை,
அட்டாளைச்சேனை

மற்றும்
பாவேந்தல் குடும்பத்தினர்
நண்பர்கள்

தமிழ்நெஞ்சம்

உதயம் 1972

tamilnenjam.com

ஈழத்துத் தமிழ் கவிஞர்களுள் குறிப்பிட்டுச் சுட்டத்தக்க படைப்பாக்கத் திறனாளராகப் பாலமுனை பாறூக் திகழ்கிறார்.
கவிதைக் கலையில் அரிய முயற்சியும் அநுபவ முதிர்ச்சியும் ஒருங்கமைந்த பாலமுனை பாறூக், திறனாய்வாளர்களால் தற்போது அதிகம் பேசப்படக்கூடிய படைப்பாளராகவும் விளங்குகிறார்.

மரபில் வல்லவரான பாவேந்தல் பாலமுனை பாறூக்கின் "பதம்", "சந்தனப் பொய்கை" ஆகிய முதலிரு நூல்களில் மார்க்கம் போற்றும் - மானுடம் போற்றும் கவிதைகளையும் பார்க்கலாம். யாப்பு குறையாமல் யாக்கப்பட்ட அக்கவிதைகள் கருத்துச் செறிவும், உணர்ச்சிப் பொதிவும், வடிவ நேர்த்தியும் இணைந்து பொலியும் தன்மையன. படித்துப் படித்து இன்புறத்தக்க தகைமையன.

பாலமுனை பாறூக்கிற்கு கடல் கொந்தளிப்பால் எழுந்த மனக்கொந்தளிப்பு அடங்கவில்லை. "கொந்தளிப்பு" என்ற தலைப்பிலேயே நூலாக்கித் தமது உள்ளக் குமுறல்களை அதில் கொட்டினார்.

புதிய குறுங்காப்பியமாகப் பிறப்பெடுத்த அந்த நூலுக்குக் கிடைத்த வரவேற்பால் அதே தன்மையில் "தோட்டுப்பாய் மூத்தம்மா", "எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு", "மீளப் பறக்கும் நங்கணாங்கள்" ஆகிய புதிய குறுங்காப்பியங்களையும் படைத்துத் தந்தார் கவிஞர் திலகம்.

பேராசிரியர் முனைவர்
மு. இ. அஹமது மரைக்காயர்
(இந்தியா)

ISBN : 978-624-98508-0-4
9 786249 850804

விலை: 1000/-